## தெணியான்

# கழுகுகள்



தெளியான்

# கழுகுகள்

(ஒரு நாவல்)

**தெணியான்**


**நர்மதா பதிப்பகம்**
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
1, வியாசராவ் தெரு,
தி. நகர், சென்னை-600 017.

**This is a work of fiction and all characters and situations depicted herein are purely fictional and bear no resemblance to any actual person both living and dead.**

**PRICE Rs. 9/-**

● 'KAZHUGUGAL' (The Vultures) — A Social Novel by THENIYAAN © ● First Edition: November, 1981 ● Published by: T. S. RAAMALINGAM, NARMADHA PATHIPPAKAM, Madras-600 017 ● Printed at: SRI GOMATHY ACHAGAM, Lloyds Road, Madras-600 005 ●

சமர்ப்பணம் :

என் தந்தையார்

நா. கந்தையா

தாள்கட்கு.

—தெணியான்

## புதிய நூல்கள்

- வடமொழி வரலாறு
  டாக்டர் கைலாசநாத குருக்கள் 11 00
- விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள்
  கந்தையா நவரேந்திரன் 8 80
- வாழ்விலே ஒரு முறை — அசோகமித்திரன் 18 00
- இருட்டு ராஜா — வல்லிக்கண்ணன் 8 00
- உறவுகள் — நீல. பத்மநாபன் 27 00
- புதுமைப்பித்தனின் துரோகம் — ஆதவன் 9 00
- முறிவுகள் — ஜெயந்தன் 9 00

# முன்னுரை

"இலக்கியம் என்பது வெறும் மாயை; அது பொழுது போக்குக்காகவே படைக்கப்படுகின்றது" என்பது கற்பனா வாதப் படைப்பாளிகளின் துணிந்த கொள்கை.

"இலக்கியம் சமுதாய மாற்றத்துக்கான பங்களிப்பினைச் செலுத்த முடியாது" என்பது அதிதீவிர புரட்சிவாதிகளின் திடமான கருத்து.

கற்பனாவாதிகள் சமுதாயச் சீரழிவுகளைக் கருத்திற் கொள்ள மறுத்து, பாமர உள்ளங்களின் மலினமான இரசனைகளுக்குத் தங்கள் படைப்புக்களைத் தீனியாகப் போடுவதன் மூலம், இலக்கியத்தின் பெயரால் இன்று பணம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் இலக்கியம் படைக்கும் அதிதீவிர புரட்சிவாதிகள்—இலக்கியம் சமுதாய மாற்றத்துக்கு வழி சமைக்காது என்ற கொள்கையுடன் தெளிவான சமூகப் பிரக்ஞை இன்றி, சோஷலிஸ அதீத கற்பனாவாதப் படைப்புக்களைச் சிருஷ்டித்து—தாங்கள் மயங்குவதோடு, சமுதாயத்தையும் மயங்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

சித்தாந்த அடிப்படையில் இரு துருவங்கள் போலத் தோன்றும் இந்த இரண்டு அணியினரும் இலக்கியத்தைக் கானலாக்கி இறுதியில் ஒன்றாகவே சென்று சங்கமிக்கின்றனர். சமுதாயம் இன்றுள்ள நிலைப்பாட்டினைக் கூர்ந்து நோக்கத் தவறிவிடும் தெளிவான சமுதாயப் பிரக்ஞை

இல்லாத இவர்களின் படைப்புக்களால், சமுதாய மாற்றமோ அல்லது சமுதாயத்தின் கண் பாதிப்போ தோன்றிவிடப் போவதில்லை.

இலக்கியம் சமுதாயத்தை நேரடியாகச் சென்று தாக்கி, அதனை மாற்றி அமைக்கத் தகுந்த வலுவான கூறுகளுள் ஒன்றல்லதான். ஆனால் மாற்றத்துக்கான—மாற்றத்தைத் துரிதப்படுத்துகின்ற உந்து சக்திகளுள் ஒன்றாக இலக்கியம் விளங்குகிறது. சமுதாய மாற்றத்தை விழைந்து நிற்கும் பிரக்ஞை பூர்வமான ஒரு படைப்பாளி, இந்த உந்து சக்தியினைத் தன் கூரிய ஆயுதமாகப் பயன் படுத்துகிறான். யதார்த்தமான சமுதாயத்தினை விஞ்ஞான பூர்வமான நோக்கோடு சித்திரித்து, மாற்றத்துக்கான மார்க்கத்தில் மக்களை வேகமாக உந்திச் செலுத்த வேண்டியது தெளிவான சமுதாயப் பார்வையுள்ள படைப்பாளிகளின் இலக்கும், இலக்கியப் பணியுமாகிறது. நடைமுறையிலிருக்கும் சமுதாய இருக்கையை வசதியாக மறந்து, சோஷலிஸ அதீத கற்பனாவாதப் படைப்புக்களை உருவாக்குவதன் மூலம்—அவ்வாறு உருவாக்கும் படைப்பாளிகள் தாம் வாழும் சமுதாயத்தை ஏமாற்றுகின்றனர். குமரிப் பருவமடையாத சிறுமி ஒருத்தியைப் பிடித்து, மணப்பந்தலிலிருத்தி மாலை சூட்டி, தாம்பத்திய வாழ்வுக்கு வாழ்த்துக் கூறி அனுப்புவதாகவே சோஷலிஸ அதீத கற்பனாவாதப் படைப்புக்கள் அமைகின்றன.

சுரண்டல்கள்—ஊழல்கள்—சமுதாயக் கொடுமைகளை எல்லாம் மக்கள் மனத்தில் ஆழப் பதியும் வண்ணம் அடித்துச் சொல்லி—இத் தீமைகள் பற்றித் தெளிவாக மக்களைச் சிந்திக்கச் செய்து—அச் சிந்தனையின் பேறாக அநீதிகளை வேரோடு வெட்டிச் சாய்க்க வேண்டுமென மக்கள் துடித்தெழுந்து போராடுவதற்கு அவர்களைப் பக்குவப் படுத்தும் உந்து சக்தியாகவே இலக்கியம் அமைய வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் நிகழ்வுகள் எப்படி அந்தச் சமுதாயத்தைப் பாதிக்கின்றனவோ, அந்த நிகழ்வுகள் சமுதாயத்தின் ஓர் அங்கமான படைப்பாளியின் மென்மையான இதயத்தையும் ஆழமாகப் பாதித்துவிடுகின்றன. அத்தகைய பாதிப்புக்கள் உண்டாக்குகின்ற மன அதிர்வுகளினால், மக்களை நேசிக்கும் படைப்பாளி அகவயமாக அவனுடைய ஓர் அங்கமாக இருக்கும் மக்களுக்காக அழுகிறான்; ஆவேசப்படுகிறான்; போராடுகிறான்; அநுதாபப்படுகிறான்; ஆதரிக்கிறான்; அன்பு செலுத்துகிறான்; காதலிக்கிறான். அவன் இதயத்தில் உணர்ச்சிக் குமுறலின் அடங்காத அலைகள் எப்பொழுதும் இடையறாமல் மோதிக் கொண்டிருக்கின்றன. அந்த உணர்ச்சிக் குமுறல்களை நெறிப்படுத்தி, சமுதாயத்திடம் பெற்றுக்கொண்டவற்றுக்கு அவன் அமைக்கும் வடிகால்தான் மக்கள் எழுத்தாளன் சிருஷ்டிக்கும் இலக்கியங்கள்.

என் இதயக் குமுறல்களின் ஒரு பகுதிக்கு நான் அமைத்திருக்கும் ஒரு வடிகால் இந்தக் 'கழுகுகள்'.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் சமூகங்களின் கட்டுக்கோப்பு மாத்திரம் இன்று சிதைவுற்றுக் கொண்டிருக்கவில்லை. குடும்பங்களுக்கிடையே ஏற்படும் சிதைவு என்பதும் ஒரு கொடுமையாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் சமூக அமைப்பினாற் குடும்பங்களின் சிதைவுகளைத் தவிர்க்கவும் முடிவதில்லை. யாழ்ப்பாணச் சமூகத்தின் தவிர்க்க முடியாத குடும்பச் சிதைவுகளே 'கழுகுகளின்' அடிநாதமாகச் சித்திரிக்கப்படுகிறது.

'கழுகுகள்' வளர்ந்து வந்திருக்கும் கதையே, தனியான ஒரு பரிணாம வளர்ச்சிதான்.

வல்வை வாசகர் வட்ட வெளியீடான 'அருவி'க்காக அதன் ஆசிரியர் வல்வை சு. சக்திவடிவேல் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, மிகச் சிறிய ஒரு குறுநாவலாக

ஆரம்பத்தில் இதனை எழுதினேன். எனது சகோதரன் க. நவரத்தினம் (க. நவம்) தெரிவித்த கருத்துக்கமைய அதனையே விரிவுபடுத்தி திரும்பவும் ஒரு குறுநாவலாக எழுதி வைத்துக்கொண்டேன். என் மனக் குறளியை அருட்டிவிட்டு, என்னைத் தொடர்ந்து எழுத வைத்துக் கொண்டிருக்கும் 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் நாவல் ஒன்று எழுதுமாறு என்னைப் பணித்த போது, கைவசமிருந்த 'கழுகுகள்' பிரதியை பெருமதிப்புக் குரிய கலாநிதி கா. சிவத்தம்பி அவர்களின் பார்வைக்குக் கொடுத்தேன். கா. சி. அதனைப் படித்த பின்னர், முழு நாவலாக எழுதும் வண்ணம் ஆலோசனை வழங்கினுர்கள். அதன்பிறகே இந்த நாவலின் வளர்ச்சிக் கட்டம் முழுமை பெற்றது.

எனது கையெழுத்துப் பிரதியை அழகுறப் பிரதி பண்ணித் தருகின்ற உதவியினை என் கல்லூரிச் சக ஆசிரியர் களான க. கந்தசாமி, செ. சதானந்தன் ஆகிய இரு வரும், செல்வன் மா. கலாநிதியும் மனமுவந்து செய்து தந்துள்ளனர்.

நர்மதா பதிப்பகம் 'கழுகுகளை' ஏற்று இன்று வெளி யிடுவதற்கு முன்வந்துள்ளது.

'கழுகுகள்' நூலாக வெளிவருவதில் தோன்ருத் துணை யாக இருக்கும் என் நெஞ்சுக்கு நெருக்கமான இவர்கள் எல்லோரும் எனது ஆழ்ந்த நன்றிக்குரியவர்கள்.

23-11-1981
இலங்கை.

தெணியான்

1

# கழுகுகள்

அந்தக் கிராமத்து ஆஸ்பத்திரிக்கு வெளியிலும் விருந்தைகளிலும் எரிந்துகொண்டிருக்கும் மின்சார விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டன. பிரதான வாசலை அண்டி ஓங்கி வளர்ந்து நிழல் கொடுத்து நிற்கும் தேக்க மரங்கள் - வெளியே வீதியோரத்தில் சடைத்துக் கிளை யோச்சும் ஆலமரங்கள் - இவற்றில் இரவு வேளை வந்து தங்கி உறங்கிச் செல்லும் காக்கைக் கூட்டம் தூக்கம் கலைந்து எழுந்து கரையும் சத்தமும் கொஞ்சங் கொஞ்சமாக அடங்கிக் கொண்டிருக்கிறது.

இரவு பகல் என்னும் இரண்டுக்கும் வேறுபாடு உணரா மல் இரவையும் பகலாக்கி ஆடல், பாடல், அழுகை, சிரிப்பு என்னும் சுருதி பேதங்களான உணர்ச்சிகளுக்கு மத்தியில் எப்போதும் விழித்துக்கொண்டிருக்கும் மனநோயாளர் வார்டிலிருந்து எழுந்துகொண்டிருந்த சத்தமும் சற்றுத் தணிந்திருக்கிறது.

கடந்த இரவெல்லாம் அழுதழுது கிடந்த குழந்தை ஒன்று இப்போது களைத்துச் சோர்ந்து இடையிடையே அனுங்கிக்கொண்டு கிடக்கும் அழுகுரல் மெல்லச் சிணுங்கு கிறது.

தலையிலும் கழுத்திலும் பயங்கரமான வெட்டுக் காயங்களோடு கழுத்து வெட்டப்பட்ட ஆட்டுக்கடாபோல இரத்தம் ஒழுக ஒழுக நினைவு தப்பின நிலையில் முதல் நாள் மாலை வார்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டவன் இப்போது மெல்ல உணர்வு பெற்று வேதனை பொறுக்க முடியாமல் முனகுகிறான்.

அந்த "வாட்"டின் பதின்மூன்காம் இலக்கக் கட்டிலின் மேல் ஆறுமுகத்தார் நீட்டி நிமிர்ந்து கிடக்கிறார். கட்டிலிலிருந்து இறங்கி நடமாடக்கூடிய நிலையிலிருக்கும் நோயாளர் பலர் வாட்டுக்கு வெளியே வந்து பல் துலக்கி, முகம் கழுவிக் காலைக் கடன்களைச் செய்து முடிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆறுமுகத்தாருக்கும் வயிற்றில் மெல்லக் குடைய ஆரம்பித்துவிட்டது. ஆனால் அவர் கட்டிலைவிட்டு இறங்க மனமில்லாமல் படுத்தபடுக்கையாகக் கிடக்கிறார். ஆஸ்பத்திரி என்றாலே அங்குள்ள நீர் ஒழுகும் மலகூடங்களும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவுவகைகளுந் தான் அவருக்குக் கட்டோடு பிடிக்காதவைகள். மலகூடங்களைச் சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் அவற்றைச் சுத்தம் செய்துமுடித்த கையோடு அங்கே போய்வந்துவிட்டால் ஓரளவு "அசுகுசுப்பு" இல்லாமல் இருக்கும். ஆஸ்பத்திரியில் முன்னர் வாழ்ந்து அநுபவப்பட்டவர்கள் எல்லாரும் அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து அங்கே போய் வந்துவிடுகிறார்கள். அவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு 'கியூ'வில் நின்று மலகூடத்துக்குள் போய் வருவது ஆறுமுகத்தாருக்கு இப்போது இயலாத காரியம்.

அவர் வாழும் கிராமியச் சூழல் இதற்கு மிகுந்த ஆறுதலாகவும் சௌகரியமாகவும் அவர் மனதுக்குத் தோன்றுகிறது. சுருட்டொன்றைப் பற்றவைத்துக் கொண்டு பனைவடலிக் கூடலுக்குள் நுழைந்து வசதியான இடம் பார்த்து அமைதியாக நீண்டநேரம் குந்தியிருந்து - காரியம்

கழிந்த பின்னர் வடலி ஓலையில் ஈர்க்கொன்றைக் கிழித் தெடுத்து வழித்துப் போட்டுக்கொண்டு எழுந்து போவதிலே தான் என்ன சுகமிருக்கிறது. ஆஸ்பத்திரியில் நான்கு சுவர் களுக்கு மத்தியிலே - வெளியேயும் பலர் காத்துநிற்கிறார் களென்னும் அந்தரத்தோடு நாற்றம் குடலைப் புரட்ட...... சீச்சீ......ஆறுமுகத்தார் அருக்குளித்துக் கொள்கிறார்.

அவருக்கிப்போது பசிவேறு எடுக்க ஆரம்பித்துவிட்டது. முதல்நாள் நடுப்பகலுக்குப் பின்புதான் அவர் ஆஸ்பத் திரிக்கு வந்து சேர்ந்தார். ஆஸ்பத்திரியிற் கொடுக்கும் உணவுகள் தவிர வீட்டிலிருந்து இதுவரை அவருக்கு எந்த உணவும் வந்து சேரவில்லை "அவளும் பாவம் மத்தியானந் தான் சாப்பாடு கொண்டுவருவாள்." என்று எண்ணிக் கொள்ளுகிறார்.

நோயினால் இப்போது அவர் உடல் இளைத்துத் தொய்ந்துபோய்விட்டது. காலிலுள்ள புண்வேறு வேதனை யைக் கொடுக்கிறது. பசிக்களை இவைகள் எல்லாவற்றோடும் சேர்ந்து அவரை வாட்டி எடுக்கிறது.

ஆஸ்பத்திரி உணவில் அவருக்கு மனம் நாடவில்லை. வெளியேயுள்ள கடைகளிலிருந்து வாங்கிக் கொள்ளலா மென்றால் அந்த உதவியைச் செய்வதற்கும் யாராவது ஒருவர் துணையை நாடவேண்டும்.

ஒரு நேர உணவுக்காகப் பிறர் தயவை வேண்டி நிற்க வேண்டிய அவலம்.

ஆறுமுகத்தார் தன் தகப்பனாரை நினைத்துக்கொள் கிறார். அவர் சொல்லுவார் "எல்லாம் இந்த வயிற்றுப் பாட்டுக்குத்தான். தீனை உதாசீனம் செய்யக் கூடாது. கொட்டக்கூடாது. அதுதான் தெய்வம்." ஒரு சோற்றுப் பருக்கைதானும் வீணாக நிலத்தில் சிந்துவதற்கு அவர் அனுமதிக்க மாட்டார். கீழே விழுந்து கிடக்கும் சோற்றை

யாராவது காலால் மிதித்துவிட்டால் அவருக்கு உண்டாகும் பொல்லாத சினத்தைப் பார்க்கவேண்டும்.

தகப்பனுர் அடிக்கடி சொல்லும் வார்த்தைகளின் அர்த்தம் இப்போதுதான் ஆறுமுகத்தாருக்குத் தெளிவு படுவதாகத் தோன்றுகிறது.

''அண்டைக்கு அப்படி நடந்திருக்க கூடாது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமென்பார்களே......இண்டைக்கு எனக்கு விளேஞ்சிருக்கிது.'' என்று ஆறுமுகத்தாரை அவர் உள்ளம் உறுத்த ஆரம்பித்தது.

இன்று போல் அன்றும் ஒரு இளங்காலைப் பொழுது. ஆறுமுகத்தார் வீடு சீமேந்துக் கல்லினுல் சுவரெழுப்பி ஓட்டினுல் கூரைவேய்ந்த வடக்கு வாசல் வீடு.

ஆறுமுகத்தார் மேற்குப் புறத்து அறைக்கதவை அண்டி, கிழக்குத் திசையாகத் தலை வைத்து விருந்தையில் கிடக்கிருர்.

அவருக்குக் கிழக்குத் திக்கில் இன்னெரு அறை. இரண்டு அறைகளின் கூரையையும் நீட்டிப் பத்தடி அகலத்தில் அவர் படுத்துக்கிடக்கும் விருந்தை விரிந்து கிடக்கிறது. வீட்டுக்குக் கிழக்கில் அதன் தாய்வளைக்கு வடக்குப்பக்கமாக – சாத்திர விதிக்கமையக் கட்டப்பட்டிருக்கும் ஓர் ஓலைக் குடிசை. அதுதான் அவர்களுடைய அடுக்களை. அடுக்களைக்கு வடக்குத் திசையில் ஆடு, மாடுகள் கட்டி வளர்க்கும் வட்டக் குடில். வளர்ப்பு மிருகங்களில் பிறர் கண்படாமல் மறைப்பாகப் போடப்பட்டிருக்கும் பனையோலை வேலி. வீடுகளைச் சுற்றி வளைத்து யாழ்ப்பாணத்துக் கிராமங்களுக்கே உரித்தான தனித்துவமான விசாலித்த பனையோலைவேலி. கிழக்குப்புறத்து வேலியை ஒட்டினுற்போல பரந்து கிடக்கும் வடலிக்கூடல். ஏனைய மூன்று திசைகளிலும் பனங்காணிகளுக்கு மத்தியில் பலயார் தூர இடைவெளிகளுக்கிடையில்

ஓலை வேலிகளால் சூழ்ந்த தனித்தனி வீடுகள். ஆறுமுகத்தார் வீட்டுக்குப் பின்புறத்தில் வளர்ந்து நிற்கும், முகிலைத் தொடும் நெடிய பனைமரங்கள். வேலியோரமாக மேற்குத் திக்கில் ஒரு வேப்பமரம். முற்றத்திலே அண்மையில் அவர் நட்டு நீர் வார்த்த ஒட்டு மாங்கன்று. அதில் பருவத்துக்கு முந்திக் காய்த்திருக்கும் ''வம்புக்காய்'' ஒன்று முற்றித் தொங்கிக் கொண்டிருக்கிறது.

ஆறுமுகத்தாரின் பார்வை அடிக்கடி அந்தக் காயில் சென்று பதிகிறது. இரண்டு கிளைகளுக்கும் சில இலைகளுக்கு மிடையே பெரிதாகத் தோன்றுகிறது அந்த வம்புக்காய். ''பருவத்துக்கு முந்திக் காச்சிருக்கும் வம்புக்காய்........... குடும்பத்துக்கு நல்லதில்லை'' என்று அதைப் பார்த்துப் பலர் சொல்லியிருப்பது அவர் மனத்தில் வந்து முட்டுகிறது. இனம் புரியாத ஒரு பீதி உள்ளத்தைக் கவ்வி உடல் உபாதை யோடு சேர்ந்து கொள்ள வேதனையால் விழிகள் கலங்கு கின்றன. அவர் தனது இடது கரத்தைத் தூக்கி புறங் கையினல், கலங்குகின்ற கண்களைத் துடைத்துக் கொள்கிருர். மறுகரத்தால் வலதுகால் தொடையை உருவிவிட்டுக் கொள்கிருர். வலது கால்தான் அவருக்குத் தொடர்ந்து உபத்திரவத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தக் காலை மேலே தூக்கி பாதத்துக்குக் கீழ் உயரமாக ஒரு தலையணை போடப்பட்டிருக்கிறது. பாதத்தில் விரல்கள் இருக்கவேண்டிய பகுதி வெள்ளைச் சீலையால் சுற்றிக் கட்டப் பட்டிருக்கிறது. சீலையில் தொட்டந் தொட்டமாக இரத்தக் கறைகள்.

ஆறுமுகத்தார் உதட்டைக் கடித்து முகத்தைச் சுழித்த வண்ணம் இடையிடையே அந்தக்காலை மெல்ல இழுத்து ஆட்டியசைக்கிருர்.

அவர் தலைமாட்டில் ஒரு துப்பல் சிரட்டை. வெற்றிலையை மென்று உமிழ்ந்து வைத்திருக்கும் எச்சில் இரத்த வெள்ள மாகச் சிரட்டையில் தளம்புகிறது.

பூட்டிய நிலையிலிருக்கும் அறையின் திறப்பு அவரது தலையணைக்குக் கீழ்க்கிடந்து எட்டிப் பார்க்கிறது.

அவர் தலைமாட்டுக்கு மேலேயுள்ள அறைக்குள்ளே கோழியொன்று புகுந்து எதனையோ கொத்திக் கொத்தி தின்று கொண்டிருக்கும் சத்தம் அவர் செவியில் வந்து விழுகிறது. வெறுப்போடு தலையைத் தூக்கி அறைக் கதவை நோக்குகிறார். கதவு பாதி திறந்து கிடக்கிறது. மனைவி செல்லம்மா அடுக்களைக்குள் இருக்கிறாள் என்று கருதி "ஏய்" என்று பலவீனமான குரலில் அவளை அழைக்கிறார்.

அவளிடமிருந்து பதிலில்லை.

விருந்தைக்குக் கீழே நிலத்தில் படுத்துக் கிடக்கும் நாய் "வறுக்...வறுக்" என்று உடலில் பிராண்டும் சத்தம் கேட்கிறது.

"இந்த நேரம் அவள் எங்கே போய்விட்டாள்?" என்று நினைத்ததும் அவர் மனத்தில் சினம் மூளுகிறது.

கோழியை வெளியே துரத்தி விடுவதற்கு விரும்புகிறார், ஆனால் எழுந்து போவதற்கு உடலிலே தெம்பில்லை.

கோழி தொடர்ந்து கொத்திக் கொண்டிருக்கிறது. அந்தச் சத்தத்தைக் கேட்டு அமைதியாக இருக்க முடியாமல் மனம் அலட்டிக் கொண்டிருக்கிறது.

கொஞ்ச நேரம் குழப்பத்தோடு கழிந்தது. அடுக்களைப் படலை திறக்கப்படும் சத்தம் எழுகிறது. இது இன்னொரு தொல்லை. நாய்தான் படலைக்கிடையில் தலையை நீட்டி அதைத் திறந்து கொண்டு உள்ளே போகிறதென அவர் மனதில் தோன்றுகிறது. அவரிடமுள்ள சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி "டீக்...டீக்" என்று சத்தம் போட்டு அந்தச் சத்தத்தால் நாயை விரட்டி விடுவதற்குப் பிரயத்தனிக்கிறார். விருந்தைக்குக் கீழ்ப் படுத்திருக்கும் அவர் வீட்டு நாயை "இஞ்சூ...இஞ்சூ..." என்று சூக்காட்டி அடுக்களைக் குட் புகுந்திருக்கும் கள்ள நாய் மேல் ஏவிவிடுகிறார்.

அது ஒரு தடவை உறுமிவிட்டு வாலை ஆட்டிக்கொண்டு படுத்த இடத்திலிருந்து அசையாமல் கிடக்கிறது, "நாய்க் குக்கூட வரவர என்ரை சொல்லுக் காதிலே ஏறுதில்லை" என்று நினைத்து மனம் பொருமுகிறார்.

சில நிமிடங்களின் பின்னர்...திரும்பவும் படலை திறந்து கொள்கிறது. சிரமப்பட்டு தலையைத் தூக்கி அடுக்களைப் பக்கமாகப் பார்த்து "டீக்...டீக்" என்று சத்தம் போடு கிறார்.

செல்லம்மா அடுக்களைக்குள்ளே இருந்து வெளியே வரு கிறாள். நாயை எதிர்பார்த்த ஆறுமுகத்தாருக்கு அவர் மனைவி வருவதைக் கண்டதும் சினம் பொங்கிக் கொண்டு வருகிறது.

"எடியே......உனக்கு வாயில்லையே?"

அதட்டுதலைக் கேட்டு அவள் அரண்டு போய்விடவில்லை, மாறாக அவர் மேல் அலட்சியமான ஒரு பார்வையை வீசி விட்டு, திறந்திருக்கும் அறைக்குள் வேகமாக வந்து புகுந்து கொண்டாள். இதுவரை உள்ளே நின்ற கோழி அடித்துப் புரண்டு கொண்டு சிறகடித்துப் பறந்து வந்து ஆறுமுகத் தாரின் மார்பின்மேல் விழுந்து தன் கூரிய நகங்களால் பிராண்டிவிட்டு கொக்கரித்துக் கொண்டு ஓடுகிறது.

ஆறுமுகத்தாரின் உள்ளம் கொதிக்கின்ற உலையாகப் பொங்குகிறது. பலவீனமான அவர் உடல் ஆத்திரத்தில் அதிர்ந்து நடுங்குகிறது.

"எடி நாயே......கோழியை எனக் மேலேயே தூக்கி எறிகிறாய்?" என்று சீறிக்கொண்டு படபடக்கும் கைகளை நிலத்தில் ஊன்றி எம்பி எழுந்து படுக்கையில் உட்கார்ந்த வண்ணம் சுவரில் உடலைச் சாய்த்துக் கொண்டு இரத்தஞ் சொட்டும் கண்களால் அவளை நெருடுகிறார்.

"கோழி வந்து விழுந்தால், அதுக்கு நான் என்ன செய் யிறது?"

அவள் அவரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை, வார்த்தைகளைச் சூடாக வீசிவிட்டு அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு அடுக்களையை நோக்கி நடக்கிறாள்.

"இப்ப எல்லாம் உன்ரை நடப்புத்தான். உலாத்துக்குப்போற தெண்டால் கதவுகளைப் பூட்டிப் போட்டுப்போக வேணும்."

"கதவுதானே எப்போதும் பூட்டினபடி கிடக்குது."

அவள் நையாண்டியாகப் பதில் சொல்லுகிறாள்.

ஆறுமுகத்தாருக்கு அவளுடைய குத்தலான பேச்சின் அந்தரங்கம் புரியாமலில்லை. வீட்டின் இரண்டு அறைகளுள் ஒன்று எப்போதும் பூட்டியே கிடக்கும். அந்த அறைக்குள் செல்லம்மா எதேச்சையாகப் போய்வரும் சுதந்திரம் ஆறுமுகத்தாரால் மறுக்கப்பட்டு வருகிறது. அவருடைய தேட்டங்கள் யாவும் அந்த அறைக்குள் வைத்துத்தான் அவரால் பாதுகாக்கப்படுகின்றன. அவர் சொத்துக்களைப் பொறுத்த வரையில் செல்லம்மா அவருக்கு நம்பிக்கைக்குரியவளல்ல. இதன் காரணமாக அவள் மனத்தில் ஆழப்பதிந்திருக்கும் அதிருப்தியையும் அவர் உணராமலில்லை. என்ன இருந்தாலும் அவரை நேருக்குநேர் எடுத்தெறிந்து பேசும் துணிச்சல் இதுவரை அவளுக்கிருந்ததில்லை. அவருடைய மூர்க்கத்தனமான கோபத்துக்கு அவள் என்றுமே அஞ்சி அடங்கித்தான் போய்க் கொண்டிருந்தாள். இப்போது எதற்கெடுத்தாலும் எதிர்த்துப் பேசுவதும், மதிக்காமல் நடப்பதும் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக சகசமாகிக் கொண்டு வருகிறது. அவராலும் முன்போல் அதிகாரம் பண்ணி அவளை அடக்கி ஆண்டு நடத்துவதற்கு இயலாமல் தான் நோயில் விழுந்து கிடக்கும் நிலையை எண்ணி ஏங்கிய வண்ணம் படுக்கையில் சரிந்து படுத்துக் கொண்டு கண்களை மூடிக்கொள்கிறார்.

பனையோலைப் பெட்டி சீமெந்துத் தரையில் உரோஞ்சிக் கொண்டு வரும் சத்தம் கேட்டுத் திரும்பவும் கண்களைத் திறந்து பார்க்கிறார்.

செல்லம்மா காலை உணவாக இடியப்பத்தைப் பெட்டியில் எடுத்து வந்து விறாந்தையோரத்தில் வைத்து அவரை நோக்கித் தள்ளிவிட்டு அங்கே நிற்கிறாள்.

“என்னடி நாய்க்குச் சாப்பாடு வைக்கிறியா?” என்று கேட்க நினைத்தவர் அதை வெளியே சொல்லாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார். ஒரு பார்வையில் தன் அதிருப்தியை வெளிப்படுத்திக் கொண்டு பெட்டிக்குள் கிடக்கும் இடியப்பத்தை நோட்டமிடுகிறார்.

செல்லம்மா வெளியே போய் திரும்பி வந்திருப்பதற்கான காரணம் இப்போதுதான் அவருக்குப் புரிகிறது. அவர் உள்ளத்தில் இன்னொரு புதிய சந்தேகம். இடியப்பம் வாங்குவதற்குப் பணம் ஏது?

பணவிஷயத்தில் செல்லம்மாவுக்கு எப்போதும் யானைப் பசி. எவ்வளவு கொடுத்தாலும் போதாது என்றுதான் அவள் சொல்வாள். குடும்பத்தின் ஒவ்வொரு தேவைக்கும் அவள் அவரிடம் பணம் பெற்றுக் கொள்ளாமல் விடவில்லை. உப்புக்கு, புளிக்கென்று சில்லறைக்கும் அவரிடம் வந்து கை நீட்டிக் கொண்டு நிற்பாள். அவளைச் சோதித்துப் பார்ப்பதற்காகச் சில சமயங்களில் கொஞ்சம் அதிகமாகவே அவர் பணங் கொடுத்துப் பார்த்திருக்கிறார். அப்போதும் அது போதாது என்று சொல்லிக் கொண்டுதான் அவர்முன் வந்து நிற்பாள். பனையோலையில் பாய் பெட்டி இழைத்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தின் மேலதிக செலவை தான் சரிக்கட்டி வருவதாக அவள் அடிக்கடி சொல்லிக் கொள்வாள். தன்னை அறியாமல் தன்னிடம் சுரண்டி இரகசியமாக அவள் பணம் சேர்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது அவர் எண்ணம். இதன் பின்னரும் தாராளமாக அவள் கையில் அவர் பணத்தைக் கொடுப்பாரா? பணத்தின் மேல் அவருடைய பிடி இறுகி இருப்பது கண்டு அவளும் விடாப்பிடியாகச் சதா அவரைச் சுரண்டிக் கொண்டிருக்கிறாள்.

இன்று காலை உணவுக்காக அவள் அவரிடம் பணம் கறக்காமல் இடியப்பத்தை வாங்கி வந்து ஆறுமுகத்தாருக்கு முன் வைத்தபோது அவரால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

மனத்திலெழும் சந்தேகத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவளைப் பார்த்து "பலகாரத்துக்குக் காசு ஏது?'' என்று கேட்கிறார் அவர்.

அவர் தலைமாட்டில் கிடக்கும் துப்பற் சிரட்டையைக் கண்டு முகஞ் சுழித்து கையால் கிள்ளிப் பிடித்தவண்ணம் அவள் கோடிப் பக்கமாக அதை எடுத்துக் கொண்டு போகிறாள்.

அவள் தன்னை எதிர்த்துப் பேசுவதிலும் பார்க்க மௌனஞ் சாதித்து அவமதிப்புச் செய்வதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. திரும்பி வந்தாவது பதில் சொல்லுவாளென்று எதிர்பார்த்தார். அவள் வாய் திறக்கவேயில்லை. அவருக்குக் கோபம் கொழுந்து விட்டெரிகிறது. கடுகடுப்போடு திரும்பவும் அவளைப் பார்த்துக் கேட்கிறார்.

''பலகாரம் வாங்க உனக்குக் காசெங்காலான்?''

''ஏன்...நீ தந்தனியே?''

''நான் தந்திருந்தால்...பிறகேன் கேக்கிறேன்?''

''..................''

''என்ன பேசாமல் இருக்கிறாய்?''

''எடுத்தனான்.''

''எங்கே?''

''கைச் சிலவுக்கு வைச்சதிலெ.''

''ஆர் வைச்சதிலே?''

''வேறை ஆர் வைச்சிருக்கினம். நீ வைச்சதிலெ தான்.''

''என்னடி சொல்லுகிருய்? உன்னே ஆர் அதிலெ கை வைக்கச் சொன்னது!''

''நான் கை வைக்காமல் வேறை ஆர் வைக்கிறது?''

''என்ன......உனக்கவ்வளவு கொழுப்பேறி விட்டுதே பரதேசி...!'' என்று கொக்கரித்துக் கொண்டு பலகாரப் பெட்டியை எட்டி எடுத்து செல்லம்மாவின் முகத்தில் வீசி எறிகிருர்.

அவள் தலேயைச் சற்றுக் குனிந்து கொள்கிருள். பெட்டி கீழே விழுந்து இடியப்பம் நிலத்தில் சிந்துகிறது.

நிலத்தில் படுத்துச் சொறிந்துகொண்டு கிடந்த நாய் விருட்டென்று எழுந்து விருந்தைமேல் பாய்ந்தேறுகிறது. காகக் கூட்டமொன்று திடீர்க் கொள்ளேக்காரர் போல ஆரவாரித்துக்கொண்டு பறந்து வந்து விழுகிறது. காலே முதல் வேப்பமரக்கிளேயிலிருந்து கரைந்து கொண்டிருந்த அண்டங்காக்கை சிறகடித்து வந்து அவற்ருேடு கலந்து கொள்கிறது.

அந்த இடியப்பங்கள் ஆறுமுகத்தாரின் கண்களுக்குள் இப்போது விரிகின்றன. நாயும் காக்கைகளும் போட்டி போட்டுக்கொண்டு பொறுக்கி எடுத்த......அந்த இடியப் பங்கள்.........

''நான் தூக்கி எறிஞ்சிருக்கக் கூடாது. அந்தப் பாவந் தான் இப்ப கிடந்து தவண்டையடிக்கிறன்'' என்று அவர் உள்ளம் அவரைக் குத்துகிறது.

''மணி ஒன்பது; டாக்குத்தர் வரப்போறுர்.''

கங்காணி ஒருவன் சொல்லிக்கொண்டு விரைந்தோடு கிறுன்.

"வயிற்றிலே குழப்பமாகத்தான் கிடக்குது. பொறுக் கேலாது. போகத்தான் வேணும்."

ஆறுமுகத்தார் கட்டிலிலிருந்து மெல்ல எழுந்து தலை யணைக்குக் கீழ் வைத்திருக்கும் பொலித்தீன் பையை எடுத்து, அதற்குள் காலை நுழைத்து, மடித்துச் சீலைத் துண்டி ஞல் கட்டிச் சரிபார்த்துக் கொள்கிருர். மலகூடத்துள் தேங்கி நிற்கும் நீரினுல் புண் இனிமேல் நனைய முடியா தென்ற நம்பிக்கையோடு கட்டிலை விட்டிறங்கி நொண்டி நொண்டி நடக்கத் தொடங்கினுர்.

## 2

மணி பன்னிரண்டு தாண்டி பதினைந்து நிமிடங்களுக்கு மேல் கழிந்திருக்கும் ஆஸ்பத்திரிக் கட்டில்கள் ஒவ் வொன்றையும் நோயாளர்களைப் பார்க்க வந்து நிற்கும் அவர்களின் உறவினர்கள் சூழ்ந்து நிற்கிருர்கள்.

ஆறுமுகத்தார் மாத்திரம் தனித்துக் கிடக்கிருர். அவருக்கு அருகிலுள்ள கட்டில்களை இனசனங்கள் நெருக்க மாகச் சுற்றி நிற்கிருர்கள். நோயாளர்களான தங்கள் உறவினர்களின் நிலைமையைக் கரிசனையோடு விசாரிக்கிருர் கள். அவர்களுக்கிருக்கும் அக்கறையும் நெருக்கமும் நோயாளிக்கும் அவர்களுக்குமிடையேயுள்ள உறவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. அவர்களில் சிலரது பார்வை தனித்துவிடப்பட்டிருக்கும் ஆறுமுகத்தார் மேல் இடையிடையே அநுதாபத்தோடு விழுந்து திரும்புகிறது.

ஆறுமுகத்தாரால் அந்த அநுதாபப் பார்வையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தனிமையைத் தவிர்த்து,

தனக்கென்றும் யாராவது ஒருவர் அங்கே வரவேண்டு மென்று அவர் உள்ளம் ஏங்குகிறது. "அவள் ஏன் இன்னும் வரவில்லை? பஸ் கிடைக்காமல் காத்து நிற்கிருளோ" என்று நினைத்துக் கொள்கிருர்.

"என்னைப் பார்த்து பிறர் அநுதாபப்படும் நிலைமைக்கு இன்று நான் வந்துவிட்டேன்" என்று எண்ணும் போது பிரபலமனிதராக வாழ்ந்த கடந்தகால நினைவுச் சுருள் குலைந்து வருகின்றது.

பத்து வருடங்களுக்கு முன் நோயாளியாகி வெளி உலகத் தொடர்புகள் அறுந்து போவதற்கு முன் 'தரகர் ஆறி' என்ற முக்கியஸ்தரை அறியாதவர்கள் அந்தச் சுற்று வட்டாரத்தில் இருக்க முடியாது. ஐந்து ரூபா பெறுமதி யான புகையிலை நாற்று முதல் ஐம்பதினுயிரம் ரூபா பெறுமதியான பாடம்போட்ட புகையிலை வரை அவர் தரகு பார்த்து விலைபோகும். வாங்குகின்றவனும் விற்கின்ற வனும் நயம் தனக்குத் தனக்கென்று நினைக்கும் வண்ணம் அவர் தரகுப் பேச்சு அமைந்திருக்கும். உண்மையில் நயம் என்பது அவர்கள் இருவரையும்விட தரகருக்குத்தான் அதிக மாகவிருக்கும். நயமான வார்த்தைகளால் இனிக்க இனிக்கப் பேசி மற்றவர்களைக் கவருவது அவருக்குக் கைவந்த ஒரு கலை. பிறர் பேச்சைக் கேட்டு இலகுவில் ஏமாருதவர்களும் அவருடைய இங்கிதமான பேச்சின் மந்திரசக்தியில் எளிதாக மயங்கிப் போவார்கள். அவரிடத்தில் இயல்பாக அமைந் திருக்கும் நயமான பேச்சும் உள்ளத்தில் கரந்துள்ள தந்திர முந்தான் அவரது தொழிலின் மூலதனங்கள். அவர் தன் மனத்தில் ஒன்றரைத் தீர்மானித்து விட்டாரென்ருல் விற்பதற்கு விரும்பாதவனையும் விற்கச் செய்துவிடுவார். வாங்குவதற்கு விரும்பாதவனையும் வாங்கச் செய்வார். விவசாயிகள் மட்டத்தில் 'தரகர் ஆறி' ஒரு காலத்தில் மிகவும் பிரபலமான மனிதர். அக்காலத்தில் அவருடைய

உதவியை நாடி அயற்கிராமங்களிலிருந்து தினமும் பலர் அவர் வீட்டுக்கு வந்து போவார்கள்.

காலையில் வீட்டிலிருந்து அவர் புறப்பட்டு விட்டால் திரும்பவும் விளக்கேற்றிய பின்னர்தான் பெரும்பாலும் அவரை வீட்டில் சந்திக்கமுடியும். தினமும் அவருக்குக் கிடைக்கும் வருமானம் ஐம்பது ரூபாவுக்குக் குறையாமல் அவருடைய மடியில் எப்போதும் இருக்கும். சில சமயங்களில் ரூபா ஐந்நூறைக் கூடச் சுளுவாகத் தட்டிக்கொண்டு வந்துவிடுவார்.

புகையிலை, வெங்காயம், மிளகாய், ஆடு, மாடு, கோழி என்று எந்தப் பொருளுக்கும் அவர் தரகு பார்க்கத் தவறுவதில்லை. யார் வீட்டில் என்ன பொருள் விற்பதற்கிருக்கிறது என்பதை அறிய வேண்டுமானுல் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இப்போது அந்த வருமானங்கள் ஒன்றுமே அவருக்கில்லை. முன்பிருந்த செல்லாக் காசு கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து அவர் செல்வாக்காக ஆகிக்கொண்டிருக்கிருர்.

இப்படி ஒரு நிலைமை தனக்கு ஏற்படுமென்று என்றைக்கும் அவர் எண்ணியிருந்தவரில்லை. இதற்கெல்லாம் காரணம் இந்த நோய்தான்.

இந்த நோய்......இது ஒரு பெரும் நோயாக இதன் ஆரம்பத்தில் உண்மையாகவே அவர் எண்ணியிருந்தவரில்லை. வலது காற் பெரு விரலின் கீழ்ப்பாகத் தசையில் கண்டிக் கருமை படர ஆரம்பித்தது. பின்னர் அந்த இடத்தில் புள்ளியளவில் சிறியவொரு புண். ஈரலிப்புத் தன்மை என்பது கொஞ்சமுமில்லாத வரண்டுபோன புண்ணது. சில நாட்களின் பிறகு புண்ணிலே ஒரு துவாரம் தோன்றியது. நோவு என்பது அணுவளவுமில்லாத புதுமையான அந்தப் புண்ணுக்குள்ளே "சுள்–சுள்" என்று மாத்திரம் மெல்லிய

குத்துவேதனை இடையிடையே உண்டாகிக் கொண் டிருந்தது.

புண் எப்படி உண்டானதோ அதேபோலத் தானுகவே ஆறிப்போய்விடுமென்றுதான் முதலில் அவர் நம்பினுர். நாட்கள் பல சென்றபிறகுதான் அவர் உள்ளத்தில் சந்தேகம் வளர ஆரம்பித்தது. அதன் பின்பு சில கை மருந்து களை இட்டுப்பார்த்தார். அந்த மருந்துகளாலும் சுகம் கிடைக்கவில்லை. அநுபவத்தர்களாக இருக்கும் அயலவர்கள் சிலர் அந்தப் புண்ணைப் பார்த்தார்கள். "இது நோயல்ல, சூனியத்தால்தான் இந்தப் புண் வந்திருக்கிறது" என்ருர்கள். ஆறுமுகத்தார் மனத்திலிருந்த சந்தேகம் நம்பிக்கையாக மாறியது. அவர்மேற் கொண்ட பொருமை காரணமாக மடக்கி, வீட்டோடு முடங்கிக் கிடக்கச் செய்யவேண்டு மென்று யாரோ சூனியம் செய்து வைத்திருக்கிருர்களென உறுதியாக நம்பினுர்.

அவர் சந்தேகத்தை ஊர்சிதப்படுத்தி செல்லம்மாவும் அவருக்குத் தூபம் போட்டுக் கொண்டிருந்தாள்.

அதன் பிறகு ஆறுமுகத்தார் வீட்டில் என்றுமில்லாத வாறு உடுக்கை ஒலிக்க ஆரம்பித்தது. மாந்திரீகர்கள் ஒருவர் பின் ஒருவராக மூவர் வந்தார்கள். மடை வைத்தார்கள்; நூல் கட்டினுர்கள்; பலி கொடுத்தார்கள்; வீடுகாவல் செய்தார் கள்; கழிப்புச் செய்தார்கள். ஆறுமுகத்தாரின் பணம் ஒரு புறத்தில் கரைந்துகொண்டிருக்க புண் கொஞ்சங் கொஞ்ச மாகப் பெருத்துக்கொண்டு வந்தது. மாந்திரீகர்களுக்கு வீண் செலவு செய்து அவமாகக் காலத்தைப் போக்கியிருக்க வேண்டாமென்று ஆறுமுகத்தார் எண்ணத் தொடங்கினுர்.

"இஞ்சாருங்கோ..............." செல்லம்மா அவர் தலை மாட்டில் உணவுப் பார்சலோடு நின்று கொண்டிருக்கிருள்.

அவள் சகோதரி மகன் குலசிங்கம் கட்டில் கம்பியைப் பிடித்துக்கொண்டு கால் மாட்டில் நிற்கிறுன்.

செல்லம்மாவைக் கண்டதும் அவர் கண்கள் கலங்குகின்றன. கண்ணீரை வெளியில் காட்டிக்கொள்ள விரும்பாமல் கண்மடல்களை ஒரு தடவை மூடித் திறக்கிறுர். கண்ணீர்த்துளிகள் கன்னத்தில் உருண்டோடுகின்றன. கால்மாட்டில் நிற்கும் குலசிங்கத்தை ஆதரவோடு பார்த்து, சுமுகமாக மெல்லச் சிரித்துக்கொண்டு ஆவலோடு, செல்லம் மாவின் பக்கம் திரும்பி "என்ன கொண்டந்தனி?" என்று கேட்கிறுர்.

"வரகரிசிச் சோறு......"

அவர் முகம் கறுக்கிறது. இப்போது அவருக்கிருக்கும் பசி வேகத்துக்கு நெல்லரிசிச்சோறு தின்ருல்தான் திருப்தியாக இருக்கும் போலத் தோன்றுகிறது. வீட்டில் என்ருல் தான் விரும்பியதை வற்புறுத்தி வாங்கித் தின்றிருப்பார். ஆஸ்பத்திரியில் அவர் நினைத்தது போலவெல்லாம் நடக்க முடியுமா?

"சாப்பாட்டைக் குழைச்சுத் தரட்டுமா?" என்கிறுள் செல்லம்மா. அவருக்கும் உடனே சாப்பிடவேண்டும் போலத்தான் தோன்றுகிறது ஆனுல் பார்வையாளர்கள் வாட்டுக்குள் மொய்த்துக் கொண்டு நிற்கிறுர்கள். அவர்களுக்கு மத்தியில் சாப்பிடுவதற்கு மனம் ஒப்பவில்லை. "வேண்டாம், பிறகு சாப்பிடுகிறேன்." என்று சொல்லிக் கொண்டு அவளுடைய பெருமகனைப் பார்க்கிறுர். அவன் முகம் வாடிக்கிடக்கிறது. மௌனமாகத் தலைகுனிந்து நிற்கிறுன். அவனுடைய முகவாட்டத்துக்கான காரணம் அவருக்கும் தெரியாமலில்லை. தெரிந்துகொண்டும் "என்ன தம்பி பேசாமல் நிற்கிறுய்?" என்று சம்பிரதாயப்பூர்வமாகக் கேட்கிறுர்.

அவன் சுருக்கமாக "ஒண்டுமில்லை" என்று சொல்லிக் கொண்டு மீண்டும் தலைகுனிந்து கொள்கிறன்.

செல்லம்மா போத்தல் ஒன்றில் தண்ணீர் எடுத்துவந்து அவர் சாப்பிடுவதற்குத் தயாராக வைக்கிருள். பார்வை நேரம் முடிந்துவிட்டதற்கான அறிவிப்பு மணி ஒலிக்கிறது.

பார்வையாளர் ஒவ்வொருவராக "வாட்"டிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறர்கள். செல்லம்மாவும், குலசிங்கமும் ஆறுமுகத்தாரிடம் சொல்லிக்கொண்டு புறப் பட்டுவிட்டார்கள்.

ஆறுமுகத்தார் செல்லம்மாவின் பெருமகன் குலசிங்கத் தின் உள்ளத்தில் பதுங்கியிருக்கும் பேராசையை நினைத்துத் தனக்குள் நகைத்துக் கொள்கிறர். அவனுக்கு அவர்மேல் அப்படிப் பெரிதாக ஒரு அக்கறையுமில்லை. அவரது சொத்தின் மேல்தான் ஆராத பாசம் இருந்துகொண் டிருக்கிறது. அதை உணர்ந்து வைத்துக் கொண்டிருக்கும் அவர் அவனோடும் அவன் குடும்பத்தோடும் தனக்குள்ள உறவை முறித்துக்கொள்ளவே முயன்றுகொண்டிருக்கிறர். ஆனல் செல்லம்மா இடையில் நின்று அவர்களை அவரோடு இணைக்கின்ற முயற்சியில் மூர்க்கமாகப் போராடிக்கொண் டிருக்கிருள்.

ஆறுமுகத்தார் தண்ணீர்ப் போத்தலையும், உணவுப் "பார்சலையும்" கையில் எடுத்துக்கொண்டு "வாட்"டுக்கு வெளியே வருகிறர். தண்ணீரில் கை அலம்பிக்கொண்டு விறுந்தையில் போட்டிருக்கும் வாங்கின்மேல் 'பார்சலை' அவிழ்த்து வைத்துக்கொண்டு உண்ணத் தொடங்கினர்.

அவர் உள்ளத்தில் செல்லம்மாவின் பெருமகன் பற்றிய சிந்தனைகள் மீளவும் கிடந்து அரைபடுகின்றன. அவன் தன் இஷ்டத்துக்கு அவனுக விரும்பி அவரைப் பார்ப் பதற்கு அங்கு வந்திருக்கமாட்டான். அவனைச் செல்லம்மா தான் வலிந்து இழுத்து வந்து அவர்முன் நிறுத்தியிருக்கிருள்

என்பது அவர் ஊகம். கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு அவன் அவர் வீடு வந்தபோது நடந்த அந்தச் சம்பவத்தை அவர் உணவோடு சேர்த்து அசைபோடுகிறார்.

மனிதனுக்கு எல்லாவிதச் சுவைகளும் கெட்டபின்னர் இறுதியாகத் தனித்தும் எஞ்சி நிற்பது நாவின் சுவை ஒன்றுதான்.

ஆறுமுகத்தாரின் நாவுக்கு எதுவும் சுவையாக இருக்க வேண்டும். நோய்வாய்ப்பட்ட பின்னரும் வீட்டோடு இருந்து பழைய சுவைகளை ஒதுக்கிவிட முடியாமல், பால், இறைச்சி, முட்டை, மீன் என்பவற்றோடு பனங் கள்ளையும் இஷ்டம் போல இரசித்துப் பருகிக்கொண்டிருந்தார். பத்தியங்களை எல்லாம் மீறித் தன் மனம்போலக் கண்டதை யும் தின்று வந்ததால் மிகவிரைவாகப் புண்பெருகி வேதனை கொடுக்க ஆரம்பித்தது. தானாகவே ஆஸ்பத்திரிக்குச் சென்று காட்டுவதற்கும் அவர் விரும்பவில்லை. மற்றவர்கள் வேறு யாராவது அழைத்தாலும் அவர்களை நம்பி அவர் போகப் போவதுமில்லை. ஆறுமுகத்தார் அவர் தம்பியின் மகன் மகாலிங்கந்தான் எல்லா வகைகளிலும் தன்னைக் கவனிக்கவேண்டுமென்று எதிர்பார்த்தார். அவர் தனக் கென்று ஒரு பிள்ளை பிறக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்தபின்னர் தன் எதிர்கால நலன்கருதி அவன் ஒருவனையாவது தன்னோடு நெருக்கமாக வைத்துக்கொள்ள விரும்பினார். அவருக்கு நோய்நொடியென்றால் அவன் வந்துதான் அவரை டாக்டரிடம் அழைத்துப்போக வேண்டும். வாரத்தில் ஒரு தடவையாவது ஓய்வு கிடைக்கும் போது அவன் அவர் வீட்டுக்கு வந்து போய்க்கொண் டிருந்தான்.

இரண்டு வாரங்கள் கழிந்ததும் இந்தத் தடவை அவர் வீட்டுக்கு அவன் வரவில்லை. அவராக என்றைக்கும் அவனுக்குச் சொல்லியனுப்புகின்ற வழக்கம் அவரிடமில்லை.

அவன் அவரைத் தேடிக்கொண்டு வலியவரவேண்டும்; அது அவனுடைய கடமை என்பது அவருடைய நினைப்பு.

மகாலிங்கம் வீட்டுக்கு வராமலிருக்கும் இந்த சந்தர்ப்பத்தை நன்ருகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டு மென்று செல்லம்மா எண்ணினுள். அவள் தன் சகோதரியின் மகன் குலசிங்கத்திடம் ஆள் அனுப்பி அவனை வீட்டுக்கு வரச் செய்தாள்.

அவன் அங்கு வந்து ஆறுமுகத்தாரின் படுக்கை அருகே அமர்ந்திருந்து என்றுமில்லாத கரிசனையோடு அவரைக் கவனித்தான்.

ஆறுமுகத்தார் அவன் அங்கே வந்திருப்பதை அறிந்து கொண்டும் அறியாதவர் போலக் கண்களை மூடிக்கொண்டு கிடக்கிருர்.

அவனைக் கண்டும் காணுதவர் போலப் பாசாங்கு செய்வதன் மூலம் அலட்சியம் பண்ணுகிருர் என்பது அவனுக்கு விளங்கிக் கொள்ளுகிறது.

செல்லம்மாவால் குலசிங்கத்தை அவர் உதாசீனம் செய் வதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என்ன நடக்கிறது என்று கொதிக்கும் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிறிது நேரம் அவதானித்துக் கொண்டிருந்தாள்.

ஆறுமுகத்தார் அசையாமல் கிடக்கிருர். அவர் அருகே அவன் தனிமைப் பட்டவனுகக் குந்தி இருக்கிருன். அவனுக வலிந்து கொண்டு அவரோடு பேசுவதற்கும் அவனுக்கு மனம் வரவில்லை.

நேரம் நீண்டு மௌனம் வளர்கிறது.

செல்லம்மா பொறுமையை இழக்கிருள்.

இதன் மேலும் அவள் சகித்துக்கொண்டிருக்க அவளுக்கு முடியவில்லை.

''பொடி வந்திருக்குது; தெரியாதே'' என்கிறாள் அதட்டலாக.

ஆறுமுகத்தார் கண்களை மெல்லத் திறக்கிறார். அவன் வந்திருப்பதை இப்போதுதான் கண்டு கொண்டவர் போல அவனை நோக்குகிறார். ''தம்பி...'' என்று முகமன் வார்த்தை கூறிக் கொண்டு திரும்பவும் கண்களை மூடிக்கொள்கிறார்.

இப்போது குலசிங்கம் உள்ளத்தில் ஒரு சந்தேகம். ஆறுமுகத்தார் வேண்டுமென்றுதான் இப்படி நடக்கிறாரா? அல்லது நோயின் தாக்கத்தினால் வேதனையோடு இவ்வாறு கிடக்கிறாரா? என்பதை உணரமுடியாமல் தடுமாறுகிறான். நோயில் விழுந்து கிடக்கும் அவரோடு, செல்லம்மா கடுமையாக நடந்திருக்க வேண்டாம் என்று அவன் மனதுக்குப் படுகிறது. அவர் இனசனம் இல்லாத ஒரு அநாதையாக அவனுக்குத் தோன்றுகிறார். அவர்மேல் இனம் புரியாத ஓர் அநுதாபம் அவன் உள்ளத்தில் பிறக்கிறது. செல்லம்மா திரும்பவும் முன்போல கடுமையாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பம் உருவாகாமல் தடுக்கவேண்டுமென்று அவன் உள்ளம் துடிக்கிறது.

அவன் அவருக்கருகே மேலும் நெருக்கமாகச் சென்று மெல்ல அழைக்கிறான்

''குஞ்சியையா.........குஞ்சியையா.........''

ஆறுமுகத்தார் கண்களைத் திறந்து ''என்ன?'' என்ற வினாவைப் பார்வையில் தேக்கி, அவனை நோக்குகிறார்.

''ஆஸ்பத்திரிக்குப் போவம்'' என்கிறான் அவன்.

''வேண்டாம்.........''

''பிரைவேட் டாக்குத்தருக்குக் காட்டுவமே?''

''வேண்டாந்தம்பி''

அவன் அதன்பின் சற்றுநேரம் மௌனமாக இருந்து விட்டு ''அப்ப நானென்ன செய்யிறது'' என்று சொல்லிக் கொண்டு சலிப்போடு அங்கிருந்து எழுந்தான்.

ஆறுமுகத்தார் சோர்ந்து மறுபடியும் கண்களை மூடிக் கொள்கிருர்.

"நீ என்ன செய்யிறது? கிடந்து நாறிப் புழுக்கட்டும்; நீ உன்ரைபாட்டிலெ போ!"

செல்லம்மா பெருமகன்மேல் சீறி விழுவதுபோல உண்மையில் ஆறுமுகத்தார் மேல் பாய்ந்தாள்.

"நான் வாறன்" சொல்லிக் கொண்டு குலசிங்கம் புறப் பட்டான்.

அவள் தன் ஆத்திரம் முழுவதையும் ஆறுமுகத்தார் மேல் கொட்ட ஆரம்பித்தாள்.

"உனக்கு அதுகளைக் கண்ணிலே கண்டாலே பிடிக்கி தில்லை. அதுகள் ஏதோ உன்ரை புதையல் எடுக்கத்தான் திரியிதுகள் எண்டு நினைக்கிருய் போலே கிடக்கிது."

"என்னட்டை என்ன புதையல் கிடக்குதெண்டு நீ என்னேடை அராத்த வாருய்!"

"ஏன், புதையல் எடுக்கிறவர் எங்கே போய்விட்டார். அவருக்குத் தேவையொண்டுமில்லைப் போலெ......இல்லை யெண்டால் ஓடி வந்துவிடுவர்."

"எடியே பொத்தடி வாயை."

"என்ன கனக்க உலுப்பிருய்? உள்ளதைச் சொன்னல் உடம்பெல்லாம் குத்துதே?"

"எடி நாயே...... உன்ரை பெருமகனைப் போலெ அவன் தெருவழிய திரியிறவனில்லை அவனுக்கும் என்னென்ன வேலையோ."

"ஓ......ஓ...... அவர் பெரிய வாத்தியார். என்ரை பெருமக்கள் தெரு அளக்கிற காவாலியள். அவன்கள் அவரைப்போலெ தனக்கொரு தேவையெண்டவுடனே உன்னட்டை ஓடிவரயில்லை."

"வந்தாலும் குடுக்க என்னட்டை என்ன கிடக்குது?"

"ஏன் நீ குடாமலே இருக்கிறுய்? எனக்கெல்லாம் தெரியும்"

"நீ சுரண்டிக் கொண்டுபோய் உன்ரை ஆக்களுக்குக் குடுக்கக் குடுக்க, என்னட்டை என்ன மிச்சங்கிடக்குது."

"எடியாத்தையிரோ எண்டாராம். உப்புக்கும் புளிக்கும் கணக்குப் பார்த்துக் குடுக்கிற உன்ரை காசுதான் இஞ்சை மிஞ்சுகிது. ஒரு ஆனதுணிகட்ட வழியில்லை எனக்கு, அதுக்குள்ளே கதை மட்டும் பெரிசு."

"ஏன் உள்ளது போதாதே! அலங்காரமாக உடுத்துக் கொண்டு ஆருக்குக் காட்டப் போறுய்?"

"ஐயோ கடவுளே! இந்தக் கண் கெடுவான்ரை கதையைக் கேள். நீ ஆருக்கும் சேத்துக்குடு. அதுக்காக இந்தக் கண்கெட்ட கதை கதையாதே! நான் இல்லை யெண்டால் நீ கிடந்து நாறுவாய்."

"நான் நல்லா நாறுகிறேன். நீ இஞ்சை ஆருக்குக் காவல் கிடக்கிறுய்? போடி போ......உன்ரை ஆக்கள் வீட்டைபோ."

"நானும் போற காலம் வரப்போவன்."

"போறவள் இப்பவே போ. என்னைக் கருவறுத்தது போதும். இஞ்சினை உள்ளதுகளை வாரிக்கொண்டு போறதுக்கு நேரகாலம் பாத்திருக்கிறுயாக்கும். அது நடவாது. இப்பவே போவிடு."

"போறன். ஒரு நேரத்தீனுக்காக இஞ்சை கிடந்து ஆறணியப்படாமல் போறன். நீ பாயோடை கிறந்து அழுந்திச் சாவாய்."

செல்லம்மா சினந்து கொண்டு அடுக்களைப் படலையைத் திறந்தடித்த வண்ணம் உள்ளே புகும் காட்சி இப்பொழுதும் அவர் மனக்கண்ணில் தெரிகிறது. வாயிற் போட்ட

உணவை மென்று மென்று அவளை எண்ணிச் சிரித்துக் கொள்கிறார். அவள் தனக்குத் துணையாக இல்லாமல் இருந்தால், தான் படவேண்டிய கஷ்டங்களை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்க்கிறார். கணவன் என்ற அவர்மேல் அவளுக்கிருக்கும் கடமை உணர்வுக்கும், பொருள் மேலுள்ள ஆசைக்குமிடையில் அவள் நசிப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற உண்மையை நிதானமாக எண்ணிப் பார்க்கிறார்.

உணவை அவர் முடித்துக் கொண்டு எழுந்து சென்று கட்டிலில் மெல்லச் சாய்ந்து கொள்கிறார். "பின்னேரம் மகாலிங்கம் வருவான்" என்று நினைத்துக்கொண்டு கிடந்தவர் உண்ட களைப்பில் தன்னை மறந்து சற்றுக் கண்ணயர்ந்தார்

## 3

பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்த மகாலிங்கம் பின்னர் தோட்டத்துக்குப் போய் அங்கிருந்து அவசரமாகத் திரும்பி ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டான். அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களில் அவன் ஒருவன்தான் பெரிய தகப்பன் ஆறுமுகத்தார் விஷயத்தில் அக்கறையுள்ளவனாக இருக்கிறான்.

ஆறுமுகத்தாரின் தம்பி இறந்த பிறகு, தம்பியின் ஸ்தானத்திலிருந்து பெருமக்களான மகாலிங்கத்தையும் அவன் சகோதரர்களையும் ஆறுமுகத்தார் கவனிப்பாரென்று ஆரம்பத்தில் அவர்கள் நம்பினார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக ஆறுமுகத்தார் ஒரு போதும் நடந்து கொள்ளவில்லை. மகாலிங்கத்தின்

சகோதரிகள் இருவர் திருமண வயது வந்தும் மணமாகாமல் வீட்டோடு பெருமூச்சு விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவன் தம்பி சிவலிங்கம் படித்து விட்டு வேலையின்றி வீட்டுக்குப் பாரமாக இருக்கிறான்.

இந்தக் காலத்தில் அவன் போன்றவர்கள் அரசாங்க உத்தியோகம் பெறவேண்டுமானால் குறைந்தது மூவாயிரம் ரூபாயாவது பின் கதவால் கொடுக்க வேண்டும். அப்படிச் செலவு செய்தாவது ஒரு உத்தியோகத்தை அடைந்து விட்டால் சகோதரிகளின் திருமணப் பிரச்சினையையும் ஓரளவு தீர்த்து வைக்கலாம் என்ற எண்ணத்தில் பெரியதகப்பன் ஆறுமுகத்தாரின் உதவியை அவன் நாடினான். அவனுக்கு உதவி புரியத் தகுந்த சக்தி தனக்கில்லையென்று அவர் கை விரித்துவிட்டார். அதன் பின்னர் அவரோடு இருந்து வந்த கொஞ்ச நஞ்சத் தொடர்புகளையும் அவன் முற்றாக அறுத்துக் கொண்டுவிட்டான்.

சிவலிங்கத்தைப் போல ஆறுமுகத்தாரைக் கைகழுவி விடும் மனோநிலையில் மகாலிங்கம் இருக்கவில்லை. தம்பியின் பிள்ளைகளில் சிறுவயது முதல் ஆறுமுகத்தாரால் கொஞ்சமாவது நேசிக்கப்பட்டவன் மகாலிங்கம் ஒருவன்தான். அவன் தன் தம்பியைப் போல அவரை வெறுத்து ஒதுக்கி விட அவனால் முடியவில்லை. குடும்பத்தில் மூத்தவனாகிய அவனுக்கு, பிள்ளை குட்டி இல்லாதவரைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதும் தவிர்க்க முடியாத ஒரு கடமையாகத் தோன்றுகிறது.

குடும்பப் பொறுப்புகள் அதிகமுள்ளவன் அவன். தன் வேலைகள் சிலவற்றைச் செய்து முடிப்பதற்காகச் சிவலிங்கத்தை ஏவுவதுண்டு. அவன் சொல்லை எந்தக் காரியத்திலும் தட்டாமல் கேட்டு நடக்கும் அவன் தம்பி சிவலிங்கம் பெரியதகப்பன் ஆறுமுகத்தார் சம்பந்தப்பட்ட

விஷயங்களில் மாத்திரம் கேட்டு நடப்பதற்கு முடியா தென்று பிடிவாதமாக மறுத்துவந்தான்.

கடந்த மூன்று வாரகாலமாக மகாலிங்கம் குத்தகைக்கு எடுத்திருக்கும் தோட்டத்தில் மும்முரமாக வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அவன் பாடசாலைக்கு இடையிடையே லீவுக் கடிதத்தை அனுப்பிவைத்துவிட்டு தோட்டவேலை களில் மூழ்கிப் போனுன். அவன் ஊரோடு வந்து நிற்கும் காலங்களில் வாரத்துக்கு ஒரு தடவையாவது மூன்று மைல்களுக்கப்பாலுள்ள தன் வீட்டுக்கு வந்துபோகவேண்டு மென ஆறுமுகத்தார் எதிர்பார்த்தார். அவர் நோய்வாய்ப் பட்டபிறகு அடிக்கடி அங்குபோய் அவரைக் கவனிக்க வேண்டியது தனக்குரிய கடமையென்று கருதி அவனும் அங்குபோய் வந்துகொண்டிருந்தான். இப்போது அவனுக் கிருக்கும் தோட்டவேலையை விட்டு, கொஞ்சமும் விலக முடியாத நிலையில் சிவலிங்கத்தை அழைத்து பெரிய தகப்பனைச் சென்று பார்த்து வருமாறு சொல்லியும் அவன் போய் வருவதற்கு மறுத்துவிட்டான். அவனைக் கோபிப் பதற்கோ அல்லது வற்புறுத்தி அனுப்புவதற்கோ மகாலிங்கம் விரும்பவில்லை. அவன், சிவலிங்கம் மறுத்ததைப் பெரிதுபடுத்தாமல் தானே சென்று பார்த்து வருவதற்காக ஆறுமுகத்தார் வீட்டுக்குப் புறப்பட்டான்.

ஆறுமுகத்தார் என்றைக்கும் பிறர் சொல்லுகின்ற ஆலோசனைகளைக் கேட்டு நடக்கின்ற ஒருவரல்ல. தான் எல்லா விஷயங்களையும் அறிந்த ஒருவர் என்ற எண்ணம் அவருக்கு மனதில் உண்டு. "புத்தகத்தைப் படிப்பதிலும் பார்க்க உலகத்தைப் படிக்கவேணும் நான் உலகத்தைப் படிச்சவன். எனக்கெல்லாம் தெரியும்" என்று ஆறுமுகத்தார் சில சமயங்களில் சொல்லி மகாலிங்கத்தை ஒன்றுமறியாத பச்சைக்குழந்தை ஆக்கிவிடுவார்.

அவருக்கு இந்த நோய் ஆரம்பித்த காலத்தில் மகாலிங்கம் கம்பளையில் ஆசிரியராகக் கடமையாற்றிக்

கொண்டிருந்தான். அவன் ஊரோடு மாற்றலாகி வந்த போது ஆறுமுகத்தாரின் புண்ணும் அதன் ஆருத தன்மையும் கண்டு இது நீரிழிவு நோயாகத்தான் இருக்கவேண்டும் என்று சொன்னுன்.

''சலரோக மெண்டால் அடிக்கடி சலம் போகும். எனக்கப்பிடி ஒண்டுமில்லே. அது பணக்கார வியாதி. பெரிய பணக்காரருக்குத்தான் வரும். எனக்கேன் வருகுது?'' என்று ஆறுமுகத்தார் திடமாக மறுத்துப் பேசினுர்.

மகாலிங்கத்தின் வற்புறுத்தலும் நோய் கொடுத்த வேதனையும் சேர்ந்துதான் இறுதியில் அவரை ஆஸ்பத்திரிக்குப் புறப்படச் செய்தன. அதன் பின் பலதடவைகள் அவர் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து வலது கால்விரல்கள் ஐந்தையும் ஒவ்வொன்ருக இழந்த பிறகு 'உயிர் போனுலும் இனிமேல் ஆஸ்பத்திரிக்குப் போவதில்லே' என்ற முடிவோடுதான் அவர் வீட்டுக்குத் திரும்பினுர்.

ஆறுமுகத்தாரிடம் சுயக் கட்டுப்பாடு என்பது கொஞ்சமும் இருக்கவில்லே. அவருடைய நன்மையைக் கருதிப் பிறர் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அவர் அடங்கிப் போகக் கூடியவரல்லர். மகாலிங்கம் ஒருவன்தான் அவரைக் கொஞ்சங் கொஞ்சமாக வசைத்தெடுக்க வேண்டியவனுக இருக்கிறுன்.

''இப்போது அவர் என்ன நிலேயில் இருக்கிருரோ? எனக்கென்ன பொறுப்புக் காத்துக்கிடக்குதோ.....?'' என்று எண்ணிக்கொண்டு வெளிப்படலேயைத் திறந்துகொண்டு சயிக்கிளே உருட்டியவண்ணம் வளவுக்குள்ளே நுழைந்தான் மகாலிங்கம்.

அவன் வருவது கண்டு செல்லம்மாவின் முகம் திடீரென்று களே இழந்து போயிற்று. அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''தம்பி வாருங்கோ'' என்று உற்சாகமில்லாமல் அவனே வரவேற்ருள்.

அவளுடைய குரல்கேட்டு ஆறுமுகத்தார் கண் விழித்துப் பார்த்தார். மகாலிங்கம் வந்திருக்கிறுன் என்பதை அறிந்ததும் திரும்பவும், அவர் கண்களை மூடி தியான நிலைக்குச் சென்றுவிட்டார்.

சற்றுத் தூரக் கிடந்த வெற்றிலைத் தட்டத்தை எட்டிப பிடித்து வைத்துக்கொண்டு அரிசிக்குள்ளே கல்லுப் பொறுக்குவது போல தலைகவிழ்ந்து பாக்குச் சீவல் பொறுக்க ஆரம்பித்துவிட்டாள், செல்லம்மா.

ஆறுமுகத்தார் உடல் தளர்ந்து சோர்ந்து போய்க் கிடக்கிறுர். தாடையில் நரைமயிர்கள் வளர்ந்து குத்திக் கொண்டு நிற்கின்றன. கண்களிலும் கடவாயிலும் ஈக்கள் வந்து விழுந்து விழுந்து எழுகின்றன.

மகாலிங்கம் தூணைப் பிடித்துக்கொண்டு மௌனமாக நிற்கிறுன்.

ஆறுமுகத்தாருக்கு அவன்மேல் ஒரே கோபம்.

அவன் அங்கு வந்துபோய் மறுபடியும் அங்கு வருவதற்குச் சில தினங்கள் தாமதமாகி விட்டனவல்லவா? அதுதான் அவருக்கு இப்போது அவன் மேலுள்ள கோபம். அவன்மேல் அதிருப்தி உண்டாகிவிட்டால் மௌனத்தை ஆயுதமாகப் பிரயோகித்துத் தன் வெறுப்பை வெளிக் காட்டுவதுதான் அவருடைய வழக்கம். அவனைப் பொறுத்த வரையில் அவருக்குண்டாகின்ற கோபம் அதிக நேரம் நிலைத்து நிற்பதில்லை.

பின்னர் ஒன்றும் நடக்காததுபோல அவராக முன்வந்து அவனோடு சகசமாகப் பேச ஆரம்பித்துவிடுவார். இவர்தான் சற்று முன்னதாக மனத்தாங்கலோடு இருந்தவர் என்பதை நம்பமுடியாத அளவுக்கு அவனோடு உறவாடுவார்.

அவனோடு கோபம் பாராட்டுவதென்பது உண்மையில் அவருக்கு இயலாத காரியம். அப்படியொரு பற்றுதலை

அவன்மேல் அவர் வளர்த்திருக்கிறார். அவருக்கென்றொரு வாரிசு இல்லாமல் போனதால் தம்பியின் மகனான அவன் மேல் தவிர்க்க முடியாமல் நெருக்கமான ஒரு பற்றுதலையும் எதிர்பார்ப்புக்களையும் மனத்தில் வளர்த்துக் கொண்டிருக் கிறார்.

அவருக்கு நெருக்கடிகளும், கஷ்டங்களும் நேருகின்ற சமயங்களில் அவன் வந்து அவற்றைக் கவனித்துத் தீர்த்து வைக்கவேண்டும். உரிய நேரத்தில் அவன் வருவதற்குத் தவறிவிட்டால் அவருக்குக் கோபமுண்டாகி விடுகிறது. கோபத்தினால் தோன்றும் மௌனம் சற்று இறுக்கமானதாக இருக்குமானால் அவருக்கு வந்த கஷ்டமும் பெரிதாக இருக்கும்.

இன்று இலகுவில் சுமுகமான நிலைக்கு அவர் வரப் போவதில்லையென்பதை மகாலிங்கம் அதற்குள் உணர்ந்து கொண்டான்.

செல்லம்மா வழமையான தன் சம்பிரதாயபூர்வமான நடிப்புகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, அவனைக் கண்டு அலட்சியமாக இருப்பதுதான் அவனுக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது.

ஆறுமுகத்தாருக்கும் செல்லம்மா அவனை உதாசீனம் செய்வது உள்ளூர எரிச்சலை ஊட்டுகிறது.

உண்மையில் செல்லம்மாவின் சுயரூபம் அதுதான். இவ்வளவு காலமும் அவனைக் கண்டு வெளிக்கு நன்றாக நடித்துக் கொண்டிருக்கிறாள்.

சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் ''பெருமகனைத் தின்னி...... பெருமக்களைத்தின்னி......'' என்று தன் வாய் ஓயும் வரை ஆறுமுகத்தாரைப் பார்த்துத் திட்டித் தீர்ப்ப தற்கு அவள் தவறுவதில்லை.

மகாலிங்கத்தை நேரில் கண்டுவிட்டால் மாத்திரம் அவன் முகம் கறுக்காமல் அவள் நடந்து கொள்ளும் பக்குவத்தைக் கண்டு ஆறுமுகத்தாரும் மனம் திருப்திப்பட்டிருக்கிறுர். இன்று அவளும் அவனை எடுத்தெறிந்து நடப்பதைக் கண்டு அவர் மனம் பொருமிக் கொண்டிருக்கிறது.

மகாலிங்கம் அமைதியாகச் சிறிது நேரம் அங்கே நின்று கொண்டிருந்தான். அவர்களுள் ஒருவர் கூட அவனேடு வாய்திறந்து பேசுவதாக இல்லை.

ஆறுமுகத்தார்தான் இப்போது அவர் இருக்கும் நிலையில் அவனேடு பேசிக்கொள்ளமாட்டார். அவரோடு சேர்ந்து அவளுமா ஊமையாகிவிடவேண்டும்?

மகாலிங்கம் இந்தச் சூழ்நிலையில் நீடித்திருக்க விரும்பவில்லை. செல்லம்மாவோடு அவன் வலிந்து சென்று பேசுவதற்கும் அவனுக்கு மனம் ஒப்பவில்லை. வேண்டுமாளுல் ஆறுமுகத்தாரின் நிஷ்டையை எளிதாக அவன் கலைத்துவிடலாம். அது அல்ல இப்போது முக்கியம். இனிமேல் ஆகவேண்டிய காரியத்தைக் கவனிக்கவேண்டும் என்று அவன் எண்ணிக் கொண்டு திரும்பி வெளியே நடந்தான்.

ஆறுமுகத்தார் பொய்க் கோபம் கலைந்து போய்க் கொண்டிருக்கும் அவனைப் பார்த்து பலவீனமாக மெல்லச் சிரித்துக் கொள்ளுகிறுர்.

செல்லம்மாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவருடைய சிரிப்பு அவளுக்குக் கோபத்தைத்தான் மூட்டுகிறது. வெற்றிலைத் தட்டத்தை நிலத்தோடு சேர்த்து பெருத்த சத்தமாக அரக்கிவிட்டு அதிலிருந்து எழுகிறுள்.

சிறிது நேரம் கழிந்திருக்கும். கார் ஒன்று வந்து வீட்டுக்கு வெளியே நிற்கிறது. மகாலிங்கம் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்து ஆறுமுகத்தாரைப் பார்த்து

"வெளிக்கிடுங்கோ போவம்" என்கிறுன். ஆறுமுகத்தார் மறு பேச்சின்றி அவனேடு புறப்படுவதற்குத் தயாராகின்முர்.

அயலில் குடியிருப்பவர்கள் ஆண்களும், பெண்களு மாக கார் வந்து நிற்பதைக் கண்டு அங்கு வந்து கூடு கிறுர்கள்.

செல்லம்மாவின் மனதுக்கு அங்கு நடை பெறுபவை களைப் பார்க்கப் பொறுக்கவில்லை. அவளுடைய சகோதரி யின் மகன் குலசிங்கம் வலிந்து வலிந்து அழைத்தும் அவனேடு டாக்டரிடம் போவதற்கு ஆறுமுகத்தார் மறுத்து விட்டார். இப்போது மறு பேச்சில்லாமல் மகாலிங்கத்துடன் அவர் புறப்படுவது கண்டு மனம் பொறுமினுள். அவள் தன் மனவுளைச்சலைத் தீர்த்துக் கொள்வதற்கு அங்கு நின்று கொண்டிருக்கும் மகாலிங்கமும், அயலவர்களும் இடைஞ் சலாகத் தோன்றுகிறுர்கள். வேறு வழியில்லாமல் கையில் அகப்பட்ட பொருள்களைப் போட்டடிப்பதில் ஆறுமுகத் தாருக்குத் தன் அதிருப்தியைக் குத்திக் காட்டிக் கொண் டிருந்தாள்.

ஆறுமுகத்தாரும் அவள் செய்யும் காரியங்கள் அனைத் தையும் அவதானித்துக் கொண்டிருந்தார். அவருள்ளேயும் கோபத்தீ கொழுந்து விடுகிறது. இப்போதுள்ள சூழ்நிலையை உணர்ந்து உள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொள்கிறுர்.

அவள் செயல்களை இப்போது பொருட்படுத்தாமல் அலட் சியமாக ஒதுக்கி விடுவதுதான் அவளுக்கு வழங்கக் கூடிய சரியான தண்டனையாக இருக்குமென்று நினைத்துக்கொண்டு அவர் தன்பாட்டில் புறப்பட்டுக் கொண்டிருக்கிறுர்.

அரையிற் கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்துப் போட்டு, இன்னெரு வேட்டியை எடுப்பித்து உடுத்துக் கொண்டார். சால்வையை எடுத்து உதறி விரித்து உடலை மூடிப் போர்த்துக் கொண்டார். ஒழுங்கில்லாமல் சிலும்பிக் கிடக்கும் தலைமயிரை, கைகளினுல் தடவி ஒழுங்கு படுத்திக் கொண்டார். "ரெனிஸ் ஷூசை" எடுத்துக் கால்

களில் பக்குவமாக மாட்டிக் கொண்டார். "மணிபேர்சை" மடியில் சொருகிக் கொண்டு பூட்டிக் கிடக்கும் அறையின் கதவுத் திறப்பைக் கையோடு எடுத்துக் கொண்டு புறப்படுவதற்குத் தயாராஞர்.

மகாலிங்கம் தலையணை ஒன்றைக் கையில் தூக்கிக் கொண்டான். மறு கையால் ஆறுமுகத்தாரை தோளின்மேல் மெல்லப் பிடித்து, காரை நோக்கி அழைத்துக் கொண்டு சென்ருன்.

கூடி நின்ற அயலவர்களும் அவர்களுக்குப் பின்ஞல் வந்து கொண்டிருந்தார்கள்.

செல்லம்மா கட்டியிருந்த சேலையை வேகமாக மாற்றிக் கொண்டு வெற்றிலையைக் காறித் துப்பியவண்ணம் சிடுசிடுத்த முகத்தோடு அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

வேப்பமரத்துக் கிளையில் அமர்ந்து அந்த அண்டங் காக்கை இப்போதும் கரைந்து கொண்டிருந்தது.

மகாலிங்கம் நேரே ஆஸ்பத்திரிக்கு அவரைக் கொண்டு செல்வதற்குத்தான் அவன் விரும்பிஞன். ஆஞல் அவன் அதைச் சொன்ஞல் அதற்கு அவர் சம்மதிக்கமாட்டார் என்பதை உணர்ந்து ஒரு டாக்டரின் வாயால் அதனைச் சொல்லி விப்போம் என்று எண்ணிக் கொண்டுதான் அன்று அவன் கிளம்பிப்போஞன்.

நேற்று நடுப்பகலுக்கு முன்னதாக ஆறுமுகத்தாரை ஆஸ்பத்தரியில் கொண்டு வந்து சேர்த்தவன், இதுவரையில் திரும்பவும் அவன் வரவில்லையென குறைப்பட்டுக் கொள்ளுவார் என்று எண்ணிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தான் மகாலிங்கம்

முதல் நாள் இருந்ததிலும் பார்க்க மேலும் அவர் நிலைமை மோசமாகி இருப்பதை அவதானித்தான். இதுவரை அவருக்களிக்கப்பட்ட சிகிச்சைகள் பற்றி அவரிடம் விசாரித்தறிந்து கொண்டு, டாக்டரைத் தேடிக்கொண்டு போஞன் அவன்.

# 4

மகாலிங்கம் பாடசாலைக்கு லீவுக் கடிதத்தை அனுப்பி வைத்துவிட்டு காலையில் ஆஸ்பத்திரி வந்து சேர்ந்தான். "இஞ்சே வைச்சிருக்கிறதிலெ பிரயோசனமில்லை. பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ" என்று முதல் நாள் மாலையில் டாக்டர் சொல்லியிருந்தார். கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி ஆறுமுகத்தாரை அதில் ஏற்றிக் கொண்டு போவதற்கு மகாலிங்கம் விரும்பினான். ஆறுமுகத்தார் அதற்குச் சம்மதிக்கவில்லை. இருபத்தைந்து மைல் தொலைவில் இருக்கும் பெரியாஸ்பத்திரிக்கு வாடகைக் காரில் செல்வது வீண் செலவு என்று அவர் கருதினார்.

அவர் விருப்பத்தை மீறமுடியாமல் சனக்கும்பல் எப்போதும் நிரம்பி வழிந்துகொண்டிருக்கும். இ. போ. ச. பஸ்வண்டியில் முண்டியடித்துக்கொண்டு ஏறி கண்ணாடி ஓரமாக ஓர் ஆசனத்தைப் பிடித்தான். ஆறுமுகத்தாரை மெல்ல ஏற்றி அதில் அமர்த்திக்கொண்டு, மகாலிங்கம் நின்ற நிலையில் பிரயாணத்தைத் தொடர்ந்தான்.

குண்டும் குழியுமாகக் கிடக்கும் பிரதான வீதியில் பஸ் வண்டி குலுங்கிக் குலுங்கி ஓடுகிறது. குலுக்கலின் தாக்கத்தில் ஆறுமுகத்தாரின் புண் அவருக்கு மேலும் வேதனையைக் கொடுக்க, அவர் உதடுகளை இறுகக் கடித்துக்கொண்டு கண்களை மூடி மெல்லச் சாய்ந்து கொள்கிறார்.

அவர் படும் வேதனை மகாலிங்கத்தின் உள்ளத்தையும் நெருடுகிறது. தான் என்னென்ன வேதனைகளை அநுபவித்தாலும் தன் பணத்தை மட்டும் பூதம்போல அழியாமல் காக்கவேண்டுமென்ற அவர் மனோபாவம் மறுபுறம் அவனுக்கு அதிருப்தியையும், வெறுப்பையும் ஊட்டுகிறது.

ஆறுமுகத்தார் மாத்திரமல்ல, கடமையுணர்வும் சமூக சிந்தனையும், மனிதாபிமானமுமில்லாத சுயநலம் பிடித்த ஒவ்வொரு மனிதனும் அவன் வாழும் சமூகத்தின் மத்தியில் அதிருப்தியை வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறுன்.

சில தினங்கள் ஆறுமுகத்தாரை அந்தக் கிராமத்து ஆஸ்பத்திரியில் மறித்துவைத்து இப்போது அவரைப் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்திருக்கும் டாக்டர் அத்தனை தினங்கள் அவரை அங்கு தடுத்து வைக்காமல் இருந்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இதுவரையில் அவருக்கு வேண்டிய நல்ல சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கும். போதுமான சிகிச்சை வசதிகள் அங்கிருக்கவில்லை. நோயாளியை உடனே அனுப்பி வைப்பதற்கும் டாக்டருக்கு மனமில்லை. நோயாளிகளை வைத்து வீணுக ஏன்தான் இழுத்தடிக்கிறுர்களோ?

ஆறுமுகத்தாரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருவதற்கு முன் மகாலிங்கம் அவரை அழைத்துச் சென்று காட்டிய "பிறைவேற் டாக்டர்" சில தினங்களை விழுங்கிவிட்டார். அவரிடம் அவன் எதிர்பார்த்தது "ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கள்" என்று ஆறுமுகத்தாரின் செவிகளில் சொல்லிவிடுவதைத்தான். ஆனுல் அவர் அப்படிச் செய்ய வில்லை.

ஆறுமுகத்தாரைக் கட்டிலில் படுக்கவைத்து அவருடைய நோயை நன்முகப் பரிசோதித்தார். அவருடைய வியாதியின் பத்துவருட வரலாற்றை மகா லிங்கம் அதற்கிடையில் சுருக்கமாக எடுத்துச் சொன்னுன். டாக்டர் நீண்டநேரமாக அவரைப் பரிசோதித்துப் பார்த்துக்கொண்டு இறுதியாகப் பாதத்தில் கட்டியிருக்கும் சீலையை அவிழ்த்தார். ஒரு நொடிப் பார்வையை அந்தப் புண்ணின்மேல் செலுத்திவிட்டு, மறுபடியும் அந்தச் சீலையைப் பாதத்தின் மேல் லேசாகச் சுற்றினுர். பின்னர் உதவியாளை அழைத்து அந்தப் புண்ணுக்கு மருந்துகட்டுமாறு

பணித்தார். ''பேசின்'' அருகே சென்று, கைகளுக்குச் சவர்க் காரத்தைப் பூசி கைகளை கழுவித் துடைத்துக்கொண்டார். கொதி நீரில் ஊசியைப் போட்டுக்காய்ச்சி, பின் அதை எடுத்து மருந்து நிரப்பிய ''ஸ்றின்சரில்'' வைத்துப் பூட்டினார். ஆறுமுகத்தாரின் இடுப்பில் ஊசியை ஏற்றி மருந்தை உள்ளே செலுத்திவிட்டு, திரும்பவும் கைகளை நன்றாகக் கழுவித் துடைத்துக்கொண்டு தனது கதிரையில் வந்து அமர்ந்தார்.

மகாலிங்கம் அவருக்கு முன்னால் வந்து நிற்கிறான். டாக்டர் தனக்கெதிரேயுள்ள கதிரையைக் காட்டி அவனை அதில் அமருமாறு கூறுகிறார்.

அவர் ஆறுமுகத்தாரின் நோயைப் பற்றித்தான் எதனையோ சொல்லப் போகிறார் என்ற அக்கறையோடு அவன் அவருக்கெதிரே அமர்கிறான்.

அவன் எதிர்பார்த்தது போல டாக்டர் அப்படி ஒன்றை யும் அவனுக்குச் சொல்லவில்லை.

ஒரு காகிதத்துண்டை எடுத்து வைத்துக் கொண்டு தலைகுனிந்தவண்ணம் பேனாவினால் அதில் எழுதிக் கணக்குப் போடத் தொடங்கினார். சற்று நேரம் பொறுத்து தலை யைத் தூக்கி அவனை நேருக்கு நேர் பார்த்து ''இருபத் தெட்டு ரூபாய்'' என்கிறார்.

மகாலிங்கம் கதிரையிலிருந்து மெல்ல எழுந்து ஆறுமுகத்தாரிடம் சென்று டாக்டர் சொன்ன தொகையை அவரிடம் வாங்கிவந்து டாக்டரின் மேசைமேல் வைக் கிறான்.

டாக்டர் சில மருந்துக் குளிகைகளை ஒரு சரையில் போட்டு அவர்களிடம் கொடுத்து மறுநாளும் வருமாறு சொல்லியனுப்புகிறார்.

ஆறுமுகத்தாருக்கு மனதில் ஒரே திருப்தி. ''ஆஸ்பத்தி ரிக்குப் போ'' என்று சொல்லாமல் திரும்பவும் தன்னிடம் வருமாறு டாக்டர் சொல்லிருக்கிறாரல்லவா? ஆஸ்பத்திரிக்

குப் போய் அந்தக் கட்டிலில் படுத்து அநுபவிக்கின்ற வாழ்க்கை அவருக்குப் போதுமென்ருகிவிட்டது, வீட்டோடு இருந்து வைத்தியம் பார்க்கத் தகுந்த டாக்டர் தனக்குக் கிடைத்திருப்பது கண்டு அவர் உள்ளூர மகிழ்ந் தார்.

டாக்டரின் வைத்தியம் இரு வார காலத்துக்கு மேல் தொடர்ந்தது.

இந்த நாட்களில் ஒரு நாளாவது நீரிழிவு நோயாளியான அவரின் சிறுநீரை எடுத்து அவர் பரிசோதித்துப் பார்க்க வில்லை. தினமும் ஆறுமுகத்தார் தன் வீட்டிலிருந்து வாடகைக் காரில்தான் வந்து போய்க் கொண்டிருந்தார். அவர் வாழும் கிராமத்திலிருந்து பஸ்வண்டி ஓடும் பிரதான வீதிக்குப் போய்ச் சேர்வதானுல் குறைந்தது ஒன்றரை மைல் தூரமாவது பனங்காணிகளுக்கூடாக நடக்கவேண்டும்.

இப்போது ஆஸ்பத்திரிக்கு அருகாமையால் செல்லும் வீதியில் நின்று பஸ் ஏறிப் பெரியாஸ்பத்திரிக்குப் பிரயாணம் செய்யலாம் என்பதில்தான் பஸ்ஸில் போவோம் என்று அவர் தீர்மானித்தார்.

பஸ்வண்டி ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டு தரிப்பொன்றில் வந்து நிற்கிறது.

ஆறுமுகத்தாருக்கு அருகில் இருந்த பிரயாணி ஒருவர் பஸ்ஸிலிருந்து விரைவாக இறங்கிவிட வேண்டுமென்ற அவதியில் "அவக்"கென்று எழுந்து காலைத் தூக்கி ஆறுமுகத்தாரின் புண்ணின்மேல் வைத்து அழுந்த மிதித்து விடுகிருன்.

"ஆ.........ஐயோ.......ஐயோ......ஐயோ......" என்று ஆறுமுகத்தார் புழுவாகத் துடிக்கும் சத்தம்கேட்டு பஸ்ஸில் இருக்கும் பிரயாணிகள் எல்லோரின் கவனமும் அவர் பக்கம் திரும்புகிறது.

"பக்கத்தில் இருக்கிற வருத்தக்காரனைப் பார்த்திறங்கத் தெரியாதா ஐயா?"

"கடும் வருத்தக்காரன் ஏன் பஸ்ஸிலே வருவான்? தனிக் காரிலே போறது தானே?"

"எல்லாருக்கும் கார் பிடிக்க முடியுமா?"

"காரிலே போகக் கூடியவன் தானையா, காசு மிச்சத்துக்காக பஸ்ஸிலே வாருன்."

பிரயாணிகள் மத்தியில் அவரவர் மனப்போக்குக்குத் தகுந்த விதமாக வாதப்பிரதிவாதங்கள் நடைபெறு கின்றன.

இனிமேல் பிரயாணம் முடியும்வரை அவைகள் நீண்டு வளர்ந்து சென்று அரசியலைத் தொட்டுத் துழாவி நிற்கும்.

மகாலிங்கம் பெரியதகப்பனைப் பார்க்கிருன். அவர் காலை மேலே தூக்கி அங்குமிங்குமாக மெல்ல ஆட்டியசைத்து "ஆ......ஊ........." என்று வாய்விட்டுத் துடிக்கிருர்.

அவருடைய புண்ணின்மேல் மிதித்தவன் "சொறி" என்று சொல்லிக்கொண்டு வேகமாக இறங்கி நழுவுகிருன்.

கொஞ்ச நேரத்தின் பின்னர் பஸ்ஸுக்குள்ளே இருப்பவர்களும் ஆறுமுகத்தாரை மறந்துபோய்விட்டார் கள். அவர்களும் அவர்களது விமர்சனங்களும் சுவாரசிய மான விவாதங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன.

இவர்களைப் போல்—இல்லை, இவர்களை விடமேல் அந்த டாக்டர் என்று சொல்லலாம்.

இரு வாரத்துக்கு மேல் ஆறுமுகத்தாருக்குச் சிகிச்சை அளித்து அதற்குரிய பணத்தையும் பெற்றுக்கொண்டுதான் "நீங்கள் ஆஸ்பத்திரிக்குப் போறதுதான் நல்லது" என்று தெரிவித்தார் அந்த டாக்டர்.

அவர் இறுதியில் தன்னைக் கைவிட்டு விட்டார் என்பது கண்டு ஆறுமுகத்தார் உள்ளம் துணுக்குற்றது.

மகாலிங்கம் முன்கூட்டியே டாக்டருடைய இந்த ஆலோசனையை எதிர்பார்த்தான். டாக்டர் தனக்குரிய

பங்கைப் பெற்றுக்கொண்டுதான் அவரை வழியனுப்ப முடிந்தது என்பதை அவன் இப்போது விளங்கிக் கொண்டான்.

ஆறுமுகத்தார் தவிர்க்க முடியாத நிலையிற்ருன் மகாலிங்கத்தோடு ஆஸ்பத்திரிக்குப் போவதற்குத் தயாராஞர். ஆனல் அண்மையில் இருக்கும் கிராமத்து ஆஸ்பத்திரிக்குதான் வருவேன் என்று அவர் பிடிவாதமாக நின்றதனல் மேலும் சில தினங்களை அங்கே போக்கி வியாதியை வளர்த்துக் கொண்டு இப்போது இந்த மாவட்டத்துப் பெரியாஸ்பத்திரிக்குப் போய்க் கொண்டிருக்கிருர்.

பஸ்வண்டி பெரியாஸ்பத்திரிக்கு முன்னுலுள்ள பஸ் தரிப்பில் வந்து நிற்கிறது.

மகாலிங்கம் ஆறுமுகத்தாரின் தோளில் பிடித்து அவரை மெல்லக் கீழே இறக்குகிருன்.

அவரால் ஆஸ்பத்திரிக்குள்ளே நடந்து செல்ல இயலவில்லை. புண்ணிலிருந்து கசிந்து கொண்டிருக்கும் இரத்தம் காலில் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் வெள்ளைச் சீலையை நனைத்துச் சிவப்பாக்கிக் கொண்டிருக்கிறது.

அந்த வீதியில் வேகமாக வந்து கொண்டிருந்த "டாக்ஸி" ஒன்றை மறித்து, ஆறுமுகத்தாரை அதில் ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குள் விரைகிருன் மகாலிங்கம்.

## 5

செல்லம்மாவுக்கு ஒரு நாளில் பெரும்பகுதி தினமும் பெரியாஸ்பத்திரிக்குப் போய் வருவதிலேயே கழிகிறது. காலை பத்துமணிச் சுமாருக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு பஸ் பிடித்தால், மத்தியானம் ஆறுமுகத்தாரைப் பார்த்து கையோடு கொண்டு செல்லும் உணவைக் கொடுத்து விட்டு

மறுபடியும் வீடு வந்து சேருவதற்குப் பெரும்பாலும் பிற்பகல் மூன்று மணியாகிவிடும். ஆறுமுகத்தார் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் தங்கியிருக்க நேர்ந்த பின்னர்தான், செல்லம்மா சுதந்திரமாக இப்படி வெளியே சென்று வருகின்ற வாய்ப்பு அவளுக்குக் கிட்டியிருக்கிறது. இதற்கு முன் அவளுடைய உலகம் அவர்களுடைய வீடாக மாத்திரம் இருந்து வந்தது. அவளை அந்த நிலையில் வைத்து நடத்த வேண்டும் என்பதுதான் ஆறுமுகத்தாரின் எண்ணமாகவும் இருந்து வந்தது. அவள் தன்னிஷ்டம் போல அவளுடைய உறவினர்களுடைய வீடுகளுக்குக்கூடப் போய் வருவதற்கு அவர் அநுமதித்ததில்லை.

அவளுக்கென்று ஓர் உள்ளமும், அந்த உள்ளத்துக்கென்று சில அபிலாசைகளும், அந்த அபிலாசைகளைத் தீர்த்துக் கொள்ளும் இச்சையும் அவளிடமிருக்குமென்று ஆறுமுகத்தார் என்றைக்குமே கருதி நடந்தவர் அல்லர்.

அவளை ஒத்த குடும்பப்பெண்கள் கோயில், குளம், தேர், திருவிழா என்று மகிழ்ச்சியாகப் போய் வருவது போல ஒரு வைபவத்துக்கு அவள் உடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டுப் போகமுடியாது. பெண்களுக்கே இயல்பாகவுள்ள அலங்கார ஆசையினால் நாலு பெண்களைப் போல அவளும் அலங்கரித்து தன்னை அழகுபடுத்திக் கொண்டாள் என்றால் அது ஆறுமுகத்தாரின் உள்ளத்தைக் குத்த ஆரம்பித்துவிடும். ''என்ன, நல்லாப் பூசி மினுக்கிறாய்'' என்று அவளைச் சந்தேகக் கண்ணோடு பார்த்து நச்சரிக்கத் தொடங்கிவிடுவார்.

''ஏன் நான் துப்பரவாகத் திரியக்கூடாதே!'' என்று சில சமயங்களில் அவள் கேட்டு விடுவாள்.

''ஆர் துப்பரவாக இருக்க வேண்டாமெண்டது. இது துப்பரவல்ல எடுப்பு.''

''என்ன எடுப்பு?''

''தெரியும் தெரியுமடி; ஆருக்குக் குலுக்கி மினுக்கிக் காட்டுகிறாய்.''

"நான் ஆருக்குக் காட்டுறன்?"

"அது உனக்குதானே தெரியும்!"

"உன்ரை நாக்கெல்லே அழுகப் போகுது."

"நல்லா அழுகட்டும். கட்டின புருஷன் நான் விரும்பாததை எல்லாம் நீயேன் செய்கிறாய்?" என்று அவர் அவளை அடக்கி விடுவார்.

ஆறுமுகத்தாரின் மனத்தில் இருந்து கொண்டிருக்கும் சிக்கல்கள் தான் செல்லம்மாவைக் கட்டுப் பெட்டியாக வீட்டோடு அவர் வைத்துக் கொண்டிருக்கும்படியாகச் செய்கின்றன.

அவளைத் தன் வாழ்க்கையோடு இணைத்துக் கொண்டு விட்டது தான் செய்த பெரிய தவறென்று கூட இப்போது சில சமங்களில் அவர் எண்ணுகிறார்.

ஆறுமுகத்தாரின் முதல் தாரம் காலமான பிறகு ஓராண்டு காலம் தனி மரமாகத்தான் அவர் நின்றார். அந்தச் சமயத்தில் ஆரம்பத்தில் அவர் மனைவியின் குடும்பத்தினர்கள் அவருக்கு உதவியாக இருந்தார்கள். காலஞ் செல்லச் செல்ல அவர்களின் ஆதரவில் தான் வாழ்வது சிரமமான காரியம் என்பதை அவர் உணர்ந்து கொண்டு விட்டார். தரகுத் தொழிலுக்கென்று வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டால் அவர் திரும்பி வருகின்ற சமயம் ஒரு மனைவியைப் போலக் காத்திருந்து அவருக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்து கொடுப்பதற்கு அவர்களால் முடியுமா? பணவிஷயத்திலும் அவர் கொஞ்சம் கைராரான வராக இருப்பதால் அவருக்கு உதவுவதில் அவர்களுக்கும் பல சிரமங்கள் இருந்தன. மனைவி வழியால் அவருக்கு சேர்ந்த காணி பூமிகளின் பேரிலும் அவர்களுக்கொரு கண் இருந்துவந்தது. மனைவியின் தம்பி வேலுப்பிள்ளை தன் சகோதரியின் நிலபுலன்களைத் திரும்பவும் தான் பெற்றுக் கொள்வதில் மிகுந்த அக்கறையுள்ளவனாக இருக்கிறான் என்பதும் அவருக்குத் தெரிய வந்தது.

அவர்களிடம் தொடர்ந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டு வந்தால் அவர்கள் விரிக்கும் வலையில் தான் விழ வேண்டி நேரிடும் என்று அவர் கண்டார்.

அந்தக் குடும்பத்தின் உறவுகளை முற்முக அறுத்துக் கொண்டு தம்பியின் குடும்பத்தோடு ஒதுங்கிக் கொள்ளலாம் என்றல் அதுவும் அவருக்கு வசதியாக இல்லை.

சொந்தக் கிராமத்துக்கு வெளியே தன் தம்பிக்கு மணஞ் செய்து வைத்த தன் தவறை எண்ணி இப்போது மனம் வருந்திஞர்.

நாற்பது வயதில் மனைவியை இழந்து தனிமைப்பட்டு நிற்கும் அவரை உடல் தேவைகள் வேறு துன்புறுத்திக் கொண்டிருந்தன. இயல்பாகவே பெண்கள் விஷயத்தில் அவர் சபலமனம் படைத்தவர். உண்மையான ஒரு துறவியைப்போல தான் வாழ முடியும் என்று ஆசாட பூதித்தனம் செய்யவும் அவர் தயாராக இல்லை எப்படியும் அவருக்கென்ெருரு மனைவி தேவைப்பட்டாள். அவருடைய நண்பர்கள் சிலர் அவரின் தேவைகளை நன்றுகப் புரிந்து கொண்டு அவரை மறுமணஞ் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தத் தொடங்கிஞர்கள்.

''உங்களுக்கென்ன பிள்ளையா குட்டியா? இன்னுமொரு கலியாணத்தைச் செய்யிறது தானே!''

''இதென்ன கதை! நாப்பது வயதிலெ ஒரு கலியாணமா?''

''உங்களைப் பார்த்து நாற்பது வயதெண்டு சொல்லேலாது. ஒரு முப்பதுதான் மதிக்கலாம்''

''இனிமேல் பிள்ளைகுட்டியெண்டு பிறந்துவிட்டால் பின்னடிக் கெவ்வளவு கரைச்சல்?''

''பிள்ளை குட்டி இல்லாமல் இருக்கிறதுதானே உங்களுக்கு இப்ப உள்ள கரைச்சல். இனிமேலாவது பிறக்கட்டன்.

உங்களிட்டை சொத்துப்பத்தில்லையா, அதுகளைப் பார்க்கிறதுக்கு?''

''என்னட்டை என்ன கிடக்குது?'' என்று வெளிக்குச் சொல்லிக்கொண்டு மறுத்து நின்றவர் அவர்களுடைய வற்புறுத்தலுக்கிணங்கி இறுதியில் செல்லம்மாவை மணஞ் செய்யச் சம்மதித்தார்.

செல்லம்மா ஐந்து பெண்களுள்ள குடும்பத்தில் நான்காவது பெண்ணாக வந்து பிறந்தவள். சிறுவயதில் தகப்பனை இழந்த அந்தக் குடும்பம் உலகத்தில் பெரும்பாலான மக்களை ஒவ்வொரு கணமும் துன்புறுத்திக் கொண்டிருக்கும் வறுமைப்பிணியில் வீழ்ந்து மீளுவதற்கு மார்க்கமில்லாமல் தவித்தது. அவளுக்கு மூத்த சகோதரிகள் மூவரும் ஒவ்வொருவனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறார்கள். இதுவரையில் குறைவின்றிக் குழந்தைப் பேறு அடைந்ததைத் தவிர வேறு சுகங்களை அவர்கள் பெற வில்லை. அந்தக் குடும்பத்துப் பெண்களுக்கு வாழ்க்கைத் துணையாக ஓர் ஆண்மகன் தேவைப்பட்டான். அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் ஓர் ஆண்மகனாக மாத்திரம் இருந்துவிட்டால் போதும்; அவர்கள் அவனுக்குக் கழுத்தை நீட்டவேண்டியவர்களாக இருந்தார்கள்.

செல்லம்மாவுக்கு இருபது வயதாக இருக்கும்போது அவள் ஆறுமுகத்தாருக்கு இரண்டாந்தாரமாக்கப்பட்டாள். திருமணம் நடந்து முடிந்த ஆரம்பகாலத்தில் ஆறுமுகத்தார் அவளையும் அழைத்துக்கொண்டு சில சமயங்களில் வெளியே போய் வந்தார். காலஞ்செல்லச் செல்ல, அந்த வழக்கத்தைச் சுருக்கி, தன் தம்பி வீட்டுக்கு மாத்திரம் நன்மை தீமைகளுக்கு அவளை அழைத்துச் செல்லலானார்.

ஆறுமுகத்தார் நோயாளியான பிறகு திடீரென்று அவருடைய வாளிப்பான தோற்றப் பொலிவுகள் அழிந்து விருத்தாப்பியக் கோடுகள் வந்து விழுந்தன. அதன்பின் அவருக்கும் அவளுக்கும் இடையேயுள்ள வயது வித்தியாசமும் தெளிவாகத் தெரியத் தொடங்கியது.

அவருடைய சுகவீனம் செல்லம்மாவுக்கு அவர் போட்டு வைத்திருக்கும் கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றாக அவள் அறுத்து எறிவதற்கு வசதியாக வந்து வாய்த்தது. மதிய வேளையில் ஆஸ்பத்திரிக்குப் போவதும், திரும்பி வந்து ஆடு மாடுகளுக்கு வேண்டிய உணவுகளைத் தேடி வைப்பதும், மறுநாளுக்கு அவருக்கு வேண்டிய பத்திய உணவுகளுக்கான தயார்களைச் செய்வதும் ஒய்வு கிடைக்கும்போது இனசனங்கள் வீட்டுக்குப் போய் வருவதும் இப்போது அவள் வாழ்க்கையாகிவிட்டது.

ஆறுமுகத்தார் வீட்டோடிருக்கும்போது அயலவர்கள் அங்கே வருவதைக்கூட அவர் அவ்வளவாக விரும்புவதில்லை. இப்போது அயலிலிருக்கும் பெண்களில் யாராவது ஒருத்தி எந்தச் சமயத்திலும் செல்லம்மாவுடன் கூட இருந்தாள். செல்லம்மா ஆஸ்பத்திரிப் புதினங்களையும், பிரயாணத்தின் போது புதிதாக வெளியுலகில் அவளுக்குக் கிடைக்கும் அநுபவங்களையும், தன்னுடைய வேலைகளுக்கு மத்தியிலும் கதை கதையாகச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

பக்கத்து வீட்டுத் தெய்வானைக்கிழவி மனம் இரங்கி இரவில் செல்லம்மாவுக்குத் துணையாக அங்கு வந்து படுத்தாள். ஆறுமுகத்தார் அயலை எவ்வளவுதான் ஒதுக்கி அந்த உறவை வெறுத்தபோதும் ஒருவருக்குக் கஷ்டம் நேருகின்ற போது அவருக்கு உதவி புரிகின்ற கிராமிய மனோபாவத்தினையும், கட்டுக்கோப்பினையும், அந்த அயலில் குடியிருக்கின்றவர்களால் ஒதுக்கி வைத்துவிட முடியவில்லை. தெய்வானைக் கிழவி ஒருநாள் செல்லம்மாவிடமே கேட்டுவிட்டாள்.

''எடிபிள்ளை எறிஞ்சேப்பையும் சோறள்ளுமெடி''

''ஓமாச்சி. அதுக்கு நானென்ன செய்ய! இந்த மனிசன்ரை குணம் அப்பிடி''

''எல்லாரையும் வேணும் விளையுமெண்டு நடக்கத் தெரியாது உன்ரை புரியனுக்கு. இப்பவாவது அவனுக்கு விளங்குதே?''

''என்ன விளங்கப் போகுது?''

''அது சரிபிள்ளை, அவனுக்கென்ன தெரியும்! ஆ......... உன்னைத் தனிய விட்டுட்டு அவன் அங்கே கிடவான். ஆர் உனக்குத் துணையெண்டு கேட்கயில்லையே?''

''கேட்டவர்''

கிழவி மனத்தில் எதை வைத்துக் கொண்டு இப்படிக் கேட்கிறாள் என்பதைச் செல்லம்மா உணரும்போது அவளுக்கு வெட்கமாக இருக்கிறது.

செல்லம்மா ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தால் அதிக நேரம் அவள் அங்கு தரித்து நிற்பதற்கு ஆறுமுகத்தார் விட மாட்டார். ''ஓடு......ஓடு......இருள முன்னம் வீட்டுக்குப் போ'' என்று சொல்லி அவளை விரட்டிக்கொண்டிருப்பார். சிலநாட்களில் சரியான நேரத்துக்கு பஸ் கிடைக்காமல் இரவு ஏழுமணிக்கும் அவள் வீடு வந்து சேரவேண்டி நேர்ந்தது. அதையெல்லாம் அவள் அவரிடம் சொல்லிக் கொள்வதில்லை.

ஆஸ்பத்திரிக்கு அவர் போய்ச் சேர்ந்த மறுநாள் அவளிடம் கேட்டார்.

''இரவு என்ன செய்தாய்?''

''தெய்வானை ஆச்சி வந்து கூடப் படுத்தவ.''

''ஆ...''என்று சொல்லிக் குரலை இழுத்தவர், எதனையோ மேலும் சொல்ல நினைத்து, ஆனால் சொல்ல முடியாமல் தடுமாறுகிறார்.

செல்லம்மா அவளுடைய சகோதரியின் மகன் ஒருவனைத் துணைக்கு அழைத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை அவர் சொல்ல நினைக்கிறார். ஆனால் அதனைச் சொல்லமுடியாமல் அவர் தடுமாறுகிறார் என்று செல்லம்மா விளங்கிக் கொள்கிறாள்.

ஆறுமுகத்தாரால் வெறுக்கப்படுகின்றவர்கள் அவர்கள். அதனால் அவள் அதைச் செய்வதற்குத் தயாராக இல்லை.

அவர் நினைப்பதை தான் விளங்கிக்கொண்டுவிட்டதாகக் காட்டிக்கொள்வதற்கும் அவள் விரும்பாமல் மௌனமாக நிற்கிறாள்.

"கிழவியின்ரை மேன் கள்ளன் கிழவியைத் தேடிக் கொண்டு வரவில்லையே?" என்று கேட்டுக்கொண்டு ஆறுமுகத்தார் அவள் முகத்தைக் குறிப்பாகப் பார்க்கிறார்.

"அவன் ஏன் வாறான்" என்றாள், வெடுக்கென்று.

அந்தச் சம்பவத்தை இப்போது அவள் நினைத்துக் கொண்டு தன் கணவனைப்பற்றிக் கிழவி கேட்டு வைப்பதில் தவறொன்றுமில்லை என்று எண்ணி தன் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

அவள் தினமும் மத்தியான வேளையில் ஆறுமுகத்தாரைப் போய்ப் பார்த்து வந்தாள். மகாலிங்கம் பாடசாலையை முடித்துக்கொண்டு மாலையில் போய் வந்துகொண்டிருந் தான். இவர்கள் இருவரையும் தவிர அவரைப் போய்ப் பார்ப்பார் வேறு யாருமில்லை.

ஆறுமுகத்தார் சுகவீனம் என்று வீட்டோடிருந்த ஆரம்ப காலத்தில் அயலவர்கள், தூரத்து உறவினர்கள், அறிந்தவர்கள் என்று பலர் சுகம் விசாரித்துக்கொண்டு அவரிடம் வந்தார்கள். காலஞ் செல்லச் செல்ல அவர் நீண்டநாள் நோயாளியாகி எல்லாராலும் மறக்கப்பட்டு விட்டார்.

அவருடைய சுகத்தில் அக்கறை கொண்டு அவரைத் தேடிக்கொண்டு வருவதற்கு நெருங்கிய உறவினர்களென்று தம்பியின் பிள்ளைகளைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?

சுகம் விசாரித்துப் போவதற்கு யார்தான் வந்தென்ன? நோய் அவர்களாலா தீரப்போகிறது? ஆஸ்பத்திரியில் டாக்டர்களால் நன்றாகக் கவனிக்கப்பட்டால் போதாதா?

ஆறுமுகத்தார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பத்து நாட்களுக்குமேல் கழிந்தன. நோய் முன்பிருந்ததிலும்

பார்க்க அதிகரிக்கிறதேயல்லாமல் கொஞ்சமும் குறைவதாக இல்லை.

டாக்டர் காலையிலும், மாலையிலும் தினமும் இரண்டு தடவைகள் அந்தவாட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிருர். நோயாளிகள் சிலரின் கட்டிலருகே மிக நெருக்கமாகச் சென்று, சிரித்த முகத்தோடு அக்கறையாக விசாரித்து அவர்களைப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கிருர். வேறு சிலரைத் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை. "என்ன செய்யிது" என்ற மாமூலான கேள்வியோடு அவர்களின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் அவரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் உதவி டாக்டர்கள், நர்ஸுகள், கங்காணிகளிடம் எதனையோ சொல்லிக்கொண்டு அடுத்த கட்டிலுக்குத் தாவுகிருர்.

ஆறுமுகத்தாருக்கும் அந்த 'வாட்டில்' கவனிப்பாரற்ற அவலநிலைதான்.

இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை புண்ணுக்கு மருந்து கட்டுவதாகப் பேர்பண்ணி பண்டேஜ் துணியை மாற்றிக் கொண்டிருக்கிருர்கள். தினமும் மூன்று வேளை சில குளிகைகளை வாயில் போட்டுத் தண்ணீரை ஊற்றிவிடுகிருர்கள்.

அவருடைய சிறுநீர் பரிசோதனைகூட இன்னும் நடைபெறவில்லை.

டாக்டரால் கவனிக்கப்படாத நோயாளிகளில் ஒருவராக ஆறுமுகத்தார் அந்த "வாட்"டிலிருந்தார். தினமும் "இண்டைக் கென்னைக் கவனிப்பார்; இண்டைக் கென்னைக் கவனிப்பார்" என்று அவர் எதிர்பார்த்தார். அவருடைய எதிர்பார்ப்புகள் தொடர்ந்து ஏமாற்றங்களாகப் போய்க் கொண்டிருந்தன.

"இந்தப் பொடியன்ரை சொல்லைக் கேட்டு இஞ்சை வந்திருக்கக் கூடாது. அழுகிச் செத்தாலும் வீட்டிலெ கிடந்து செத்திருக்கலாம்" என்று அவர் மனம் உளைந்தார்.

அவருக்குப் பக்கத்துக் கட்டிலில் இருப்பவரும் ஆறுமுகத்தாரைப் போன்ற ஒரு நோயாளிதான். அந்த நோயாளி விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்து டாக்டர் கவனித்து வருவதை ஆறுமுகத்தார் அவதானித்தார். அவர் மாத்திரந்தான் நோயாளியா? எனக்கும் நோய் இருப்பது டாக்குத்தரின் கண்ணுக்கு ஏன் தெரியவில்லை?' என்று ஆறுமுகத்தார் பல தடவைகளில் தன்னையே தான் கேட்டுக்கொண்டார். பக்கத்து நோயாளியின்மேல் இனம் புரியாத பொருமை டாக்டரின் போக்கினுல் அவர் மனதில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த நோயாளியிடமே டாக்டர் காட்டுகின்ற பாரபட்சத்துக்கான காரணத்தைக் கேட்டறிந்தால் என்ன என்ற உந்தல் சில சமயங்களில் அவர் மனத்தில் எழும். டாக்டரினுல் விசேஷமாகக் கவனிக்கப்படுகின்ற ஒரு நோயாளியிடம் டாக்டரினுல் அசிரத்தையாக நடத்தப்படும் தான், அப்படி நடத்தப்படுவதற்கான காரணத்தை அந்த நோயாளியிடமே கேட்கலாமா? அப்படித்தான் கேட்டாலும் அவர் உண்மையை ஒளிக்காமல் சொல்லுவாரா? என்று ஆறுமுகத்தார் எண்ணி கேட்போமா, விடுவோமா எனத் தடுமாறினுர். இறுதியில் இனிமேல் பொறுக்க முடியாது என்ற நிலைமையில் ஒருநாள் அவரிடம் கேட்டார்.

''டாக்குத்தர் என்னைக் கவனிக்கிருரில்லையே!''

''நீங்கள் இந்த வாட்டுக்குப் புதிசு'' என்ருர் அவர்.

''ஓமோம்......அதுக்கென்ன?''

''இல்லெ......''

''சொல்லுங்கோ......இப்பிடிக் கிடக்கிறதைவிட வீட்டிலெ போய்க் கிடக்கலாம்.''

''நீங்கள் புதிசாக வந்திருக்கிறியள். அதுதான் இஞ்சத்தையில் நிலைவரம் விளங்கயில்லை.''

''என்ன விசயம்?''

''டாக்குத்தர் உங்களைக் கவனிக்க வேணுமெண்டால், நீங்கள் அவரைக் கவனிக்க வேணும். பெரியவரைக் கவனியுங்கோ...எல்லாம் நடக்கும்.''

''ஓ...அப்பிடியா? இதுதான் தருமாசுப்பத்திரி.''

''என்னையா தருமம்? டாக்குத்தரை மாத்திரமல்ல, கங்காணிமாரையும் கவனிக்க வேணும். இல்லையெண்டால் எங்கடை பாடுதான் கஷ்டம்; புண்ணுக்கு வீசமோ? மருந்துக்கு வீசமோ? அவன்களுக்கென்ன?'' என்ருர் எச்சரிக்கையோடு.

ஆறுமுகத்தார் அப்போதுதான் விழித்துக் கொண்டார். இப்படியே இருந்தால் அவர்கள் திரும்பிப் பார்க்கப் போவதில்லை என்பது அவருக்குப் புரிந்தது. ஆனல் கையிலுள்ள பணத்தை அநியாயமாகக் கரைக்க வேண்டி இருக்கிறதே என்று மறுபுறத்தில் அவர் உள்ளம் ஏங்கிற்று. இறுகப் பிடித்த தன் கையை அகல விரித்து அவர்கள் கைக்குள் வைப்பதைத் தவிர வேறு வழியில்லையென்று தீர்மானித்துக் கொண்டார்.

மருந்து கட்டுவதற்குக் கங்காணி வரும்போது இரகசியம் என்ற பாவனையில் எல்லோரையும் போலப் பலரும் அறியத் தக்கதாகப் பணத்தை எடுத்து நீட்டத் தொடங்கினர். கங்காணிமார் ஒவ்வொரு நாளும் ஒருவர் மாறி இன்னெருவர் வந்துகொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்த ஆரம்பித்து ஒருவருக்குப் பல தடவைகள் அளந்து கொட்டினர்.

அதன்பிறகு மருந்து மாத்திரம் செவ்வையாகக் கட்டும் வைத்தியம் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவரைப் பார்த்தும் பாராமல் வெறுப்போடு முகத்தைத் திருப்பி வைத்துக்கொண்டு போகும் கங்காணிகள்—அவர்களிடம் எதையாவது கேட்டுவிட்டால் சிடுசிடுத்து அவர் மேல் எரிந்து விழுகின்ற கங்காணிகள்—இப்போது அவர்கள் எல்லோரும் அவருடைய ஆதரவை நாடி வளைய வளைய

வந்தார்கள். மலர்ந்த முகத்தோடு அவரை ஆதரவாக நடத்தினார்கள். கருணையும் சேவையுணர்வும் திடீரென்று அவர்கள் உள்ளங்களில் தோன்றியிருப்பவர்கள் போல நடந்துகொண்டார்கள். ஆறுமுகத்தாரின் வற்றாத அன்பு தங்கள் பக்கம் பெருகி ஓடவேண்டுமென்று ஒருமனதாக ஆசைப்பட்டார்கள்.

அந்த ''வாட்''டில் உலாவிக் கொண்டிருக்கும் குட்டிப் பிசாசுகள் ஒவ்வொன்றையும் ஆறுமுகத்தார் சாந்தி செய்து, அவற்றைத் தம் வசம் வாலாயப் படுத்திக்கொண்டார். அவற்றுக்குக் காலம், இடம் நோக்காமல் எங்கு வேண்டுமானாலும் சிறு பிரீதியோடு தம்பலப்படுத்திவிடலாம். எச்சில்தனமாக அடிக்கடி எதனையாவது அவை கேட்டுக்கொண்டிருக்கும். ஒரு தேசிக்காயைக் கொடுத்தும் சில சமயங்களில் அவற்றைத் திருப்திப்படுத்திவிடலாம். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, இவற்றின் தலைவன்—ஜெயங்கொள் அகோரமூர்த்தி இருக்கிறாரே! அவரைச் சாந்தி செய்வதென்பது அவ்வளவு எளிதாக நடக்கக்கூடிய காரியமல்ல! அகோர மூர்த்தி குடிகொண்டிருக்கும் ஆலயக் கதவுகள் ஒவ்வொன்றாகத் திறக்கும் வரை காத்திருந்து... பிறகு கர்ப்பக் கிரக வாயிலை மூடிக் கிடக்கும் திரையை மெல்ல விலக்கி...அநுக்கிரகம் பெறவேண்டுமானால் எடுபிடி பண்டாரங்களைக் கண்டு அர்ச்சகரைத் தரிசித்து, அதன் பின்னர்தான் அகோரமூர்த்தி அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

அவர் அருட்கடாட்சம் கிட்டாமல் தொடர்ந்து ஆஸ்பத்திரிக் கட்டிலுக்குப் பாரமாகக் கிடப்பதில் பிரயோசனமில்லை. குட்டிப் பிசாசுகளுக்குச் செய்ததுபோல அவரையும் அந்த வாட்டுக்குள் வைத்துத் திருப்திப்படுத்தப் போனால் அது விபரீதமாகவல்லவா வந்து முடியும்!

ஆறுமுகத்தாருக்கு மகாலிங்கத்தைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள், அவர்களை நம்பிப் பணத்தைக் கையில்

கொடுத்து விடுவதற்கு? அவர்களை நம்பிப் பணத்தைக் கையில் கொடுத்துவிட்டால் பணம் உரியவருக்குப் போய்ச் சேராமல் இடையிலுள்ளவர்கள் தட்டிக்கொண்டு போய் விடக்கூடும். ''எல்லாத்துக்கும் இண்டைக்குப் பொடியன் வரட்டும்'' என்று ஆறுமுகத்தார் தீர்மானித்துக்கொண் டார்.

மாலை ஐந்து மணி.

பஸ் வண்டியைப் பிடிப்பதற்கு ஓடுகிறவர்கள்போல பார்வையாளர்கள் வாட்டுக்களுக்குள் வேகமாக வரு கிறார்கள்.

ஆறுமுகத்தாரைப் பார்ப்பதற்கு அநேகமாக இந்த நேரத்தில் மகாலிங்கந்தான் வருவான்.

அவன் வருகையை இன்று ஆவலோடு அவர் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

பார்வையாளரை உள்ளே அநுமதித்து அரைமணி நேரம் கழிந்துவிட்டது. அதற்குப் பிறகுதான் மகாலிங்கம் ஓட்டமும் நடையுமாக அங்கே வந்து சேருகிறான். அவன் வந்ததும் வராததுமாக ''தம்பி, டாக்குத்தரை ஒருக்கால் காணவேணும்'' என்றார் ஆறுமுகத்தார்.

''ஏன், ஏதும் கதைக்க வேணுமா?'' என்றான் மகாலிங்கம்.

''ஓம், அவர் வாட்டுக்கு வந்தால் என்னைப் பார்க்கிற தில்லை''

''ஏனும்......?

''ஏனெண்டு எனக்குத் தெரியாது''

''மற்றவையளை......?

''என்னைப்போலை வேறையும் சிலரைப் பாக்கிறதில்லை''

''உங்களிலே என்ன கோபமாம்?''

''அவரைத்தான் தம்பி கேக்கவேணும்?''

''கங்காணிமார்...?''

''அவை இப்ப நல்லாக் கவனிக்கினம்'' என்று சொல்லும் போது ''இப்ப'' என்பதற்குச் சற்று அழுத்தங் கொடுக்கிறார்.

அவனுக்கும், அவருடைய வார்த்தைகளில் பொதிந்துள்ள அந்தரங்கம் இலேசாகப் புரிகிறது.

ஆறுமுகத்தார் இலகுவில் பணத்தைக் கைநெகிழ விடமாட்டார் என்பது மகாலிங்கத்துக்குத் தெரியாததல்ல. ஆனால் அங்குள்ள சூழ்நிலையும் அவருக்கு இப்போதிருக்கும் தேவையும் அவரையும் கையை இளகச் செய்திருக்கிறது என்பதை, அவன் உணர்ந்து கொண்டான். டாக்குத்தரை அவன் போய்க் காணவேண்டுமென்று அவர் சொல்லுவதன் நோக்கமும் என்னவாக இருக்கும் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

'டாக்குத்தருக்கும் ஏதும் கொடுக்க வேணுமாம்.' என்று அவனிடம் சொல்லுவோமா? வேண்டாமா? என்று ஒரு கணம் அவர் தடுமாறினார்.

இலஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் இந்த நாட்டில் பெரிய ஒரு குற்றமாகும். இலஞ்சக் குற்றவாளிகளைத் தேடி வலை விரித்து கடும் தண்டனைகளை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள். ஆனாலும் வெறும் சட்டங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு இந்தக் கொடுமையை ஒழித்துக் கட்டுவதற்கு அரசிடம் வலுவில்லை. சமூகக்கொடுமைகள் அழிந்தொழிந்த ஒரு தேசத்தை உருவாக்குவதற்கும் அவர்கள் தயாராக இல்லை. சட்டமும் தண்டனையும் ஒருபுறம்—இலஞ்சப் பேய் மறுபுறமாகத் தலை விரித்தாடுகிறது. ஏமாந்தவனும், அதிகார பலமில்லாதவனும், அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறான். உயர் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு உண்டு. அவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். டாக்டருக்கு இலஞ்சங் கொடுக்கப் போய் அகப்பட்டுக்கொண்டால் அதிலிருந்து தப்புவதற்கு மார்க்கமில்லை என்று மகாலிங்கம் குழம்பினான். இருக்கின்ற உத்தி

யோகத்தையும் இழந்து சிறைக்குமல்லவா போகவேண்டி நேரும். அப்பாவிகள் அகப்பட்டுக்கொண்டு விழிக்க வேண்டியதுதான். டாக்டருக்குக் கைக்கூலி கொடுக்கு மாறு ஆறுமுகத்தார் தன்னிடம் சொல்லாமலிருக்க வேண்டுமே என்று மனமார அவன் எண்ணினன்.

மகாலிங்கத்தின் குணம் ஆறுமுகத்தாருக்குத் தெரியும். அவன் பிடிவாதக்காரன். பணத்தேவையும் பிடிப்பும் அதிகமுள்ளவன். கைக்கூலி கொடுப்பதற்குச் சுலபமாக அவன் ஒருப்படமாட்டான். அவனுடைய பிடிவாதப் போக்கினுல் சிலசமயங்களில் சுலபமாகச் சாதிக்கக் கூடிய காரியங்களைக்கூட கெடுத்துவிடுவான்.

அந்தச் சமயங்களில் அவனைப்பார்த்து, "வாழத்தெரியாத பேய்ப் பொடியன்" என்று ஆறுமுகத்தார் அநுதாபப் பட்டிருக்கிருர். இப்போது அவனைவிட்டால் அவருக்கு வேறு ஆளில்லை. எப்படியும் அவனுக்கு எடுத்துச் சொல்லி அவனை டாக்டரிடம் அனுப்பிவைக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தார்.

"தம்பி, டாக்குத்தருக்கு ஏதும் கொடுக்க வேணுமே!" என்று அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதற்கு விரும்புகின்றவர் போலக் கேட்டார்.

"சீ......அவருக்கென்ன குடுக்கிறது. அவையளுக்குத் தானே அரசாங்கம் கைநிறையச் சம்பளங் குடுக்கிறது." என்முன், அவன்.

ஆறுமுகத்தார் எதிர்பார்த்த பதில்தான். ஆனுல் அவருக்கு இப்போது காரியமாகவேண்டும். அதற்கு அவனைத் தான் பயன்படுத்தவேண்டும். "இஞ்சை எல்லாருந்தான் வந்திகுடுக்கினம், சும்மா வெறும்பேர்தான் கவிண்மேந்து ஆசுப்பத்திரியெண்டு" என்முர் சலிப்போடு.

"நீங்கள் ஒரு சதமும் குடுக்கவேண்டாம். அது என்ன நடக்குதெண்டு பாப்பம்......"

'என்னத்தைப் பாக்கப் போருய்?' என்று சொல்லு வதற்கு வாய் உன்னியவர் அதைச் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டார். ''படிச்சவன்களே பொதுவாக இப்படித் தான். தங்கடை படிப்பையும் அறிவையும் வைச்சுக் கொண்டு உலகத்திலே எல்லாக் காரியங்களையும் சாதிச்சுப் போடலாமெண்டு நினைக்கிறுர்கள். பணமுள்ளவன் பணத்தை அள்ளி வீசி தன்ரை காரியத்தைச் சுளுவாக முடிச்சுக் கொண்டு போய்விடுகிறுன். காசில்லாமல் சும்மா நேர்மையாக என்ன காரியம் நடக்குது? இவன் இன்னும் உலகம் பிடிபடாதவனுகத்தான் இருக்கிறுன்'' என்று ஆறுமுகத்தார் உள்ளூர நினைத்துக் கொண்டார்.

''ஏதோ எனக்கு நல்ல வைத்தியம் நடக்க ஒரு வழி பார்.'' என்று மாத்திரம் சொல்லிக்கொண்டு ஆறுமுகத்தார் மௌனமானுர்.

மகாலிங்கம் சற்று நேரம் அங்கு நின்று யோசித்தான். பிறகு ஏதோவொரு முடிவுக்கு வந்தவனுக ''இருங்கோ வாறன்'' என்று சொல்லிக்கொண்டு அந்த ''வாட்''டை விட்டு வெளியே வந்தான்.

## 6

மகாலிங்கம் டாக்டரைத் தேடிக் கொண்டு புறப்பட்ட போது அவனுக்கிருந்த துணிச்சல் ''சேர்ஜன்'' கருணை நாயகத்தின் அறைக்கு முன்னுல் வந்து நின்றபோது அவனை அறியாமல் பஞ்சாகப் பறந்து போய்விட்டது.

அவன் ஆஸ்பத்திரிக்கு வந்து போகத் தொடங்கிய சில தினங்களுக்குள் ''சேர் ஜன்'' கருணை நாயகம் பற்றிப் பலவித மான செய்திகள் அவன் செவியில் வந்து விழுந்திருக்கின் றன. அந்த ஆஸ்பத்திரியில் கருணை நாயகம் எல்லோருக் கும் ஒரு பிரச்சினையாகத்தான் இருந்தார். மதுப்பழக்கத்துக்கு

அடிமையாகி இருக்கும் அவர் மிகக் கண்டிப்பான ஒருவராக நடந்து கொள்கிறார். அவரை நேரடியாகச் சந்திப்பதற்கும், சந்தித்துப் பேசுவதற்கும் எல்லோரும் அஞ்சினார்கள். மது போதையில் இல்லாமல் எப்போது அவர் நிதானமாக இருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது. குடித்தாலும், குடிக்காமல் இருந்தாலும் அவருடைய நடத்தையில் வெறித்தனம் இருக்கும் இந்த வெறித்தனமும், கடுமையும் கடுகடுப்பும் அவருக்கு இயல்பாக உள்ள குணங்களா? அல்லது போலித்தனமான வெறும் நடிப்பா? என்பது யாருக்கும் தெரியாது.

நேர்மையும் மனிதாபிமானமும் உள்ள ஒருவனிடம் தான் உண்மையான கண்டிப்பும் இருக்க முடியும். தவறான வழியில் சென்று காரியம் பார்க்க நினைப்பவர்களால் அவனை அணுக முடியாதிருக்கும். அவனுடைய இறுக்கம்-அது வலுவான ஒரு சத்தியத்தின் தோற்றம்.

'சேர்ஜன்' கருணை நாயகம் போன்றவர்கள் பிறர் தங்களை எளிதில் நெருங்கி வரவிடுவதால், அவர்கள் 'சேர்ஜன்' போன்றவர்களின் பலவீனத்தில் குத்திப் பார்த்து விடுவார்கள் என்ற அச்சம் காரணமாக கட்டியெழுப்பி இருக்கும் போலித்தனமான தற்காப்புச் சுவர்தான் அந்தக் கண்டிப்பு.

''சேர்ஜன்'' கருணை நாயகத்தின் பிரத்தியேக அறைக் கதவு மதுபோதையில் கிறங்கிக் கிடக்கும் அவர் கண்களைப் போல பாதி திறந்து கிடக்கிறது. அறையின் நடுவில் போடப்பட்டிருக்கும் மேசையின் முன்னால், கதிரையைப் பின் தள்ளி அதில் சாய்ந்து கிடக்கிறார் கருணை நாயகம். அவரது தலைக்கு மேல் சுழன்று கொண்டிருக்கும் மின் விசிறியின் ஓட்டத்தைக் கணக்கிடுவதுபோல அவர் விழிகள் மேல் நோக்கி பதுங்கிக் கிடக்கின்றன. அந்த விழிகளில் அறுவை சிகிச்சை செய்து வடிகின்ற உதிரம் போலச் செம்மை படர்ந்து சொட்டுகிறது. அவரது வலது கைவிரல்களுக் கிடையில் புகைந்து கொண்டிருக்கும் 'சிகரெற்றை' அடிக்கொரு தடவை உதட்டில் பொருத்தி, அநாயாசமாகப்

புகையை உள்ளே இழுத்து, ஏதோ விஞ்ஞான ஆராய்ச்சி செய்பவர்போல மின் விசிறியை நோக்கி வளையம் வளைய மாக ஊதித் தள்ளுகிறார்.

அவர் இப்போது இருக்கின்ற கோலத்தை நேரில் கண்ட பிறகு, உள்ளே போகாமல் திரும்பி விடுவோமா என்று மகாலிங்கம் ஒரு கணம் நினைத்தான். ஆனால் ஆறுமுகத் தாரிடம் போய் என்ன சொல்வது என்ற தடுமாற்றத்தில் அங்கிருந்து திரும்பவும் முடியாமல் சிறிது நேரம் குழம் பினான்.

அவன் அங்கு வந்து அறைக்கு வெளியே நீண்ட நேர மாக நின்று கொண்டிருப்பதைச் "சேர்ஜனின்" கழுகுக் கண் கள் கண்டு கொண்டுவிட்டன. ஆனால் அதை அவர் வெளிக் காட்டிக் கொள்ளாமல் ஏகாந்த சுகத்தில் நிஷ்டை கூடிக் கிடக்கிறார்.

மகாலிங்கம் தான் அங்கே நின்று கொண்டிருக்கும் ஆள் அரவம் அவர் செவிகளில் விழவேண்டும் என்ற நோக்கத் தில் அங்குமிங்கும் மெல்ல நடந்து திரும்பவும் கதவுக்கெதி ரில் வந்து நிற்கிறான்.

அவர் அவனைக் கவனிப்பதாக இல்லை.

தயங்கித் தயங்கிச் சற்று நேரம் மேலும் அங்கே தாம தித்துப் பார்க்கிறான். அவனை உள்ளே வருமாறு அவர் அழைக்காமல், அவனாக எப்படி அவருடைய அறைக்குள் நுழைய முடியும்? அவருடைய அநுமதி கிடைக்குமென்பதி லும் அவனுக்கு நம்பிக்கையில்லை. இப்போது என்ன செய் வது என்று அறியாமல் கதவுக்கு வெளியே அவன் குழம்பிக் கொண்டு நிற்கிறான்.

நேரம் என்பது யாருக்காகவாவது தாமதித்து நிற்குமா? அது தன்பாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது.

அவர் தாமாக மனம் வைத்து அவனை உள்ளே வருமாறு அழைக்கப் போவதில்லை. இப்போது தனிமையில் இருக்கும்

அவரைச் சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்பைத் தவறவிட்டால், திரும்பவும் அவரைக் கண்டு பேசுகின்ற சந்தர்ப்பமே இல்லாமல் போய் விடக்கூடும். அவனையும், அவரையும் தவிர வேறு எவரும் அங்கில்லை. என்ன நடந்தாலும் வெளியில் தெரியப் போவதுமில்லை. இந்த நல்ல சமயத்தில் வேறு யாராவது இடையில் வந்து புகுந்து கொள்வதற்கு முன்னர் அவரோடு பேசிவிட வேண்டுமென்று அவன் துடித்தான். ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ''நடக்கிறது நடக்கட்டும்'' என்ற முடிவோடு அந்த அறையின் சுழல் கதவை மெல்ல தள்ளிக் கொண்டு அவன் உள்ளே புகுந்தான்.

மாலை நேரத்து இருள் அறையில் கவிந்து கிடக்கிறது. யன்னல்கள் யாவும் மூடப்பட்டு, யன்னல் சீலைகள் இழுத்து விடப்பட்டிருக்கின்றன. மின் விளக்குகள் இன்னும் ஏற்றப் படவில்லை.

அவன் உள்ளே நுழைந்த பின்னரும் ''சேர்ஜனின்'' அகம்பாவம் அவரை விட்டுக் களையவில்லை. முன்போலவே கதிரையின் மேற்சட்டத்தில் தலையை வைத்து சாய்ந்து கிடக்கிறார்.

அந்த அறையும் அங்கு நிலவுகின்ற அமைதியும் ''சேர்ஜனின்'' நிஷ்டையும் அநுமதியில்லாமல் உள்ளே நுழைந்து நிற்கும் அவனைக் கதிகலங்கச் செய்கின்றன.

இப்படிப் பயமுறுத்துவதைவிட வாய் திறந்து கடுமையான இரண்டு வார்த்தைகளால் ஏசி வெளியே போவென்று துரத்திவிட்டால் பாதகமில்லை என்று அவனுக்குப்படுகிறது.

அவருடைய பயங்கரமான மௌனம் பின்னால் வீசப் போகின்ற புயலுக்குக் கோடி காட்டுகிறது என்று எண்ணி அவன் உள்ளூர நடுங்கிக் கொண்டு நின்றான்.

சில நிமிடங்கள் – அவனைப் பொறுத்தவரையில் சில யுகங்கள் கழிந்திருக்கும்.

''சேர்ஜன்'' தலையைத் தாழ்த்தி போதையில் ஊறிக் கிடக்கும் கண்களை உருட்டி அவனை வெறிக்கிறார். அவருடைய அநுமதியில்லாமல் வந்து நிற்கும் அவனைக் கண்டு சினந்துகொண்டு ''ஏன் வந்தாய்?'' என்ற பாவனையில் ஒரு தலையசைப்பின் மூலம் கேட்கிறார்.

அவருடைய கண்களிலிருந்து உமிழுகின்ற கொடிய பார்வை—அலட்சியமான அங்க அசைவுகள்—அதிகாரமான தலை அசைப்பு எல்லாம் ஒன்று சேர்ந்து அவன் உள்ளத்தைப் போட்டு உலுக்குகின்றன. அந்த நிலையில் அவன் வாய் திறந்து பேசமுடியாமல் பதறுகிறான்.

அவர் எதிர்பார்த்தது போல அவனிடமிருந்து பதில் வராததைக் கண்டு அவருக்கு முகம் சிவந்து கண்ணில் பொறிப் பறக்கிறது.

மகாலிங்கம் ஒருவாறு தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அடித்தொண்டையால் தான் அங்கு வந்து நிற்பதற்கான காரணத்தை அவருக்குச் சொல்ல எத்தனிக்கிறான்.

அவன் எதையோ சொல்லப் போகிறான் என்பதை அவர் உணர்ந்து கொண்டு முன்போல அலட்சியமாகக் கதிரையில் சாய்ந்துகொண்டு தலையை மேலே தூக்கி மறுபடியும் மின்விசிறியை நோக்க ஆரம்பித்துவிட்டார்.

''ஸேர்......எக்ஸ்கியூஸ் மீ''

இதுவரை அங்கு நடந்துகொண்டிருந்த மௌன நாடகம் கலைகிறது.

அவன் வாய் குளறுகிறது.

அவர் திடீரென்று தலையைத் தாழ்த்திக் கொண்டு திரும்பவும் அவனைப் பார்த்து முறைக்கிறார்.

வெறிபிடித்த மிருகமொன்று அதற்கெதிரில் நிற்கும் அப்பாவி மனிதன்மேல் பாய்ந்து பிடுங்குவதற்குத் தயாரா

வது போலவும் "உன்னை மன்னிக்க முடியாது; மன்னிக்க மாட்டேன்" என்று உறுமுவது போலவும் அவனுக்குத் தோன்றுகிறது.

மூலமூர்த்தியைத் தரிசிக்கவேண்டுமானுல் அதற்கு முன் அர்ச்சகர் என்ற தரகரை இடையில் நிறுத்தவேண்டும். அர்ச்சகர் இல்லாமல் தரிசனத்துக்கு வந்து நிற்கும் அசட்டுத் துணிச்சலுள்ள பக்தன் அவன். அவர் முன்னுல் அடங்கி ஒடுங்கி இதுவரை நின்றதில் அவன் மனத்திலிருந்த அச்சம் கொஞ்சம் கொஞ்சமாக விலகிப் போக உள்ளத்தில் துணிவு பிறக்கிறது. "இவருடைய சவடாலைக் கண்டு அசந்துபோக மாட்டேன்." என்று தன்னைத்தானே தைரியப்படுத்திக் கொண்டு சொன்னுன்:

"ஸேர்......ஆறுமுகம்"

"ஓ......அவருக்கென்ன?"

அவன் ஆறுமுகத்தாரின் பெயரைச் சொன்ன மாத்திரமே அந்தப் பெயருக்குரிய மனிதனை நன்ருக அறிந்து வைத்துக்கொண்டிருப்பவர் போல இறுக்கமாக அவனைப் பார்த்துக் கேட்டார்.

அவர் பார்வையிடும் நோயாளிகளில் அவன் குறிப்பிடும் பெயருக்குரியவர் யார் என்பது நிச்சயமாக அவருக்குத் தெரிந்திருக்கமாட்டாது. அவருக்கு உண்மையில் தெரிந் திருந்தாலும் அந்த நோயாளிக்கு என்ன என்று டாக்டராக இருக்கின்ற அவர் அல்லவா சொல்லவேண்டும்? இப்படி ஒரு கேள்வியை அவனிடம் போய்க் கேட்டால்......... அவன் பதில் சொல்ல முடியாமல் தயங்கினுன்.

மகாலிங்கத்தின் தயக்கம் அவருக்கு எவ்விதத்திலும் நயமாகப்படவில்லை. அவன் நடந்து கொள்ளுகின்ற முறையையும் அவர் பழகும் சமூகமட்டத்தில் நாகரிகமாகவு மில்லை.

"ஐ சே, நீங்களெல்லாம் படிச்சவங்கள். அநாவசியமாக இங்கே வந்து நின்று எங்களுக்குத் தொந்தரவு தரக்கூடாது. ஒரு பேஷன்ரைக் கவனிக்கிறது என்ரை கடமை. அவருக்கு என்ன செய்ய வேண்டுமெண்டு எனக்குத் தெரியும், வீணுக எனக்குச் சும்மா கரைச்சல் தரக்கூடாது" என்ருர்.

'நீங்கள் உங்கடை கடமையைச் சரியாகச் செய்தால் நாங்கள் ஏன் தேடிக்கொண்டு வாறம்?' என்று அவனுக்குக் கேட்க வேண்டும்போல இருக்கிறது. அப்படி அவன் கேட்டு விட்டால், அதனுல் விளையக்கூடிய அனர்த்தங்களை எண்ணி மௌனமாக அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்ருன்.

அவன் மேலும் அங்கே நிற்பதை அவர் கொஞ்சமும் விரும்பாமல், "நான் அவரைப் பார்க்கிறன், நீர் போம்" என்று விடை கொடுத்தார்.

அதன்பிறகும் அங்கே நின்று கொண்டிருந்தால் கழுத்தில் பிடித்து "போ வெளியே" என்று தள்ளவும் தயங்க மாட்டார் என்று உணர்ந்து "தாங்க்யூ ஸேர்" என்று சொல்லிக்கொண்டு மகாலிங்கம் வெளியே நடந்தான்.

ஆறுமுகத்தாருக்கு இதன்பிறகாவது ஒழுங்கான சிகிச்சை அளிக்கப்படும் என்பதில் அவனுக்குப் பூரண நம்பிக்கையில்லை. ஒருவேளை அவன் குறிப்பிட்ட ஆறுமுகத் தாரை உண்மையிலே அவர் அறிந்து வைத்துக் கொண்டு அவரைக் கவனிக்கவும்கூடும் என்று அவன் மனம் ஒரு தடவை சலனப்படுகிறது. "சரி என்னதான் நடக்கிறது; பொறுத்துப் பார்ப்போம்" என்ற முடிவோடு, தான் "சேர்ஜனைச்" சந்தித்து எல்லாம் பேசி முடித்திருப்பதாக ஆறுமுகத்தாரிடம் வந்து தெரிவித்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டான்.

ஆறுமுகத்தாருக்கு அவன் வந்து சொன்ன செய்தியைக் கேட்டு ஒரே பெருமை. அவருடைய பெருமகன் எல்லாரா லும் எளிதில் அணுக முடியாத "சேர்ஜனை" நேரில் சந்தித்

துப் பேசியிருக்கிறுன். மற்றவர்கள் சொல்லிக்கொள்வது போல கைக்கூலி என்பது கொடுக்காமல் அவரைப் போய்க் கண்டிருக்கிறுன். அவருக்கு ஒழுங்கான நல்ல வைத்தியம் நடப்பதற்கு ஒரு சந்திப்பின் மூலம் அவன் ஏற்பாடு செய் திருக்கிறுன். அவனுடைய திறமையால் டாக்டருக்குக் கொடுக்கும் கைக்கூலி அவருக்கு மிச்சமாகி இருக்கிறது. இன்னும் இடையில் ஓர் இரவுதான்; மறுநாள் விடிந்தால் "வாட்டுக்கு" வருகின்ற "சேர்ஜன்" விசேஷமாக அவரைக் கவனிக்கப் போகிறுர் என்ற நம்பிக்கையில் ஆறுமுகத்தார் திளைத்திருந்தார்.

## 7

மகாலிங்கம் தொடர்ந்து ஐந்து நாட்களாக ஆஸ்பத் திரிக்குப் போக முடியவில்லை. அந்த நாட்களில் அவன் பாடசாலைக்கும் செல்லாமல் தோட்ட வேலையில் மூழ்கிப் போனுன்.

ஊருக்கு மாற்றலாகி வந்திருப்பதன் நோக்கமே தோட்ட வேலைகளைக் கவனிப்பதுதான். யாழ்ப்பாணத்து சராசரி ஆசிரியர்களைப்போல அவனும் தோட்டச் செய்கை யில் ஈடுபடாதிருந்தால் குடும்பப் பளுவைச் சுமக்க முடியா தென்பதை என்றோ அவன் உணர்ந்து கொண்டான். இந்த ஞானம் காலந் தாழ்த்திப் பிறந்த அன்றே சொந்த ஊரோடு மாற்றலாகி வருவதற்கு அவன் விரும்பினுன். ஆனுல் மாற்றம் கிடைப்பதென்பது இலகுவானக் காரியமா? அரசியல்வாதிகளின் அருட்பார்வை கிட்டாதபோது நியாய பூர்வமான இடமாற்றங்கள்கூடக் கிடைக்காமல் போய் விடுகின்றன. கடந்த தேசியப் பேரவைத் தேர்தல் நடை பெற்ற சமயம் மகாலிங்கம் சொந்த ஊரில் தங்கி நிற்க

வில்லை. நின்றிருந்தால், வெல்லும் கட்சி பார்த்து அவர்களுக்குக் கொடி பிடித்து தேர்தல் முடிந்த சூட்டோடு சுளுவாகத் தன் காரியம் பார்த்திருப்பான். அப்படி இல்லாமல் போனதால் சில ஆயிரங்களைச் செலவு செய்துதான் அவன் ஊருக்கு மாற்றலாகி வரவேண்டி நேர்ந்தது. அவன் குடும்பம் இன்று இருக்கின்ற நிலையில் இந்தச் செலவை அவனால் தாக்குப் பிடிக்க முடியாது. ஆனால் கடந்த அரசாங்கம் மிளகாய் இறக்குமதியைத் தடை செய்திருந்ததால் ஊரோடு மாற்றலாகி வந்து இதுபோன்ற பல ஆயிரங்களைச் சம்பாதித்துப் போடலாம் என்ற நம்பிக்கையில்தான் அவன் மாற்றம் பெற்று வந்தான்.

அந்த நம்பிக்கை தளராத பற்றுறுதியுடன் பாடசாலையில் கல்வி கற்பிப்பதைவிட தோட்டத்தில்தான் அவன் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறான். அந்தக் குடும்பத்தின் பளுவைத் தாங்கிக் கொள்ள வேண்டுமானால் அவன் அப்படி உழைத்துத்தான் ஆகவேண்டும். தகப்பனுக்குப் பின்னர், பெரிய தகப்பன் அவர்களைக் கவனிப்பாரென்ற நம்பிக்கை அவர்களுக்கு அற்றுபோன பிறகு அவன் தனக்குள்ள பொறுப்புக்களைப் புரிந்து கொண்டான். அரசினர் பாடசாலையில் ஓர் ஆசிரிய பதவி கிடைத்த சமயம் அந்தச் சம்பளத்தைக் கொண்டு குடும்பத்தின் சகல கஷ்டங்களையும் போக்கிவிடலாம் என்ற கற்பனை சுகத்தில் மிதந்தவன் அவன். காலப் போக்கில் அந்த எண்ணம் வெறும் பொய்மைத் தோற்றமென்பதை அவன் கண்டு கொண்டான். ஓர் ஆண் மகனுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைத்துவிட்டால் அடுத்ததாக அவன் எதிர்பார்ப்பது கொழுத்த சீதனத்தைத்தான். மகாலிங்கம் தன் மாமன் மகளை வாழ்க்கைத் துணையாக ஏற்க வேண்டி நேர்ந்ததால் அதைக்கூட அவன் பெற முடியாமல் போய்விட்டது.

அவனுடைய தம்பி சகோதரிகள் இருவருக்கும் இளையவன். அவன் தோட்டத்தைப் பொறுப்பாகக் கவனிக்கமாட்டான். மகாலிங்கம் வற்புறுத்திச் சொன்னதின் பேரில்

இரண்டு தினங்களுக்கு முன் ஒரு நாள் அவன் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆறுமுகத்தாரைப் பார்த்து வந்தான்.

மகாலிங்கம் அன்று பகல் முழுவதும் தோட்டத்தில் வேலை செய்து களைத்துச் சோர்ந்த நிலையில் மாலை வீடு வந்து சேர்ந்தான். ஆறுமுகத்தார் பெரியாஸ்பத்திரியை விட்டுக் கிளம்பி, முன்னர் அவர் தங்கியிருந்த கிராமத்து ஆஸ்பத்திரிக்குத் திரும்பவும் வந்துவிட்டார் என்ற செய்தி அவன் வீடு வந்து சேர்ந்ததும் அவனுக்குக் கிடைத்தது.

ஆறுமுகத்தார் தன் மனம்போன போக்கில் நடந்து அவனுக்குக் கரைச்சல் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார் என்று நினைக்க அவன் மனத்தில் எரிச்சல் மூளுகிறது. "தான் நினைத்ததுபோல நடப்பவர் எனக்கேன் சொல்லியனுப்ப வேணும்? அறிவிக்காமல் இருந்திருந்தால் தெரியாதவன்போல இருந்திருக்கலாம்; தெரிந்து கொண்டும் எப்படிப் போகாமல் இருக்கலாம்?'' என்று மனத்தில் கறுவிக் கொண்டு அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டான்.

மகாலிங்கம் "வாட்டு''க்குள் புகுந்து மேலோட்டமாக ஆறுமுகத்தாரைத் தேடினான். அவரை அந்த "வாட்டி''ல் எந்தக் கட்டிலிலும் காணமுடியவில்லை. அந்த ஆஸ்பத்திரியில் ஆண் நோயாளர்களுக் கென்றுள்ள ஒரேயொரு 'வாட்' அதுதான். அங்கே ஆறுமுகத்தார் இல்லையென்றால்......? ஒரு வேளை விஷமத்தனமாக பொய்யான தகவலை யாராவது அவன் வீட்டில் வந்து தெரிவித்தார்களோ? அவனுக்கு அப்போதிருந்த அவசரத்தில் இந்தத் தகவலை வந்து தெரிவித்தவர் யார் என்று கூட அவன் விசாரிக்கவில்லை. "எதற்கும் திரும்பவும் ஒருக்கால் தேடுவோம்'' என்ற முடிவோடு "வாட்''டின் ஒருகோடியில் இருந்து ஒவ்வொரு நோயாளாராகப் பார்த்துக் கொண்டு வந்தான். அந்த "வர்ட்''டின் மறுகோடியில் கட்டில்களுக்கப்பால் மலசல கூடத்தை ஒட்டினாற் போல சுவரோரமாக

ஒரு மூலையில் தரையில் விரித்திருக்கும் புற்பாயின் மேல் ஆறுமுகத்தார் படுத்துக் கிடக்கிறார். அந்த இடத்தில் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு அவர் எப்படித்தான் கிடக்கிறாரோ? மலசல கூடத்திலிருந்து எழுகின்ற நாற்றம் ஒருபுறம். அவர் புண்ணிலிருந்து பரவிக் கொண்டிருக்கும் நாற்றம் இன்னொருபுறம். மகாலிங்கத்தினால் இந்த நாற்றங்களைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவன் அங்கே நின்று சரியாக சுவாசிக்கவும் முடியாமல் திணறினான். ஆறுமுகத்தாருக்கு அருகில் படுத்திருக்கும் நோயாளிகள் அவரைப் பார்த்து முணுமுணுத்த வண்ணம் மூக்கைப் பிடித்துக்கொண்டு கிடக்கிறார்கள்.

மகாலிங்கம் அவரைக்கண்டு மனம் கலங்கினான். அவனை அறியாமலே அவன் கண்களும் மெல்லக் கலங்குகின்றன. அவரோடு என்ன பேசுவதென்றே அவனுக்குத் தெரியவில்லை. துயரம் வடியும் உள்ளத்தோடு சற்று நேரம் அவரைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

ஆறுமுகத்தார் இப்போது இருக்கும் நிலையில் அவராக முன்வந்து அவனோடு பேச மாட்டார் என்பது அவனுக்குத் தெரியும்.

நோய் கொடுக்கும் வேதனை இப்போது முன்னைவிட அதிகம். ''சேர்ஜன்'' தன்னைக் கவனிக்கவில்லை என்ற வெப்பிசாரம் ஒரு புறம். மலசல கூடத்துக்கருகே தரையில் கிடந்து உழலவேண்டி இருக்கிறது என்ற கொதிப்பு ஒரு புறம். இவை யெல்லாவற்றுக்கும் காரணம் அவனுடைய கையாலாகாத் தனத்தினால்தான் தனக்கு இந்தக் கதி நேர்ந்திருக்கிறது என்று கருதிக் கொண்டு அவனோடு பேசாமல் இறுக்கமாகக் கிடக்கிறார். அவர் உள்ளத்தில் தனக்கென்று யாருமில்லையென்ற அநாதைத்தனம் அவர் நெஞ்சை நெருடிக் கொண்டிருக்கிறது.

மகாலிங்கம் கொஞ்ச நேரம் பொறுத்து ''பெரியையா......'' என்று அவரைப் பார்த்து அழைக்கிறன். அவர் அவன் பக்கம் திரும்பாமல் வேதனையை மீறிய வெறுப்போடு கண்களை மூடிக்கிடக்கிறர். மேலும் சிறிது தாமதித்து ''அவையளாகத் துண்டு வெட்டி விட்டவையளோ......''என்று முழுமையாக வார்த்தைகளை முடிக்காமல் மென்று விழுங்குகிறன்.

''ஆர் அங்கே இருக்கச் சொன்னவன்? அவன்களுக்கு இருந்தாலும் சரி, போனலும் சரி எல்லாம் ஒண்டுதான்.'' என்றர் எரிச்சலோடு.

மகாலிங்கம் ஒன்றுமே பேசவில்லை. கவலையோடு அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு நிற்கிறன்.

இதற்குமேல் அவரும் ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. பேசுவார் என்று அவன் எதிர்பார்க்கவுமில்லை.

மகாலிங்கம் ''சேர்ஜனைக்'' கண்டுபேசிய பிறகும் அவர் ஆறுமுகத்தாரை கவனிக்கவில்லை என்பதை அவன் உணர்ந்து கொண்டான். இங்கேயும் வாரத்திற்கு இரு தடவை அந்தச் ''சேர்ஜன்'' ''விஸிட்'' பண்ணுகிறர் என்பதும் இங்குள்ள டாக்டர்கள் கடுமையான நோயாளிகளை அவருடைய பார்வைக்குட் படுத்துகிறர்கள் என்பதும் ஆறுமுகத்தாருக்குத் தெரியாதவைகள். ஆறுமுகத்தாரை அந்தச் ''சேர்ஜன்''தான் இங்கும் பார்வையிட வேண்டியிருக்கும். அவருடைய அநுமதியில்லாமல் பெரியாஸ்திரியில் இருந்து ஆறுமுகத்தார் கிளம்பி வந்திருக்கக் கூடாது என்று மகாலிங்கம் கருதினன். அவர் சில சமயம் ஆறுமுகத்தாரைப் பார்வையிட முடியாதென்று மறுக்கவும் கூடும். இப்போது ஆறுமுகத்தார் உருவாக்கி இருக்கும் இந்தச் சிக்கலை அவருக்கு எப்படி எடுத்துச் சொல்வது? அப்படிச் சொல்வதனல் ஆறுமுகத்தார் தன் தவறை ஏற்றுக் கொள்ளப்போகிறரா? சொன்னலும் அதனல் எந்தவிதமான

பயனும் விளையப் போவதுமில்லை. ஏதோ நடந்தது நடந்து முடிந்துவிட்டது. மேற்கொண்டு இனிமேல் ஆகவேண்டிய வற்றைக் கவனிப்போமென்று மகாலிங்கம் எண்ணினான்.

மகாலிங்கம் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆறுமுகத் தாரைப் பார்க்காமல் இருந்துவிட்ட சில நாட்களுக்குள் நோய் அவரைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது என்பது அங்கே நின்றுகொண்டிருந்த சொற்ப நேரத்துக்குள் அவன் கண்டுகொண்டான். முன்பு என்றுமில்லாத அளவில் புண்ணிலிருந்து கிளம்பும் துர்நாற்றம் அவனுக்கு வயிற்றைக் குமட்டிக்கொண்டு வாந்தியை வருவித்துவிடும்போலத் தோன்றுகிறது. அவருக்கு முன் அப்படி ஒன்றும் நடந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கையோடு "வாறன்" என்று சொல்லிக்கொண்டு 'வாட்'டை விட்டு வெளியே வந்தான். விறுந்தையைத் தாண்டி அப்பால் வந்ததும் வாய்க்குள் ஊறி நின்ற உமிழ்நீரை அருவெறுப்போடு காறித் துப்பினான்.

மகாலிங்கம் வெளிநோயாளர் பகுதிக்கு வந்து அங்கு கடமையிலிருந்த டாக்டரைப் போய்ப் பார்த்தான். அவர் முன்பே அவனுக்கு அறிமுகமான ஒருவர். அவர்தான் இன்று காலையில் ஆறுமுகத்தாரை 'அட்மிட்' பண்ணியிருக் கிறார். அவரோடு ஆறுமுகத்தாரின் வைத்திய தேவை களைப்பற்றிக் கலந்தாலோசித்தான். ஆறுமுகத்தாருக்கு இனிமேல் சத்திர சிகிச்சைதான் செய்யவேண்டும். அவருக்கு வேண்டிய சிகிச்சையைச் செய்வதற்கு இங்குள்ள வசதிகள் போதுமானவைகளல்ல. மறுபடியும் அவர் பெரியாஸ்பத் திரிக்குத்தான் போகவேண்டும் என்று அந்த டாக்டர் தெரி வித்தார்.

இப்போது அவர் இருக்கும் நிலையில் என்ன செய்யலாம் என்ற தெளிவில்லாமல் மகாலிங்கம் குழம்பினான். பெரியாஸ்பத்திரிக்கு மறுபடியும் போவோம் என்று சொன்னால் ஆறுமுகத்தார் நிச்சயமாக சம்மதிக்கமாட்டார். அவரைச் சமாதானம் செய்து அழைத்துக் கொண்டு போக

முடிந்தாலும் "சேர்ஜன்" கருணை நாயகம் திரும்பவும் இவ்ரை ஏற்றுக்கொண்டு சிகிச்சை அளிப்பாரா? இடையிலே தோன்றியிருக்கும் இந்தக் குழப்பமான நிலைமையை எப்படித் தீர்த்து வைப்பது? ஆறுமுகத்தார் அன்று சொன்ன ஆலோசனையைக்கேட்டு "சேர்ஜனுக்கு" ஏதாவது கைப்பசை காட்டியிருந்தால் ஒரு வேளை இன்றுள்ளது போன்ற நெருக் கடியான ஒரு சூழ்நிலை உருவாகாமல் இருந்திருக்கலாம். அவருடைய விருப்பத்துக்குத் தடையாக இருந்தவன் என்ப தால் இந்தநெருக்கடிக்குப் பொறுப்பேற்கவேண்டியவன் அவன்தான் என்பதை மகாலிங்கம் உணர்ந்தான். இதனால் என்றைக்கோ வரவிருக்கின்ற மரணம் விரைவிலே அவரைக் காவு கொண்டுபோய் விட்டால்.........என்று எண்ணும் போது அவன் விழிகள் கலங்கின. கண்களை லேசாகக் கையினால் துடைத்துவிட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக் கட்டிடத்துக்கு வெளியே வந்து வாசலருகே நின்று கொண்டிருந்தான்.

"என்ன தம்பி யோசனை?"

அவன் எவ்வளவுநேரம் அப்படி நின்றானோ, அவனுக்குத் தெரியாது. அவனை நோக்கி எழுந்து வந்த குரல் கேட்டு, திடீரென்று தன் குழப்பமான சிந்தனையிலிருந்து விடு பட்டான்.

அது ஒரு ஆஸ்பத்திரி; அங்கு வருவோர் போவோர் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் கவலை; அவனுக்கும் தன் பெரியதகப்பன் பற்றிய சொந்தக் கவலை; அங்கு வந்து போகும் அந்தச் சனக்கூட்டத்துக்குள் அவனை இனம் கண்டு உரிமையோடு நெருங்கி வந்து விசாரிக்கும் அந்த மனிதனை அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

ஒடிசலாக ஓங்கி வளர்ந்த உடல். ஒடுங்கிய கண்கள், தசைப்பற்றில்லாத ஒட்டிய முகம் நடக்கும்போது முட்டி தட்டும் முழங்கால்கள். இந்தத் தோற்றத்தைக் கண்டதும்

எடுத்த எடுப்பில் மகாலிங்கத்துக்கு அவன் மேல் இனம் புரியாத ஒரு வெறுப்பு உண்டாகிறது. அவனை முன்பும் எங்கோ பார்த்திருப்பதாக மகாலிங்கத்தின் மனத்தில் ஒரு நினைவு சுழிக்கிறது 'எங்கேபார்த்தேன்' என்று சில கணங்கள் அவன் குழம்பினான். அவனுக்கு இருந்தாற்போல அவனுடைய பாடசாலைக் காலத்து ஞாபகம் ஒன்று மனத்துக்கு வருகிறது. பாடசாலையில் ஆங்கிலம் போதித்த ஆசிரியர் சேக்ஸ்பியரின் ''யூலியசீஸர்'' என்ற நாடகத்தை நன்றாக சுவைத்துப் படிப்பித்திருக்கிறார். அதில் வருகின்ற ஒரு கதாபாத்திரம் கஸியஸ்; அவனுடைய தோற்றத்தையும் குணவியல்புகளையும் அழுத்தி அழுத்தி வகுப்பில் சொல்லியிருக்கிறார். அந்தக் கஸியஸின் சாயல்......

''என்ன தம்பி கடுமையாக யோசிக்கிறீர்?''

கேட்டுக்கொண்டு அவன் சிரிக்கிறான்.

கன்னங்கரேல் என்றிருக்கும் அந்த உருவம் வாய்திறந்து சிரிக்கும்போது முல்லைப்பூப் போலப் பற்கள் பளிச்சிடுகின்றன. களங்கமில்லாத அந்த வெள்ளையின் பின்னால் ஒட்டிக் கொண்டிருக்கும் கபடம்......சீஸர் கண்டு அஞ்சிய கஸியஸின் சிரிப்பாக மகாலிங்கத்துக்குத் தோன்றுகிறது.

அவனுக்குச் சொல்லுவோமா? விடுவோமா? என்று மகாலிங்கம் சிலநொடிகள் தடுமாறினான்.

''என்ன முழிக்கிறீர்?''

திரும்பவும் அவன் கேட்கிறான்.

''ஒண்டுமில்லை......என்ரை பெரியதகப்பனுருக்குச் சுகமில்லை. அதுதான்......'' மகாலிங்கம் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் இடைமறித்து அவன் கேட்கிறான். ''ஏன் தம்பி, சீரியசே?''

''ஓம், கொஞ்சம் கடுமையாகத்தான் இருக்குது. டயாபெட்டீஸ் கேஸ்.''

"புண்...?" கேட்டுக்கொண்டு ஆட்காட்டி விரலில் சங்கிலியைக் கொழுவி கார்ச் சாவியைக் 'கிர்......கிர்' என்று சுழற்றுகிருன்.

"புண் பெருத்துத்தான் பெரிய வேதனைப்படுகிருர்."

"உடனே 'ஒப்பிறேட்' பண்ணவேணும். கிழமைக்கு இரண்டு தடவை 'சேர்ஜன்' இங்கே வாருர் தெரியாதா? நான்தான் அவரைக் காரிலே கொண்டு வாறனுன். இண்டைக்கு இப்பத்தான் வந்திருக்கிருர். நான் பெரியாஸ் பத்திரியிலேயே அற்றண்டனுக இருக்கிறன்."

"சேர்ஜன் இஞ்சேயே நிக்கிருர்?"

"ஓம். அங்கே நிக்குது......அதுதான் அவற்ரை கார்"

"உங்களுடைய பேர்?"

"சட்டநாதன்."

"சேர்ஜனை நான் ஒருக்கால் சந்திக்கவேணும்."

"நீர் சந்திச்சாப் போலெ என்ன, உம்மடை பெரிய தகப்பனைச் சந்திக்கச் செய்யவேணும்."

"அவருக்கு உடனே 'ஒப்பிறேட்' பண்ணவேணும்."

"செய்யலாம். நாளைக்குக் காலையிலேயே எல்லாம் முடிக்கலாம். நான் ஐயாவிட்டைச் சொல்லுறன்."

"இப்பவே அவரைக் கொண்டுவந்து காட்டுவம்."

"காட்டலாம். அதுக்கு முதல் நான் போய் ஐயாவுக்குச் சொல்லி...........எல்லாம் செய்யல்லோ வேணும்."

சொல்லிக் கொண்டு மறுபடியும் சிரிக்கிருன்.

அந்தச் சிரிப்பு கஸியஸின் கபடச் சிரிப்பு.........மகாலிங்கத்தின் உள்ளத்தில் திடீரென்று ஒரு சந்தேகம்; "இவனை நம்பலாமா? இவன் சொல்வதுபோல தாமதம் இல்லாமல் ஒப்பறேசன் நடக்குமா? அல்லது இவன் வீசுகின்ற வலையில் என்னைச் சிக்க வைத்து ஏமாற்றப்

பார்க்கிருனு? இவன் சொல்லும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் வேறென்ன வழி?'' என்று மகாலிங்கம் சிந்தித்துப் பார்த்தான். ஆறுமுகத்தாருக்கு இப்போது தகுந்த சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமானுல் சட்டநாதன் சொல்லும் ஆலோசனையைக் கேட்க வேண்டியதுதான். அவனேடு இனிமேல் ஒழிவு மறைவின்றிப் பேசுவோம் என்ற முடிவில் ''எவ்வளவு குடுக்கவேணும்?'' என்று கேட்டான்.

''ஐயாவுக்குத்தான் ஒரு அறுபது. என்வலப்பிலே வைச்சுக் கொண்டு வாருங்கோ தம்பி.''

'ஐயாவுக்குத்தான் அறுபதென்ருல்......... இன்னும் வேறு யாருக்குப் பணம் கொடுக்கவேண்டும். அது யார், அவருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும்?' என்ற நோக்கத்தில் ''ஐயாவைவிட வேறை ஆருக்கு......?'' என்ருன் ஆச்சரியமாக.

''ஹி... ..ஹி......ஹி அது உங்களின்ரை விருப்பம் போலெ.''

இப்போது இரண்டாவது நபர் யார் என்பதும் அவனுக்குக் கொடுக்க வேண்டிய பணம் இடையில் நின்று பார்க்கின்ற காரியங்களுக்கான தரகுக்கூலி என்பதும் மகாலிங்கத்துக்கு விளங்கிக் கொள்கிறது. ''ஒரு காலத்தில் தரகுத் தொழில் பார்த்துச் சம்பாதித்த ஆறுமுகத்தாரின் பணம், இன்று இன்னெரு தரகனின் கைக்குப் போக வேண்டியதாக இருக்கிறதே!'' என்று நினைத்துக் கொண்டு அவனுக்குரிய தரகுக் கூலியை அவன் வாயிஞலேயே கேட்டு அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு ''உங்களுக் கெவ்வளவு?'' என்ருன் மகாலிங்கம்.

''அதேதோ..... உங்களின்ரை இஷ்டம். பதினைஞ்சுக்குக் குறைய ஆரும் தாறதில்லை. இருபதுந்தருவினம், இருபத்தைஞ்சும் தருவினம், அதைவிடக் கூடவும்......''

மகாலிங்கம் சட்டநாதனோடு பேரம்பேசி முடிக்கும் சமயத்தில்தான் செல்லம்மாவும் வீட்டிலிருந்து அங்கு வந்து சேர்ந்தாள். அவன், அவளை அழைத்துக் கொண்டுபோய் இரகசியமாக விபரங்களை எல்லாம் சொல்லி, ஆறுமுகத் தாரிடம் உடனே அனுப்பி வைத்தான்.

செல்லம்மா ஆஸ்பத்திரிக்குள் வேகமாகச் சென்று, எண்பத்தைந்து ரூபாவை ஆறுமுகத்தாரிடம் வாங்கி வந்து பத்து ரூபாவைத் தான் எடுத்து மறைத்துக் கொண்டு, மிகுதியை மகாலிங்கத்தின் கையில் கொடுத்தாள். மகா லிங்கம் அந்தப் பணத்தில் அறுபது ரூபாவை புறம்பாக எடுத்து ஒரு என்வலப்பில் வைத்து, மிகுதி பதினைந்தையும் அதோடு சேர்த்து சட்டநாதனிடம் ஒப்படைத்தான்.

சட்டநாதன் மகிழ்ச்சியோடு அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு ''சேர்ஜனின்'' அறையை நோக்கி நடந் தான். இடையில் அவன் கொடுத்த என்வலப்பைத் திறந்து அதற்குள் இருந்த அறுபது ரூபாவில் பத்து ரூபாவைத் தான் எடுத்து மறைத்து வைத்துக் கொண்டு ''சேர்ஜனின்'' அறைக்குள் வேகமாகச் சென்று நுழைந்தான்.

## 8

மறுநாள் காலை எட்டு மணிக்கு முன்னரே மகாலிங்கம் அந்தக் கிராமத்து ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தான்.

ஆறுமுகத்தாரைப் பெரியாஸ்பத்திரிக்கு அவசரமாகக் கொண்டு வரவேண்டும் என்று ''சேர்ஜன்'' கருணைநாயகம் முதல் நாள் அவனிடம் தெரிவித்திருந்தார். அவர் ஆறுமுகத் தாரைப் பரிசோதித்த பின்னர், ''புண் பாதத்துக்கு மேலே போவிட்டுது. பாதம் வரை கழற்றவேண்டி வரும்'' என்று அப்போது சொன்னார். அதைக் கேட்டதும் ஆறுமுகத்தார்

மகாலிங்கத்தைப் பார்த்த பார்வை......அவன் உள்ளத்தைக் குத்தியது. குற்றவாளிக்கூண்டில் நிற்பவன்போல அவரை நிமிர்ந்து பார்க்கமுடியாமல், அவன் தலை குனிந்து கொண்டான். இனிமேலாவது தாமதிக்காமல் அவருக்கு வேண்டிய சிகிச்சைகள் நடை பெறவேண்டும் என்ற எண்ணத்தில் வேகமாகச் செயற்படத் தொடங்கினன்.

ஆறுமுகத்தாரை இந்தத் தடவை முன்போல பஸ் வண்டியில் ஏற்றிக்கொண்டு போகமுடியாது. ''அம்புலன்ஸ்'' வண்டியில் அனுப்பி வைக்கும்படி ஆஸ்பத்திரியில் கேட்ட போது அது பழுதாகிவிட்டது என்று வழமையான பதிலைத் தான் சொன்னர்கள். ஆஸ்பத்திரிக்கு வெளியே எப்போதும் நிறுத்தி வைத்திருக்கும் தனியார் கார்களில் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் ஆறுமுகத்தாரை ஏற்றிச் செல்வதற்கான ஒழுங்குகளை அவன் செய்து முடித்தான்.

கார் பெரியாஸ்பத்திரியை நோக்கிப் புறப்பட்டது. ஆறுமுகத்தார் இரண்டு தலையணைகளை முதுகுக்கு அணையாக வைத்து, அதன்மேல் சாய்ந்தவண்ணம் பின் சீற்றில் சரிந்து கிடக்கிருர். செல்லம்மா வாய்க்குள் வெற்றிலையை அதக்கி வைத்துக்கொண்டு அவருக்கருகே பட்டும் படாமலும் முகம் வாடிக் குருவிப் போயிருக்கிருள். மகாலிங்கம் ட்ரைவரோடு முன் சீற்றில் அமர்ந்திருக்கிருன்.

ட்ரைவர் அநுபவப்பட்டவன். நோயாளிக்கு வேதனையைக் கொடுக்காமல் காரை மெதுவாக ஓட்டிக் கொண்டிருக்கிருன்:

அவன் பொழுதுபோக்காக மகாலிங்கத்தோடு பேசுவோம் என்ற நோக்கத்தில் அவனிடம் கேட்டான்.

''மாஸ்டர் முந்தி எங்கே படிப்பிச்சனீங்கள்?''

''கம்பளையிலே''

"இந்தக் குடும்பக்கட்டுப்பாட்டு விஷயங்களெல்லாம் அந்தப் பகுதியிலெ எப்படியிருக்குது?"

"சனத் தொகையைக் கூட்ட வேணுமெண்டு தமிழர் குடும்பக்கட்டுப்பாடு செய்யறதில்லே. நாங்கள் ஏன் செய்ய வேணுமெண்டுதான் அந்தப்பகுதியிலே சொல்லிக்கொள் கிருர்கள்."

"இதென்ன கதை? இஞ்சை நடக்கிற கொடுமையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமே!"

"என்ன சங்கதி?"

"இஞ்சையுள்ள டாக்குத்தர்மாற்ரை கெடுபிடி தாங்க முடியயில்லே. பிள்ளைத்தாய்ச்சிமார் ஆஸ்பத்திரிக்குப் போனுல், முதல் கேள்வி எத்தனை பிள்ளையெண்டுதான் கேக்கினமாம். இரண்டு மூண்டெண்டால் அதுக்குப் பிறகு 'ஒப்பறேட்' பண்ணச் சொல்லுகினமாம்."

"அவை சொல்லுவினம், நாங்கள் சம்மதிச்சால்தானே செய்யமுடியும்."

"அதுதான் இல்லே. ஒப்பிறேசனுக்குச் சம்மதிச்சால் தான் வைத்தியம் செய்வம் எண்டு நிக்கினமெல்லெ. போன கிழமை நடந்தது. பெரியாஸ்பத்திரியிலெ. ஒரு பிள்ளைத்தாய்ச்சி ஒப்பிறேசனுக்கு முதல்ல சம்மதிச்சிருந்த தாம். பிறகேதோ தனக்குச் சுகமில்லையெண்டு டாக்குத் தருக்குச் சொல்லியிருக்கிரு. டாக்குத்தர் கோவிச்சுக் கொண்டு ஆளைப் பாக்கவுமில்லையாம். மருந்து குடுக்கவு மில்லையாம். அவையளின்ரை அசட்டையாலெ அந்தப் பிள்ளைத்தாச்சி பிரசவத்தின்போது செத்துப் போச்சுதாம். இப்ப விசாரணை நடக்குது. எப்படி விளையாட்டு? இவைளின்ரை விசாரணையிலெ செத்தவள் இனிமேல் திரும்பி வரப்போருளே?"

"ஹூம்......உப்பிடித்தான் எல்லாம்"

மகாலிங்கம் நீண்ட ஒரு பெருமூச்சுவிட்டான். ஆறுமுகத்தாருக்கும் அவர்களுடைய உரையாடல் காதில் வந்து விழுகிறது. ஆனல் அவருக்கிப்போதிருக்கும் வேதனையில் என்ன பேசிக்கொள்கிருர்கள் என்பது தெளிவாக விளங்கிக்கொள்ள முடியவில்லை. வேதனையைத் தாங்கிக்கொள்ள இயலாமல் இடையிடையே வாய் விட்டு முனகுகிருர். புண்ணிலிருந்து எழுந்து கொண்டிருக்கும் துர்நாற்றம் காருக்குள் நிறைந்து குமட்டுகிறது. ட்ரைவர் காரை மெல்ல ஓட்டிக்கொண்டு "சிகரற்" ஒன்றை எடுத்து மூட்டிக்கொள்கிருன். மகாலிங்கத்திடமும் நாகரிகமாக ஒரு "சிகரற்றை" எடுத்து நீட்டுகிருன்.

சிகரற் புகைப்பவர்களுக்கு உண்டாகும் இயல்பான தவிப்பு மகாலிங்கத்துக்கும் அந்தக் கணம் உண்டாகிறது. ஆனல் பெரியவர்களுக்கு முன்னல் "சிகரற்" புகைப்பது மரியாதைக் குறைவான ஒரு செயல் என்ற எண்ணத்தில், பெரிய தகப்பன் ஆறுமுகத்தாரின் காதில் விழும்படியாக "நான் குடிக்கிறதில்லை" என்ருன்.

கார் வல்லை வெளிக்குள் போய்க்கொண்டிருக்கிறது. வேகமாக வீசிக்கொண்டிருக்கும் காற்று கார் கண்ணுடிகளில் பட்டு ஊ ஊ......என்று சப்திக்கிறது.

ஆறுமுகத்தார் ஏதோ ஞாபகம் வந்தவராக மகாலிங்கத்தைப் பார்த்து "தம்பி......" என்று மெல்ல அழைக்கிருர். காற்று வீசுகிற இரைச்சலில் அவர் அழைக்கும் சத்தம் அவன் செவிகளில் விழவில்லை. அவன் ட்ரைவரோடு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிருன்.

மகாலிங்கம் கவனிக்காமல் இருப்பது கண்டு ஆறுமுகத்தார் தலையைத் திருப்பிச் செல்லம்மாவைப் பார்க்கிருர். அவர் பார்வையின் நோக்கத்தை அவள் புரிந்துகொண்டு "தம்பி, பெரியையா கூப்பிடுகிருர்" என்று கொஞ்சம் பலமாகச் சத்தம் போட்டுச் சொல்லுகிருள்.

மகாலிங்கம் பின்னல் திரும்பி ஆறுமுகத்தாரைப் பார்க்கிருன்.

"நேற்றுத் தந்த எண்பத்தைஞ்சும் குடுத்தாச்சே தம்பி?" "ஓம், குடுத்தாச்சு." என்று ஆறுமுகத்தாருக்குச் சொல்லிக்கொண்டு செல்லம்மாவின் முகத்தை சந்தேகத்தோடு நோக்குகிருன் மகாலிங்கம்.

செல்லம்மா தன் கள்ளம் பிடிபட்டுப்போனதால் கலவரமடைந்து தலையைத் திருப்பிக் கண்ணுடிக் கூடாக வெளியே தெரியும் சூனிய வெளியை வெறிக்கிருள்.

"ஹூம்..." ஒரு நீண்ட பெருமூச்சு ஆறுமுகத்தாரின் நெஞ்சிலிருந்து வெளியேறுகிறது, சற்று நேர மௌனத்தின் பின் செல்லம்மாவிடம் அவர் கேட்கிருர்: "எங்கே வந்திட்டம் வல்லை வெளிக்குள்ளையே!"

"ஓம், வல்லைக்குள்ளை தான் இப்ப போறம்"

ஆறுமுகத்தாரின் உள்ளத்தில் தொண்டைமானுற்றில் எழுந்தருளியிருக்கும் செவ்வச்சந்நிதி முருகப்பெருமானின் எண்ணம் உதிக்கிறது. கோவிலிருக்கும் திசையை நோக்கி பரவசத்தோடு கரங்களைக் கூப்பி "அப்பனே முருகா" என்று வாய்விட்டுப் பிரார்த்தித்துக் கொள்கிருர். அதன்பின் கண்களை மூடியவண்ணம் கைகளைக் கூப்பிக்கொண்டு மனத்துக்குள்ளே 'கந்தசஷ்டி கவசம்' பாடத் தொடங்கினர்.

கார் இப்போது அச்சுவேலியைத் தாண்டி ஆவரங்காலுக்குள் வந்துவிட்டது. வல்லை வெளிக்குள் காரில் வந்து மோதிய காற்றின் வேகமும் இப்போது இல்லை. 'ட்ரைவர்' கார்க் கண்ணுடிகளைக் கீழே இறக்கிவிட்டு—உள்ளே காற்ருேட்டத்தைப் பரவச் செய்து—காருக்குள் வியாபித்திருந்த துர்நாற்றத்திலிருந்து சற்றுவிடுபட்டு-நிம்மதியாகப் பெரியாஸ்பத்திரியை நோக்கிக் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

இரண்டு மணி நேரப் பிரயாணத்தின் பின் பெரியாஸ்பத்திரியின் பிரதான வாசலால் நுழைந்து வெளிநோயாளர் பகுதி முன்புறக் கட்டிடத்தின் படிக்கட்டை ஒட்டினாற்போலச் சென்று கார் நிற்கிறது.

மகாலிங்கம் காரைவிட்டு முதலில் கீழே இறங்குகிறான். அதற்குள், எதிலும் வேடிக்கை பார்க்கும் கூட்டமொன்று அதிகம் நெருங்காமல் காரைச் சூழ்ந்து கொள்கிறது.

மகாலிங்கம் அங்கே கடமையிலீடுபட்டிருக்கும் பணியாள் ஒருவனை அழைக்கிறான். அவன் "வீல் செயர்" ஒன்றைத் தள்ளிக்கொண்டு வந்து கார் அருகே நிறுத்துகிறான். வேடிக்கை பார்க்கும் கும்பல் சற்று விலகி இடங்கொடுக்க, மகாலிங்கம் காரின் கதவைத் திறந்து, பணியாளின் உதவியோடு ஆறுமுகத்தாரைக் கீழே இறக்கி "வீல் செயரில்" இருத்துகிறான். பணியாள் "வீல்செயரை"த் தள்ளிக்கொண்டு சென்று வெளிநோயாளர் பகுதியில் நோயாளரைப் பார்வையிடும் டாக்டரின் அறை வாசலில் நிறுத்துகிறான்.

ஆறுமுகத்தாரைத் தொடர்ந்து செல்லம்மா காரிலிருந்து கீழே இறங்குகிறாள். ஒரு கையில் தலையணையும் மறுகையில் ஆறுமுகத்தாருக்குத் தேவையான பொருள்கள் அடங்கிய கிழிந்து போன "கிட்பாக்"கையும் தூக்கிவைத்துக் கொண்டு நிற்கிறாள்.

டாக்டரின் அறை வாசலை ஒட்டினாற்போல சுவரோரமாக வரிசையாக வாங்குகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வாங்குகளின்மேல் நோயாளர் "கியூ" ஒன்று நீண்ட நேரமாக நகராமல் தவங் கிடக்கிறது.

ஆஸ்பத்திரிக்கு வெளியே மதிலை அண்டி நீண்டு செல்லும் பிரதான வீதியில் ஒன்றன்பின் ஒன்றாக இடையறுமல் ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களின் ஒழுங்கற்ற இரைச்சல்—ஆஸ்பத்திரிக்குள்ளே நோயாளர்களை ஏற்றிச்

செல்லும் வண்டிகளின் 'கடமுடா''ச் சத்தம்—நர்ஸுகள், வெளியாரின் நடமாட்டத்தால் எழும் காலணி ஓசைகள்—அங்குமிங்குமாக அடிபட்டுக்கொண்டிருக்கும் பேச்சொலிகள்—நோய் கொடுக்கும் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வாய்விட்டு அரற்றுகின்ற நோயாளிகளின் முனகல்கள்—இத்தியாதி குழப்பங்களுக்கு மத்தியிலும் வெளிநோயாளர் பகுதியிலிருக்கும் அந்த நோயாளிகள் பொறுமையாகப் பல்லைக் கடித்துக்கொண்டு டாக்டரின் தரிசனத்துக்காக காத்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு மத்தியில் அவர்களுக்கெல்லாம் முன்னதாகப் பார்வையிட்டு அனுப்பிவைக்கவேண்டிய அவசர நோயாளியாக ஆறுமுகத்தார் இருந்தாற்போல வந்து சேர்ந்திருப்பதைக் கண்டு அவர்கள் மனம் சலித்துக் கொள்ளுகிறார்கள்.

அந்த அறையிலிருக்கும் டாக்டர் நோயாளர் பற்றிக் கொஞ்சமும் கவலையில்லாமல் அவரோடு வந்து நிற்கும் ''நர்ஸ்'' ஒருத்தியுடன் வெகு சுவாரசியமாக சிரித்துச் சிரித்து பேசிக்கொண்டிருக்கிறார். அந்த நர்ஸ் தன்னை மறந்து அவரோடு மிக நெருக்கமாகக் குழைந்து குழைந்து உருகுகிறாள். பிணியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளர்கள் டாக்டர் தங்களை அழைத்துப் பார்வையிடமாட்டாரா? என்று சதா எதிர்பார்த்து துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆறுமுகத்தாரின் வருகையால் இதுவரையில் அங்கு இல்லாத கொடிய துர்நாற்றமொன்று பரவுகிறது. அந்தத் துர்நாற்றத்தால் தாக்கப்பட்ட நோயாளர்கள் முகத்தைச் சுழித்துக்கொண்டு ஆறுமுகத்தாரை அநுதாபத்தோடு நோக்குகிறார்கள். டாக்டரின் [சுவாசத்தையும் அந்த நாற்றம் தொட்டிருக்க வேண்டும். அவர் மூக்கை ஒரு

தடவை தடவி விட்டுக்கொண்டு வாயிற்பக்கமாகத் திரும்பி ஆறுமுகத்தாரைப் பார்க்கிறார். அந்த நாற்றமோ, ஆறுமுகத்தாரோ இங்கிதமான அந்தச் சூழ்நிலையில் அவர் உள்ளத்தைப் பெரிதாகத் தாக்கவில்லை. அவர்கள் இருவரினதும் கனிவான உரையாடல் ஆனந்தமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நெடுநேரமாகக் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்ததால் ஆறுமுகத்தாருக்கு உண்டான வலி கொஞ்சங் கொஞ்சமாக அதிகரித்தது. அவர் அதைச் சகித்துக்கொள்ள முடியாமல் புழுப்போலத் துடித்துக் கொண்டிருக்கிறார்.

ஆறுமுகத்தாருக்குப் பின்னால் 'வீல்செயரை'ப் பிடித்துக் கொண்டு நிற்கும் பணியாள் ஒழுங்காகச் சுவாசிக்க முடியாமல் இடையிடையே மூக்கைத் தேய்த்து விட்டுக் கொண்டு நிற்கிறான்

மகாலிங்கம் மற்றவர்களுக்குத் தன்னைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்பதால் நாற்றத்தைப் பொருட்படுத்தாதவன்போல எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு நிற்கிறான்.

மகாலிங்கத்தைத் தொடர்ந்து 'டாக்டரின்' அறைக்குள் புகுந்து கொள்வதற்குத் தயாராக இருப்பவள்போல செல்லம்மா அறைவாசலை நோக்கிய வண்ணம் விறைப்போடு நின்றுகொண்டிருக்கிறாள்.

'நர்ஸ்' அறையைவிட்டு வெளியேறுவதாக இல்லை.

நேரம் வளர்ந்து செல்லச் செல்ல ஆறுமுகத்தாருக்கு உபத்திரவம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவர் தன்னைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள முடியாமல் இடையிடையே வாய் போக்கிக் கொள்ள ஆரம்பித்து விட்டார்.

ஆறுமுகத்தார் தங்களுக்கு இடைஞ்சலாக வந்து புகுந் திருக்கிறார் என்று ஆரம்பத்தில் ஆத்திரப்பட்டவர்கள் கூட இப்போது அவர்படும் துயரத்தைக் கண்டு மனத்தில் டாக்டரைத் திட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

அவர்கள் எல்லாருடைய கவனமும் அநுதாபமும் ஆறு முகத்தார்மேல் விழுந்திருப்பது கண்டு—பிறருடைய அநுதா பத்துக்குரியவராக அங்கே அவர் இருப்பதை விரும்பாத மகாலிங்கம், அவரை டாக்டரிடம் சுணங்காமல் காட்டிக் கொண்டு அங்கிருந்து விரைவாகக் கொண்டு போய்விட வேண்டுமென்று அவசரப்படுகிறான்.

டாக்டரின் அறைக்குள்ளே அவன் தலையை நீட்டிப் பார்ப்பதும், பின்னர் சலிப்போடு மறுபுறம் திரும்பி நிற்பது மாக நிலை கொள்ளாமல் தவிக்கிறான்.

'டாக்டரும்' 'நர்ஸும்' வெளியுலகத்தை மறந்து அந்த அறையே இன்பமான தனியுலகமாக எண்ணிச் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரை மணி நேரம் கழிந்திருக்கும். அந்த நர்ஸ் மலர்ந்து சிவந்த முகத்தோடு குறுநகை சிந்திய வண்ணம் அவர்களுக்கே உரித்தான வேகத்தில் பாதணிகள் 'சடக் சடக்'கென்று ஒலியெழுப்ப மான்குட்டி போல நளினமாகத் துள்ளிக்கொண்டு அறையிலிருந்து வெளியே வருகிறாள்.

இதுவரைக் காத்துக்கொண்டு நின்றதில் உள்ளூரப் பொறுமை இழந்துபோன பணியாள், இதுதான் தகுந்த தருணம் என்று நினைத்து ஆறுமுகத்தாரின் 'வீல்செயரை' அறைக்குள்ளே தள்ளிக்கொண்டு போய் நிறுத்துகிறான்.

டாக்டரின் மேலான கவனம் இன்னும் முழுமையாக நோயாளர் பக்கம் திரும்புவதாக இல்லை அவருடைய மேசையின் மேல் கிடக்கும் வளுவளுப்பான வெள்ளைத்தோல் அழகிகளின் அரை நிர்வாண வண்ணப் படங்கள் நிறைந்த

அமெரிக்கச் சஞ்சிகை ஒன்றை ஆவலோடு மேலோட்டமாக அவர் புரட்டிக் கொண்டிருக்கிறார். அந்த "நர்ஸ்" பிரியமாகக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்து விட்டுச் சென்றிருக்கும் சஞ்சிகை அது.

ஆறுமுகத்தாரையோ—அவரை 'வீல்செயரில்' இருத்தி உள்ளே தள்ளிக் கொண்டு வந்து நிற்கும் பணியாளையோ அவர்களைத் தொடர்ந்து அறைக்குள்ளே புகுந்த மகாலிங்கத்தையோ அறைக்குள் புகுந்துவிடப் போகிறவள்போல வாசலில் தலைநீட்டிக்கொண்டு நிற்கும் செல்லம்மாவையோ அவர்களில் யாரும் அங்கே நிற்பதை அறிந்து கொண்டவராகக் காட்டிக் கொள்ளாமல் அலட்சியமாக அவர் இருப்பதில் சில கணங்கள் மௌனமாகக் கரைகின்றன. ஆறுமுகத்தாரின் புண்ணிலிருந்து வீசுகின்ற கொடூரமான துர்நாற்றம் டாக்டரின் சுவாசத்தை இப்பொழுது கடுமையாகத் தாக்கியிருக்க வேண்டும். அவர் முகத்தில் எரிச்சலும் படபடப்பும் வெடிக்க முகத்தைக் கோணிக் கொண்டு பேனாவைக் கையில் எடுக்கிறார். அவர் குணவியல்புகளை அநுபவத்தில் நன்றாக அறிந்து வைத்துக் கொண்டிருக்கும் பணியாள் ஆறுமுகத்தாரை வீல்செயரோடு அவருக்கு அருகே நெருக்கமாகத் தள்ளுகிறான்.

டாக்டர் தலைநிமிர்ந்து ஆறுமுகத்தாரின் முகத்தை ஒரு தடவை பார்த்து "ரிக்கற் இருக்கா?" என்று கேட்டு கையை நீட்டுகிறார்.

மகாலிங்கம் கையில் வைத்துக் கொண்டிருந்த "ரிக்கற்றை" அவசரமாக அவர் மேசையின்மேல் வைக்கிறான்.

"என்ன வருத்தம்...... ஓ, புண்ணா?" என்று சொல்லிக் கொண்டு பேனாவை எடுத்து 'ரிக்கற்'ரில் எழுதுவதற்குக் குனிகிறார். அந்தச் சமயம் செவிகளுக்கு இனிய நாதமாக ஒலிக்கும் பழக்கப்பட்ட அந்தச் செருப்பின் மிடுக்கான சத்த

மும் சதங்கை ஒலிபோன்ற சிரிப்பும் அவருக்கு மிக நெருக்க மாகக் கேட்கிறது. உடனே எழுதுவதை நிறுத்திக்கொண்டு தலையைத் தூக்கிப் பார்க்கிறார்.

அந்த ''நர்ஸ்'' மறுபடியும் ஆர்ப்பாட்டமாகச் சிரித்துக் கொண்டு அறைக்குள் நுழைகிறாள். சோர்ந்து போயிருந்த டாக்டர் திரும்பவும் புத்துணர்வு பெறுகிறார்.

அறைக்குள்ளே நிற்பவர்களை உடனே வெளியில் அனுப்பி வைக்கும் அவசரத்தில் அவளோடு பேசுவதில் தன் முழுக் கவனத்தையும் வைத்துக் கொண்டு ஆறுமுகத்தாரின் ''ரிக் கற்றில்'' இயந்திர கதியில் எதனையோ எழுதி அதை அவரி டம் கொடுத்து ''வாட்லே அட்மிட் பண்ணுங்கோ...போங் கோ'' என்று திரும்பிப் பாராமல் கூறுகிறார்.

அவரிடமிருந்து ''ரிக்கற்றை'' கையில் வாங்கிக் கொள் ளுகிறான். பணியாள் ''வீல்செயரை'' வெளியே தள்ளிக் கொண்டு வந்து ''ரிக்கற்றைப்'' பார்த்து ''பதினெட்டாம் வாட்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுகிறான். அந்த வாட் மேல் மாடியில் இருப்பதால் ஆறுமுகத்தாரை அங்கே கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு அவனுக்கு இன்னு மொரு உதவியாள் தேவைப்படுகிறான்.

''பதினெட்டோ?'' அவனைப் பார்த்துக் கேட்கிறான் மகாலிங்கம்.

அவன் திரும்பவும் ஒரு தடவை ''ரிக்கற்றை'' நன்றாகப் பார்த்துக் கொண்டு ''ஓம், பதினெட்டுத்தான்'' என்று சொல்லிவிட்டு உதவிக்கு ஒருவன் கிடைக்க மாட்டானா என்ற தேடலில் அங்குமிங்குமாகப் பார்வையை ஓடவிட் டான். ''இந்த நோயாளர்ரை வாட் பதினெட்டல்லவே'' என்றான் மகாலிங்கம்.

''அதென்னவோ... எனக்குத் தெரியாது. ஐயா அந்த வாட்டுக்குத்தான் எழுதியிருக்கிறார்.''

"கொஞ்சம் நில்லுங்கோ ...... டாக்டரைக் கேட்டுக் கொண்டு வாறன்" என்று சொல்லிவிட்டு அவனிடம் "ரிக் கற்றை" வாங்கிக் கொண்டு டாக்டரின் அறைக்குட் திடீரென்று புகுந்தான் மகாலிங்கம்.

அவருடைய அநுமதியில்லாமல் அவசரமாக அக்குள்ளே வந்து நிற்கும் அவனைக் கண்டு கண் சிவந்து முறைத்துப் பார்க்கிறார் டாக்டர். அந்த "நர்ஸ்" இன்னும் அவரோடு ஒட்டிக் கொண்டுதான் நிற்கிறாள். அவர்களுக்கு இடைஞ்சலாக உள்ளே வந்து நிற்கும் அவனைக் கண்டு, டாக்டரோடு பேசுவதை அவள் நிறுத்திக்கொண்டு அவனை அலட்சியமாகப் பார்த்து உடனே அவனை வெளியே அனுப்பவேண்டும் என்று டாக்டருக்கு கட்டளை இடுபவள்போல அவர் கண்களுக்குள் தன் பார்வையைச் செலுத்துகிறாள்.

அந்த அறையின் வாசலில் கடமையிலீடுபட்டிருக்க வேண்டிய கங்காணியின் நினைப்பு இப்போதுதான் டாக்டருக்கு வருகிறது. வாசற்பக்கமாகத் திரும்பி அவனைத் தேடுகிறார்.

அவன் இதுவரையும் எங்கோ போயிருந்துவிட்டு இப்போதுதான் அங்கு வந்து சேர்ந்திருக்கிறான்.

"ஏய்......கண்டவை நிண்டவையை எல்லாம் ஏன் உள்ளே விடுகிறாய்?" டாக்டர் அவனைப் பார்த்துச் சீறுகிறார்.

"இல்லை ஸேர்..." என்று சொல்லிக் கொண்டு அவன் தலையைச் சொறிவதற்கிடையில் மகாலிங்கம் அவர்களைப் பற்றிக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் ரிக்கற்றை டாக்டரிடம் நீட்டி "ஸேர்......இவரைப் பதினெட்டாம் வாட்டுக்கா......ஸேர்" என்று அவன் கேட்க வந்ததை முழுவதும் சொல்லி முடிப்பதற்குமுன் டாக்டர் அவனை

இடைமறித்து அவன் சொல்வதெல்லாம் விளங்கிக் கொண்டுவிட்டவர் போல "ஓமோம்... அதுக்கிப்பென்ன?" என்ருர் கோபத்தோடு,

"இல்லே ஸேர்...... அவருக்கு" என்று தயங்கிக்கொண்டு தான் நினேப்பதைத் திரும்பவும் அவன் தெளிவாகச் சொல்வதற்கு முயன்றபோது "ஐ சே... எல்லாம் எனக்குத் தெரியும். நீர் எனக்கொண்டும் சொல்லித் தரவேண்டாம். உம்மட்டை நான் கேட்கிறதெண்டால், நீர் இந்தக் கதிரை யிலெ வந்திருமன்" என்று சொல்லி கைநீட்டி அடிக்காத குறையாக டாக்டர் அவன் மேல் சீறிக்கொண்டு கதிரையை விட்டெழுந்தார்.

"நர்ஸ்" உதட்டை மெல்லக் கடித்தவண்ணம் ஏளன மாக அவனேப் பார்த்துச் சிரிக்கிருள்.

"டாக்டருக்கு" முன் இனிமேலும் நின்று கொண்டிருந் தால் அவர் அவனே அடிப்பதற்கும் தயங்கமாட்டார் போல அவனுக்குத் தோன்றவே "மன்னிக்கவேணும்" என்று சொல்லிக்கொண்டு விருட்டென்று அறையைவிட்டு வெளியே வருகிருன்.

அவன் மனத்திலெழுந்த கொதிப்பைத் தீர்த்துக் கொள்ளவும் முடியாமல் அதே சமயம் தன்னேக் கட்டுப் படுத்திக் கொள்ளவும் இயலாமல் அவன் உடல் படபடக் கிறது.

டாக்டருக்கு அவனுடைய வயது அல்லது அவனேவிட இரண்டொரு வயது குறைவாகத்தானிருக்கும் என்பது துள்ளுகின்ற அவருடைய இளமைக் கோலத்திலிருந்து தெரிகிறது. அவர் பல்கலேக் கழகத்திலிருந்து டாக்டர் படிப்பை முடித்துக்கொண்டு அண்மையில் வெளியேறி யிருக்க வேண்டும். இலங்கைப் பல்கலேக்கழகங்களேயும் அங்கு படிக்கும் பட்டதாரி மாணவர்களேயும் பற்றி அவன் நிறையக் கேள்விப்பட்டிருக்கிருன். "டாக்டருக்கும்" அந்த

நர்ஸுக்கும் இடையிலிருக்கும் நெருக்கம் - டாக்டரின் அலட்சியம் பண்ணுகின்ற கர்வமான போக்கு என்பவற்றை நேரடியாகக் கண்டபிறகுதான் அவன் கேள்விப்பட்டவை களெல்லாம் உண்மையானவைகள் என்று உறுதிப்படுத்திக் கொள்கிறுன். இந்த நாட்டின் உயர்ந்த கல்விப் பீடத்திஞல் உருவாக்கப்படும் புத்தி ஜீவிகளான ''டாக்டர்''களிடம் மரியாதையோ அல்லது மனிதாபிமானமோ கொஞ்சங்கூட இல்லாமல் இருப்பது கண்டு அவன் மனம் குமுறுகிறுன்.

அவன் டாக்டரைத் தேடிக்கொண்டு போன வேகத் தில் திரும்பி வருவது கண்டு உள்ளே என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டு ''ஐயா என்னவாம்! அங்கே 'சும்மா' போறதிலெ வேலேயில்லே'' என்ருன் பணியாள்.

அவன் ''சும்மா''வுக்குக் கொடுத்த அழுத்தத்தில் விசேஷமான ஓர் அர்த்தம் இருக்கிறது என்பதை மகாலிங் கம் உணர்ந்துகொண்டான். அந்தப் பணியாள் தினமும் இப்படி எத்தனேயோ சம்பவங்களேக் கண்டுகண்டு நன்ருக அநுபவப்பட்டுப்போன ஒருவனல்லவா?

பாவம் மகாலிங்கம்! அவன் முகம் கறுத்து இரத்தம் கண்டிப் போய்விட்டது.

அந்தப் பணியாள் அங்கு கடமையிலிந்த இன்னெரு வனே வற்புறுத்தி அழைத்து வந்து, ஆறுமுகத்தாரை ''வீல் செயரிலிருந்து'' தூக்கி ''ஸ்றெச்சரின்'' மேல் கிடத்தி அதை மாடிப்படிவரை தள்ளிச் சென்று பின் ''ஸ்றெச்சரின்'' மேல் தட்டோடு சேர்த்துத் தூக்கிக் கொண்டு படிக்கட்டுகளால் ஏறிப் போய் பதினெட்டாம் வாட்டுக்குள்ளே சேர்த்தான்.

அந்த ''வாட்'' இருதய நோயாளருக்குரியது. ஆறுமுகத் தாருக்கு இருதய வியாதியோடு காலிலும் பெரிதாக ஒரு புண் இருப்பதாக எண்ணி அந்த வாட்டிலுள்ளவர்கள் அநுதாபப்பட்டுக் கொண்டார்கள்.

ஆறுமுகத்தார் ''வாட்டுக்குள்'' கொண்டு வரப்பட்டு கால்மணி நேரந்தான் கழிந்திருக்கும் அந்த வாட்டைப் பார்வையிடும் இருதய நோய்க்கான வைத்திய நிபுணர் - ஓர் உதவி டாக்டர், இரண்டு நர்ஸுகள், இரண்டு கங்காணிகள் பின் தொடர்ந்துவர - அந்த வாட்டுக்குள் பிரவேசித்தார். நோயாளர்கள் ஒவ்வொருவரையும் மிக ஆறுதலாகப் பார்வையிட்டுக்கொண்டு வந்து ஆறுமுகத் தாரின் கட்டிலை அடைந்தார். அந்தக் கட்டிலில் தொங்க விடப்பட்டிருக்கும் ''ரிக்கற்ரை'' வாங்கிப் பார்த்ததும் கண் களை அகலத் திறந்து கொண்டு ஆச்சரியத்தோடு ஆறுமுகத் தாரை உற்று நோக்குகிறார். பின்னர் அவருக்குப் பின்புற மாக நின்றுகொண்டிருக்கும் கங்காணியிடம் திரும்பி ஆறுமுகத்தாரின் புண்ணின் மேல் சுற்றிக் கட்டப்பட்டிருக் கும் வெள்ளைத் துணியை அவிழ்க்குமாறு பணித்தார்.

கங்காணி முடிச்சுகளை மெல்ல நெகிழ்த்தி சுற்றியிருக்கும் துணியை ஒவ்வொரு கட்டுக்களாகக் கழற்றுகிறான். மேற் பாகம் பார்வைக்கு வெள்ளையாகத் தோன்றும் அந்தத் துணி ஒவ்வொரு கட்டுக்களாகக் கழன்று கழன்று போய்க் கொண்டிருக்கும்போது செம்மை படர்ந்து இறுதியில் குருதி தோய்ந்து ஒழுகுவதைக்கண்டு அவருக்குண்டான அருக் குளிப்பை மறைத்துக் கொள்ளுகிறார்.

''சரி...சரி...சுத்திக் கட்டு'' என்று கங்காணியிடம் பணித்துவிட்டு, ''உங்களை இஞ்சை ஆர் அனுப்பினது? நீங்கள் பதினாலாம் வாட்டுக்குப் போங்கோ'' என்று ஆறு முகத்தாருக்குச் சொல்லிக்கொண்டு 'ரிக்கற்ரை' எடுத்து அந்தக் குறிப்பை அதில் எழுதிய பிறகு அடுத்த கட்டிலுக்கு நகர்ந்தார்.

மகாலிங்கம் நடந்தவை எல்லாவற்றையும் 'வாட்டுக்கு' வெளியே விருந்தையில் நின்று கவனித்தான். ஆறுமுகத் தாரை இன்னொரு 'வாட்டில்' கொண்டு போய்ச் சேர்க்க

வேண்டுமென்பது இப்போது உறுதியாகிவிட்டது. அவர் களாக அதைச் செய்வார்கள் என்று விட்டு வைத்தால் இன்று அது நடக்கப் போவதில்லை என்பதும் அவனுக்குத் தெரியும். ஒருவேளை மறுநாள் அந்த வைத்திய நிபுணர் 'வாட்' பார்க்க வருவதற்கு முன்னர்தான் ஆறுமுகத்தாரின் இடமாற்றம் நடைபெறக்கூடும். அதனால் அவசரமாக அவருக்குச் செய்யப்பட வேண்டிய சத்திர சிகிச்சை உடனே நடக்காமல் தடைப்படுமல்லவா?

மகாலிங்கம் மாடியிலிருந்து விரைந்து கீழே இறங்கி வெளிநோயாளர் பகுதிக்கு ஓடினான். ஆறுமுகத்தாரை முதலில் அந்த வாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்த பணி யாளைத் தேடினான். அவன் அங்கு காணப்படவில்லை. 'வீல் செயர்' தள்ளும் கடமையில் ஈடுபட்டிருக்கும் இன்னொரு பணியாளை அவன் மெல்ல அணுகினான்.

''இப்ப ஏலாது, பன்னிரண்டு மணியாப் போச்சு. எல்லா ரும் போவிட்டினம். நான் தனியேக் கொண்டுவரமுடியாது'' என்று அந்தப் பணியாள் மறுக்கிறான்.

''எப்படியாவது கொண்டு போக வேணும். கொஞ்சம் கடுமையான வருத்தம். உதவிக்கு வேணுமெண்டால் நான் நிக்கிறன்'' என்று மகாலிங்கம் மன்றாடுகிறான்.

''சச்ச...அது சரியில்லை'' என்று அவன் தட்டிக் கழிக்கப் பார்க்கிறான். ''ஆரையாவது ஒராளைத் தேடிப் பிடிச்சுக் கூட்டிக் கொண்டு போவோம்'' என்று கேட்கிறான் மகாலிங்கம்.

''ஆர் இப்ப வரப்போறான்? இப்பேலாது போங்கோ.''

அவன் உறுதியாக மறுக்கிறான். இனிமேல் என்ன சமாதானம் சொல்லி இரந்தழைத்தாலும் அவன் வரப் போவதில்லை என்பது மகாலிங்கத்துக்குத் தீர்மானமாகத் தெரிகிறது. ஆறுமுகத்தாரை எப்படியும் பதினொலாம்

'வாட்டுக்கு' இப்போது கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அதற்கு இப்போது என்ன செய்யலாம்? மகாலிங்கம் பதட்டப்படாமல் சில நிமிடங்கள் நிதானமாக நின்று சிந்தித்தான். அந்தப் பணியாளை இசைய வைப்பதற்கு வேறு வழி எதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. இந்தச் சங்கடமான நிலைமையிலிருந்து விடுபட்டுக் காரியம் சாதிக்க வேண்டுமானால் அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு என்ற முடிவுக்கு வந்தான். இரண்டு ரூபா நோட்டொன்றை எடுத்து பணியாளின் கைக்குள் இரகசியமாக வைத்தான்.

அவன் அந்தப் பணத்தைக் கைக்குள்ளே பொத்தி எடுத்துக் கொண்டு "இதென்ன வேலை தம்பி? நீங்கள் சொன்னாலும் கேக்கறியளில்லை. சரி போங்கோ...நான் இன்னொராளைப் பிடிச்சுக்கொண்டு வாறன்'' என்று சொல்லி மகாலிங்கத்தை அனுப்பி வைத்தான்.

மகாலிங்கம் வெற்றிப் பெருமிதத்தோடு படிக்கட்டுக்களைத் தாண்டி அந்த வாட்டில் போய் மிதக்க, அந்தப் பணியாள் இன்னொருவனின் துணையோடு 'ஸ்றெச்சரின்' மேல்தட்டைத் தூக்கிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான்.

## 9

மறுநாள் அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு பஸ் வண்டியைப் பிடித்து ஒன்பது மணிக்கெல்லாம் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தான் மகாலிங்கம். முதல் நாள் அவனுக்கேற்பட்ட அநுபவங்கள் போல இன்றைக்கும் நிகழாமல் இருக்கவேண்டும் என்ற முன்னெச்சரிக்கையோடுதான் காலந்தாழ்த்தாமல் அவன் அங்கு வந்து சேர்ந்தான்.

நேற்றுப் பகல் பொழுதில் பாதிப் பொழுதுக்குமேல் ஆறுமுகத்தார் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய

பதின்னுலாம் 'வாட்டில்' அவரைக் கொண்டுவந்து சேர்க்கும் அலைச்சலில் கழிந்திருந்தது. அதன் பின்னர்தான் 'சேர்ஜன்' கருணைநாயகத்தைச் சந்திக்க வேண்டுமென்று அந்த ஆஸ்பத்திரி எங்கும் அவரைத் தேடி அலைந்தான். 'சேர்ஜனையோ' அல்லது கங்காணி சட்டநாதனையோ அவனுல் அன்று சந்திக்க முடியாமல் போயிற்று. வேறு யாரைச் சந்தித்து இதுபற்றிப் பேசலாம் என்பதும் அவனுக்குப் புரியவில்லை. ஆறுமுகத்தார் இன்னெருவருடைய உதவியில்லாமல் ஆஸ்பத்திரியில் தனித்திருந்து அவருடைய தேவைகளை முடித்துக்கொள்ளக் கூடிய நிலையில் இப்போது இல்லை. கட்டிலை விட்டுக் கீழே இறங்கி நிலத்தில் பாதம் பதித்து நடக்க இயலாதவராகத்தான் அவர் இப்போதிருக்கிருர். அவருக்குத் துணையாக மகாலிங்கம் ஆஸ்பத்திரியில் தங்கி நிற்பதற்கு அவன் எடுத்த முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

ஒழுங்கான வழியில் சென்று நேர்மையாகக் காரியங்களைச் சாதிக்கலாம் என்று எண்ணுவதெல்லாம் வெறும் பகற்கனவு. செல்வாக்கு, அறிமுகம் என்ற குறுகிய வழியில் இறங்கினுல்தான் சுலபமாகக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம்.

மகாலிங்கம் ஒரு கந்தோரில் சதாரண ஒரு கிளாக்காக இருந்தாற்கூட கந்தோருக்கு வருவோர் போவோருடன் பழகி தனக்கென்று ஒரு அறிமுக வட்டத்தை இதுவரை சேர்த்திருப்பான். பாவம் அவனொரு சதாரண பள்ளிக்கூட "வாத்தியார்." பள்ளிப்பிள்ளைகளும், அவனைப்போன்ற வாத்திமாருந்தான் அவன் அறிந்த கூட்டம்.

இன்று எப்படியும் "சேர்ஜனை" சந்தித்தாக வேண்டும். நடுப்பகல் பன்னிரண்டு மணிக்குத்தான் வெளியார் ஆஸ்பத்திரிக்குள் அநுமதிப்பார்கள். அந்த நேரத்தில் "சேர்ஜன்" நிச்சயமாக வெளியே போயிருப்பார். அதுவரை பொறுத்திருக்காமல் இப்போது உள்ளே போவதற்கு என்ன மார்க்கம்?

ஆஸ்பத்திரியின் இரண்டு பிரதான வாசல்களில் கிழக்குப்புற வாசலுக்கூடாகச் சென்று சுலபமாகப் பதினொலாம் ''வாட்டை'' அடையலாம். அந்த வாசலுக்குச் சில யார் தூரம் உள்ளே தள்ளி அந்தப் பாதையைத் தடை செய்து துலாப்போல மேலே எழுந்து கீழே வரத் தகுந்த முறையில் ஒரு நீண்ட கம்பை வைத்து, அதற்கொரு காவலாளனையையும் நியமித்திருக்கிறார்கள். அவன் இலகுவில் மகாலிங்கத்தை உள்ளே அநுமதிக்கப் போவதில்லை. அவனுடைய தடையைத் தாண்டுவதற்கும் வழியில்லை. இப்போது என்ன செய்யலாம்? என்று யோசித்துக் கொண்டு நின்றான் மகாலிங்கம்.

அவனைப் போலவே இன்னும் இரண்டு வாலிபர்கள் வெளியிலிருந்து அங்கு வந்து சேர்ந்தார்கள். இருவரும் தலை வளர்த்து 'மொட்' உடை அணிந்திருக்கிறார்கள். கைகளில் ''சிகரெட்'' புகைந்து கொண்டிருக்கிறது. அவர்கள் செல்லும் பாதைக்குக் குறுக்கே தடை இருப்பதும்அதற்குக் காவலாக ஒருவன் குந்தி இருக்கிறான் என்பதும் அவர்கள் கண்களில் பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் இருவரும் தங்களுக்குள் உரையாடிக் கொண்டு உள்ளே நடந்தார்கள். அவர்களுள் ஒருவன் காவற்காரனைப் பார்த்து ஒரு தடவை சிரித்துத் தலையாட்டிவிட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

அவர்களைப் பார்த்தபோது மகாலிங்கத்துக்கும் ஒரு ''சிகரெற்'' பற்றிக் கொள்ள வேண்டும் என்ற உந்தல் அவன் மனதில் உண்டாகிறது. ஒரு சிகரெற்றை எடுத்து மூட்டிக் கொண்டு காவற்காரனை மெல்ல நெருங்கினான். காவற்காரன் மகாலிங்கம் நெருங்கி வருவது கண்டு அவனைக் கவனிக்காதவன்போல விறைப்பாக இருந்து கொண்டான்.

''ஒருக்கால் அவசரமாக உள்ளே போக வேண்டியிருக்குது.''

''இப்ப முடியாது'' உயர் அதிகாரி ஒருவன் பேசுவது போல அலட்சியமாக அவன் சொல்கிறான்.

''வேரை ஒண்டுக்குமல்ல, டாக்டரைக் காணவேணும்''

அவன் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரிய இல்லை. முகத்தை கடுமையாக்கிக் கொண்டு மகாலிங்கத்தின் பக்கம் திரும்பாமல் இருக்கிறுன்.

இரந்து மன்ருடிக் கேட்டாலும் அவன் இசையப் போவ தில்லை. அவன் அநுமதிக்காது விட்டால் நாளையும் இதே கதிதானே!

மகாலிங்கம் தான் நின்று கொண்டிருக்கும் இடத்தி லிருந்து அசையவில்லை. 'இவனுக்கும் ஏதாவது கொடுத்து தான் காரியம் பார்க்க வேணும்' என்று நினைத்துக் கொண் டான். அப்போது அவன் கையில் எரிந்து கொண்டிருக்கும் 'சிகரெற்' திடீரென்று அவனுக்கு ஒரு 'ஐடியாவைத்' தோற்றுவிக்கிறது.

மகாலிங்கம் சகசமான பாவத்தை அவனோடு வலிந்து வருவித்துக் கொண்டு ''சிகரெற்'' ஒன்றைக் கையில் எடுத்து ''இந்தாரும் பத்துமன்...'' என்று நீட்டுகிறுன்.

காவற்காரன் ஆவலோடு அதை வாங்கி உதட்டில் வைத்துக் கொள்கிறுன் மகாலிங்கம் எரிந்து கொண்டிருக் கும் 'சிகரெற்ரை' அவனிடம் கொடுத்து அதை மூட்டு கிறுன்.

காவற்காரன் சுவாரசியமாகப் புகையை உள்ளே இழுத் திழுத்து வாயாலும் மூக்காலும் ஊதித் தள்ளுகிறுன்.

இதுதான் தகுந்த தருணம் என்று நினைத்துக் கொண்டு ''ஐஞ்சு நிமிசத்திலே வந்திடுறன்'' என்று சொல்லிவிட்டு அவனைக் கவனிக்காமல் மகாலிங்கம் உள்ளே நடந்தான்.

காவற்காரன் வாய் திறக்கவில்லை. அவனுக்கு மகா லிங்கம் கொடுத்துதவிய ''சிகரெற்'' புகை தரும் மயக்கம்.

“ஓ......சிகரெற்ரே, நீ வாழ்க! ஒரு மனிதனுக்கில்லாத மதிப்பு உனக்கிருக்கிறது. மனிதன் சாதிக்க முடியாத காரியத்தைக்கூட நீ சாதித்து விடுகிருய்.”

புகை அதிகப்பட்டு நெஞ்சு வலிக்கும் சமயங்களில் தன்னை நொந்து அவன் சபிக்கும் “சிகரற்றை” இன்று மனமார வாழ்த்திக் கொண்டு, பதினுலாம் வாட்டுக் குள்ளே புகுந்து ஆறுமுகத்தாரின் கட்டிலருகே வந்து நின்ருன்.

ஆறுமுகத்தார் வால் அறுந்த பல்லிபோல வேதனை தாங்க முடியாமல் துடியாய்த் துடித்துக் கொண்டு கிடக்கிருர்.

“சேர்ஜன்” கருணை நாயகம் நோயாளர்களைப் பார்வை யிடுவதற்காக அன்று அந்த “வாட்டு”க்கு வரவேயில்லை. என்பதை அவன் அறிந்து கொண்டான்.

மகாலிங்கம் “சேர்ஜனை” அவருடைய பிரத்தியேக அறையிற் சென்று பார்த்தான். அறைக் கதவு மூடிக் கிடக் கிறது. அவர் வேறெங்காவது இருக்கக்கூடுமென்று நினைத்துக் கொண்டு அங்கு பல இடங்களிலும் தேடிப் பார்த்தான்.

தற்செயலாக கங்காணி சட்டநாதனை அவன் கண்டு கொண்டான்.

சட்டநாதன் அவனை எதிர் எதிரே சந்தித்த போதும் முன்னர் அறிமுகமான ஒருவனுகக் காட்டிக் கொள்ளாமல் தன்பாட்டில் அவனைக் கடந்து போய்க்கொண்டிருந்தான்.

மகாலிங்கத்தைப்போல எத்தனை பேரைத் தினமும் அவன் சந்திக்கிருன். அவர்களையெல்லாம் சந்தித்த மறு நாள் அறிந்தவனுகக் காட்டிக் கொள்வதில்தான் அவனுக்கு எவ்வளவு சிரமம். அவர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொள்வதும் அதில் தனக்குரிய பங்கை எடுத்துக்கொண்டு மிகுதியைச் “சேர்ஜனிடம்” ஒப்படைப்பதுந்தான்

அவனுடைய கடமை. வைத்தியம் பார்ப்பது "சேர்ஜனே" ஒழிய அவனல்லவே. சட்டநாதன் தன்னைக் கண்டும் காணுதவன் போலச் செல்வதை அவதானித்தபோது மகாலிங்கத்துக்குப் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது. அவன் பாசாங்கு செய்கிறான் என்பதை உணர்ந்தும் மகாலிங்கம் உதாசீனமாக இருந்து விடமுடியுமா? மகாலிங்கம் தானகவே வலிந்து சென்று அவனோடு பேசினான்.

"என்னைத் தெரியயில்லையா?"

"ஆ......நீரே தம்பி! ஐயாயிட்டை எல்லாம் சொல்லியிருக்கிறன். ஐயா அவசரமாக இண்டைக்குக் கொழும்புக்குப் போருர். திரும்பி வந்ததும் முதல் உம்முடைய ஆளின்ரை விசயந்தான் நடக்கும்"

அவனுடன் சாவதானமாக நின்று பேசுவதற்குக்கூட அவனுக்கு முடியவில்லை. அவன் சொல்லிக்கொண்டு நடந்துபோய்க் கொண்டிருக்க, மகாலிங்கம் அவன் பின்னுல் இழுபட்டுக் கொண்டிருந்தான்.

மகாலிங்கத்துக்குத் தயாராகவே அவன் பதில் வைத்திருந்தவன்போல படபடென்று சொல்லிக் கொண்டு அதன் பிறகு அவனோடு பேசுவதற்கு ஒன்றுமில்லை என்ற மாதிரி நடந்துபோய்க் கொண்டிருந்தான்.

மகாலிங்கம் சில அடிதூரம் அவனைப் பின் தொடர்ந்து போய்ப் பார்த்தான். அவன் அதற்குமேல் எதுவுமே பேசாமல் போய்க்கொண்டிருப்பதைக் கண்டு ஏமாற்றத்தோடு மேலும் தொடராமல் தரித்து நின்முன். இப்போது என்ன செய்வது என்று புரியாத குழப்பத்தில் அவனுக்குத் தலை சுற்றியது. கண்களைத் திறந்துகொண்டு கிணற்றுக்குள் குதித்தவன்போல இலஞ்ச ஊழலுக்கு மனமறிந்து பலியான அவன், ஊழலுக்குள்ளும் ஏமாற்றுக்கு ஆளானதை எண்ணி நெஞ்சம் பொருமினான்.

ஆறுமுகத்தாருக்கு உதவியாக ஆஸ்பத்திரியில் தங்கி நிற்பதற்கு அன்றும் அவன் முயற்சித்தான். அறுவை சிகிச்சை முடிந்த பிறகுதான் அவருக்கு உதவியாக இன்னொருவர் நிற்பதற்கு அனுமதிக்க முடியும் என்று கூறி அநுமதி வழங்க மறுத்துவிட்டார்கள்.

## 10

மகாலிங்கம் பாடசாலைக்கு லீவுக் கடிதம் அனுப்பி வைத்துவிட்டு ஓய்வில்லாமல் அலைந்து கொண்டிருந்தான். காலையில் எழுந்து பெரியாஸ்பத்திரிக்குப் பிரயாணம் செய்வதும், பின்னர் மாலையில் வீடு வந்து சேருவதுமாக அவனுடைய காலம் கழிந்து கொண்டிருந்தது. இதனால் அவன் பார்க்க வேண்டிய சொந்தக் காரியங்களெல்லாம் நடைபெறாமல் ஸ்தம்பித்துப் போய்விட்டன. வீட்டு விஷயங்களைக் கவனிக்காமல் அவன் அலைந்து திரிவதால் வீட்டிலுள்ளவர்களுக்கும் அவன்மேல் அதிருப்தி உண்டாகிக் கொண்டிருக்கிறது.

மகாலிங்கம் மாலை ஏழுமணி போலத்தான் ஆஸ்பத்திரியிலிருந்து அன்று வீடு வந்து சேர்ந்தான். அவன் வந்ததும் வராததுமாக அவனுடைய தாய் அவசரமாக அவனைத் தேடிக்கொண்டு பக்கத்தில் இருக்கும் அவன் வீட்டுக்கு வந்தாள். அவளுடைய அவசரத்தைக் கண்டு ஏதோ முக்கியமான விஷயம் இருக்கவேண்டும் என்று அவன் ஊகித்துக் கொண்டான். அவன் தாய் அங்கு வந்து சேர்ந்ததும் அவன் மனைவி அவளைப் பார்த்துச் சொன்னாள்: "மாமி, இவர் இப்பதான் வந்தவர். நான் உங்களுக்குச் சொல்லுகிறதுக்கு வாறதுக்கிடையிலெ நீங்கள் வந்து விட்டியள்."

“தம்பி வந்ததை நான் கண்டனுன் பிள்ளை. அதுதான் அவக்கெண்டு வந்திட்டன்.”

“உங்களை வந்திட்டுதோ......வந்திட்டுதோ எண்டு மாமி இதுக்கிடையிலெ மூண்டுதரம் இஞ்செ வந்துட்டா” என்ருள் மகாலிங்கத்தைப் பார்த்து அவன் மனைவி.

“அம்மாவின்ரை குணம் நெடுக உப்பிடித்தான். நான் வெளியாலெ வெளிக்கிட்டுப் போனுல் திரும்பி வரும்வரையும் அலட்டிக் கொண்டிருப்பா.”

“ஓ, நீங்கள் இப்பவும் சின்னப் பாப்பா. அதுதான் மாமி உங்களைப் பின்னுலெ கலைச்சுக் கொண்டு திரியிரு” என்று நையாண்டி பண்ணிஞள் மனைவி.

“நான் கிழவனுனுலும் அம்மாவுக்குப் பாப்பாதான். அது இருக்கட்டும்...... அம்மா என்னெணை...... ஏன் தேடினனீ?” என்று தாயிடம் கேட்டான் அவன்.

அவள் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொல்ல வந்த விஷயத்தைப் பீடிகையோடு ஆரம்பிப்பதற்குள் வெளியே நின்று “அம்மா.....அம்மா” என்று கூப்பிட்டான், மகாலிங்கத்தின் தம்பி சிவலிங்கம்.

“ஏன்?” என்று அவள் குரல் கொடுப்பதற்குமுன் அவனும் அங்கு வந்து சேர்ந்துவிட்டது கண்டு, “குமர்ப் பிள்ளையளைத் தனிய விட்டுவிட்டு நீ இஞ்சை வந்து விட்டாய்” என்ருள் அவனைப் பார்த்து.

“என்ன பயம்? நாங்கள் கதைக்கிறது அவையளுக்குக் காதிலெ விழும். பிறகொரு பயமே!” என்ருன் அவன்.

“உனக்குத்தானே பயமெண்டால் என்னெண்டு தெரியாது. தலைதெறிச்ச குணம். நான் கொண்ணனேடை கொஞ்சம் கதைக்க வேணுமடா.”

“அவனிருக்கட்டும். நீ விஷயத்தைச் சொல்லம்மா!” மகாலிங்கம் தாயைத் துரிதப்படுத்திஞன்.

"தம்பி, தங்கச்சியின்ரை விஷயமாக நீ போய்விட்டு வந்த இடத்தைப் பற்றி இப்ப ஏதும் கேள்விப்பட்டியே!"

"இல்லை. அவையள் என்னவாம்?"

"ஒரு கிழமைக்குள்ளேயெல்லெ வந்து முடிவு சொல்லுறன் எண்டிட்டு வந்தனீ......போனியே?"

"எனக்கெங்கே நேரம்! ஆஸ்பத்திரியும் நானுமாக அலைஞ்சு திரியிறன்."

"அவையள் வேறை இடத்திலெ ஓமெண்டு சொல்லிப் போட்டினமாம்."

"வாறனெண்டு சொன்னனான். அதுக்கிடையிலே..."

"நீங்கள் பெரியையா......பெரியையா எண்டு திரியுங்கோ; வீட்டுச் சங்கதிகளெல்லாம் உப்பிடித்தான் போகும்." என்றான் சிவலிங்கம் எரிச்சலோடு.

"எடே, அவரை வேறை ஆர் பாக்கிறது? நாங்கள் தானே பாக்கவேணும்?" என்றான் மகாலிங்கம்.

"அந்த எண்ணம் அவருக்குமல்லோ இருக்கவேணும் தம்பியின்ரை பிள்ளையள்—தகப்பனில்லாததுகள் எண்டு அவர் நினைச்சு நடந்தவரே!"

"எடே தம்பி! உப்பிடி நீ பேசாதெ! எங்கடை தகப்பன் வேறை; அவர் வேறையெண்டு நினைக்கக் கூடாது."

"ஐயா இக்கேக்கேயே, ஐயாவுக்கும் தனக்கும் பங்கான காணியிலெ எல்லைவேலி அரக்கி நிலம்பிடிச்ச பெரிய தகப்பன்அவர்."என்றான் சிவலிங்கம்.

கதை நீண்டு கொண்டு போவதை விரும்பாத அவர்களுடைய தாய் இடையிலே குறுக்கிட்டாள்.

"சரி......சரி. பழங்கதைகளைச் சும்மா கிண்டாமல் விட்டிட்டு, நடக்கிற காரியத்தைப் பாருங்கோ."

''இல்லை அம்மா, அவற்ரை சொத்தெடுக்கப் போறது ஆரோ; அலையிறது மட்டும் நாங்களே?''

''இல்லையடா தம்பி... சொத்துத்தான் கிடையாவிட்டாலும் எங்களுக்கும் ஒரு கடமை இருக்குது.''

''நீங்கள் கடமை கடமை என்று சொல்லிக் கொண்டு திரியுங்கோ! நான் தோட்டத்துக்குள்ளே கிடந்து சாகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு அவன் தேம்பத் தொடங்கி விட்டான்.

மகாலிங்கத்தின் மனைவி அதுவரை எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்து விட்டு, சிவலிங்கம் அழுவதைக் கண்டு மனம் பொறுக்காமல் கணவனிடம் சொன்னாள்.'' தம்பி சொல்லுறதும் சரிதான். தோட்டஞ் செய்ய வேணுமெண்டு சொல்லிக் கொண்டு ஊரோடை மாற்றம் எடுத்துக் கொண்டு வந்தியள். இப்பென்னெண்டால் தோட்டஞ் செய்தபாடுமில்லை. பள்ளிக்குடத்திலெ ஒழுங்காப் படிப்பிச்ச பாடுமில்லை''.

''சரி...சரி நீயும் சேர்ந்து என்னிலெ குற்றஞ் சாட்டாதே! உன்ரை தகப்பன் இந்த நிலையிலெ இருந்தால் உனக்கும் தெரியும்!''

''மாமா எங்களைக் கவனிக்காமல் விடயில்லை, அவராக இருந்தால் நாங்கள் பார்க்கத்தான் வேணும்'' என்றான் சிவலிங்கம்.

''உன்னோடை கதைக்கேலாது. நான் போற இடத்துக்கு குழந்தைப் பிள்ளை மாதிரி பின்னாலே வந்திடுவாய்'' என்று சிவலிங்கத்தைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு, '' வா போவோம், வீட்டிலெ குமர்ப்பிள்ளையள் தனிய இருக்குது கள்,''என்று அவனையும் அழைத்துக் கொண்டு, ''நான் வாற மேனை'' என்று மகாலிங்கத்திடம் சொல்லிக்கொண்டு புறப் பட்டாள் அவள் தாய்.

"நான் இப்ப ஒருக்கால் போவிட்டு வாறனம்மா" என்று போய்க் கொண்டிருக்கும் அவள் காதில் விழும்படியாகச் சொன்னுன் மகாலிங்கம்.

"இனிப் போயென்ன...?" தன் மனத்திலுள்ள அதிருப் தியை வெளியிட்டுவிட்டு அவள் நடந்தாள்.

அவள் அதிருப்தியோடு சொன்ன வார்த்தைகள் மகா லிங்கத்தின் நெஞ்சைச் சுட்டன. தாயின் மனம் நோகத் தகுந்ததாக நடக்கின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதை எண்ணி மகாலிங்கம் மனம் வருந்தினுன்.

அவனுடைய தாயின் குணம் அவனுக்கு நன்ருகத் தெரியும். அவள் பிள்ளைகளைக் கண்டித்து அதிகம் பேசமாட் டாள். குடும்பத்தில் மூத்த பிள்ளை என்பதால் அவனுக்குத் தானும் கட்டுப் பட்டவள் என்ற எண்ணத்தில் மகாலிங் கத்தை மதித்து நடப்பவள். அவள், அவன் மேல் குறைப் பட்டுக் கொள்ளாமல் மிகப் பொறுப்போடுதான் மகாலிங் கம் குடும்பக் காரியங்களைக் கவனித்து வருகிருன். அவள் இன்று குறை சொல்லும் படியாக நேர்ந்து விட்டதை எண்ணி அவன் மிக வருந்தினுன். அவளுடைய குற்றச் சாட்டு அவனுக்கு நியாயமாகவே படுகிறது. இந்த காலத் தில் ஒரு பெண்ணுக்கு வரன் தேடுவதென்பது சாதாரண ஒரு காரியமா? கையில் பொருளில்லாதவர்களுக்குப் பொது வாக இந்த உலகத்தில் மதிப்பில்லை. குடும்பக் கௌரவத்தை உறுதிப் படுத்தும் வயதில் முதிர்ந்தவர்களும் இந்தக் குடும்பத்தில் இல்லை. இந்த நிலையில் இரண்டு பெண் களைக் கரை சேர்க்க வேண்டிய பொறுப்பிருக்கிறது. கிடைக் கின்ற வாய்ப்பை வழுக விடாவல் மிக எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டியது அவனுடைய பொறுப்பு. கடந்த சில நாட்களாக உண்டான அலைச்சலினுல்தான் இப்படி ஏமாற்றமான ஒரு நிலைமை உருவாகி விட்டது. இப்போது இதற்கு என்ன செய்யலாம்? என்று மகாலிங்கம் சற்று நேரமிருந்து சிந்தித்தான்.

அவன் உள்ளம் தாக்கப்பட்டு விட்டதை அவன் மனைவி உணர்ந்து கொண்டாள். அவனை இப்படியே விட்டு வைத்தால் அவன் சாப்பிடாமல் போய் படுத்து விடுவான் என்பதும் அவளுக்குத் தெரியும். அவன் தொடர்ந்து மன வருத்தப்பட்டுக் கொண்டிருக்காமல் எழுந்து சாப்பிடச் செய்ய வேண்டுமென்று அவள் கருதினாள்.

''எழும்புங்கோ, சும்மா யோசிச்சு உங்களைப் பழுதாக்க வேண்டாம். எல்லாம் விதியின்படிதான் நடக்கும்'' என்று அவனைப் பார்த்துச் சொன்னாள்.

''எல்லாம் விதியெண்டு சொல்லிப் போட்டு, நாங்கள் கையைக் கட்டிக் கொண்டிருந்தால் என்ன காரியம் நடக்கும்? எல்லாத்துக்கும் நாங்களும் சரியான முயற்சி எடுக்கவேணும்.''

''நீங்களென்ன பேசமலே இருக்கிறியள்! எல்லாம் நடக்கவேண்டிய நேரத்திலெ நடக்கும்......நீங்கள் எழும்பி முகத்தைக் கழுவுங்கோ. நான் சாப்பாட்டை அள்ளுறன்.''

''சாப்பாடு இப்ப வேண்டாம். நான் ஒருக்கால் வெளியிலெ போவிட்டு வரவேணும்.'' என்று சொல்லிக் கொண்டு சவர்க்காரமும் வாளியும் எடுத்துக்கொண்டு கிணற்றுப் பக்கமாகச் சென்றான்.

அவன் திரும்பி வந்து உடுப்பு மாற்றிப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவன் மனைவி ஒரு கிளாஸில் தேநீர் எடுத்து வந்தாள். அவன் அதை வாங்கிக் குடித்துவிட்டு, சயிக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பினான்.

ஒரு மணி நேரத்தின் பின்னர் திரும்பவும் அவன் வீடு வந்து சேர்ந்தான். அவன் முகத்தைக் கண்டு, போன காரியம் சரிவரவில்லை என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். மாமியார் சொன்னது உண்மையாகப் போய் விட்டது என்பதை இப்போது அறிந்து உள்ளூர அவள் வேதனைப்பட்டாள். மகாலிங்கம் இப்போதுள்ள மனநிலையில்

அவனோடு அதிகம் பேசினால் இறுதியில் அது குழப்பத்தில் தான் முடியுமென்பது அவளுக்குத் தெரியும். அவன் இன்று சாப்பிடாமல் படுத்துவிடக்கூடாது என்று இப்போது அவள் உள்ளம் ஏங்குகிறது. அவனை எப்படியும் சாப்பிட வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், "வாருங்கோவன், பசிக்கிது சாப்பிடுவம்" என்று அழைத்தாள்.

"உனக்கெத்தனை நாட் சொல்றது, என்னைக் காத்திருக்க வேண்டாமெண்டு, நான் சாப்பாட்டு நேரத்திலெ ஒழுங்காக வீட்டிலெ நிக்கிறனே! சமைச்சு முடிஞ்சால் நீ சாப்பிடுகிறது. வீணாகப் பட்டினி கிடந்து சாகிறாய்" என்று பொரிந்து தள்ளினான்.

"சரி இப்ப வாருங்கோவன் சாப்பிடுவம்."

"எனக்கு வேண்டாம் நீ போய்ச் சாப்பிடு."

"வாருங்கோ......அத்தான்."

"சொன்னால் கேள். வீணாக என்னை அலட்டாதே!"

இனிமேல் அவனோடு பேசுவதில் பயனில்லை. ஆக்கினை பண்ணினால் சச்சரவில்தான் கொண்டு போய் விடும். இன்று இருவரும் பட்டினிதான் என்ற முடிவுக்கு அவள் வந்தாள்.

அவன் தானாகவே படுக்கையை எடுத்துப் போட்டுக் கொண்டு அதில் போய் விழுந்தான்.

## 11

ஆஸ்பத்திரிகளில் அதிகாலை ஐந்து மணிமுதல் ஆறு மணி வரையுள்ள காலம் பார்வையாளர்களை அநுமதிப்ப தற்கு உறுதிப்படுத்தப் படாத நேரம். இந்த நேரத்தில் அதிகமான பார்வையாளர்கள் அங்கு வந்து போவதில்லை. ஆஸ்பத்திரிக்கு அண்மையில் இருப்பவர்கள்தான் அந்த நேரத்தில் அங்கு வந்து—தங்கள் உறவினர்களைப் பார்த்து—

சிலர் காலை உணவைக் கொண்டுவந்து கொடுத்துப் போவதுண்டு. அவர்களைத் தடுக்காமல் உள்ளே போக அநுமதிப்பதுதான் அங்குள்ள வழக்கம். இந்தச் சலுகையை மிகத்தூர இடங்களில் வசிக்கின்றவர்களால் அநுபவிக்க முடிவதில்லை. விடியற்சாமம் எழுந்து பல மைல் தூரம் பிரயாணம் செய்து, அந்த நேரத்தில் அங்கு வந்து சேர் வதற்கு அவர்களால் முடியுமா?

ஆஸ்பத்திரியில் தங்கி இருக்கும் தூர இடங்களைச் சேர்ந்த நோயாளர்கள், நடுப்பகலிலும், மாலையிலுந்தான் தங்கள் உறவினர்களை எதிர்பார்ப்பார்கள். ஆறுமுகத்தார் அப்படி அதிகம் எதிர்பார்ப்பதற்கும், அவருக்கென்று நெருக்கமான உறவினர்கள் யார் இருக்கிறார்கள்?

ஆனால் இருள் முற்றும் கரையாத அந்தப் புலரிக் காலையில் பதினாலாம் வாட்டுக்குள்ளே நுழைந்து ஆறுமுகத் தாரின் கட்டிலருகே முத்தன் வந்து நிற்கிறான். அந்த வாட்டிலிருக்கும் நோயாளிகளில் பலர் இன்னும் உறக்கத் திலிருந்து விடுபடவில்லை. ஆறுமுகத்தாரும் உறங்கிக் கொண்டுதான் இருக்கிறார். அவர் இப்போது இருக்கும் கோலத்தில் இவர்தான் ஆறுமுகத்தார் என்று முதல் பார்வையில் அவனால் நம்பமுடியவில்லை. மழுங்க வழித்து கண்ணாடிபோல எப்போதும் வழுவழுப்பாகத் தோன்றும் அவர் முகத்தில் உரோமங்கள் வளர்ந்து குத்திக்கொண்டு நிற்கின்றன. கீழ்வண்டிதள்ளி தளதளத்துக் கொண்டி ருக்கும் அவர் உடல் நீர் வடிந்து சுருக்கங்கள் விழுந்து எலும்புந் தோலுமாகத் தோன்றுகின்றது. ''பாவம் இவருக்கும் இப்படி ஒரு கோலமா?''என்று எண்ணி அவன் பரிதாபப்பட்டுக் கொள்ளுகிறான்.

இரவெல்லாம் வேதனையினால் உறக்கமின்றித் துடித்த ஆறுமுகத்தார் வைகறையின் இளங்காற்றில் சற்று அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறார். ''அவரை எழுப்பு வோமா? விடுவோமா'' என்று சில நொடிகள் தடுமாறிக் கொண்டு நிற்கிறான் முத்தன். பார்வையாளர்களை வாட்டி

லிருந்து வெளியே அனுப்புவதற்கு முன்னர், அவரைப் பார்த்து அவன் பேசியாக வேண்டும்! அவரை எப்படியும் எழுப்ப வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, "ஐயா...... ஐயா" என மெல்ல அழைக்கிறன், ஆறுமுகத்தார் அவன் அழைப்பைக் கேட்டு கண் திறப்பதாக இல்லை. சிறிது நேரம் தாமதித்து நின்று மறுபடியும் குரலைக் கொஞ்சம் உயர்த்தி, "ஐயா......ஐயா" என்று அழைக்கிறன்.

ஆறுமுகத்தார் கனவு கண்டு விழித்தவர்போலக் கண்ணைத் திறக்கிறர். அவருடைய கட்டிலருகே ஓர் உருவம் நிற்பதுபோல அவருக்குத் தோன்றுகிறது. அவருக்குத் தன் கண்களை சரியாக நம்பமுடியவில்லை. தான் காணுகின்ற காட்சி உண்மைதானு என்ற சந்தேகத்தோடு கண்களை நன்ருக கசக்கி விட்டுக்கொண்டு உற்றுப் பார்க்கிறர்.

முத்தன் தோளில் போட்டுக் கொண்டிருந்த சால்வையைக் கையில் எடுத்துக்கொண்டு அவருக்குச் சற்றுக் கிட்ட நெருங்கி வந்து கூனிக் குறுகி, 'ஐயா' என்கிறன்.

ஆறுமுகத்தாருக்குப் பெரிய வியப்பாக இருக்கிறது. "இவ்வளவு அக்கறையோடு என்னைப் பார்ப்பதற்கு இந்த நேரத்தில் முத்தன் வந்திருக்கிறனே!" என்ற ஆச்சரியத்தில் வாய்திறந்து பேச மறந்து அவனையே பார்த்துக் கொண்டு கிடக்கிறர்.

"என்ன ஐயா, என்னைத் தெரியயில்லையே!" பவ்வியமாகக் கேட்கிறன் முத்தன்.

"தெரியுந் தெரியும், எப்பவெடா அப்பா நீ வந்தனீ?" ஆறுமுகத்தார் அவருடைய பலவீனமான நிலையை அவனிடம் காட்டிக்கொள்ள விரும்பாமல் என்றைக்குமுள்ள மிடுக்கை வருவித்துக் கொண்டு அவனைப் பார்த்துக் கேட்கிறர்.

இவர்கள் இருவரும் பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டு ஆறுமுகத்தாருக்கு அருகில் இருப்பவர்கள் கண் விழித்துக் கொண்டார்கள். அவர்களுக்குத் தன்னுடைய பெருமையை எடுத்துக் காட்ட வேண்டுமென்று ஆறுமுகத்தார் தீர்மானித்துக் கொண்டார்.

''இப்பதான் வந்தனுன்''

''நேரத்தோடை வந்திருக்கிருய், தொழில்?''

''ஐயாவை ஒருக்கால் பாக்க வேணு மெண்டு விடியப்புறம் வெளிக்கிட்டு விட்டேன். தொழில் இனிப் போய்த் தான்.''

''இப்ப எத்தினை பனைச்சீவுருய்?'' கொஞ்சம் பலமாகவே வேண்டுமென்று கேட்கிருர்.

அவன் பக்கத்துக் கட்டில்களை ஒருதடவை ஓரக் கண்ணுல் பார்த்துக் கொண்டு மெல்லச் சொல்லுகிருன்: ''ஒரு பத்து வரையிலே.''

''எல்லாம் என்ரை காணிக்குள்ளே தானே!''

''ஓமோம்......ஐயாவுக்கு இப்ப எப்பிடி?'' என்று கதையைத் திசை திருப்புகிருன் முத்தன்.

அதை விளங்கிக் கொள்ளாதவர் போல, ''முந்தின வரியங்கள் மாதிரி இல்லை, நானும் நோய் வாய்ப்பட்டுப் போனன். நீ இன்னும் தரவேண்டிய சொச்சக் காசையும் தந்து விடு'' என்ருர் ஆறுமுகத்தார்.

''ஓமோம். டாக்குத்தர் என்ன சொல்லுகிருர்?''

''டாக்குத்தர்மார் என்ன சொல்லுகிறது! ஒப்பிறேசன் செய்ய வேணுமாம்.''

''ஏதோ ஐயா சுகப்பட்டு வரவேணும்.''

''நாங்கள் நினைச்சு என்ன நடக்கப்போகுது. எல்லாம் தலை எழுத்தின்படி நடக்கும்.''

''அப்ப நான் வரப்போறனுக்கும்'' என்று சொல்லிக் கொண்டு புறப்படத் தயாரானவன், திடீரென்று ஞாபகம்

வந்தவன் போல நடித்துக் கொண்டு, "இந்த வரியத்தோடை பனையளை விடச்சொல்லி ஆச்சி சொல்லுரு" என்ருன்.

"ஆர் சொன்னது?" அதிகாரத்தோடு கேட்கிருர் ஆறுமுகத்தார்.

"நம்மடை செல்லம் ஆச்சிதான். வேறை ஆருக்கோ குடுக்கப் போருவாம்."

"ஆருக்குக்காம் குடுக்கப் போருு?"

"பொன்னன்ரை மேனுக்கு."

"ஆ...... அப்பிடியோ? என்ரை எண்ணமில்லாமல் அவ தன்ரை மூப்பிலெ செய்யேலாது. நீ போய்ச் சீவு. அவ வரட்டும் நான் சொல்லுறன்."

"அப்ப நான் வாறனுக்கும்" சொல்லிக் கொண்டு திருப்பி அப்பால் போய், அதுவரை கையில் ஏந்தி வைத் திருந்த சால்வையைத் தோளில் போட்டுக் கொண்டு வெற்றிப் பெருமிதத்தோடு 'வாட்'டை விட்டு வெளியே நடக்கிருன்.

ஆறுமுகத்தாருக்கு இப்போதுதான் அவன் தன்னைப் பார்க்க வந்ததன் அந்தரங்கம் புரிகிறது. உண்மையில் அவன் தன் மேலுள்ள அநுதாபத்திஞல் சுகம் விசாரிக்க வரவில்லை என்பதை அவர் உணர்ந்தார். உறக்கத்திலிருந்து கண் விழித்தவுடன் அவ்வளவாகத் தெரியாத வலியும் குத்து வேதனையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகத் தொடங்கின. கட்டிலின் மேல் கிடந்து காலை ஆட்டி அசைத்து, நிலைகொள்ளாமல் அங்குமிங்குமாகப் புரண்டு படுத்து சுடுமணலில் விழுந்தவர் போல துடிதுடிக்கிருர்.

சத்திர சிகிச்சைக்காக திரும்பவும் ஆஸ்பத்திரியில் அவர் அனு மதிக்கப்பட்டு ஆறு தினங்கள் கடந்து விட்டன. இந்த ஆறு தினங்களும் ஆறுமுகத்தாரைப் பொறுத்தவரையில் ஆறு யுகங்களாகத்தான் தோன்று கின்றன. வேதனையினுல் சோர்ந்து அசதி ஏற்பட்டுக் கண் மூடும் சொற்ப வேளைகளில் மாத்திரம் அவர்

உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறுர். இப்படி அணு அணு வாகச் செத்துக் கொண்டிருப்பதிலும் பார்க்க நிரந்தரமாகக் கண்ணைமூடி விடுவது சாசுவதமான சுகம் என்ற முடிவுக்கு சில சமயங்களில் அவர் வந்து விடுகிறுர்.

அவசரமாக கொழும்புக்குச் சென்றிருக்கும் "சேர்ஜன்" கருணை நாயகம் இன்னும் அங்கிருந்து திரும்பவில்லை. அவருக்குப் பதிலாக அந்த 'வாட்'டைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் டாக்டருக்கு ஆறுமுகத்தாரின் பரிதாப நிலைமை நெஞ்சைத் தொட்டது. "சேர்ஜன்" வரும்வரை அவருடைய சத்திர சிகிச்சையைப் பின் போட முடியா தென்று அவர் கருதினுர். ஆறுமுகத்தாரின் சத்திர சிகிச்சையைத் தான் செய்து முடிப்பதற்கு அவர் தீர் மானித்து, அவரை நன்ருகப் பரிசோதித்துப் பார்த்தார். முழங்கால்வரை அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டு மென்று அவர் ஆறுமுகத்தாரிடம் தெரிவித்தார். ஆறுமுகத்தார் இப்போது இருக்கும் நிலையில் அவருக்கு உபாதை தீருமானுல் அவர் எதை இழக்கவும் தயாராக இருக்கிறுர்.

ஆறுமுகத்தாருக்கு அவசரமாக சிகிச்சை அளிப்பதற்கு அந்த டாக்டர் முடிவு செய்தார். ஆனுல் சிகிச்சையின் போது அவருக்கு ஏற்றுவதற்கு வேண்டிய இரத்தம் வழமை போல இரத்த வங்கியில் கைவசமில்லை என்று அறிவித்து விட்டார்கள். வங்கியில் இரத்தம் வழங்கிய பிறகுதான் சத்திர சிகிச்சை நடைபெறும் என்ற தகவல் வீட்டில் இருந்து வந்ததும் மகாலிங்கத்திற்கு தெரிய வந்தது.

ஆறுமுகத்தாருக்காக இரத்தம் கொடுக்கக்கூடிய உடல் வலிமையும் மனவிருப்பமும் உள்ளவர்கள் உறவுக்குள் அவருக்கு யார் இருக்கிறுர்கள்? வேறு வழியில்தான் அவருக்கு இரத்தம் கொடுக்கப்பட வேண்டும். அதற்கான ஒழுங்குகளை எப்படிச் செய்யலாம் என்பதிலும் மகா லிங்கத்துக்கு அநுபவமில்லை.

மகாலிங்கம் ஆஸ்பத்திரியின் மேற்குப் புறப் பிரதான வாசலுக்கு வந்து மதிலோரமாக நின்று இப்போது என்ன செய்யலாம்? என்று மனக்குழப்பத்தோடு யோசிக்கிறான்.

"என்ன தம்பி யோசனை?"

அவனுக்கு மிகவும் நெருக்கமானவர் போன்ற அன்னியோன்னியமான ஒரு குரல் அவனை வினவுகிறது.

மகாலிங்கம் சிந்தனையிலிருந்து விடுபடுகிறான்.

மகாலிங்கத்தின் தோற்றத்திலும் அவனுடைய நிலைப்பாட்டிலும் தன் கழுகுக் கண்களைச் செலுத்தி தப்பாமல் இரத்தச் சுவடு பிடிக்கும் ஆஜானுபாகுவான கிழவன் ஒருவன் அவனுக்கு முன் நின்று கொண்டிருக்கிறான். மகாலிங்கம் அவன் கேள்விக்கு உடனே பதில் கூறாமல் கூறு குறிப்பாக அவனை உற்றுநோக்குகிறான்.

அவனுடைய உச்சந்தலையில் மயிர்கள் உதிர்ந்து, பக்கவாட்டில் எஞ்சியிருக்கும் மயிர்கள் இந்தக் காலத்து இளைஞர்களின் "ஹிப்பித் தலை" போல தோள்வரையில் நீண்டு சுருண்டு கிடக்கின்றன. வெற்றிலைக் காவி ஏறி பாசிபடிந்து தேய்ந்த பற்கள் நீண்டு வளர்ந்த நாசியிலும் முகத்திலும் மெல்லிய சுருக்கங்கள், கண்களிலே உள்ளங்களை ஊடுருவிப் பார்க்கும் தீட்சணியமான பார்வை, அரையிலே அழுக்கடைந்த ஒரு சாரம். நெஞ்சு திறந்த நிலையில் ஒரு நைலோன் சேட். சாரத்தை ஒரு கையால் தூக்கிப்பிடித்த வண்ணம் அவன் நின்று கொண்டிருக்கிறான்.

மகாலிங்கத்துக்கு முன்னர் அறிமுகமான ஒருவனாக அவன் தோன்றவில்லை அவனுடைய வயதுக்கு மீறிய வாலிபவாகும், கசாப்புக் கடைக்காரன் போன்ற தோற்றமும், அவன் வலிந்து வந்து தன்னோடு பேசும் சகசமும் மகாலிங்கத்துக்கு வியப்பை ஊட்டுகின்றன.

"என்ன தம்பி பேசிறியளில்லை?"

மறுபடியும் அவன்தான் கேட்கிறான்.

மகாலிங்கம் தான் பேசாமல் நின்று கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்து சுயபிரமைக்கு வந்தவனுக, ''சும்மா நிற்கிறேன்'' என்முன்.

அவன் தோற்றம் மாத்திரமல்ல, பேச்சிலும் ஒரு கம்பீரம் தொனிக்கிறது. அவன் எந்தப் பழிபாவங்களையும் செய்வதற்கு அஞ்சாத ஒரு பழைய கேடி போலவும் மகாலிங்கத்தின் பார்வையில் தோன்றுகிமுன்.

அவசியமில்லாமல் தன்னை அவனுக்குக் காட்டிக் கொள்ளவேண்டியதில்லை என்று மகாலிங்கம் தீர்மானித்தான்.

''ஆருக்கும் இரத்தம் கித்தம் வேணுமா?''

அவனுகவே விசாரிக்கிமுன்.

'என் மனதில் என்ன இருக்கிறது என்பது இவனுக்கெப்படித் தெரியும்? இவன் சாதாரண மனிதன் தாஞ அல்லது தெய்வம் இவன் கோலத்தில் வந்து எனக்கு முன்னுல் நிற்கிறதா?' என்று மகாலிங்கம் வியந்தான். அவன் மூலம் இப்போதுள்ள நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை தோன்றுகிறது. ''ஓம், இரத்தம் தேவையாயிருக்குது'' என்று ஆவலோடு அவன் கூறினுன்.

''எந்த வாட்? பெயரைச் சொல்லும். நான் ஆளை ஒழுங்கு பண்ணி இரத்தத்தை குடுத்துவிட்டு அத்தாட்சிக் காட்டை உம்மட்டைக் கொண்டு வந்து தாறன்'' என்று தெளிவாகப் பேசினுன் கிழவன்.

அவனுடைய நிதானமான பேச்சு மகாலிங்கத்துக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டுகிறது. பணம் வாங்கிக் கொண்டு வங்கியில் இரத்தம் கொடுப்பதற்கும், இடையில் தரகர்கள் இருக்கிமுர்கள் என்ற விவகாரத்தை மகாலிங்கம் முன்னமே அறிந்திருக்கிமுன். அப்படியானவர்களை தேடித் தான் பிடிக்க வேண்டும் என்று அவன் எண்ணியிருந்தான். அவர்களாக முன்வந்து இரத்தத்துக்கு விலைபேசி இவ்வளவு

சுலபமாகத் தருவார்கள் என்று அவன் நம்பவில்லை. இனி மேல் விலை பேச வேண்டியதுதான் என்ற முடிவோடு, ''எவ்வளவு தரவேணும்?'' என்று கேட்டான்.

''கனக்கயில்லைத் தம்பி; இப்ப விலைவாசி ஏறி இருக்கிற காலம். வெளிநாட்டுச் சாமானுகள் மார்க்கட்டிலெ வந்து குவியிது. ஆனால் ஒவ்வொண்டும் ஆனை விலை குதிரை விலை; வாங்கத்தான் சனத்திட்டைக் காசில்லை; சாப்பாட்டுக்கும் பஞ்சந்தான். இப்ப ஆர் இரத்தம் தாறுன்? சரி...கணக்கச் சொல்லி என்ன: மற்றவையளிட்டை எண்டால் நூறுக்குப் பதியாது. நீர் படிச்ச பிள்ளை. உம்மோடை இழுபட்ட பேச்சிருக்கக் கூடாது. நீர் ஒரு பத்தைக் குறைச்சுக் கொண்டு தாரும்.''

''தொண்ணூறு...சச்ச...அது கூடிப் போச்சு.''

''சரி, இன்னுமொரு அஞ்சைப் பிடிச்சுக்கொண்டு தாரும்! அதுக்குக் குறைஞ்சால் ஏலாது. கெதியாச் சொல்லும்; நான் போய் ஆளை செற் பண்ணவேணும்.''

''எல்லாம் முடிச்சுக்கொண்டு வாருங்கோ. நான் பதின்னுலாம் வாட் விருந்தையிலெ நிற்கிறன்.''

மனித இரத்தத்திற்கு விலை பேசி முடிகிறது.

மகாலிங்கம் கொடுத்த விபரங்களைப் பெற்றுக் கொண்டு, கிழவன் வேகமாகப் போகிறுன்.

மகாலிங்கம், கிழவனேடு பேசிமுடித்து சரியாக ஒரு மணி நேரங்கூட சென்றிருக்க முடியாது. அதற்குள் ஒருவனை அழைத்து வந்து இரத்த வங்கியில் ஆறுமுகத் தாரின் பெயரில் இரத்தத்தைக் கொடுத்து, அதை உறுதிப் படுத்துகின்ற காட்டைப் பெற்று வந்து மகாலிங்கத்தின் கையில் ஒப்படைத்தான் கிழவன்

மகாலிங்கம் கிழவனேடு முன்பு பேசிக்கொண்ட தொகையில் ஒரு ஐந்து ரூபாவை மடக்கி வைத்துக் கொண்டு மிகுதியை அவனிடம் கொடுக்கிறுன். கிழவன்

பணத்தை வாங்கி நிதானமாக எண்ணிப் பார்க்கிறுன். அவனுக்குச் சேரவேண்டிய தொகையில் ஐந்து ரூபா குறைவாக இருப்பதைக் கண்டு, ''ஐஞ்சு குறையுது'' என்று மகாலிங்கத்திடம் சொல்லிக் கொண்டு, அதைப் பெரிதாகப் பொருட்படுத்தாமல், ''நான் வாறன் தம்பி'' என்று கூறி விடை பெற்றுக் கொள்ளுகிறுன்.

தோற்றத்தில் அவன் குரூரமாக இருந்தபோதும் பெருந்தன்மையான அவன் போக்கு மகாலிங்கத்தின் உள்ளத்தைத் தொடுகிறது. அவன் விஷயத்தில் தான் கண்ணியமாக நடந்துகொள்ளவில்லையோ? என்ற குற்ற உணர்வு அவன் உள்ளத்தை இப்போது உறுத்துகிறது. அவன் முதலில் சொன்னதுபோல நூறு ரூபாவை அப்படியே அவனிடம் கொடுத்திருக்கலாம் என்று மகாலிங்கம் இப்போது எண்ணுகிறுன்.

கிழவன் சாரத்தை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு விருந்தை நீட்டுக்கு நடந்து செல்வதை மகாலிங்கம் பின்புறமாகப் பார்த்துக்கொண்டு நிற்கிறுன்.

மகாலிங்கமும் அந்தக் கிழவனும் பேசிக்கொண்டு நின்றது, அந்தப் பக்கமாக வந்த கங்காணி சட்டநாதன் கண்களில் பட்டுவிட்டது. கடமை நேரத்திலும் தன் விருப்பம்போல அலைந்துகொண்டு திரிவதுதான் அவன் வழக்கம். அவன் 'சேர்ஜன்' கருணைநாயகத்தின் காரை ஓட்டிக்கொண்டு அவருடைய செல்லப்பிள்ளையாக இருக்கும் வரை, கங்காணிக்குரிய கடமைகளைச் செய்யவில்லையென்று யார்தான் அவனைத் தட்டிக் கேட்க முடியும்?

கங்காணி சட்டநாதன், அந்தக் கலியஸ் சிரிப்போடு மகாலிங்கத்தை நோக்கி வேகமாக நடந்து வருகிறுன்.

''தம்பி உம்மடை ஆளுக்கு இரத்தம் குடுத்தாச்சா?'' என்று மிகுந்த கரிசனையோடு அவனை விசாரிக்கிறுன்.

'இரத்தம் தேவையென்று இவனுக்கு எப்பிடித் தெரியும்?' என்று எண்ணிக்கொண்டு, ''இரத்தம் குடுத்தாயென்ன, விட்டாயென்ன? உனக்கதைப் பற்றி ஏன் கவலை?'' என்று கேட்க நினைத்தவன், அப்படிக் கேட்டுப் போடாமல் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, ''ஓம், குடுத்தாச்சு'' என்று வேண்டா வெறுப்பாகச் சொல்லுகிறான்.

''இல்லை. நீர் சும்மா சொல்லுறீர்! உம்மோடை கதைச்சுப் போட்டு போறனே, அவன் சரியான ஆள். ஆஸ்பத்திரிக்குள்ளே தரகன் மாருக்கு என்ன வேலை? அவனை ஆர் இந்த நேரம் உள்ளுக்கு வரவிட்டவன்?''

கங்காணி சட்டநாதனுக்கு உண்டான பொறுமையையும் மனக்கொதிப்பையும் கண்டு மகாலிங்கம் தனக்குள்ளே சிரித்துக் கொள்ளுகிறான். அவனை வெறுப்போடு பார்த்து அலட்சியம் பண்ணிவிட்டு, அவன் சொல்வதைக் கேட்டும் கேளாதவன்போல மகாலிங்கம் மறுபக்கம் திருப்பிக் கொள்ளுகிறான்.

''என்ன தம்பி...இரத்தம் குடுத்தாச்சா, உண்மையைச் சொல்லும்?''

சட்டநாதன் ஆதரவாக அழைத்து, அவனைத் தன் பக்கம் திருப்ப முயல்கிறான்.

''குடுத்தாச் செண்டால் பிறகென்ன? எனக்குப் பொய் பேசத் தெரியாது.''

சற்றுச் சூடாகவே அவனிடமிருந்து பதில் வருகிறது.

''எவ்வளவு குடுத்தனீர்?''

''ஐம்பது.''

வேண்டுமென்றே மனமறியப் பொய் பேசுகிறான்.

''ச்சே...நீர் எனக்கொரு சொல்லுச் சொல்லியிருந்தால் இன்னும் குறைஞ்ச றேற்றிலே உமக்கு அரேஞ் பண்ணித் தந்திருப்பன்'' என்று அங்கலாய்த்தான் சட்டநாதன்.

"ஓ! நீ இந்தத் தரகுமா செய்கிறுய்?" என்று மனத்தில் நினைத்துக்கொண்டு, அவனேடு பேச்சை வளர்த்துக் கொள்ளக்கூடாதென்று கருதி, அவனிடமிருந்து மெல்ல விலகிக்கொண்டான் மகாலிங்கம்.

## 12

ஆறுமுகத்தாருக்குச் சத்திர சிகிச்சை நடந்து முடிந்து அவர் தனது வலதுகால் முழங்கால் வரை இழந்துவிட்டார். சிகிச்சை முடிந்து மறுநாள் நடுப்பகல்வரை அவருக்கு மயக்கம் தெளியவில்லை.

மகாலிங்கம் அவருக்குத் துணையாக ஆஸ்பத்திரியில் தங்கி இருந்தான். அவர் ஸ்மரணை இழந்து பிணமாகக் கிடப்பதைக் காண அவன் உள்ளம் வேதனையில் வேகிறது. முதல் நாள் ஆறுமுகத்தாரை 'ஸ்றெச்சரில்' கிடத்தி 'ஒப்பிறேஷன் தியேட்டருக்கு' தள்ளிக் கொண்டு போன சமயம் அவரின் கால்மாட்டில் நின்று கொண்டிருந்தான் மகாலிங்கம். அப்போது ஆறுமுகத்தார் அவனைப் பார்த்த அந்தப் பார்வை—கசாப்புக் கடையில் கழுத்து வெட்டப் பட்டுக் கொண்டிருக்கும் மிருகத்தின் கண்களில் வடிகின்ற வேதனை—கலக்கம்—மரண பயம் என்பதைக் கொட்டிய அந்தக் கண்கள், அவன் மனக் கண்ணில் அடிக்கடி தோன்றி அவனைத் துன்புறுத்திக் கொண்டிருந்தன. அவர் மறுபடியும் கண்களைத் திறந்து கலக்கமின்றி முன்போலத் தெளிவாகப் பார்க்கமாட்டாரா? என்று அவன் ஏங்கிக் கொண் டிருந்தான்.

ஆறுமுகத்தாருக்கு மறுநாள் மயக்கம் தெளிந்து சுய உணர்வு வந்த பிறகு அவரைப் படுக்கையில் வைத்து அவன் உணவு ஊட்டினுன். மலசலமும் படுக்கையிலேயே அவனுல் எடுக்க வேண்டி இருந்தது.

இந்த நிலையில் ஆறுமுகத்தாரைப் பராமரிப்பதற்கு அவனைத் தவிர அவருக்கென்று வேறு யார் இருக்கிறார்கள்? மகாலிங்கம் பாடசாலைக்கு லீவு போட்டுவிட்டு அவரோடு ஆஸ்பத்திரியில் தங்கினான். செல்லம்மா வழமைபோல தினமும் மதியவேளையில் தவறாமல் வந்து போய்க் கொண்டிருந்தாள்.

கொழும்புக்குச் சென்றிருந்த 'சேர்ஜன்' கருணைநாயகம் ஆறுமுகத்தாருக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்த மறுநாள் ஆஸ்பத்திரிக்கு திரும்பியிருந்தார். அவர் அந்த 'வாட்'டுக்கு வந்து நோயாளர்களைப் பார்வையிடுகின்ற போது ஆறுமுகத்தாரை அவருடைய உறவினர்கள் வந்து சுகம் விசாரித்துப் போவது போலத்தான் அவரும் சம்பிர தாயமான விசாரணையோடு போய்க் கொண்டிருந்தார். அவர் ஒரு டாக்டர் என்ற நிலையில் ஆறுமுகத்தாரை அணுகவில்லை. அவரோடு பேச வேண்டும் என்பதற்காக இரண்டு வார்த்தைகள் பேசிக் கொண்டு தன் பாட்டில் சென்று விடுவார். ஆறுமுகத்தார் இப்போது இருக்கும் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு ஒரு சாதாரண மனிதனின் உள்ளத்தில் உண்டாகக்கூடிய அநுபவங்கூட ''சேர்ஜனின்'' உள்ளத்தில் தோன்றவில்லை.

ஆறுமுகத்தார் இன்னொரு டாக்டரினால் சத்திர சிகிச்சை செய்யப்பட்டிருக்கும் ஒரு நோயாளி. அவரைச் சிரத்தை எடுத்துப் பார்க்கும் கடமை தனக்கில்லை என்று ''சேர்ஜன்'' கருதினார். ஆறுமுகத்தார் விஷயத்தில் மாத்திரமல்ல, இப்படி அவர் தனக்கென்று ஒரு கொள்கையை வகுத்து வைத்துக் கொண்டிருப்பவராகத்தான் இந்த வைத்திய உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

''சேர்ஜனின்'' பாராமுகமான போக்கைக் கண்டு ஆறுமுகத்தார் முன்போல இப்போது மனம்நொந்து கொள்வதில்லை. மனிதன் நினைப்பது போல ஒன்றும் நடப்ப

தில்லை. எல்லாம் அவனவன் பிராப்தம் என்று அவர் இப்போது கருதினர்.

மனிதனுக்கு அவன் மனச்சாட்சியை விடச் சிறந்த சாட்சியும் நீதிபதியும் வேறெருவரில்லை.

ஆறுமுகத்தார் வேதனைகளுக்கு மத்தியிலும் தவிர்க்க முடியாமல் தன் கடந்தகாலம் பற்றி நினைத்துப் பார்க்கிருர். "காயா மரத்தின் பூ பிஞ்சறுத்தனே? கன்னியர்கள் பெரும் பழி கொண்டனே?" என்ற பாடல் வரி இருந்தாற் போல அவர் நினைவுக்கு வருகிறது. "கன்னியர்கள் பெரும்பழி கொண்டனே?" என்ற அடியில் அவர் அழுந்தி நின்று மேலே போகமுடியாமல் தடுமாடுகிருர். வாலிபமிடுக்கும் வனப்பும் குன்ருத காலத்தில் பெண்கள் விஷயத்தில் தான் இழைத்த தவறுகளை எண்ணி எண்ணி வருந்துகிருர். அந்தப் பருவத்தில் அவர் மனத்துக்கு இது ஒரு பெரிய தவருகப் படவில்லை. ஆணுகப் பிறந்தவன் ஒவ்வொருவனும் இந்த விஷயத்தில் பலவீனமானவன்தான். சந்தர்ப்பம் வாய்த்தால் தவறு செய்வதற்கு தயாராக இல்லாதவன் யார் இருக் கிருன்? வாய்ப்புக் கிடைக்காதவன் ஒவ்வொருவனும் தான் மகா உத்தமன் என்று உலகத்திற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கிருன். அநுபவித்துக் களைத்தவன் தான் செய்த பாவங்களுக்காகப் பச்சாத்தாபப்பட்டுக் கொள்ளு கிருன். ஆறுமுகத்தாரின் நிலையும் இன்று இதுதான். அந்தக் காலத்தில் தன்னுடைய நடத்தையைப் பெரிய பாவமாக அல்லது குற்றமாக அவர் கருதும் அளவுக்கு இந்தச் சமூகத் தின் போக்கு அவரைச் சிந்திக்க வைக்கவில்லை.

நரம்புத் தளர்ச்சி வந்த பின்னர்தான் ஒழுக்கசீலம் பேசுபவர்கள் நிறைந்ததுதானே இந்தச் சமூகம்.

ஆறுமுகத்தாரின் இழந்து போன காலாக அவரிட மிருந்து பிரிக்க முடியாத ஓர் அங்கமாக—தவிர்க்க முடியாத நிலையில் உடன் இருந்து உதவினன் மகாலிங்கம். அவன் இதற்கு முன் இப்படியொரு ஆஸ்பத்திரியில் தங்கி இருக்கும்

அநுபவத்தைப் பெருதவன். இப்போது அவனுக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பம் புதுமையாகவும் அதே சமயம் அசூசையாகவும் இருக்கிறது.

நாற்பது கட்டில்கள் இரண்டு வரிசையாகப் போடப்பட்டிருக்கும் அந்த 'வாட்'டை ஓர் அரைச்சுவர் இரண்டாகக் குறுக்கே பிரிக்கிறது! அந்தச் சுவரின் மத்தியில் ஒரு கதவு போடப்பட்டிருக்கிறது. சுவருக்கு வடக்குப் பாகத்தில் இருபது கட்டில்கள். அந்தக் கட்டில்களில் இருக்கின்ற நோயாளர்கள் அத்தனை பேரும் நீரிழிவு நோயினுல் பீடிக்கப்பட்டவர்கள். அவர்கள் எல்லோரும் பெரும்பாலும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களாகத்தான் இருக்கிருர்கள். சிலருக்கு நீரிழிவு நோயினுல் வருகின்ற புண் உண்டாகி இருக்கிறது. அப்படிப் புண்ணுள்ளவர்கள் அத்தனை பேருக்கும் தவருமல் வலது காலில் புண்ணிருக்கிறது. பலர் கால் விரல்களை ஒவ்வொன்ருக இழந்துபோய் இருக்கிருர்கள். சிலருக்கு பாதங்கள் கழற்றப்பட்டு விட்டன. ஒருவர் கெண்டைக்காலுக்குக் கீழுள்ள பகுதியை இழந்திருக்கிருர். ஆறுமுகத்தார் ஒருவர்தான் முழங்கால் வரை நறுக்கப்பட்ட ஒரு நீரிழிவு நோயாளி.

பெரும்பாலும் வயோதிகர்கள் அந்த 'வாட்'டில் படுத்துக் கிடப்பதால் அந்த 'வாட்'டே விருத்தாப்பியம் அடைந்து விட்டது போலக் காணப்படுகிறது. ஆஸ்பத்திரிக்கென்று பொதுவாகவுள்ள மணத்தோடு புண்ணின் நெடியும் கலந்து அங்கே அருக்குளிப்பை ஊட்டுகிறது. நீரிழிவு நோயாளர்களுக்கு தங்கள் நோய் பூரணமாகச் சுகப்படும் என்பதில் நம்பிக்கை இல்லை. நோயின் வேகத்தை தடுத்துக்கொண்டு மாத்திரம் சிலர் வீட்டுக்குத் திரும்புகிருர்கள். இது ஒரு கர்ம வியாதி. இந்த வியாதி தங்கள் வாழ்வை முடிக்க வந்திருக்கும் மரண தேவதை என்று எண்ணுவதால் அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியை இழந்து பீதியோடு காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிருர்கள்.

மரணம் எதிரே வந்து கொண்டிருக்கிறது என்பதை எதிர்பார்த்துக் கொண்டு வாழ்ந்தால் எந்த ஒரு மனிதன் தான் அது வரும்வரை மகிழ்ச்சியோடு அதைக் காத்துக் கொண்டிருக்க முடியும்?

அந்த நோயாளர்களுக்கு சேவை செய்யவேண்டிய கங்காணிமாரின் காட்டுத் தர்பார்கள்......அசிங்கமான சின்னத்தனங்கள்......அவை வேறு கூத்துக்களாக அங்கே நடந்தேறிக் கொண்டிருந்தன.

நோயாளர்களுக்கு வழங்கப்படும் இலவச உணவுகளைக் கங்காணிமார் தங்கள் சொந்தப்பணத்தில் வாங்கிக் கொடுப்பது போல அவர்கள் செய்கின்ற ஈனத்தனங்கள்..... அந்த உணவுகளை நோயாளிகளுக்கு ஒழுங்காகப் பரிமாருமல் தங்கள் சொந்தமாக வீடுகளுக்கு கடத்திச் செல்வதில் ஏற்படும் போட்டிகள்...... அதனுல் சில சமயங்களில் அவர் களுக்கிடையில் உருவாகும் மோதல்கள்......

மகாலிங்கம் இவைகள் எல்லாவற்றையும் கண்டு தனக்குள் வேதனைப்பட்டுக் கொள்ளுகிருன். ஒவ்வொரு மனிதனும் அவனுடைய ஒவ்வொரு அசைவும் பொருள் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரு இலக்கைக் குறி வைத்துத் தான் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு அங்கு நடக்கும் சம்பவங்கள் நல்ல சாட்சிகள் ஆகின்றன.

உறவுகள்—பந்தபாசங்கள் கடமைகள் — சேவைகள் இவைகள் எல்லாவற்றுள்ளும் இன்று பணம் என்பது அடி நாதமாக ஒளிந்து கிடக்கிறது.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் அவனுடைய வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாக வேண்டும். அவன் தன்னுடைய பிற்சந்ததிக்குத் தேடிவைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லாமல் ஒழியவேண்டும். சமூகத்தில் ஏற்றத்தாழ்வு— சுரண்டல் இல்லாமல் எல்லோரும் சமத்துவமாக வாழும் நிலைமையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் மனிதன்

பணத்துக்காகவும் பதவிக்காகவும் அலைகின்ற வேட்கை அழிந்து போகும். போட்டி பொருமைகளும் இலஞ்சமும் ஊழல்களும் இல்லாத நவயுகம் ஒன்று நிச்சயமாக உதய மாகும். மகாலிங்கமும் இந்தச் சமுதாயத்தில் வாழுகின்ற ஒரு சராசரி மனிதன் தான். ஆறுமுகத்தாரின் சொத்துக்கள் தனக்கு கிடைக்காமல் போய்விடுமோ? என்பது அவனுடைய உள்ளத்தை இப்போது உறுத்திக் கொண்டிருக்கும் ஏக்கம். ஆறுமுகத்தார் எந்தக்கணமும் வாய்திறந்து இதுபற்றி பேசமாட்டாரரோ? என்று எதிர்பார்த்துக் கொண்டுதான் அவன் அவரோடு அங்கு தங்கியிருக்கிருன்.

## 13

மகாலிங்கம் முன் எப்போதும் இல்லாத அளவில் இப் போது மனம் சலனப்படுகிருன். ஆறுமுகத்தாரின் சொத்து முழுவதும் அவன் அடையக்கூடிய வாய்ப்பிருந்தும் அந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டு விட்டதை எண்ணி அவன் ஏங்குகிருன். வலிய வந்த சீதேவியை ஒதுக்கித் தள்ளாமல் இருந்திருந்தால் ஒருவேளை அவனுடைய சகோதரிகளைச் சுலபமாகக் கரைசேர்த்திருக்கலாம் என்று இப்போது சபலப்படுகிருன்.

செல்லம்மாவின் ஒரு சகோதரிக்குத் திருமணப்பருவம் வந்த ஒரு மகள் இருக்கிருள். அவளை மகாலிங்கத்திற்கு மணம் முடித்து வைப்பதால் ஆறுமுகத்தாரின் சொத்துச் சிதையாமல் முழுவதும் அவர்களுக்குச் சேரும் என்ற காரணத்தைச் சொல்லி, செல்லம்மா சுலபமாகத் தன் பெருமகளுக்கு அவனை மணஞ் செய்துவைக்க முயன்ருள். அவர்களுக்கிடையே இருக்கும் உறவுமுறை காரணமாக அவளுடைய ஆலோசனை ஆரம்பத்தில் ஆறுமுகத்தாரிடம் எடுபடவில்லை. “எங்களுக்குப் பிள்ளை குட்டியள் இருந்தால்

தான் உந்த முறையள் தலையள் பாக்கவேணும். இப்ப இப்பிடி ஒண்டைச் செய்து வைத்தால் எங்கடை பிற் காலத்துக்கு உதவும்'' என்று சொல்லி செல்லம்மா அவரைச் சமாதானப்படுத்தினுள்.

இருவருமாகச் சேர்ந்து தங்கள் விருப்பத்துக்கிணங்கி மகாலிங்கம் திருமணம் செய்யவேண்டும் என்று அவனை வற்புறுத்த தொடங்கினுர்கள்.

மகாலிங்கம் தகப்பனை இழந்து, கன்னிப் பெண்களாக இருக்கும் இரண்டு சகோதரிகளுக்குத் தமையன் என்ற பொறுப்பு அவனுக்கு இருப்பதால் அவன் தன்னுடைய திருமணம் பற்றி இதுவரை சிந்திக்கவில்லை.

மகாலிங்கம் இப்போது திருமணம் செய்ய முடியாது என்று மறுத்தான். ஆறுமுகத்தார் செல்லம்மாவின் சகோதரி மகளை அவன் மணக்க வேண்டும் என்று வற்புறுத்து கிறுர். தன்னுடைய விருப்பத்துக்கு அவன் சம்மதித்து வர வேண்டும் என்பதுதான் அவர் எண்ணம். மகாலிங்கத்தின் தாய் தன் தம்பியின் மகளை அவனுக்குத் தீர்மானித் திருந்தாள். அந்தப் பெண்ணும் தகப்பனை பறிகொடுத்தவள். ஏழைமை நிலையில் இருக்கும் அவளை மகாலிங்கம் கை விட்டால் அவளுக்கு வேறு வாழ்வில்லை. மகாலிங்கத்தின் சகோதரிகளைவிட அவள் வயதிலும் மூத்தவளாக இருந்தாள். ஆறுமுகத்தாரின் நெருக்குதல்கள் மகாலிங்கத்தின் தாய்க்கு ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது.

மகாலிங்கத்தின் திருமணத்தைப் பின் போட்டுக் கொண்டு போவதால் இந்த நெருக்கடி தீரப்போவதில்லை. இதிலிருந்து விடுபடுவதற்கு ஒரேவழி தன் தம்பியின் மகளை மகாலிங்கத்துக்கு மணஞ் செய்து வைப்பதுதான் என்று அவன்தாய் தீர்மானித்தாள். மகாலிங்கம் அவள் முடிவை ஏற்றுக்கொள்ள முதலில் மறுத்தான்.

''ஏன் மேனை?''

"இதென்ன கேள்வியெணை? தங்கச்சியவை இரண்டு பேரை வைச்சுக் கொண்டு எனக்கிப்ப என்ன கலியாணம்?"

"நீ இப்பிடி இருந்தால் பெரியகொப்புவின்ரை ஆய்க்கினை தாங்கேலாது"

"அதுக்காக......?"

"கொம்மான்ரை மேள்தானே! அதுகும் தேப்பனைத் தின்னி. நாங்கள் கைவிட்டால் வேறையார் அதைக் கவனிக்கப் போகினம்? உன்ரை சகோதரத்துக்கும் கடவுள் தான் துணை."

தாயின் வற்புறுத்தலின் பேரில்தான் மகாலிங்கம் அவளுடைய அண்ணன் மகளைத் திருமணஞ் செய்துகொண்டான்.

அந்தத் திருமணத்தின் பின்னர் ஆறுமுகத்தார் குடும்பத்துக்கும் அவர்களுக்கும் இடையில் பெரியவொரு விரிசல் ஏற்பட்டுவிட்டது. அந்த மனக்கசப்பு ஆறுமுகத்தாரைப் பொறுத்தவரை நீண்டகாலம் நிலைத்து நிற்கவில்லை. "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்று சொல்லிக் கொண்டு அவர் சமாதானமாகிவிட்டார்.

செல்லம்மாவின் உள்ளத்தில் இன்னும் அந்த வன்மம் தீர்ந்தபாடாக இல்லை. ஆறுமுகத்தார் இருக்கும்வரை மகாலிங்கத்தின் உறவை அவளால் தவிர்த்துக் கொள்ளவும் முடியவில்லை. ஆனல் அவன் மனைவியென்றால் இன்றும் அவளுக்கு ஒரே வெறுப்பு.

செல்லம்மா மனத்தில் இருக்கும் மனக்கசப்பை மகாலிங்கத்தின் மனைவியும் அறிந்து வைத்திருக்கிறாள். அவள் மகாலிங்கத்தைப் போல ஆறுமுகத்தார் குடும்பத்தோடு ஒட்டி உறவாடுவதில்லை. அவர்கள் மேல் தனக்குள்ள அதிருப்தியை மனத்தில் வைத்துக் கொண்டு, அவர்களோடு உறவாடும் தன் கணவன் மேலும் அதைக் காட்டிக் கொள்ள முடியுமா? ஆறுமுகத்தாரைப் போய்ப் பார்க்க வேண்டும்

என்ற விருப்பம் அவளுக்கில்லை. ஆனால் ஒருவாரமாக வீட்டுக்கு வராமல் இருக்கும் தன் கணவனைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

அவள் ஆஸ்பத்திரிக்குப் போவதை சிவலிங்கம் மனம் விரும்பாமல் ஆட்சேபித்தான்.

"அண்ணி, நாங்கள் சொன்னால் அண்ணன் கேட்கிறதாகயில்லை. என்ன பாவத்துக்கு இவரும் போய் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்? சொத்தெடுக்கப் போறவ பெரியப் பன்ரை பெண்டில். அவ தன்ரை ஆக்களை விட்டுப் பாப்பிக் கட்டன். அண்ணன் நினைக்கிறார், எங்களுக்கும் ஏதும் கிடைக்குமெண்டு. ஒரு மண்ணும் கிடையாது. இவர் வீணாகக் காத்துக் கிடக்கிறதுதான் மிச்சம்; இவராலெ நீங்களும் வீணாக ஏன் அலையிறியள்?"

"அட தம்பி, நீ எல்லாத்துக்கும் ஆத்திரப்பட்டுக் கதையாதெ! வீட்டை விட்டுப் போன கொண்ணன் இன்னும் திரும்பி வரயில்லை. நீயெல்லோ போய் முதல் அவனைப் பார்த்துக் கொண்டு வரவேணும்!" என்று சொன்னாள் அவனுடைய தாய்.

"எனக்கேலாது"

"அப்ப நீ பேசாமல் இரு. பிள்ளை, நீ ஒருக்கால் போய் என்னெண்டு பாத்துக் கொண்டு வா" என்றாள் மருமகளிடம்.

மகாலிங்கத்தின் மனைவி அவளுடைய இளைய சகோதரியையும் அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் புறப் பட்டாள்.

இருவரும் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆறுமுகத்தாரை நேரில் பார்த்தபோது அவர்களை அறியாமல் அவர்களுடைய உள்ளமும் நெகிழ்ந்தது. இதுவரை அவர்கள் உள்ளத்தில் இருந்து வந்த வெறுப்புகள் மறைந்து மனம்கசிந்து கண்ணீர்

விட்டார்கள். அவர்கள் கண்ணீர் விடுவதைக் கண்டபோது ஆறுமுகத்தாராலும் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் கண்களில் இருந்தும் தாரை தாரையாக கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அழுது கொண்டு நிற்கும் தன் தம்பியின் மகளை துயரம் பொங்க ஆறுமுகத்தார் மெல்லக் கிட்ட அழைக்கிறார். அவள் அவருக்கருகில் சென்று நெருக்கமாக நிற்கிறாள். அவளைக் குனியுமாறு கையினாற் சைகைப் பண்ணுகிறார். அவர் முகத்துக்கருகே அவள் குனிந்து கொள்ளுகிறாள். அவர் தன்னுடைய தன் தம்பியின் மகளுக்கு ஏதோ சொல்லப் போகிறார்; கடைசி நேரத்தில் வேறு எதைப்பற்றிச் சொல்லுவார்? தன் சொத்துக்களைப் பற்றித்தான் அவளுக்குச் சொல்லப் போகின்றார் என்று மகாலிங்கத்தின் மனைவி ஆவலோடு எதிர்பார்க்கின்றாள்.

ஆறுமுகத்தார் அவளுடைய கண்களில் வடிந்துகொண்டிருக்கும் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டு, தன்னுடைய கண்களையும் துடைத்துக் கொள்ளுகிறார். அதைத் தொடர்ந்து நீண்ட ஒரு பெருமூச்சு அவர் நெஞ்சிலிருந்து வெளியேறுகிறது.

மகாலிங்கத்தின் மனைவி எதிர்பார்த்தது போல ஒன்றும் நடக்காமல் போனதில் அவள் ஏமாற்றமடைந்தாள்.

அவளுக்குத் தன்னுடைய கணவன் மகாலிங்கத்தைப் பார்த்தபோது இன்னொருபுறம் துயரம் நெஞ்சை அடைக்கிறது. அவனுக்கு ஒழுங்கான உறக்கமும் உணவும் இல்லாமல் போனதில் இப்போது உடல் வாடிக் களைத்துப் போய்த் தோன்றுகிறான்.

அவள் அவனைத் தனியே அழைத்துச் சென்று ஒரு மனைவிக்குரிய அக்கறையோடு அவனுக்கு அங்கிருக்கும் வசதிகளைப் பற்றி விசாரித்து கண் கலங்குகிறாள். இப்படி அவன்படும் கஷ்டங்களுக்கெல்லாம் பலன் கிடைக்குமா? என்று எண்ணி அவள் உள்ளம் உளைந்தாள். ஆறுமுகத்தார் தன் தம்பியின் பிள்ளைகளில் மற்றவர்களைக் கவனிக்காமல்

கைவிட்டாலும் மகாலிங்கத்துக்கு நிச்சயம் அவருடைய சொத்தில் பங்கு கொடுப்பார் என்று நீண்டகாலமாக அவள் உள்ளூர நம்புகிருள். அந்த நம்பிக்கை மகாலிங்கத் துக்கும் கொஞ்சநஞ்சமுண்டென்பது அவளுக்குத் தெரியும். ஆறுமுகத்தார் தன் சொத்துக்கள் பற்றி மகாலிங்கத் திடம் இதுவரை சொல்லியிருக்கக்கூடும் என்று எண்ணி அவனிடம் மெல்ல விசாரித்துத் தெரிந்து கொள்ள விரும்பினுள்.

‘‘மாமா ஏதும் சொன்னவரே!’’

‘‘என்னத்தைப் பற்றி?’’

‘‘இல்லை......தன்ரை குடுக்கல் வாங்கலுகள் பற்றி?’’

‘‘இதுவரை ஒண்டும் சொல்லயில்லை.’’

‘‘நீங்களாகக் கேக்கிறதுதானே!’’

‘‘அவர் சொல்லாமல் என்னெண்டு நானுகக் கேக்கிறது?’’

‘‘உப்பிடி நினேச்சால் கடைசியிலெ ஆருந்தான் தட்டிக் கொண்டு போவினம்.’’

‘‘பாப்பம்......’’

‘‘அவர் அறிவு நினைவோடை இருக்கேக்கெ நீங்களும் கேக்க வேண்டியதைக் கேட்டுப் போடுங்கோ! உங்கடை பெரியம்மா மனிசி பொல்லாத ஆள். ஏதோ, ஏமாந்து போகாமல் பாருங்கோ!’’ என்று அவள் தன் மனத்திலிருப் பதை மறைக்காமல் சொன்னுள்.

அவளும் மகாலிங்கத்தின் சகோதரியும் அங்கிருந்து புறப்படும் சமயத்தில்தான் செல்லம்மா தன் சகோதரியின் மகனையும் அழைத்துக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தாள்.

# 14

மகாலிங்கம் இரண்டு வாரங்கள்வரை ஆஸ்பத்திரியில் தங்கியிருந்துவிட்டான். அதன் பிறகும் எப்படி அவன் பாடசாலைக்குப் போகாமல் இருக்கலாம்? ஆறுமுகத்தாரையும் ஒருவருடைய உதவி இல்லாமல் தனித்திருக்கவிட முடியாது. அவருக்கு உதவியாக வேறு யாரை நிறுத்தி வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் சின்னையா ஆறுமுகத்தாரைப் பார்ப்பதற்கு அங்கு வந்தான்.

சின்னையா ஆறுமுகத்தார் வீட்டுக்கருகில் குடியிருக்கும் அவருடைய தூரத்து உறவுக்காரன். அவன் குடும்பம் மிகவும் முட்டுப்பட்டது. ஆறுமுகத்தார் தனக்கு உதவி ஒத்தாசைகள் செய்விப்பதற்காக அவனுக்குச் சில சமயங்களில் சிறுசிறு உதவிகள் செய்து வந்திருக்கிறார். அவனைச் சில தினங்களுக்கு ஆறுமுகத்தாருக்குத் துணையாக ஆஸ்பத்திரியில் தங்க வைக்கலாம் என்று மகாலிங்கம் விரும்பினான். அவன் ஆறுமுகத்தார் தனக்குச் செய்த நன்றிகளை மனத்தில் வைத்து, அவருக்குத் தன்னால் முடிந்த உதவியை இந்தச் சந்தர்ப்பத்தில் செய்யவேண்டும் என்பதற்காக மகாலிங்கத்தின் விருப்பத்துக்கு மறுக்காமல் இணங்கினான். அதே வேளையில் அவன் தன்னுடைய குடும்ப கஷ்டங்களை ஒரு தடவை நினைத்துப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை.

"நான் அண்டண்டாடு அடிச்சு வாயிலெ போடறவன். இந்த நேரத்திலெ அண்ணனுக்குச் செய்யாத உதவி வேற ஆருக்குச் செய்யப்போறன்? ஒரு நாள் பிழைப்பில்லை எண்டால் என்ரை பெண்டில் பிள்ளை பட்டினி கிடக்கும்." என்றான் அவன்.

"உங்கடை நிலைமை எனக்குத் தெரியும். அதெல்லாம் நான் கவனிக்கிறன். நீங்கள் கொஞ்சநாள் நிண்டு உதவி செய்தால் போதும்." என்று அவனைக் கேட்டுக்கொண் டான் மகாலிங்கம்.

மகாலிங்கம் வேறு யாரும் அறியாமல் சின்னையாவின் குடும்பச்செலவுக்குப் பண உதவி செய்து அவனை ஆறுமுகத் தாருக்கு உதவியாக ஆஸ்பத்திரியில் தங்கவைத்தான்.

சின்னையாவைப் பற்றி மகாலிங்கத்தை விட, ஆறுமுகத்தார்தான் நன்ருக அறிந்தவர். அவன் மனைவி மக்களைப் பிரிந்து வாழவேண்டி நேர்ந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளுவான். ஆனுல் கள்ளை மாத்திரம் மறப்பதென்பது அவனுக்கு இயலாத காரியம். வயிற்றுக்கு உணவு இல்லாது விட்டாலும் அதைப் பெரிதுபடுத்தாத அவன் கள்ளுக் குடிப்பதற்குக் கையில் காசில்லை என்ருல், "அண்ணே!" என்று அழைத்துக்கொண்டு ஆறுமுகத்தாரிடந்தான் ஓடிவருவான். அந்தச் சமயங் களில் எல்லாம் ஆறுமுகத்தார் அவனுக்குக் கை கொடுத்து உதவுவார்.

அந்தச் சின்னையா கள்ளின் சுகத்தை மறந்து எப்படி ஆஸ்பத்திரியில் தங்கி இருக்கப் போகிருன்? கள்ளுக்குடிக்க வேண்டும் என்ற தவண்டை உண்டானதும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போகப் பார்ப்பான். அதனுல் அவனுக்கும் சிரமம், ஆறுமுகத்தாருக்கும் வேண்டிய நேரத்தில் துணை இல்லாத கஷ்டம் வந்து நேரலாம்.

ஆறுமுகத்தார் வேறு யாரும் அறியாத வண்ணம் சின்னையாவுக்காக ஒரு இரகசிய ஏற்பாட்டைச் செய்து வைத்தார்.

அவர் செய்த ஏற்பாட்டின்படி செல்லம்மா ஆஸ்பத் திரிக்கு வரும்போது ஒரு போத்தல் கள்ளை 'பாய்க்'கில் மறைத்து எடுத்து வந்து அவனுக்குக் கொடுத்துக் கொண்டி ருந்தாள்.

ஆறுமுகத்தாருக்கு இப்போது ஒரு காலை இழந்து முடமாகி விட்டார் என்பது மனத்துக்குப் பெரும் பாரமாக இல்லை. புண் கொடுத்துக் கொண்டிருந்த மரண வேதனையிலிருந்து விடுபட்டது ஒன்றே மனத்துக்கும் பெரும் நிம்மதி. கால் முடமானாலும் உபத்திரவ மில்லாமல் இனிமேலாவது வாழலாம் என்ற நம்பிக்கை அவர் மனதில் துளிர்த்தது. அறுவைச் சிகிச்சை செய்த புண் முற்றாக ஆறிய பின் விரைவாக வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள் என்று அவர் நம்பினார்.

அவருடைய இந்த நம்பிக்கை நீண்ட நாட்கள் அவர் மனத்தில் நிலைத்திருக்கவில்லை. அறுவைச் சிகிச்சை செய்து தையல் போட்ட புண்ணில் மறுபடியும் கொஞ்சம் கொஞ்சமாக வேதனை ஆரம்பித்தது. அந்த புண்ணின் ஓரங்கள் கறுத்து நீர் கசியத் தொடங்கியது.

சின்னையா ஆரம்பத்தில் ஆறுமுகத்தார் மேல் காட்டிய அநுதாபமும் அக்கறையும் இரண்டொரு நாட்களில் அவனிடத்தில் இல்லாமற்போயிற்று. அவன் ஆறுமுகத்தாரைக் கவனிக்காமல் வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் குதப்பிக் கொண்டு அந்த 'வாட்'டிலுள்ள ஒவ்வொரு நோயாளியின் கட்டிலுக்கும் போய் அவர்களோடு பேசிக் குசலம் விசாரித்துக் கொண்டிருந்தான். ஆறுமுகத்தாருக்கு உணவு ஊட்டுவதும் அடிக்கடி கழிந்து கொண்டிருக்கும் சிறுநீரைப் போச்சி வைத்து எடுப்பதும் அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அவன் சில சமயங்களில் ஆறுமுகத்தாரைச் சினந்து சுடு சொல் கூறி வேதனைக்குள்ளாக்கினான். ஆனால் ஒவ்வொரு நாளும் செல்லம்மா அங்கு வந்து சேரும் மதிய வேளையை மாத்திரம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இரவு நேரங்களில் இடையிடையே அவன் கண் விழிக்க வேண்டியிருந்ததால் ஒழுங்கான உறக்கம் இல்லாமல் அசதியும் சோர்வும் அவனை வருத்தின. வீட்டைப் பற்றிய எண்ணமும் மெல்ல மெல்ல அவன் மனத்தில்

மனத்தில் எழுந்து, அங்கிருந்து தப்பித்துச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர் பார்த்தான்.

ஆறுமுகத்தார் இப்போது உணவை வெறுத்தார். உணவு என்முல் அவருக்கு ஒரே அருக்குளிப்பு. ஆஸ்பத்திரியில் அவருக்கென்று கொடுக்கும் உணவுகளை வாங்கிவைத்து, மறுநாள் அவற்றை எடுத்து வெளியே கொட்டிஞன் சின்னையா.

செல்லம்மா தினமும் மதிய வேளையில் அவருக்கு உணவு கொண்டு வரவேண்டிய தேவையும் இப்போது இல்லாமல் போயிற்று. இப்போது அவரால் சிறிதளவு பால், சோடா குளுக்கோஸ் என்பவற்றை மாத்திரம் உட்கொள்ளுவதற்கு முடிந்தது.

ஆறுமுகத்தாருக்கு, இடையில் தன்னைப்பற்றித் தோன்றிய நம்பிக்கைகள் மறுபடியும் அருகிக்கொண்டு போகத் தொடங்கின. வீட்டுலே அவரைச் சுற்றிச் சுற்றிக் காகம் அழுததும், முற்றத்து மாங்கன்று பருவத்துக்கு முந்தி ஒரு காய் காய்த்திருப்பதும் நல்ல சகுனங்கள் அல்ல என்ற எண்ணம் அவர் நெஞ்சத்தை அச்சுறுத்துகின்றது. செல்லம்மா ஆஸ்பத்திரிக்கு வந்தபோது மறந்து போகாமல் அவளிடம் அந்த மாங்காயைப் பற்றி விசாரித்தார்.

''முத்தத்துக் கண்டிலே கிடந்த மாங்காய் பழுத்து விட்டதே?''

''முத்திச்சிவந்து கொண்டு வந்தது. இப்பென்னெண்டால் ஒரு பக்கத்திலெ அழுகல் தாவிட்டுது.'' என்முள் செல்லம்மா.

''அழுகலோ......?'' என்று கேட்டுக் கொண்டு மனம் இடிந்து கண்களை மூடிக் கொண்டு நெஞ்சம் பொருமுகிமுர்.

சற்று நேரம் பொறுத்துக் கண்களைத் திறந்து பீதியோடு செல்லம்மாவைப் பார்க்கிமுர். அவள் அவருக்கருகே நின்று கண் கலங்குகிமுள்.

ஆறுமுகத்தார் வீட்டிலிருந்து புறப்பட்டபோது செலவுக்காகக் கையோடு கொண்டு வந்த பணம் முழுவதும் கற்பூரம் குடிபோனது போலக் கரைந்து போயிற்று. இப்போது செலவுக்கு வேண்டிய பணத்தை வீட்டிலிருந்து தான் அவர் எடுக்கவேண்டும். அதை எடுத்து வரக்கூடியவள் செல்லம்மா ஒருத்திதான்.

ஆறுமுகத்தார் தன்னுடைய தலையணையின் கீழ் வைத்துக் கொண்டிருக்கும் பெட்டகத்துத்திறப்பை எடுத்து அவளிடம் கொடுத்து மறுநாள் வரும்போது பணத்தைக் கொண்டுவருமாறு சொல்லி அனுப்புகிறுர்.

செல்லம்மா அந்தத் திறப்பை இதுவரை காலமும் கையால் கூடத் தொட்டுப் பார்த்ததில்லை. இன்று அந்தத் திறப்பு தன் கைக்கு வந்திருப்பதை எண்ணி அவள் உள்ளம் மகிழ்ந்தாள். அந்த மகிழ்ச்சியில் தாமதமில்லாமல் விரைவாக வீட்டுக்குப்போக வேண்டும்; அந்தப் பெட்டகத்தைத் திறக்க வேண்டும்; அதனுள்ளே......உள்ளே......அவள் உள்ளத்தில் ஆவல் பொங்கிக்கொண்டிருந்தது.

செல்லம்மாவுக்கு அண்ணன் உறவான ஒன்றுவிட்ட சகோதரன் பொன்னம்பலமும் ஆறுமுகத்தாரைப் பார்ப்பதற்கு ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தான். அவன் ஆறுமுகத்தாரையும் அவரிலே தோற்றுகின்ற குறிகளையும் நன்ருக அவதானித்துப் பார்த்துக்கொண்டு செல்லம்மாவை 'வாட்'டுக்கு வெளியே அழைத்து வந்தான்.

"செல்லம், இனிமேல் இஞ்சை வைச்சிருக்கிறதிலெ வேலையில்லை. வீண் சிலவுகண்டியோ! துண்டைவெட்டி வீட்டுக்குக் கொண்டுபோவோம்."

"மகாலிங்கம் வரட்டும். அவன்ரை விருப்பமில்லாமல் கொண்டு போனுல் வீண் பழி வரும்."

"அவனென்ன சொல்லுறது? நீ உன்ரை புரியனை உன்ரை விருப்பப்படி கொண்டு போறதுதானே!"

"என்ரை மூப்பிலே செய்தால் உலகம் என்னைத்தான் தூற்றும். பெரிய தேப்பனுண்டு, பெருமக்களுண்டு...... எங்களுக்கென்ன?"

"அப்ப......நீ அவையளைத்தான் எல்லாத்துக்கும் முன்னுக்கு வைக்கப் போறாய் போலெ கிடக்கிது. செல்லம், நம்பி நடந்து ஏமாறாதே! உவன் மகாலிங்கம் ஒருதன்தான் இஞ்சினை திரியிறான், இல்லையே? மற்றவை ஆர்கவனிக்கினம். அவரும் நோக்கத்தோடைதான் பின்னாலெ இழுபடுறார். பார்; பார். எல்லாத்தையும் அமத்திக் கொண்டு போகத் தான் எல்லாரும் வருவினம்."

"வரட்டும்......வரட்டும். நான் அவ்வளவு பேய்ச்சி யில்லை. உவன் மகாலிங்கத்தை உதறினால் நான்தான் எல்லாத்தையும் அமத்திப் போட்டன் எண்டு உலகம் சொல்லும். உவனை முறியாமல் வைச்சுக் கொண்டு காரியம் பாக்கவேணும். இஞ்சை பாருங்கோவன்......பெட்டகத்துத் துறப்பு இண்டைக்கு என்ரை கைக்கு வந்திட்டுது."

"சரி......சரி...... இனிமேல் துறப்பைக் கைவிட்டு விடாதே."

"விடுவனே......? நல்ல கதைதான்."

"அது சரி......இந்தக் காணி பூமியளுக்கு என்ன செய்யப் போறாய்?"

"அவருக்குப் பிறகு எனக்குத்தானே!"

"எடி விசரி...... என்ன சொன்னாலும் பெண் புத்தி பின் புத்திதான். உனக்கு அரைவாசிதானெ வரும். மிச்சம் அவற்றை உரிமைக்காரருக்குப் போகும்."

"அப்பிடியே......?"

"அதுதான். இப்பவே அவரைக் கொண்டு ஒரு கை யெழுத்துப் போடுவிச்சுப் போட வேணுமெண்டு சொல்லுறன்."

"இஞ்சை வைச்சோ?"

"வீட்டுக்குக் கொண்டு போவமெண்டு அதுக்காத்தான் சொல்லுறன். நான் எத்தினை உள்ளடக்கத்தை மனதிலை வைச்சுக் கதைப்பனெண்டு உனக்குத் தெரியுமே!"

"அதுக்கு இப்ப இஞ்சை ஒண்டும் செய்யேலாது அண்ணை."

"சரி, சரி. ஆக மிஞ்சிப்போனால் ஆராவது ஒரு பிறக்கிராசியைப் பிடிச்சு நான் ஒரு கள்ள உறுதி போடுவிச்சுத் தாறன்" என்று அவளுக்கு நம்பிக்கை ஊட்டினான் பொன்னம்பலம்.

அவன் பக்கபலமாக இருக்கின்றான் என்ற நம்பிக்கையில் செல்லம்மாவின் உள்ளம் அச்சம் நீங்கி உறுதி அடைந்தது. ஆறுமுகத்தாரின் பணத்தோடு காணி பூமிகள் முழுவதையும் தான் அடையவேண்டும் என்று அவள் மனம் அவாவுற்றது. "பிள்ளை குட்டி இல்லாதவள் நான்; பின்னடிக்கு அந்தரிச்சுப் போகாமல் இருக்கிறதுக்கு எல்லாத்தையும் நான்தான் எடுக்க வேணும்" என்று உலகத்துக்கு நியாயம் சொல்லுவது போல தனக்குத்தானே அவள் சொல்லிக் கொண்டாள்.

## 15

ஆறுமுகத்தாரைப் பற்றி டாக்டர்கள் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னர் அவரோடு உறவுள்ளவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். அவர் அறிவு நினைவோடு இருக்கும்போது அவரைப் போய்ப் பார்த்து விடவேண்டும் என்ற விருப்பத்தில் இதுவரை வந்து பார்க்காதவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரிக்கு வந்து போனார்கள். மகாலிங்கத்தின் தாய் அவனுடைய சகோதரிகள் ஆகியோரும் ஆஸ்பத்திரிக்கு வந்து அவரைப் பார்த்தார்கள். மகாலிங்கம்

அடிக்கடி மாலையில் அங்கு வந்து பார்த்துக்கொண்டு திரும்பினுன்.

சின்னையா ஆறுமுகத்தாரைச் சரியாகக் கவனிக்க வில்லை என்பதைச் செல்லம்மாவும் அறிவாள். அவள் ஆஸ்பத்திரிக்கு வரும் சமயங்களில் ஆறுமுகத்தாரின் தேவை களை நன்ருகக் கவனித்துச் செய்து முடித்துக் கொண்டு தான் வீட்டுக்குக் கிளம்புவாள். வீட்டிலிருந்து சுண்டக் காய்ச்சி எடுத்து வரும் பசும்பாலை அவருக்குத் தினமும் பருக்குவாள்.

அன்றும் அவள் ஆறுமுகத்தாரைத் தூக்கி நிறுத்தி நெஞ்சோடு அணைத்து வைத்துக்கொண்டு வீட்டிலிருந்து கொண்டு வந்திருக்கும் பாலை ஒரு கிளாஸில் ஊற்றி அவருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டிக் கொண்டிருந் தாள்.

செல்லம்மா அங்கு வந்த பிறகு சின்னையா சற்றுநேரம் ஓய்வெடுத்துக் கொள்ளப் போவதுபோல, அவள் கொண்டு வந்திருக்கும் கள்ளை இரகசியமாகக் கடத்திக் கொண்டு வழமை போல ஒதுக்குப்புறம் தேடிப் போய்விட்டான்.

அந்த 'வாட்'டிலிருக்கும் நோயாளர்களில் மிகவும் பரிதாபத்துக்குரியவராகக் காணப்படுபவர் ஆறுமுகத்தார். அங்கு வருகின்ற பார்வையாளர்கள் எல்லோரும் அவரை அநுதாபத்தோடு பார்க்கிருர்கள். தூர நின்று அநுதாபப் படுவதோடு நில்லாமல் சிலர் நெருங்கி வந்து ஒரு சில வார்த்தைகள் அவருடன் பேசிக்கொண்டு போவார்கள். இளகிய மனம் படைத்த பெண்கள் சிலர் அவரைப் பார்த்து கண்கலங்கினுர்கள்.

செல்லம்மா ஆறுமுகத்தாருக்குப் பால் பருக்கிக் கொண்டிருந்த சமயம், அவருக்கு அருகில் இருக்கும் நோயாளியைப் பார்த்துக்கொண்டு நின்ற நடுத்தர வயதுப் பெண் ஒருத்தி ஆறுமுகத்தாரின் பக்கமாகத் திரும்புகிருள். அவளுக்கு ஆறுமுகத்தாரைக் கண்டபோது இரத்த உறவுக்

கும் பந்த பாசத்துக்கும் அப்பால்...ஏதோ ஒரு நெகிழ்வு—மனிதாபிமான உணர்வு அவளைக் கலங்க வைக்கிறது.

பூரிப்பான நீர்ப்பிடிப்புள்ள அவர் சரீரம் வற்றி எலும்புக் கூட்டுக்குத் தோல் போர்த்ததுபோல விகாரமாகத் தோன்றுகிறார். நீண்ட காலமாகக் குளிப்பு முழுக்கில்லாமல் படுக்கையில் கிடப்பதால் தொட்டம் தொட்டமாக வெள்ளைப் பொருக்குப் படிந்து கிடக்கிறது. ஐதாக அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தலைநீட்டும் நரை மயிர்கள் வளர்ந்து அலங்கோலமாகக் கலைந்து கிடக்கின்றன. தாடையிலும் வெண்மயிர் நீண்டு சுருள ஆரம்பித்து விட்டது. பற்கள் விழுந்து இடிந்துபோன பொந்து வாயின் உதடுகளை அடிக்கடி நாவினால் தடவி விட்டுக் கொள்ளுகிறார். இருண்டு பஞ்சடைந்து கிடக்கும் கண்கள் பீதியோடு அங்குமிங்கும் அலைகின்றன. தலையணை ஒன்றை வைத்து அதை 'றபர்சிற்'றினால் மூடி, அதன்மேல் தூக்கி வைக்கப்பட்டிருக்கும் துண்டிக்கப்பட்ட அந்தக் கால்...

அவரைக் கண்டு மனம் பேதலித்துப் போன அந்தப் பெண், அவர் அருகே வந்து சிறிது நேரம் மௌனமாகப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். சற்று நேரம் அப்படி நின்றவள், சம்பிரதாயமாக ஏதோ பேசவேண்டுமே என்பதற்காக செல்லம்மாவைப் பார்த்து, “உங்கடை தகப்பனே?” என்று அவளிடம் கேட்டுவிடுகிறாள்.

அந்தக் கேள்வி செல்லம்மாவின் உள்ளத்தில் சிறைப்பட்டுக் கிடக்கும் ஊமைத்துயரம் ஒன்றை ஆத்திரமாக வெடிக்கச் செய்கிறது. அவள் கண்கள் நெருப்பைக் கக்க ஆறுமுகத்தாரின் முகத்தை நேருக்கு நேர் ஒரு மின்வெட்டில் பார்த்து முறைத்துவிட்டு, தலையைக் குனிந்துகொண்டு, “இல்லை” என்ற பதிலை ஒரு தலை அசைப்பினால் தெரிவிக்கிறாள்.

அந்தப் பெண்ணுக்கு இப்போதுதான் அவர்கள் இருவருக்கும் இடையிலுள்ள உறவு முறை புரிகிறது. அவள்

இப்படி ஒரு கேள்வியைத் தான் கேட்டிருக்கக் கூடாது என்று வருந்திக்கொண்டு அந்த இடத்திலிருந்து நழுவினுள்.

அந்தச் சம்பவம் ஆறுமுகத்தார் உள்ளத்தைக் கொடுமையாகக் குத்துகிறது. செல்லம்மா விஷயத்தில் நான் குற்றம் இழைத்துவிட்டேன் என்று மனம் நொந்துகொண்டு கண்களை மூடிப் படுத்துக் கொள்ளுகிருர்.

செல்லம்மா ஆஸ்பத்திரியில் இருந்து புறப்படும் சமயத்தில் அவள் கொண்டு வந்திருக்கும் பணத்தை ஆறுமுகத்தாரிடம் எடுத்துக் கொடுக்கிருள். அவர் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவளிடம், ''துறப்பெங்கே...?'' என்று கேட்கிருர்.

''விட்டிட்டு வந்திட்டன்...அதங்கெ கிடக்குது'' என்று வெடுக்கென்று சினந்து பதில் சொல்கிருள் அவள். அவள் எடுத்தெறிந்து பேசுவதைக் கண்டு அவர் நெஞ்சம் பொருமுகிருர். சற்று நேரம் தாமதித்து, ''கொப்பியை எடுத்துப் பொடியனிட்டைக் குடு; அவன் அந்தக் குடுக்கல் வாங்கல் கணக்கு வழக்குகளைப் பாக்கட்டும்'' என்ருர்.

''என்னத்துக்குக் கொப்பி? அங்கே என்ன கிடக்குது? உள்ள காணி பூமியை வித்துச்சுட்டுத்தான் இனிமேல் உன்னைப் பார்க்க வேணும்'' என்று ஆத்திரத்துடன் சொல்லிக்கொண்டு வேகமாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டாள்.

அவள் வழமைபோல பஸ்ஸில் ஏறி வீட்டுக்குப் போவதற்குப் பதிலாக இடையில் இறங்கி மகாலிங்கம் வீட்டிற்கு வந்தாள். அவள் அங்கு வந்து சேருவதற்கு முன்னர் தாலிக் கொடியைக் கழுத்தில் விட்டு, மற்றய எல்லா நகைகளையும் கழற்றி மடியில் வைத்து மறைத்துக் கட்டிக்கொண்டாள். அந்த நகைகளை இனிமேல் வெளியில் யாருக்கும் காட்டுவதில்லை என்று தீர்மானித்தாள்.

செல்லம்மா, மகாலிங்கம் வீட்டிற்குப் போனபோது அவன் தாயும் சகோதரிகளும் ஓடி வந்து அவளைச் சூழ்ந்து

கொண்டார்கள். அவர்கள் ஆறுமுகத்தாரைப் பற்றி அவளிடம் கவலையோடு விசாரித்தார்கள். அவள் அவர்களுக்குப் பதில் சொல்லாமல் கொஞ்ச நேரம் சீறிச் சீறி அழுதாள். அவளுடைய கண்ணீரைக் கண்டு அவர்களும் அவளோடு சேர்ந்து கண்ணீர் விட்டு அழுதார்கள். அவர்களோடு சேர்ந்து அழுது முடித்தபிறகுதான் ஆறுமுகத்தார் நிலைமை கவலைக்கு இடமாகிக் கொண்டு வருவதை அவர்களுக்கு எடுத்துச் சொன்னாள். அவர்கள் ஒரு தடவை அவரை நேரிற் சென்று பார்த்திருக்கிறார்கள். மகாலிங்கம் அடிக்கடி பார்த்து வந்து அவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறான். இப்போது அவர் இருக்கும் நிலைமையைச் செல்லம்மா மிகைப்படுத்திச் சொன்னபோது மகாலிங்கத்தின் சகோதரிகள் அதைக் கேட்டுத் திரும்பவும் அழுவதற்கு ஆரம்பித்து விட்டார்கள்.

மகாலிங்கத்தின் தாய் ஆறுமுகத்தாருக்காக வருந்துவதிலும் பார்க்க செல்லம்மாவை நினைத்துத்தான் பெரிதும் மனம் நொந்தாள். அவளைவிடச் செல்லம்மா வயதில் குறைந்தவள்; பிள்ளை இல்லாதவள். ஆறுமுகத்தார் போய்விட்டால்...அவள் தனித்திருந்து கஷ்டப்படப் போகிறாள் என்று எண்ணி அநுதாபப்பட்டாள்.

செல்லம்மா அவர்கள் எல்லோருடைய அநுதாபங்களையும் பெற்றுக் கொண்ட பின்னர், அவள் அங்கு வந்திருக்கும் நோக்கத்தை மனதில் வைத்துப் பேச ஆரம்பித்தாள்.

"இனிமெல் என்ன கிடக்குது! எல்லாம் போவிட்டுது. உள்ள நகை நட்டை ஈடுபாடு வைச்சுத்தான் இதுவரையும் பார்த்தென், இனி உள்ள காணி பூமியை வித்துத்தான் எல்லா வரவுசிலவும் பாக்கவேணும். நான் அனுசார் இல்லாதவள், நான்தான் அந்தரிக்கப் போறன். தின்னக் குடிக்க வழியில்லாமல் தெருவுக்குத் தெரு பிச்சை எடுக்க வேண்டி வரப்போகுது."

அவள் சொல்வதை அவர்கள் எல்லோரும் கவலையோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவள், அவர்களுக்கு முன்னேற்பாடாகச் சொல்லி வைக்க விரும்பியதைச் சொல்லி முடித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினுள்.

## 16

ஆறுமுகத்தாருக்கு இப்போது அடங்காத நா வரட்சி. ஏதாவது ஒரு பானம் அவருக்கு அடிக்கடி தேவைப் படுகிறது. பத்து நிமிடங்களுக்கு ஒரு தடவை நாவை நனைக்க வேண்டும். ஆனுல் இரண்டு கரண்டிக்கு மேல் ஒரு தடவையில் அவரால் அதையும் குடிக்கவும் முடியவில்லை.

சத்திரசிகிச்சைக்குள்ளான இரணத்திலிருந்து ஊனமும் குருதியும் ஒழுகிக் கொண்டிருக்கிறது. துண்டிக்கப்பட்ட காலுக்குக்கீழ் போட்டிருக்கும் ''றபர்சீற்''ரை ஒரு நாளைக்குப் பல தடவை மாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த இரணத்திலிருந்து கிளம்புகின்ற துர்நாற்றத்தினுல் அவரை அணுகுவதற்கு எல்லோரும் கூசுகிருர்கள்.

டாக்டர்கள் எழுதிவிட்டுச்செல்லும் ஊசியும் குளிகைகளையும் ஒழுங்காகக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிருர்கள்.

கங்காணிமாரை முன்போல எவ்வளவு 'தாராளமாக'க் கவனித்தாலும் அவர்கள் மனம்விரும்பி இவருக்கு மருந்து கட்டுவதற்கு பின்வாங்கினுர்கள்.

''சேர்ஜன்'' கருணை நாயகம் முன்போலவே அவர் விஷயத்தில் பராமுகமாக இருக்கிருர்.

அடிக்கடி சிறுநீர் வேறு கழிந்து கொண்டிருக்கிறது.

சின்னையா இடையிடையே குளுக்கோஸ் கரைத்துப் பருக்குவதும், சிறுநீருக்குப் போச்சி வைத்து எடுப்பதுமாகச் சலித்துப் போய்விட்டான்.

அவன் மகாலிங்கத்திடம் சொல்லிக்கொண்டு அங்கிருந்து கிளம்பிவிடவேண்டும் என்று பலதடவைகள் நினைத்துவிட்டான். ஆனால் அவனுடைய முகத்துக்கு முன்னால் இதைப்போய்ச் சொல்லமுடியாமல் தயங்கித் தயங்கி சில நாட்களை ஓட்டினான். இனிமேலும் ஆறுமுகத்தாரைத் தன்னால் ஒக்கலிக்க முடியாது என்ற முடிவுக்கு அவன் வந்தபோது ஒருநாள் மகாலிங்கத்தைத் தனியே அழைத்துச் சொன்னான்:

"தம்பி......அண்ணனுக்கிது சுகப்படுமெண்டு நினைக்கிறியே?"

"அதை நான் எப்படிச் சொல்லேலும்?"

"அண்ணனுக்கு இதுதான் நகல். இனிமேல் நடக்க வேண்டியதுகளைக் கவனமாகப் பாருங்கோ! நீங்கள்தான் கட்டாயம் ஏமாறப்போறியள்."

"என்ன ஏமாற்றம்?"

"என்ன தம்பி நீ......மூக்கைப் பிடிச்சால் வாயைத் திறக்கத் தெரியாத குழந்தைப்பிள்ளை மாதிரி கதைக்கிறாய்! அப்பமெண்டால் பிறகு புட்டுக்காட்ட வேணுமே! அவற்றை சொத்துப்பத்துக்கு சோந்தைவுள்ளாக்கள் நீங்கள் தானே! வேற ஆர் இருக்கினம்? அவர் கண்ணை மூடுகிறதுக்கு முந்தி காணி பூமியைக் கையெழுத்து வைப்பி-காசு களஞ்சு, குடுக்கல் வாங்கல் எல்லாத்தையும் அறிஞ்சிபோடு-அவ...... உன்ரை பெரியாத்தை இருக்கிறாளெல்லே... ...அவ குறைஞ்சாளல்ல மூளி அலங்காரி, மூதேவி சண்டாளி......அவ முழுக்க அடசிக்கொண்டு போகலாமெண்டு நிக்கிறா. உங்களுக்கொரு தொட்டுத் தின்னிற சுண்ணும்பு கூட கிடையாமல் போகப்போகுது. இப்ப எல்லாம் அவவின்ரை ஆட்சிக்குள்ளே வந்துவிட்டுது போலதான் தெரியுது".

"நான் பொருளுக்காக அலையயில்லை. அவர் எங்கடை பெரிய தகப்பன் எண்டதனுலெ எனக்குமொரு கடமை யிருக்குது. இப்ப அவர் கிடக்கிற கிடையிலெ, அவரிட் டைப்போய் எப்பிடி இந்தக் கதையள் கதைக்கிறது? ஏதோ நடக்கிறது, நடக்கட்டும்'' என்று தன்னைக் காட்டிக்கொள் ளாமல் பெருந்தன்மையோடு பேசினுன் மகாலிங்கம்.

"ஏதோ, நானும் சொல்லவேண்டியதைச் சொல்லி போட்டன். இனிமேல் உங்கடை புத்தி. அதுகிடக்க...... நானுமொருக்கால் வீட்டுக்குப்போய் அதுகளின்ரை பாடு பறப்புகள் என்னெண்டு பாத்துக் கொண்டு வரலாமெண்டு நினைக்கிறன்''.

"ஓமோம். நீங்களும் வந்து கனநாளப்போச்சு. வீட்டுக்குப் போகத்தான் வேணும். இண்டைக்கு மாத்திரம் நில்லுங்கோ! நாளைக்கு நான் வந்து உங்களை விடுகிறன். அங்காலே எனக்கும் இரண்டு நாள் லீவுதானே!'' என்று சொல்லி சின்னையாவை மறித்துவிட்டு மகாலிங்கம் வீட்டுக்குப் புறப்பட்டான்.

மகாலிங்கம் வீடு போய்ச் சேர்ந்த பிறகும் சின்னையா வால் குழம்பின அவன் உள்ளம் அமைதி அடையவில்லை. சின்னையா வீட்டுக்குப்போய்விட்டால் ஆறுமுகத்தாருக்குத் துணைவேண்டுமே! யார் அவருக்குத் துணையாக நிற்பதற்கு முன் வரப்போகிறுர்கள்? ஆறுமுகத்தாரின் சொத்துக்களை எல்லாம் தான் அடைகிறதுக்கு வழி என்ன?என்று சிந்தித்துச் சிந்தித்து அவற்றுக்கொரு முடிவு காணமுடியாமல் மனம் குழம்பினுன். அவன் ஆஸ்பத்திரிக்குப் போய் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டான் என்பதை அறிந்து அவன் தாயும் சகோதரிகளும் அவனைத் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தாள். மகாலிங்கம் தன் மனத்திலிருக்கும் மனக் குழப்பங்களை எல்லாம் அவர்களுக்கு எடுத்துச்சொன்னுன். அவர்களுக்கும் இவற்றுக்கு என்ன செய்யலாம் என்று ஒன்றுமே புரியவில்லை. சிவலிங்கத்தை ஆறுமுகத்தாருக்கு

உதவியாக நிற்பதற்குச் சில தினங்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தால் என்ன? என்று மகாலிங்கம் மனத்துள் எண்ணினுன். அவன் எண்ணத்தை அவன் பேச்சிலிருந்து புரிந்து கொண்ட அவன் தாய், இதனுல் சகோதரர்களுக்குள் உண்டாகக்கூடிய பிரச்சனையைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்தோடு அவனுக்குச் சொன்னுள்.

''தம்பி, உந்த எண்ணம் மனதிலெ இருந்தால் அதை விட்டுவிடு. உன்ரை தம்பியின்ரை குணம் உனக்குத் தெரியும். அவன் கடைசிவரையும் சம்மதிக்கமாட்டான். பிற கேன் அவனேடை நீ கதைக்கிருய்?''

''நான் வேறை என்னணே அம்மா செய்ய?''

''வேறை என்ன செய்யிறது! பள்ளிக்கூடத்துக்கு லீவை போட்டுட்டு நீ போய் நில்.''

''தோட்டமும் கிடந்து சீரழியப் போகுது.''

''அதுக்கென்ன செய்யிறது? அவன் ஆஸ்பத்திரிக்குப் போகவும் மாட்டான். தோட்டத்துக்கெ தனிச்சுக் கிடந்து மாயட்டன்.''

''ஆஸ்பத்திரிவளிய நிண்டு நிண்டு மூத்தண்ணுவுக்கும் வருத்தம் பிடிச்சுவிடும்'' என்கிருள் அவனுடைய இளைய சகோதரி.

''அண்ணு போய் நிக்கிறதுதான் எல்லாத்துக்கும் நல்லது'' என்கிருள் மூத்தவள்.

''ஏன் அப்பிடிச் சொல்லுருய்?'' மகாலிங்கம் அவளைப் பார்த்துக் கேட்கிருன்.

''இல்லை, மச்சாள் சொல்லுறது சரிதான். நீங்கள் நிக்கிறதுதான் எல்லாத்துக்கும் நல்லது'' என்று அவன் மனைவியும் அவன் சகோதரி சொன்னதை ஆதரிக்கிருள்.

அவர்கள் மனதில் எதை வைத்துக் கொண்டு அப்படி சொல்கிருர்கள் என்பதை அவனும் அப்போது புரிந்து கொண்டான்.

"சின்னையா அண்ணனும் இண்டைக்குச் சொன்னர்."

"என்ன சொன்னவர்?" தாய் கேட்கிருள்.

"கேக்கிறதை நேரத்தோடை கேட்டுப் போடச் சொல்கிருர்."

"நீங்கள் என்ன செய்யப் போறியள்?" என்ருள் மனைவி.

"அது தான் யோசிக்கிறன்."

"என்ன யோசிக்கிறியள்? கேக்க வேண்டியதைக் கேக்கிறதுதானே."

"ஓமண்ணை, நீங்களேன் பின்னடிப்பான்? கேளுங்கோ!" என்று மூத்த சகோதரி சொல்கிருள்.

"சரி நாளைக்கு கதைக்கிறன்."

அவர்கள் எல்லோருமாகக் கூடியிருந்து பேசி முடிக்க இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும். இதற்கிடையில் சிவலிங்கம் தாயை வீட்டிற்கு வருமாறு இரண்டாவது தடவையாக அழைத்துவிட்டான். அவள் மக்களையும் அழைத்துக் கொண்டு இனிமேல் போவோம் என்று புறப்படுகின்ற சமயத்தில், சின்னையா பதட்டத்தோடு அங்கு வந்து சேர்ந்தான். எதிர்பாராமல் சின்னையா அந்த நேரத்தில் வந்திருப்பதும், அவனுடைய பதட்டமும் கண்டு அவர்கள் தடுமாறிப் போனர்கள். "தம்பி, அண்ணன் போவிட்டார்" என்று நாத்தடுமாற, 'கோ' என்று கதறினன். அதைக் கேட்டுப் பெண்கள் எல்லோரும் தலையிலே அடித்து குழறி ஆரம்பித்தார்கள். அவர்களின் அழுகுரல் கேட்டு அட்டமருகில் குடியிருப்பவர்கள் ஆண்களும் பெண்களுமாக அங்கு வந்து கூடினர்கள்.

மகாலிங்கம் வீடு, மரண வீடாக மாறியது. அயலில் வாழும் பெண்கள் மகாலிங்கத்தின் தாய், சகோதரிகள், அவன் மனைவி ஆகியோரைக் கட்டிப்பிடித்து முறைமைக்கு ஒப்பாரி வைத்தார்கள்.

மகாலிங்கம் சின்னையாவை நன்றாக அவதானித்தான். அவன் மது மயக்கத்தில் தடுமாறுவதும், அவன் பேச்சும் நடிப்பும் மகாலிங்கத்தின் உள்ளத்தில் எரிச்சலையும் சந்தேகத்தையும் மூட்டுகின்றது. ஆனால் அவன் இதுவரை செய்த உதவிகளை நினைத்து மகாலிங்கம் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருந்தான். அவன் இந்த நேரத்தில் கொண்டு வந்திருக்கும் செய்தியைச் சந்தேகிக்கும் அதே வேளையில் அதை உதாசீனம் செய்ய மகாலிங்கத்தால் முடியவில்லை.

மகாலிங்கம் உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கு கார் ஒன்றை ஏற்பாடு செய்தான். அவனோடு சேர்ந்து அயலவர்கள் சிலரும் புறப்பட்டார்கள். அந்தச் சமயம் மகாலிங்கத்தின் தம்பி சிவலிங்கமும் அவர்களோடு வந்து சேர்ந்து கொண்டான்.

கடைசி நேரத்திலும் ஒதுங்கி இருக்கக் கூடாது என்ற குடும்பப் பிணைப்புக் காரணமாகவோ அல்லது நெருக்கடியான இந்தச் சமயத்தில் தன் சகோதரனுக்குத் துணையாக நிற்க வேண்டும் என்ற எண்ணத்தினாலோதான் சிவலிங்கம் அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

வீதிகளில் சன நடமாட்டம் இல்லாததனால் கார் வேகமாகப் பறந்து சென்று ஒரு மணி நேரத்தின் பின்னர் அந்த மாவட்ட ஆஸ்பத்திரியின் பிரதான வாசலில் வந்து நிற்கிறது.

பகல் வேளையில் எந்தச் சமயமும் சன நெருக்கடிக்கும் பரபரப்புக்கும் பெயர் பெற்ற அந்த நகரம், மின்சார வெளிச்சத்தில் கண் விழித்துக் கொண்டு துயில்வது போல 'பளிச்'சென்று வீதி விளக்குகளின் ஒளியில் வெறிச்சோடித் தூங்குகிறது.

ஆஸ்பத்திரிக்கு நேர் எதிரிலிருக்கும் வீதியோரத்துத் தேநீர்க் கடைகளில் ஒன்று இப்போதும் திறந்திருக்கிறது.

ஆஸ்பத்திரியின் பிரதான வாசலுக்கெதிரே சமாந்தரமாகச் செல்லும் இரு பாதைகளுக்கும் மத்தியில் ஓங்கி

வளர்ந்திருக்கும் மரங்களில் உறங்கிக் கொண்டிருக்கும் காக்கைக் கூட்டம் இடையிடையே எழுப்பும் சத்தமும், சிறகடிப்பும் அவை இடும் எச்சம் தார் வீதியில் வந்து விழுகின்ற ஓசையும் அந்த நிசப்தமான இரவின் மௌனத்தைக் கலைக்கின்றன.

மகாலிங்கமும் அவனுடன் சென்றவர்களும் பரபரப்போடு காரை விட்டுக் கீழே இறங்குகிறார்கள். அவர்களின் பரபரப்பையும் அவசரத்தையும் கண்டு எங்கிருந்தோ திடீரென்று முளைத்த இருவர், அவர்களை நோக்கி வருகிறார்கள். அந்த இருவரில் ஒருவன், "கார் வேணுமா? பெட்டிக்கும் ஒழுங்கு செய்யலாம். கெதியாச் சொல்லுங்கோ" என்று அவர்களைப் பார்த்து அவசரப்படுத்துகிறான்.

"றேற்றைப் பற்றி யோசிக்க வேண்டாம்; அதெல்லாம் சீப்பாச் செய்யலாம்" என்கிறான் மற்றவன்.

பிணவாடையை மோப்பம் பிடித்து வந்திருக்கும் அவர்களும் அவர்கள் பேச்சும், மகாலிங்கத்துக்கும் அவனோடு வந்திருப்பவர்களுக்கும் வெறுப்பாக இருக்கிறது.

மகாலிங்கம் அவர்களோடு பேசுவதற்கு விருப்பமின்றி, அவர்களைத் திரும்பிப் பார்க்காமல் தன்பாட்டில் வாசலை நோக்கி நடக்கிறான்.

"என்ன பேசாமல் போறீங்கள்?" அந்த இருவரில் ஒருவன் திரும்பவும் கேட்கிறான்.

"எல்லாத்துக்கும் போவிட்டு வாறம்." சொல்லிக் கொண்டு சிவலிங்கமும் மற்றவர்களும் நடந்தார்கள்.

ஆஸ்பத்திரிப் பிரதான வாசல் 'கேற்' இழுத்து மூடப்பட்டிருக்கிறது. இரவு காவற்காரன் 'கேற்'றருகே அவனுக்கென்று அமைக்கப்பட்ட மரக் கொட்டிலுக்குள் தூங்கி விழுந்துகொண்டிருக்கிறான். மகாலிங்கம் சில நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தவன்; அடிக்கடி அங்கு வந்து போபவன். அதனால் காவற்காரனுக்கு அவன் அறிந்த

முகம். மகாலிங்கமும் அவனோடு சென்றவர்களும் 'கேற்' அருகே சென்றதும் காவற்காரன் அவர்களை நோக்கி எழுந்து வந்தான். மகாலிங்கம் அவனைப் பார்த்துச் சொன்னான்.

''என்ரை பெரியதகப்பன் மோசம் போய்விட்டாராம்.''

''எந்த வாட்?'' காவற்காரன் கண்களைக் கசக்கி, வாயைப் பெரிதாகத் திறந்து கொட்டாவி விட்டவண்ணம் கேட்கிறான்.

''பதினாலாம் வாட்.''

''அப்பிடி ஏதும் நடந்திருக்கிறதாகத் தெரியெல்லை.'' அவன் சொல்வதில் மகாலிங்கத்துக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. தான் நேரில் சென்று பார்க்கவேண்டும் என்று விரும்பினான்.

''ஒருக்கால் போய்ப் பார்த்துக்கொண்டு வாறன்.''

''இந்த நேரம் ஒருத்தரையும் உள்ளுக்கு விடக்கூடாது. அதுவும் வாட்டுப் பக்கம் போகவே கூடாது.''

''இவ்வளவு தூரம் கார் பிடிச்சி வந்திருக்கிறம். ஒருக்கால் போய்ப் பாராமல் எப்பிடித் திரும்பிப் போறது?''

''சரி. ஒராள் போய்ப் பார்த்துக்கொண்டு வாருங்கோ'' என்று சொல்லிக்கொண்டு அவனுடைய மரக்கொட்டிலுக்குத் திரும்பினான்.

மகாலிங்கம் 'கேற்'ரைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். அவனைத் தொடர்ந்து அவன் தம்பியும் அவன் பின்னால் நடந்தான்.

பதினாலாம் வாட்டின் விறாந்தையில் ஒரு 'லைற்' மாத்திரம் மின்னி மின்னி எரிந்து கொண்டிருக்கிறது. வாட்டின் உள்ளே இருள் கவிந்திருந்தபோதும், வெளியே எரிந்துகொண்டிருக்கும் அந்த ஒரு 'லையிற்'றின் மங்கிய

வெளிச்சத்தில் கட்டில்களின்மேல் வரிசையாகப் படுத்துக் கிடக்கும் நோயாளிகளின் உருவங்கள் மங்கலாகத் தோன்று கின்றன. அவர்கள் விடும் குறட்டை ஒலியும், சிலர் நோயின் கொடுமையினுல் உறக்கமில்லாது முனகும் சத்த மும் கலந்து அந்த இரவின் நிசப்தத்தில் பெரிதாக எழு கின்றன.

மகாலிங்கமும் அவன் தம்பியும் அந்த வாட்டிற்குள்ளே புகுந்து ஆறுமுகத்தாரின் கட்டிலருகே வந்து நிற்கிருர்கள்.

ஆறுமுகத்தார் சுயஉணர்வு இல்லாத நிலையில் கட்டி லின்மேல் பிணமாகக் கிடக்கிருர். அவருடைய சுவாசம் வாயினுல் போய்க் கொண்டிருப்பதனுல் பல்லில்லாத அவர் பொக்கைவாய் பலூன்போல உப்பி உப்பி சுருங்கிக் கொண் டிருக்கிறது. ஆறுமுகத்தாரைப் பார்த்தெடுப்பதற்கு இந்த நிலையில் ஒருவர் துணையாக இல்லாமல் அநாதரவாக அவர் கிடப்பதைக் காண மகாலிங்கத்தின் கண்களில் நீர் முட்டு கிறது.

சிவலிங்கம், பிணம் போலக் கிடக்கும் ஆறுமுகத்தாரை இப்போது திடீரென்று வந்து கண்டதனுல் அவன் உள்ளத் தில் அவர்மேல் இருந்துவந்த வெறுப்பு மறைந்து மனம் கசிகிறது.

மகாலிங்கம் இப்போதுதான் சின்னையா எங்கே என்று தேடினுன். அவர்கள் வீட்டில் இருந்து புறப்பட்ட சமயம் அப்போதிருந்த பரபரப்பில் சின்னையாவை அவன் மறந்து போனுன். சின்னையா அதுதான் சமயமென்று யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் அங்கிருந்து மெல்ல நழுவிக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்துவிட்டான்.

அவன் வீட்டுக்குப் போக விரும்பினுல் இப்படி அபத்த மான ஒரு செய்தியையா அங்கு வந்து சொல்லவேண்டும்? ஏன் வந்து பொய் சொன்னுன்? என்று மகாலிங்கம் சிந்தித் தான்.

அப்போது ஆறுமுகத்தாருக்குப் பக்கத்துக் கட்டிலில் கிடக்கும் நோயாளியோடு தங்கி நிற்கும் ஒருவன் மகாலிங்கம் அங்கு வந்து நிற்பதைக் கண்டு கொண்டான்.

''என்ன மாஸ்டர், நீங்கள் சரியான ஆளை இவருக்குத் துணையாக விட்டிட்டுப் போயிருக்கிறியள்'' என்றான் அவன்.

''ஏன், என்ன நடந்தது?''

''அந்தாள் சும்மா இஞ்சை நிக்கிறதுதான்......எங்கே இவரைக் கவனிக்கிறார்! கண்ட கண்டவையோட எல்லாம் கதைச்சுக் கொண்டு திரியிறதுதான் அவருக்கு வேலை. இண்டைக்கு என்ன நடந்தது தெரியுமே...!''

''என்ன நடந்தது?''

''அந்தாள் எங்கெயோ போவிட்டார். இவர் கட்டிலாலெ உருண்டு கீழே விழுந்துபோனார். பிறகு நாங்கள் தான் தூக்கிக் கிடத்தினம். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு தான் அவர் வந்து சேர்ந்தார். இவரைப் பாத்துப்போட்டு வெளிலெ போனவர்தான் பிறகு ஆளையே காணயில்லை.''

''அப்பிடியா?''

''ஓம், மாஸ்டர். மாஸ்டர் குறை நினைக்கக் கூடாது; நீங்க சரியில்லை மாஸ்டர். அவரைப் போலெ ஒரு பொறுப்பில்லாத ஆளைக் கொண்டுவந்து விட்டிட்டிப் போனால் வேறை என்ன நடக்கும்?''

''இனிமெல் நான்தான் நிக்கப் போறன்'' என்று அவனுக்குக் கூறினான் மகாலிங்கம்.

ஆறுமுகத்தாரை நிர்க்கதியாக இந்த நிலையில் போட்டு விட்டு சின்னையாவைப்போல் அவனும் வீட்டிற்கு ஓடிப் போய்விடமுடியுமா? அவன் சிவலிங்கத்தையும் அவனோடு வந்தவர்களையும் ஊருக்கு அனுப்பி வைத்துவிட்டு, அவருக்குத் துணையாக அங்கே தங்கினான்.

## 17

ஆறுமுகத்தாருக்கு மறுநாள் காலையில்தான் மயக்கம் சிறிது தெளிந்து நினைவு திரும்பியது. அந்தத் தெளிவு வெகு நேரம் நிலைத்து நிற்கவில்லை. சொற்ப நேரத்தின் பின்னர் அவர் மறுபடியும் மயக்கமடைந்தார். அதன் பின்பு அறிவு திரும்புவதும் மறுபடியும் மயக்கமடைவதுமாக மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருந்தது.

இந்த நிலைமை நீடிக்துக்கொண்டுபோனல் அவர் முடிவு வெகு தூரத்தில் இல்லையென்று உணர்ந்து மகாலிங்கம் உள்ளூரப் பீதியுற்ருன்.

''சேர்ஜன்'' கருணைநாயகத்தைச் சந்தித்து ஆறுமுகத் தார் பற்றி அவரோடு அவசரமாகப் பேசவேண்டும் என்று அவன் விரும்பினன். ஆனல் சில தினங்களுக்குமுன் அந்த 'வாட்'டில் தங்கியிருக்கும் ஒரு நோயாளிக்கு உதவியாக நின்ற ஒருவரை நியாயமின்றி அவர் கை நீட்டி அடித்த சம்பவம் அவனுக்குத் தெரிந்திருந்தது. அதனல் அவரைக் கண்டு பேசுவதற்குக் காலை நேரம்தான் பொருத்தமானது என்று அவன் தீர்மானித்தான். மதியம் திரும்பிவிட்டால் அவருக்கு மதுமயக்கமும், அந்த மயக்கத்தினல் மிகைப்படும் அதிகார வெறியும் தலைக்கேறிவிடும். அதற்கு முன்னர் சந்தித்து அவரோடு பேசவேண்டும் என்று அவன் தீர் மானித்தான். ஆறுமுகத்தார் விஷயத்தில் முன்னர் ஒரு தடவை அவரைக் ''கவனித்தும்'' இருக்கிருர்கள். வெளி யில் சொல்லிக்கொள்ளமுடியாத அந்த உரிமையும் தனக் குண்டு என்ற எண்ணத்தோடு அவர் 'வாட்'டுக்கு வரும்

சமயம் அவரை எதிர்பார்த்து விறாந்தையில் அவன் காத்து நின்ருன்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு, சேர்ஜன் கருணைநாயகம் அவருக்கே உரித்தான அந்தக் கர்வப்பார்வை நான்கு திக்கிலும் ஆட்சி செய்ய விறாந்தையில் நடந்து வந்து கொண்டிருந்தார். அவர் வருகையைக் கண்டு அந்த விறாந்தையில் அதுவரை இருந்தவர்கள் அங்கிருந்து எழுந்து, ஒவ்வொருவராக மெல்ல நழுவிக்கொண்டு விலகிச் சென்ருர்கள். மகாலிங்கம் மாத்திரம் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு ஒரு தூணோடு ஒதுங்கி அவர் தன்னருகே வரும் வரை எதிர் பார்த்து நிற்கிருன்.

''சேர்ஜன்'' அலட்சியமாக நடந்து வந்து, மகாலிங்கத்தைக் கடக்கின்ற சமயத்தில், அவன் ''ஸேர்...'' என்று பணிவாக அழைத்தவண்ணம் அவனைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கும் அவரைப் பின்தொடர்ந்தான்.

அவன் தன்னோடு பேசுவதற்கு விரும்புகிருன் என்பதை அவர் அறிந்தும், அறியாதவர்போல அவருக்கே இயல்பான அகம்பாவத்துடன் மௌனமாக நடக்கிருர்.

அவன் நெஞ்சு படபடக்க மெல்ல பின்னுல் போய்க் கொண்டிருக்கிருன். அவனுடைய காலடி ஓசையிலிருந்து அவன் தன்னைப் பின்தொடருவதை இன்னும் நிறுத்திக் கொள்ளவில்லை என்பதை அவர் உணருகிருர்.

திடீரென்று அவருடைய நடையின் வேகம் தடைப்படுகிறது. சட்டென்று பின்னுல் திரும்பி அவனைப் பார்த்து முறைக்கிருர்.

விறாந்தையிலிருந்து இறங்கி விலகிப் போனவர்கள் தூர நின்று நடப்பதைக் கவனிக்கிருர்கள்.

மகாலிங்கத்தின் உள்ளத்தைப் பயப்பிராந்தி பிடித்து உலுப்ப சில கணங்கள் தடுமாறுகிருன்.

க—10

அவர் தலையைப் பலமாக ஆட்டி அவனை எச்சரித்து விட்டு, திரும்பி நடப்பதற்கு கால் எடுத்து வைக்கிறார். அவன் தயங்கிக் கொண்டு, ''ஆறுமுகம்...'' என்று தான் சொல்ல வந்ததைச் சொல்வதற்கு முன், ''எந்த ஆறுமுகம்? அவனிவனைப் பற்றியெல்லாம் என்னோடை என்ன கதை? சும்மா போம் ஐ சே!'' என்று கூச்சல் போட்டுவிட்டு ஆவேசத்துடன் திரும்பி நடந்தார்.

மகாலிங்கத்தைக் கொடிய மின்னலொன்று தாக்கியது போலத் திகைத்தான். எதிர்பாராத அந்தத் தாக்குதலினால் அவமானமடைந்து விக்கித்து நின்றான்.

'சேர்ஜனின்' நிழல்போல எப்போதும் அவரைப் பின் தொடர்ந்து கொண்டிருக்கும் கங்காணி சட்டநாதன் நடந்து முடிந்த இந்த நாடகத்தைத் தூர நின்று கண்டு கொண்டான்.

அவன் மகாலிங்கத்தைப் பார்த்து தன்னருகே அவனை வருமாறு கை காட்டி அழைத்தான்.

மகாலிங்கத்துக்கு உள்ளத்தில் அப்போது எழுந்த கொதிப்பினால் சினம் தீரும்வரையும் அவனைப் போட்டு உதைக்க வேணும்போலத் தோன்றுகிறது. ஆனால் உணர்ச்சி வசப்பட்டு விபரீதமாக அப்படி நடந்த பிறகு, அதன் விளைவையுமல்லவா எதிர்நோக்க வேண்டும்? ஒருவன் இரண்டு எழுத்துக் கற்றவனாக இருந்துவிட்டால், சமூகத்தில் இழைக்கப்படுகின்ற அநீதிகளை எல்லாம் இன்று தாங்கிக் கொண்டு வாழ்வதுதான் கல்வியின் பேறும் நாகரிகமுமென்றாகிவிட்டது. இந்தச் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மகாலிங்கத்தினால் அவனுடைய மனக் குமுறல்களைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு மார்க்கமில்லை. அவன் தன் உள்ளத்தை ஒருவாறு நிதானப்படுத்திக் கொண்டு சட்டநாதன் முன்போய் விறைப்பாக நின்றான்.

"நீர் படிச்சனீரல்லே... நீர்போய் ஒண்டும் தெரியாத ஆள் மாதிரி... நேர காலமறியாமல் நடக்கிறீர்! ஐயாவுக்கு இப்ப மூட் சரியில்லை. எல்லாம் நாங்கள் பிறகு போய்க் கதைப்போம்'' என்றான் சட்டநாதன்,

"ஐயாவுக்கு மூட் எப்ப சரிவரும்? இண்டைக்குக் காலை யிலேயே மூட் பழுதாப் போச்சோ?'' என்று கேட்க நினைத் தவன், நாக்கு நுனிவரை வந்த வார்த்தைகளை வெளியே சொல்லாமல் அடக்கிக் கொண்டு மௌனமாக நின்றான்.

"என்ன பேசாமல் நிக்கிறீர்? இரண்டு பேருமாகத் தனி யப்போய் ஐயாவைப் பிறகு காணுவம்...சரிதானே:'' என்று மெல்லிய அந்தக் கஸியஸ் சிரிப்புடன் திரும்பவும் கேட்கி றான் சட்டநாதன்.

"முதல் ஒருக்கால் போய்த் தனியக் கண்டாச்சு. பிற கென்ன தனியாக் காணுறது?'' என்று சொன்னான் மகாலிங் கம்.

"அது ஒரு மாதத்துக்கு முந்தி''

"அப்ப கண்டதுக்கு என்ன நடந்தது?''

"ஏதோ...உங்கடை நன்மைக்குத்தான் சொல்லுறன். கேட்டாக் கேளும்; அவ்வளவுதான்''

"காணுவம்; சும்மா போய்''

"அதெப்பிடி?''

"முந்திக் குடுத்ததுதானே!''

"அது முடிஞ்ச கதை''

"இப்ப எவ்வளவு?''

"இந்த முறை கொஞ்சம் கூடக் குடுப்பம், ஒரு எழு பத்தைஞ்சு''

"ஏன்?''

"முந்தின தடவைபோல நடவாமல் இருக்க வேணு மெண்டால்......''

‘‘பிறகு கவனிக்காமல் விட்டால்......’’

‘‘அதுக்கு நான் பொறுப்பு.’’

‘‘நிச்சயமாக?’’

‘‘நிச்சயமாக’’ சொல்லிக் கொண்டு அந்தச் சிரிப்பு சிரிக்கிறுன் சட்டநாதன்.

மகாலிங்கம் திடமாக ஒரு முடிவு செய்து கொண்டான், கடைசி முறையாக சேர்ஜனுக்கு எழுபத்தைந்து ரூபா கொடுப்பதற்கு.

சட்டநாதன் இந்தத் தடவை தனக்கென்று உரிய பங்கை அவனிடம் கேட்கவில்லே. மகாலிங்கத்தின் பேச்சில் தெறித்த கண்டிப்பை அவதானித்த சட்டநாதன் தனக்குரிய தொகையையும் தந்திரமாகச் ‘சேர்ஜனின்’ தொகையோடு சேர்த்துக் கொண்டு விட்டான். அவன் செய்கின்ற தந்திரத்தை உணர்ந்து கொண்டுதான், மகாலிங்கமும் அந்தத் தொகையைக் கொடுப்பற்குச் சம்மதித்தான் என்பது அவனுக்கு தெரியாது.

சேர்ஜன் வாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு கங்காணி சட்டநாதனுடன் சென்று அவருடைய பிரத்தியேக அறையில் அவரைச் சந்திப்பதற்கு மகாலிங்கம் தயாராக நின்றுகொண்டிருந்தான். ஆனுல் ‘சேர்ஜன்’ வாட்டிலிருந்து விரைவாக வெளியே வந்து, நேரே அவருடைய காருக்குச் சென்று அதில் ஏறிக் கொண்டு அங்கிருந்து கிளம்பிப் போய்விட்டார்.

அவர் தாமதிக்காமல் அங்கிருந்து கிளம்பிப் போய் விட்டது மகாலிங்கத்துக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. அவர் மறுபடியும் எப்போது வருகிருர் என்று ஆவலோடு அவருடைய வருகையை எதிர்பார்த்தான்.

அன்று நடுப்பகல் செல்லம்மாவும் வேலுப்பிள்ளேயும் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார்கள். வேலுப்பிள்ளேக்கு ஆறுமுகத்தாரைப் பார்த்ததும் உள்ளத்தில் அதிர்ச்சியாகவும் ஒருபுறம் ஏமாற்றமாகவும் இருந்தது.

ஆறுமுகத்தார் கவலைக் கிடமானவராகி விட்டார். இப்போது பெரும்பாலும் அவர் நினைவு தப்பின நிலையில் கிடக்கிறார். பல மணி நேரங்களுக்குப் பிறகு இடையிடையே பிரக்ஞை திரும்புகிறது. அதுவும் தெளிவில்லாமல் ஒரு சில நிமிடங்களுக்கு மாத்திரம் நிலைத்திருக்கும். நா வரட்சி அதிகரித்து அடிக்கடி வாயைத் திறந்து கொண்டிருக்கிறார். கரண்டியில் பால் வார்த்து அதை அவர் வாய்க்குள் ஊற்றும் போது அது தொண்டைக்குள்ளே செல்லாமல் கடை வாயால் வழிந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

வேலுப்பிள்ளைக்கு வரும்போது இருந்த உற்சாகமும் ஆவலும் ஆறுமுகத்தாரைப் பார்த்தபின் திடீரென்று மறைந்து போயிற்று. அவர் மனதில் வெகுகாலமாகக் கரந்து கிடக்கும் ஒரு நோக்கம் காரணமாகத்தான் ஆறுமுகத் தாரோடு சுமுகமானஉறவை வளர்த்துக் கொண்டு வந்தார். அவர் மனத்திலுள்ள எண்ணத்தை வெளியிடுவதற்குத் தகுந்த சந்தர்ப்பத்தை பல காலமாக எதிர்பார்த்திருந்தார்.

ஆறுமுகத்தாருக்கு முதல் தாரத்தின் வழியாக வந்து சேர்ந்த கொஞ்ச நில புலன்கள் உண்டு. அந்தத் தாரம் காலமாகி செல்லம்மாவை மணந்து கொண்ட பிறகு, நியா யமாக அந்த நிலங்களை அதற்கு உரித்துடையவர் களுக்கு அவர் உரிமைப்படுத்தி இருக்கவேண்டும். அவர் அந்த நிலங்களை அப்படி விட்டுக் கொடுக்காமல் தொடர்ந் தும் தன் சொத்தாகவே அநுபவித்து வந்தார். முதல் தாரத்தின் தம்பி வேலுப்பிள்ளை அவரோடு தகராறுக்குப் போகாமல் உரிய நேரம் வரட்டும் என்று இதுவரை காத்தி ருந்தார். இப்போதுள்ள சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், அவர் இனிமேல் எப்போதுதான் அந்த நிலத்தைப் பிரச்சினை இல்லாமல் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளமுடியும்?

வேலுப்பிள்ளை ஆறுமுகத்தாருக்கு மிக நெருக்கமாக அருகில் வந்து நின்று, அவர் முகத்தைச் சில கணங்கள் உன்

னிப்பாக நோக்குகிறூர் ''அத்தான்...அத்தான்'' என்று அழைத்துப் பார்க்கிறூர்.

ஆறுமுகத்தாரில் உயிர்ப்பில்லே. முகத்தில் பிரேதக்களே. ''அத்தான்...அத்தான்'' மறுபடியும் அழைக்கிறூர்.

அவர் கண்கள் கலங்குகின்றன.

வேலுப்பிள்ளே மேலும் கொஞ்ச நேரம் அங்கு தரித்து நின்று விட்டு, மகாலிங்கம், செல்லம்மா இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு வெப்பிசாரத்தோடு புறப்பட்டார்.

செல்லம்மா இதுவரை அடக்கி அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் துயர வெள்ளம் கரை உடைத்து ஆருகக் கண்ணீர் வடிக்கிருள்.

ஆறுமுகத்தார் உயிரோடு இனிமேல் அதிகநாள் வாழப் போவதில்லே. அவரை ஆஸ்பத்திரியில் வைத்திருப்பதனுல் ஒரு பயனும் கிட்டாது. வீட்டுக்குக் கொண்டு போவதுதான் நல்லது. அவர் உயிர் ஆஸ்பத்தியிரில் வைத்துப் பிரிந்தால் வீண் சிரமங்கள். சடலத்தை வீட்டுக்குக் கொண்டு செல்வதில் வீண் செலவுகள். இவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமாஞல் இப்போதே அவரை வீட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று செல்லம்மா விரும்பிஞள். ஆஞல் அந்த விருப்பத்தை அவள் வெளியிட முடியுமா? மகாலிங்கம் அவளேப் பற்றி என்ன நினேப்பான்?

செல்லம்மா ஆறுமுகத்தாரைப் பார்த்து அழுது கண்ணீர் விட்டவண்ணம் வீட்டுக்குத் திரும்பிப் போவதற்கு மனமின்றி ஏங்கிக் கொண்டு நின்ருள். அவள் அங்கு நிற்பதனுல் உண்டாகக்கூடிய சிரமங்களே மனத்தில் கொண்டு மகாலிங்கம் அவளே வற்புறுத்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

அவள் வீடு வந்து சேர்ந்ததும் முதல் வேலேயாக ஆறுமுகத்தார் கொடுத்த திறப்பிஞல் அவருக்குச் சொந்த

மான அந்தச் சிறிய மரப்பெட்டகத்தைத் திறந்தாள். ஆறுமுகத்தார் சிறுகச் சிறுகத் தேடிவைத்த அவருடைய சம்பாத்தியங்கள் முழுவதையும் வாரிச் சுருட்டி, மறைத் தெடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

அவளுக்கு எப்போதும் இரகசிய ஆலோசனைகள் வழங்கி வழி நடத்திக் கொண்டிருக்கும் சகோதரன் பொன்னம்பலம் வீட்டை நோக்கி வேகமாக நடந் தாள்.

## 18

அன்று காரில் ஏறிக்கொண்டு ஆஸ்பத்திரியிலிருந்து பறந்துபோன சேர்ஜன் கருணைநாயகம் இரண்டு தினங்கள் கடந்த பின்னர்தான் திரும்பவும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வந்திருப்பதை மகாலிங்கம் அறிந்து கொள்வதற்கு முன், கங்காணி சட்டநாதன் தெரிந்து கொண்டு மகாலிங் கத்தைத் தேடி வந்தான். மகாலிங்கம் அவனைச் சந்தித் ததும், ஆறுமுகத்தாரின் பணத்தில் ஒரு எழுபத்தைந்து ரூபாவை உடனடியாக எடுத்து வந்து அவனிடம் கொடுத் தான். அவன் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு சேர்ஜனின் அறையை நோக்கிச் சென்று சொற்ப நேரம் கழிந்திருக்கும். எதிர்பாராதவிதமாக சேர்ஜன் பதினொ லாம் வாட்டுக்குள் பிரசன்னமானார். அந்த வாட்டில் வேறு யாரையும் அவர் பார்வையிடாமல், ஆறுமுகத்தாரை மட்டும் பிரத்தியேகமாகப் பரிசோதித்துக் கொண்டு உடனே தனது அறைக்குத் திரும்பினார்.

மகாலிங்கம் வாட்டிலிருந்து வெளியே வந்து கங்காணி சட்டநாதனையும் அழைத்துக்கொண்டு சேர்ஜனின் அறைக்

குச் சென்ருன். அவர்கள் இருவரும் அறைக்குள்ளே நுழைந்தவுடன் சேர்ஜன், மகாலிங்கத்தைப் பார்த்துச் சொன்ஞர்:

"அவருக்கு இன்னுமொரு ஒப்பறேசன் செய்ய வேணும்."

"முழுங்கால் வரையில் எடுத்தாச்சு ஸேர், இனி மேல்......?" என்று வார்த்தைகளை மென்று விழுங்கிஞன் மகாலிங்கம்.

"இடுப்பு வரையில் அந்தக் கால் கழட்டவேணும். புண் மேலெ போயிட்டுது."

"இந்த ஒப்பறேசன் சக்சஸ் ஆகுமா ஸேர்?"

"அதை எப்பிடி நிச்சயமாகச் சொல்ல முடியும்? ட்றை பண்ணுறன்; அவ்வளவுதான். பேஷன்ரின்ரை 'பொடி' வீக்காப் போச்சு. உண்மையைச் சொன்ஞல், எதுக்கும் சந்தேகந்தான். நான் நாளைக்குக் காலையிலெ அவசரமாகக் கொழும்புக்குப் போறன். மூண்டு நாளில் உடனே திரும்பி விடுவன்; வந்த பிறகுதான் எல்லாம்."

அவர் சொல்ல வேண்டியவைகள் எல்லாவற்றையும் படபடென்று சொல்லி முடித்துக் கொண்டு பார்வையை மறுபக்கம் திருப்பிக் கொள்ளுகிருர். இனிமேல் அவர் மனம் வைத்துப் பேசமாட்டார் என்பது மகாலிங்கத்துக்கு நன்ருகத் தெரியும். அவர் விரும்பாதபோது வலிந்து அவரோடு பேசக்கூடாது; அப்படி மீறிப் பேசிஞல் அவரிடம் அவமானப்படும்படியாக நேரும் என்பதும் அவன் அறியாததல்ல. இன்று அவன் கொடுத்த பணத்துக்காக இவ்வளவாவது பேசியிருக்கிருர். ஆஞல் அவனுக்கு அவரிடமிருந்து கிடைத்தது வெறும் ஆலோசனை மாத்திரம் தானே!

ஆறுமுகத்தாரை இனிமேலும் அங்கே வைத்துக் கொண்டிருப்பதால் அவர் உயிரை மீட்டெடுத்துவிட முடியாது என்ற முடிவுக்கு மகாலிங்கம் வந்தான். சேர்ஜன்

தன் வாயினுலேயே அதனையும் சொல்லட்டும் என்ற முடிவோடு—அவர் பேசுவதற்கு விரும்பாதபோதும்—அவன் தனக்குள்ள அவசியத்தை மனத்தில் கொண்டு தீர்மானமாக அவரிடம் கேட்டான்.

"ஸேர்...உங்களுக்கு நம்பிக்கை இல்லையெண்டால் நான் வீட்டுக்குக் கொண்டு போக விரும்புகிறன்."

"ஒக்கே! கொண்டு போறதுதான் நல்லது; கொண்டு போம்."

சேர்ஜன் கருணைநாயகம் கதிரையை விட்டு எழுந்தார்.

மகாலிங்கம் பேய் அறைந்தவன் போல தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெளியே வந்தான்.

இதன் பிறகு ஒரு கணமும் அங்கு தாமதிக்காமல் ஆறுமுகத்தாரை வீட்டுக்குக் கொண்டு செல்வதற்குத் தீர்மானித்தான். அந்தச் சமயத்தில் அவன் தம்பி சிவலிங்கமும் அங்கு வந்து சேர்ந்தான். மகாலிங்கம் அவனை அழைத்து, வெளியே சென்று டாக்ஸி ஒன்றைக் கொண்டு வருமாறு அவனிடம் சொல்லி அனுப்பினுன். சிவலிங்கம் திரும்பி வருவதற்குமுன்பு, அங்கு செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் துரிதமாகச் செய்து முடித்துக்கொண்டு அவன் வருகைக்காகக் காத்திருந்தான்.

அந்தச் சமயத்தில் ஒவ்வொரு 'செக்கண்டும்' ஒவ்வொரு யுகமாக அவனுக்குக் கனக்கிறது. அவன் உள்ளம் பொறுமையை இழந்து கொந்தளிக்கிறது. ஊழலும், இலஞ்சமும் புற்றெடுத்து - கொடிய கருநாகங்கள் குடி கொண்டிருக்கும் அந்தப் பாவ பூமியிலிருந்து விடுபட்டுப் போய்விடவேண்டும் என்று துடியாகத் துடிக்கிறது.

"இந்தத் தேசத்தில் வாழும் ஏழை எளியவர்களை வஞ்சித்து, தங்கள் நலன்களைப் பேணிக் கொண்டிருக்கும் கயவர்களிடம் அறிந்துகொண்டே ஏமாறுகிறவர்கள் இருக்கின்றவரையும் அந்தச் சமூகத் துரோகிகள் அழியப்

போவதில்லை. அவர்களைப் பூண்டோடு ஒழித்துக் கட்டுவதன் மூலந்தான் பஞ்சப்பட்ட மக்களின் வாழ்விலே மண்டிக் கிடக்கும் இருள் நீங்கி, புது யுகம் மலரும். அந்த மலர்ச்சிக்கு என்னாலான பங்களிப்பினை நான் உறுதியாகச் செலுத்துவேன்'' என்ற வச்சிரமுடிவை அந்தக் கணத்தில் அவன் உள்ளம் ஆவேசத்தோடு எடுத்துக்கொள்ளுகிறது.

டாக்ஸி ஒன்று ஆஸ்பத்திரி வளவுக்குள் மிக வேகமாக ஓடிவந்து, பதினொன்லாம் 'வாட்'டுக்கு வெளியே விருந்தை ஓரத்தில் நிற்கிறது. சிவலிங்கம் அதிலிருந்து இறங்கி, தமையனை நோக்கி வருகிறான்.

அவர்கள் இருவருமாகச் சேர்ந்து வேறு எவருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் தமது இரத்தக் கடனைத் தீர்க்கும் கடைசி நேரப் பொறுப்புணர்ச்சியோடு ஆறுமுகத்தாரைத் தாமே தனித்துத் தூக்கி வந்து 'டாக்ஸி'யில் ஏற்றுகிறார்கள்.

'டாக்ஸி' உறுமிக் கொண்டு அங்கிருந்து மெல்லப் புறப்படுகின்றது.

## 19

ஆறுமுகத்தாரின் வீட்டு விறாந்தையில் - அந்தத் திறவா நெடுங் கதவோரத்தில் - அவரைக் கிடத்தி இருக்கிறார்கள். நீரும் குருதியும் கலந்து ஒழுகும் அவர் புண்ணிலிருந்து வீசும் துர்க்கந்தம் அந்த வீடெங்கும் வியாபித்துப் பரவிக்கொண்டிருக்கிறது. அந்தக் கொடிய நாற்றத்தைப் போக்குவதற்காக கொளுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஊதுவத்திகள் வளையம் வளையமாக வெண்புகையைக் கக்குகின்றன. படுக்கையிலும் அவர் உடல் மேலும் தெளிக்கப்பட்டிருக்கும் 'சென்ற்ரின்' மணமும் ஊதுவத்திகளின் மண

மும், புண்ணின் நாற்றமும் இழைந்து புதிய அருவருப்பான ஒரு வாடையை அங்கு இறைக்கின்றன.

வேப்பமரத்தில் இருந்து காகம் இரைந்து கொண்டிருக் கிறது.

ஆறுமுகத்தாருக்குத் தான் ஒருத்திதான் இப்போது முழு உரிமைக்காரி என்று கட்டியம் கூறுவதுபோல, செல்லம்மா அணுப்பொழுதும் அவரைவிட்டு விலகாமல் அவர் அருகில் குந்தி இருக்கிருள்.

மகாலிங்கம் தாயையும் அவன் சகோதரிகளையும் அங்கு அழைத்து வந்துவிட்டான். அவன் தம்பி சிவலிங்கமும் அவர்களோடு வந்து தங்கி இருக்கிருன்.

தினமும் ஆண்களும் பெண்களுமாகப் பலர் வந்து அவரைப் பார்த்துச் செல்கிருர்கள்.

செல்லம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரன் பொன்னம் பலம், அவள் சகோதரிகள், சகோதரிகளின் பிள்ளைகள் எல்லோரும் அக்கறையோடு அடிக்கடி வந்து போகிருர்கள்.

வேலுப்பிள்ளையும் அங்கு வரத் தவறவில்லை.

முத்தன் அவரைப் பார்த்துவிட்டுக் கலக்கத்தோடு திரும்புகிருன்.

பொன்னன் மகன் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத உற்சாகத்துடன் செல்லம்மாவிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுச் சென்ருன்.

சின்னையா வந்து நின்று ஓடியாடி உதவி ஒத்தாசைகள் புரிவதோடு, ஆஸ்பத்திரியில் தங்கி இருந்து ஆறுமுகத் தாருக்குத் தான் செய்த பணிகளைப் பெருமையாக வருவோர் போவோருக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருக் கிருன்.

வெற்றிலைகள் பற்களிலே பட்டு நசுங்குகின்றன. வீட்டு முற்றங்கள் எச்சிலால் கறைபடிந்து அசிங்கப்படுகின்றன.

மகாலிங்கத்தின் சகோதரிகள் முற்றத்தைப் பெருக்கி அள்ளிச் சுத்தப்படுத்துகிறார்கள்.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்து மூன்று தினங்கள் சென்று மறைந்தன.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை இளம் இருட்டில் எழுந்து முற்றத்துக்கு வந்த செல்லம்மா, முற்றத்து மாங்கன்றில் காய்ந்துத் தொங்கிக் கொண்டிருந்த அந்த வம்புக் காய் காம்புடைந்து கீழே விழுந்து கிடப்பதைக் கண்டாள்.

''வம்புக்காய் விழுந்து போச்சு. ஹூ...ம்''

நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து பெருமூச்சொன்று வெளிப்படுகிறது. அவள் முன்னமே தன் உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு விட்டதால் மனக்கலக்கம் பெருகாமல் தவிர்த்துக் கொள்ளுகிறாள்.

ஆறுமுகத்தார் ஆஸ்பத்திரியில்இருக்கும் போதும் அந்த வம்புக்காய் பற்றி சிரத்தையோடு விசாரித்ததை நினைத்துக் கொண்டு அந்த மாங்காயை எடுத்து வந்து, அவர் தலைமாட்டில் வைக்கிறாள்.

வேப்ப மரத்தில் இருந்து காகம் ஓயாமல் அழுகிறது.

இரவெல்லாம் தொடர்ந்து ஊளையிட்டுக் கொண்டிருந்த வீட்டு நாய், வேலி ஓரத்தில் கிடந்து திரும்பவும் கத்துகிறது.

ஆறுமுகத்தாரின் நிலைமை மேலும் மோசமாகிறது.

சூரியன் மேற்கே பனைக்கூடலுக்குள் மறைந்து அடிவானத்துள் வீழ்ந்த பிறகு, குத்துவிளக்கொன்றை ஏற்றி அவர் தலைமாட்டில் வைத்து அதன் அருகே இருந்து ஒருவர் ''திருப்புப்'' பாடுகிறார்.

குத்துவிளக்கில் எரிந்து கொண்டிருக்கும் சுடர் மெல்லிய காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருப்பதுபோல ஆறுமுகத்தாரின் உயிர் மூச்சும் ஊசலாடுகிறது.

அவர் உறவுக்காரர்கள் ஒவ்வொருவராக வந்து தங்கள் உறவு முறையைச் சொல்லி அவருடைய வாய்க்குள்ளே பால் வார்க்கிறார்கள். பால் தொண்டைக்குள் செல்லாமல் கடைவாயால் வழிந்தோடுகிறது. செல்லம்மா, மற்றவர்கள் எல்லோரும் பால் வார்த்த பின்னர் இறுதியாகத் தான் வார்ப்பதற்காகக் காத்திருக்கிறாள்.

மகாலிங்கத்தின் தாய் இளைய மகன் சிவலிங்கத்தை அழைத்து, அவனைக் கொண்டும் பால் வார்க்கச் செய்கிறாள்.

இனிமேல் வேறு யாரும் இல்லை என்பதால், செல்லம்மா வுக்கு முதல் தூர நின்ற மகாலிங்கத்தை அழைக்கிறார்கள்.

மகாலிங்கம் கரண்டியை எடுத்து அதில் பாலை அள்ளி, ஆழ்கடலாகக் குமுறும் இதயத்தின் அலைகள் கண்களில் நீராகத் துளிர்க்க நடுங்கும் கரங்களால் பாலை வாயினுள் விடுகிறான்.

காற்றிலே ஆடிக் கொண்டிருக்கும் பழுப்பிலை ஒன்று 'பட்'டென்று நெட்டி உடைந்து கீழே விழுவதுபோல அசைந்து கொண்டிருந்த ஜீவஇழை அறுந்து மூச்சு மெல்ல அடங்குகிறது.

எதிர்பார்த்திருந்தவர்கள் போல பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து கூக்குரல் இடுகிறார்கள்.

'திருப்பு'ப் பாடிக் கொண்டிருந்தவர் ஆறுமுகத்தாரின் ஆத்மா திக்குமுக்காடாமல் சுகமாக அனுப்பி வைத்து விட்ட தான திருப்தியோடு அதில் இருந்து எழும்புகிறார்.

சின்னையா ஓடி வருகிறான்.

"அண்ணை... போவிட்டியோ அண்ணை! அண்ணை போவிட்டியோ அண்ணை! என்னை விட்டிட்டுப் போவிட் டியோ அண்ணையோ! ஐயோ...நான் இனிமேல் என் செய் யப்போறேன்; நான் இனிமேல் என்ன செய்யப் போறேன்!"

அவன் வயிற்றிலும் வாயிலும் அடித்தடித்து பெண் களைப் போல அழுகிறான். சற்று நேரத்தின் பின்னர் ஏதோ

ஞாபகம் வந்தவனாக, வேட்டிக்கு மேல் அரையில் சுற்றிக் கட்டியிருக்கும் சால்வையை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக்கொண்டு, ஆறுமுகத்தாரின் சடலத்தைச் சுற்றி இருக்கும் பெண்களை விலக்கிக் கொண்டு, சடலத்துக்கருகே வருகின்றான். அவனுடைய வருகையோடு கள்ளின் மணமும் சேர்ந்து வருவதை உணர்ந்து கொண்ட பெண்கள் முகத்தைச் சுழித்துக் கொண்டு சற்று விலகி அவனுக்கு இடம் கொடுக்கிறார்கள். அவன் திறந்தபடி கிடக்கும் சடலத்தின் கண் மடல்களை இழுத்து மூடுகின்றான். வெள்ளைச் சேலை ஒன்றை எடுத்து கீலமாகக் கிழித்து கைப் பெருவிரல்கள் இரண்டினையும் பிணைத்துக் கட்டுகிறான். அதே போலக் கால்களையும் பிணைத்துக் கட்டப் போனவன் தன் தவறை உணர்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு எழுந்து இன்னொரு வெள்ளைச் சேலையினால் உடலைப் போர்த்து மூடுகின்றான். கொஞ்ச நேரத்துக்கு முன்னதாகப் பெண்களைப்போல் வாய் விட்டுக் கேவிக் கேவி அழுதவன் இவன் தானா? என்று மற்றவர்கள் சந்தேகிக்கத் தகுந்த நிலையில் முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் முற்றத்துக்கு வருகிறான்

அயலவர்கள் ஒவ்வொருவராக வந்து கூடுகிறார்கள்.

இரண்டு 'பெற்றோல்மெக்ஸ் லைற்'றுக்கள் கொளுத்தி வைக்கப்படுகின்றன.

முற்றத்தில் பந்தல் ஒன்றைப் போடுவதற்காக, மரந் தடிகளைத் தூக்கி வந்து, கிடங்குகள் தோண்டி கம்புகளை நாட்டி, குறுக்கே தடிகளை வைத்துக் கட்டுகிறார்கள்.

சின்னையா இந்த வேலைகளுக்கு மத்தியிலும் எல்லா விஷயங்களிலும் தான் விழிப்பாக இருப்பவன்போல மகாலிங்கத்திடம் ஓடிவந்து, ''தம்பி இப்ப குளிப்பாட்டியல்லோ வளத்தவேணும்?'' என்று அவனுக்குத் தெரியாத ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொடுப்பவன் போலக் கேட்கிறான்.

அவன் எல்லாக் காரியங்களுக்கும் மகாலிங்கத்தின் அபிப்பிராயத்தைப் போய்க் கேட்டுக் கொண்டு நிற்பது

பொன்னம்பலத்தின் மனத்துக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. மகாலிங்கம் என்ன சொல்லப் போகிறுன் என்பதை பொன்னம்பலம் குரோதத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறுன்.

''புண் இருக்கிறபடியால், இப்ப குளிப்பாட்டிறது நல்ல தல்ல'' என்று மகாலிங்கம் அமைதியாகக் கூறுகிறுன்.

''குளிப்பாட்டத்தான் வேணும்'', ''இல்லை, குளிப் பாட்டக்கூடாது'' என்று இரண்டு கட்சிகள் அங்கு நின்றவர் களுக்கு மத்தியில் தோன்றுகின்றன. அதனுல் திடீரென்று ஒரு சர்ச்சையே உருவாகி விடுகிறது. வேலைகளில் ஈடுபட் டுக்கொண்டே பலர் சர்ச்சையில் கலந்து கொள்ளுகிறுர்கள். இறுதியில் வயது முதிர்ந்த கிழவர் ஒருவரின் தீர்ப்பாக, ''இப்ப குளிப்பாட்ட வேண்டாம்'' என்பது முடிவாகிறது.

பெண்களின் கூட்டம் நிலத்தில் விழுந்து ஆர்ப்பரித்துப் புரண்டு கத்தும் காகங்கள்போல கொஞ்ச நேரம் உக்கிர மாக அழுது, பின்னர் பூரணமாக ஓய்கிறது.

செல்லம்மா களைத்துச் சோர்ந்து கூந்தலை விரித்துக் கொண்டு ஆறுமுகத்தாரின் தலைமாட்டில் சாய்ந்து விட்டாள்.

பெண்கள் சீலைத் தலைப்புகளால் இழுத்து உடலை இறுகப் போர்த்த வண்ணம்—சிலர் வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் கொண்டும்—வயதில் முதிர்ந்த பெண்கள் சுருட்டுக்களை மூட்டிக் கொண்டும்—குழுக்களாகப் பிரிந்து அவர்களுக்கே இயல்பான ஊர்வம்பு பேசுவதில் இரகசியமாக இறங்குகிறுர்கள்.

''முகத்தாற்ரை சொத்துப்பத்துகள் எல்லாம் ஆருக்கு?'' அவர்களுள் ஒருத்தி பேச்சை மெல்ல ஆரம்பிக்கிறுள்.

''வேறை ஆருக்கு! புதிசாக விண்ணுணம் பேசிறுயெடி நீ. அவள் செல்லம்மாவுக்குத்தான். அவளுக்கிப்ப எத்தினை வயது? அவள் எல்லாத்தையும் கைவிட்டால் அந்தரிச்

செல்லெ போவள்'' என்ருள் பக்கத்து வீட்டுத் தெய்வானேக் கிழவி.

''உப்பிடிச் சொல்லாதையெணே ஆச்சி. தம்பிக்காறன்ரை பிள்ளேயளுக்கும் அவற்ரை சொத்திலெ சோந்தை இருக்குத்தானே!'' என்ருள் மூன்று பெண்களுக்குத் தாயான ஒரு நடுத்தர வயதுக்காரி.

''என்ன சொன்ஞலும், அவள்தானே இவ்வளவுக்கும் முகத்தானேப் பாத்தெடுத்தவள்'' என்கிருள் கிழவி விட்டுக் கொடுக்காமல்.

''என்னத்தை அவ பாத்தெடுத்த? அவற்றை காசைத் தானெ சிலவழிச்சவ! காசை விட்டால் ஆரும் சிலவழிப்பினம்; அதுக்கு அவதான் வேணுமே'' என்று கிழவியோடு பேசினவள் பதில் சொன்ஞள்.

''ஆறுமுகத்தார் தனக்கு அறிவிருக்கேக்கெ இன்ஞர் இன்ஞருக்கு, இது இதெண்டு குடுக்க வேண்டியதுகளே அவை யவைக்குப் பிரிச்சுக் குடுத்திருக்க வேணும்.''

''அவரும் பேசாமல் கண்ணே மூடிப் போட்டார்.''

''அவரே குடுக்கிறவர்! நல்ல ஆள்தான்! அவர்தான் போக்கேக்கெ கட்டிச் சுமந்துகொண்டு போறதுக்கெண்டெல்லோ இருந்தவர்.''

''மலட்டுச் சொத்தெடுக்கிறது பெரியபாவம். மலட்டுச் சொத்தெடுத்தவை ஆர் நல்லாயிருக்கினம்? அதுகள் விட்டிட்டுப் போகேக்கெ ஆ...ஆ...எண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டு போறது. அந்தச் சொத்து எடுக்கிறவனுக்கு நிண்ட வெள்ளத்தையும் வந்தவெள்ளம் அள்ளிக் கொண்டு போனது போலெ உள்ளதையும் துடைச்சுக் கொண்டு போவிடும்''

''ஆர் என்ன சொன்ஞலும் அந்தப் பொடியன் மகாலிங்கம் படிச்சவன். அவன் செல்லம்மாவோடை கரைச்சலுக்கு வரான். இவள்தான் எல்லாத்தையும் வைச்சு நல்லாக் குமுறப்போருள்''

"எடியே...இவன் முகத்தான் நல்ல சா செத்திருக்கிருனெடி! இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமையெல்லே!" என்ருள் கிழவி.

"ஞாயிறு செத்து, திங்கள் எடுக்கிறது இன்னும் நல்லதெண்டு சொல்லுகினம்"

"ஓமோம்...அப்பிடி எடுத்தால் சொக்கத்திலே ஏழு கதவும் திறந்திருக்குமாம்" என்று கிழவி தொடர்ந்தாள்.

"இவருக்கோ?"

"எடியாத்தையவை! ஆறியான்ரை சொத்து ஆரும் கொண்டு போகட்டும். அவர் சொக்கத்துக்குப் போகட்டும்; அல்லது நரகத்துக்குப் போகட்டும்; எங்களுக்கென்ன? நாங்கள் வீண் கதையளைக் கதைச்சு ஏன் வீண் பழிகேப்பான்? அவள் செல்லம்மாவின்ரை காதிலெ விழப்போகுது; உந்தக் கதையை விடுங்கோ" என்று கூறி அவர்களுள் ஒருத்தி அந்த உரையாடலுக்கு முத்தாய்ப்பு வைக்கிருள்.

மகாலிங்கம் அங்கு நடைபெறுகின்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோதும், அவன் மனம் அமைதி இல்லாமல் அலைகிறது. இனிமேல் நடைபெற வேண்டிய காரியங்களெல்லாம் எப்படி நடந்தேறப் போகின்றன? ஆறுமுகத்தார் உயிரோடு இருந்தவரைக்கும் அவருடைய செலவுகளுக்குத் தேவையான பணத்தை அவர் கொடுத்துக் கொண்டிருந்தார். இப்போது அவர் போய்விட்டார். அவருடைய இறுதிச் சடங்குளைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய பணத்தைச் செல்லம்மா தருவதற்குச் சம்மதிப்பாளா? செலவுக்குத் தேவையான பணத்தை அவள் கொடுக்காதுவிட்டால், அவரைக் கொண்டு போய் அடக்கம் செய்கின்ற பொறுப்பு அவனை அல்லவா வந்து சாரும்? அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டி நேர்ந்தால் பணத்துக்கிப்போது எங்கே போவது? மகாலிங்கம் இவற்றை எல்லாம் சிந்தித்து, ஒரு தெளிவில்லாமல் குழம்பிக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயம் வேலுப்பிள்ளை அவனைத் தேடிக்கொண்டு வந்தார். அவர் அவனைத் தனியே அழைத்துக்கொண்டு சென்று இரகசியமாக அவனோடு பேசலானார்.

"தம்பி, என்ன பேசாமல் பாத்துக்கொண்டு இருக்கிறியள்?"

"ஏன், என்ன விஷயம்?"

"நாளைக்கு நடக்கவேண்டிய விஷயங்களையெல்லோ இனிமெல் கவனிக்கவேணும்"

"எல்லாம் செய்வம்" என்று பட்டும்படாமலும் அவன் கூறுகிறான்.

அவர் தன்னை நிதானப்படுத்திக்கொண்டு, "தம்பி, அத்தான் போவிட்டார். இனிமெல் அவற்றை காரியங்களுக்கெல்லாம் பொறுப்பு நீங்கள்தான். அவை இவையைக் கேட்டுக்கொண்டிராமல் நீங்களாக யோசிச்சு செய்ய வேண்டியதுகளைச் செய்யுங்கோ!" என்கிறார்.

"செய்வம்"

"அத்தான் உங்களுக்கொண்டும் சொல்லயில்லையே?"

"என்னத்தைப்பற்றி!"

"அவற்றை காணிபூமியள்...சொத்துகளைப்பற்றி"

"ஒண்டுமே சொல்லயில்லை"

"அவருக்குப் பிறகு அவற்றை சொத்துகள் உங்களுக்குத் தானே சேரவேணும்"

"அதைப் பெரியம்மாவெல்லோ நினைச்சு நடக்க வேணும்"

"அவ எங்கே உங்களைப்பற்றி நினைக்கப்போறா! அவ முழுவதையும் தான் கொண்டு போகத்தான் நினைக்கிறா. அவவுக்கும் என்னத்துக்கு, தமக்கையின்ரை மக்களுக்குச் சேர்க்கிறதுக்குத்தான்"

"பாப்பம் என்ன நடக்குதெண்டு"

"தம்பி நானும் உங்களைப் போலதான். என்ரை தமக்கையாலே வரப்பட்ட நிலத்தை அத்தான் இருக்கிற வரையும் நான் தரச் சொல்லிக் கேக்கயில்லை. அவர் போ

விட்டார்; இனிமேல் விடமாட்டன். செல்லம்மா தானுக விடாட்டால் கோட்டுக்குபோய் வழக்காடி எண்டாலும் எனக்கு வரவேண்டியதை எடுக்கத்தான் போறன்''

''உங்களுக்குரியதை நீங்கள் ஏன் விடவேணும், கேளுங் கோவன்.''

''அது சரி தம்பி, அதைப் பிறகு பாப்பம். உங்களுக்கும் ஒரு சொல்லுச் சொல்லி வைக்க வேணுமெண்டதுக்காகத்தான் இப்ப சொன்னனுன். ஆ...இப்ப இந்தச் சிலவுகளுக்கு என்ன செய்யப் போறியள்?''

''நான் பாக்க வேண்டி வந்தால் பாக்கிறதுதான்.''

''இதென்ன கதை! அவற்றை சொத்துகளெல்லாம் இருக்கத் தகுந்ததாக நீங்கள் ஏன் சிலவழிப்பான்? அவற்றை பணத்தை எடுத்து சிலவழியுங்கோ. அது சரி...ஆர் கொள்ளி வைக்கப் போறது?''

''ஆர் வைக்க வேணுமெண்டு நீங்கள் சொல்லுறியள்?''

''இதென்ன தம்பி! அவருக்கேன் இரவற் கொள்ளி? தம்பியின்ரை பிள்ளையெண்டால் அவற்றை பிள்ளைதானே! ஒரு இரத்தந்தானே! நீதான் வைக்க வேணும்.''

''சரி, பெரியம்மாவின்ரை எண்ணமும் என்னெண்டு பாப்பம்.''

இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது பொன்னம்பலம் வந்து செல்லம்மாவை வீட்டுக்குப் பின்புறமாக அழைத்துக் கொண்டு போகிருன்.

''என்ன செல்லம் செய்யப் போருய்?''

''செய்ய வேண்டியதைச் செய்யிறது தானே.''

''நீ அவசரப்படாமல் கொஞ்சம் பேசாமல் இரு. அப்பிடி இருந்தால் அவையள்தான் சிலவு விடவேணும்.''

''ஆர்...?''

''வேறை ஆர்! பெருமக்கள்தான்.''

''அவர் அப்பிடி ஒண்டுக்கும் வழியில்லாமல் இருக்கயில்லை. அவற்றை கடைசிச் சிலவு ஆரும் புண்ணியத்துக்குப்

பாக்க வேண்டாம். அவற்ரை பணத்திலெதான் அவற்ரை காரியங்கள் எல்லாம் நடக்க வேணும்."

"ஏதோ உன்ரை நன்மைக்காகத் தான்ரி ஆத்தை நான் சொல்லுறன். அப்ப...அவன் மகாலிங்கத்தையே கொள்ளி வைக்கவும் விடப்போருய்!"

"அவனைத்தான் அவர் பிள்ளைபோலெ நினைச்சு நடந்தவர். அவன்தான் தனக்குப் பிதிர்க்கடமை செய்யவேணுமெண்டு முன்னை சொல்லியிமிருக்கிருர். அவன் ஆம்பிளைப் பிள்ளை, அவன் செய்யட்டன்."

"எடி விசரி! ஆனை தன்ரை கையாலெதான் மண் அள்ளிப் போட்டது போல, நீ உன்ரை தலையிலெ உனக்கு மண்ணள்ளிப் போடப் பாக்கிருய். அவன் கொள்ளி வைச்சானெண்டால் அவற்ரை சொத்துக்கு அவன்தான்ரி உரிமைக்காரனுகி விடுவன். நீ அவனுக்கொண்டும் குடாமல் விட்டால் உலகம் உன்னைத் தூற்றும். உந்தப் பேய்த்தனமான யோசனையை விட்டிட்டு, நான் சொல்லுறபடி கேள்! நீதான் கொள்ளி வைக்கவேணும்"

"சரி அண்ணை, நான் வைக்கிறன்"

"ஆ......சிலவுக்குக் சுாசு ஆரிட்டை குடுக்கப்போருய்?"

"உங்களிட்டைத் தாறன்"

"என்னட்டையோ? நல்ல கதை கதைக்கிருய், ஆ...... இதுக்குள்ளெ அதையும் சொல்லத்தான் வேணும் எனக்கும் காசு தேவைதான். அதைப் பிறகு பாப்பம், இப்ப அவன் மகாலிங்கத்தின்ரை கையிலெ குடு. அவனைத்தான் முன்னுக்கு வைச்சிருக்கிற மாதிரி நாலுபேருக்கு வெளியிலெ காட்டவேணும். காசைக் கட்டுமட்டாக் குடு; கவனம்"

செல்லம்மாவோடு பேசி முடித்துக் கொண்டு பொன்னம்பலம் முற்றத்துக்குப் போகிருன்.

செல்லம்மா மகாலிங்கத்தை அழைத்து அவனிடம் ஐந்நூறு ரூபாவைக் கொடுத்து, "இப்போதையில் சிலவுகளுக்கு இதை வை" என்று சொல்லிவிட்டு, "குடி

மக்களுக்குச் சொல்லி அனுப்பிப் போட்டியே தம்பி?''என்று கேட்கிறாள்.

''இனிமெல்தான் ஆள் விடவேணும்''

''ஏன் தாமதிப்பான், அதுகளைச் செய்யுங்கோ'' என்று என்று சொல்லிக் கொண்டு அவள் போகிறாள்.

மகாலிங்கம் குடிமக்களுக்குத் தகவல் அனுப்பும் எத்தனத்தோடு முற்றத்துக்கு வருகிறான்.

பந்தல் போடும் வேலைகளைச் செய்துகொண்டிருந்த வர்கள், வேலைகளை முடித்துக்கொண்டு கிடுகுகளை எடுத்துப் போட்டு அவற்றின் மேல் அமர்ந்திருந்து பேசுகிறார்கள்.

''நாளைக்குக் காலமை நேரத்தோடை எடுத்துப் போட வேணும். கனகாலம் படுக்கையாகக் கிடந்தவர். அதோடை ஒப்பிறேசன் செய்த புண்ணும் கிடக்குது. மணக்கத் துடங்கி விடும்.''

''குடிமக்களுக்கெல்லாம் அறிவிச்சாச்சே?''

''இனிமெல்லாதான் ஆள் விடப்போறன்'' என்றான் மகாலிங்கம்.

''அது சரி, எல்லாரும் இருக்கிற இடத்திலெதான் இதை யோசிக்க வேணும்; அண்ணனுக்குக் கொள்ளி வைக்கிறது ஆர்? துவசம் குடுக்கிறது ஆர்? பொடியன் மகாலிங்கம்தானே எல்லாம் செய்ய வேணும்!'' என்று சின்னையா இருந்தாற்போல ஒரு சந்தேகத்தைக் கிளறுகிறான்.

பேசிக்கொண்டிருந்த அவர்கள் மத்தியில் திடீரென்று ஒரு மௌனம் யாரும் வாய் திறக்கவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த அமைதியைச் சிறிது நேரம் அவதானித்துக் கொண்டிருந்த பொன்னம்பலத்துக்கு அங்கிருப்பவர்களின் மௌனம் சம்மதத்துக்குரிய அறிகுறியாகப்படுகிறது. அவர்களில் எவராவது வாய்திறந்து பேசுவதற்கு முன்னர் தான் முந்திக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு அவன் சொன்னான்:

"சின்னையாவின்ரை கதை என்ன? தொட்டுத் தாலி கட்டின பெண்சாதி இருக்கிறாள். அவளல்லோ கொள்ளி வைக்கவேணும்! இந்த வீட்டிலெதானே திவசம் குடுக்கவும் வேணும். மற்றவைக்கு இஞ்சை வந்து வரியம் வரியம் திவசம் குடுக்கேலுமே!"

"இல்லை, பெம்பிளையள் சுடலைக்குப் போறது கரைச்சல், அதுதான் சொல்லுறன்" என்று தான் சொன்னதை நியாயப்படுத்தினான் சின்னையா.

"சின்னையாவுக்கு ஒண்டும் தெரியாது. பேய்க் கதையள் கதைக்க மாத்திரம் தெரியும். பெம்பிளையள் சந்திர மண்டலத்துக்கே இந்தக் காலத்திலே போவிட்டு வருகினமாம். கொள்ளி வைக்கச் சுடலைக்கும் போறதுதான் பெரிய வேலையே!" என்றான் பொன்னம்பலம் எரிச்சலோடு.

"நான் உதை ஒரு நாளும் நம்பன். சந்திரனுக்குப் போனதை ஆர் கண்டது? சும்மா சொல்லுறான்கள், சிவ பெருமான்ரை முடியிலெயல்லோ சந்திரன் இருக்குது." என்று சின்னையா எடுத்த விஷயத்தை விட்டு, இன்னொன்றை நிராகரித்துச் சொன்னான்.

முடிவு கட்டப்படவேண்டிய விஷயத்துக்குத் தீர்வு காணாமல், பேச்சுத் திசை திரும்புகிறது. வேலுப்பிள்ளை வாய்திறந்து தன் மனக் கருத்தைச் சொல்லாமல் மகாலிங்கத்தின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சிவலிங்கத்தின் மனத்தில் சினம் மூளுகிறது. ஆத்திரத்தோடு அவன் எதையோ சொல்வதற்கு உன்னுகிறான். அதை அவதானித்துவிட்ட மகாலிங்கம், அவனைப் பார்த்து, "தம்பி, லைற்றுக்குக் காற்றுக் குறையுது. ஒருக்கால் காற்றடிச்சு விடு" என்று கூறி, அவன் கவனத்தைத் தன் பக்கமாக இழுத்து, சொல்ல வந்ததைச் சொல்லாமல் தடுத்துவிடுகிறான். சிவலிங்கம் இருந்த இடத்தைவிட்டு அதிருப்தியோடு எழுந்து போகிறான்.

"மகாலிங்கம் நீ என்ன சொல்லுறாய் தம்பி! கொள்ளி நீ வைக்கப் போறியோ? அல்லது பெரிய கொம்மாவைக் கொண்டு வைப்பிக்கப் போறியோ?"

பொன்னம்பலம் விடாப்பிடியாகக் கேட்பதில் இருந்து, அவன் என்னத்தை விரும்புகின்ருன் என்பது மகாலிங்கத்துக்கு விளங்கிவிடுகிறது. அவன் பொன்னம்பலத்தின் நோக்கத்துக்கே விட்டுக் கொடுக்கும் எண்ணத்தோடு, 'பெரியம்மா வைக்கட்டும்'' என்ருன் அமைதியாக.

''சரி, சரி இதிலெ இருந்து பேசிக் கொண்டிருந்தால் ஒரு காரியமும் நடவாது. ஒவ்வொருத்தரும் போய்ப் பாக்க வேண்டிய காரியங்களைப்பாருங்கோ!மையம் கிடக்கிற இடத்துக்கு விருந்தையிலே இப்ப வெள்ளை கட்டவேணும். நான் முதல் கட்டாடி வீட்டை போய்ச் சொல்லிப் போட்டு வாறன்!''

சொல்லிக் கொண்டு சின்னையா எழுந்து வெளியே போகிருன். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் போக வேண்டிய இடங்களுக்குப் புறப்படுகிருர்கள்.

## 20

அதிகாலையின் இருளைக் கலைத்துக் கொண்டு பறை முழங்குகிறது.

குடிமக்கள் ஒவ்வொருவராக வந்து சேருகிருர்கள்.

சலவைத் தொழிலாளி வெகுநேரத்தோடு வந்து பந்தலுக்கு வெள்ளை கட்டி முடித்துவிட்டான்.

முத்தனும் பொன்னன் மகனும் இரண்டு வாழை மரங்களைக் காய்க் குலையோடு வெட்டி வந்து அந்த வளவின் வெளிவாசலில் வைத்துக் கட்டுகிருர்கள். தென்னையில் ஏறி குருத்தோலையை வெட்டி எடுத்து தோரணங்கள் பின்னி படலைக்கு வெளியே கம்புகளை நாட்டி, அதில் கயிறுகட்டி மாவிலைகளையும் தோரணங்களையும் தொங்கவிடுகிருர்கள். முற்றத்துப் பந்தல் வெள்ளையின் கீழ் அவர்கள் போகக் கூடாது என்பதால், தோரணங்களில் இன்னும் சிலவற்றை

எடுத்து வந்து பிரேதம் தூக்கும் குடிமக்களிடம் கொடுத்து விட்டு ஒதுங்குகிறார்கள்.

பிரேதம் தூக்குகின்ற குடிமக்கள் ஒன்று சேர்ந்து மையத்தைக் கொண்டு போவதற்கு உரிய பாடையைக் கம்புகள், தடிகளை வைத்துப் பொருத்திக் கட்டுகிறார்கள்.

அந்தப் பாடைக்குச் சலவைத் தொழிலாளி வெள்ளைச் சீலை போட்டு மூடிக் கட்டுகிறான்.

இனசனங்கள், அந்த ஊர்மக்கள், தரகர் ஆறிக்கு அறிமுகமானவர்கள் என்று பலரும் வந்திருக்கிறார்கள். மகாலிங்கத்தின் ஊரிலிருந்தும் அவனுடைய தாய் வழி உறவுக்காரர்களும் அவனுக்கு வேண்டியவர்களும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

மகாலிங்கத்தின் மனைவியும் அன்று காலையில்தான் அங்கு வந்திருக்கிறாள்.

சனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வருகிறார்கள். அவர்களை வரவேற்று, விட்டுவிட்டுப் பறையும் முழங்குகிறது.

அங்கு முதலில் வந்து இருக்கின்ற பெண்கள், வெளியில் இருந்து பிந்தி வந்து கொண்டிருக்கும் பெண்களை வரவேற்று கட்டியணைத்து ஒப்பாரி வைக்கிறார்கள்.

வந்திருப்பவர்களை வெற்றிலை வைத்து, சுருட்டுக் கொடுத்து பிரேதம் தூக்கும் குடிமக்கள் உபசரிக்கின்றனர்.

அவர்களைச் சேர்ந்த ஒரு குடிமகள் பெண்கள் பகுதியில் அந்தத் தொண்டுகளைச் செய்கிறாள்.

கிராமசேவகர் என்னும் புதிய நிர்வாக அமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், அந்தக் கிராமத்தின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த முன்னாள் விதானையார் காலில் செருப்பும் கையில் ஒரு பொல்லுமாக பழைய அதிகார தோரணையில் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வந்திருப்பதைக் கண்டதும் சின்னையா ஓடிச் சென்று கதிரை ஒன்றைத் தூக்கி வந்து அதில் அவரை அமரச் செய்கிறான்.

நேரம் பத்து மணிக்கு மேலாகிறது.

மகாலிங்கம், அவன் தம்பி, அவன் மனைவி ஆகியோரும் செல்லம்மாவின் பெருமக்களும் தண்ணீர்க் குடங்களை எடுத்துக் கொண்டு கிணற்றுக்குச் செல்கிறார்கள். வேலுப்பிள்ளையும் ஒரு குடத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் பின்னே போகிறார்.

அந்தப் பந்தலுக்குள் போடப்பட்டிருக்கும் அகன்ற மரக் கட்டிலின் மேல் வெள்ளைச் சேலையை விரித்து அதன்மேல் ஆறுமுகத்தாரின் சடலத்தைத் தூக்கி வந்து வளர்த்துகிறார்கள்.

ஐயர் ஈமக்கிரியைகளை ஆரம்பித்து ஒவ்வொன்றாகச் செய்து முடித்துக் கொண்டு புறப்படுகிறார்.

ஆறுமுகத்தாரின் சடலத்துக்குத் தலைமாட்டிலும் கால்மாட்டிலும் குத்துவிளக்குகள் ஏற்றி வைக்கப்படுகின்றன.

உறவுக்காரர்கள் சில்லறைகளையும் வறுத்த அரிசி, தேங்காய்ச் சொட்டு என்பவற்றையும் சேர்த்து சடலத்தின் மார்பிலே இட்டு "வாய்க்கரிசி" போடுகிறார்கள்.

சலவைத் தொழிலாளி சில்லறைகளைப் பொறுக்கி எடுக்கிறான்.

கட்டிலைச் சுற்றி வாழை மடல்களைக் கிழித்து வைத்து அதன்மேல் கற்பூரமிட்டுக் கொளுத்துகிறான் சின்னையா.

நான்கு மூலைகளிலும் மூலைக்கொருவராக நின்று அவர்களின் சங்கீத ஞானத்தை மேன்மைப் படுத்தும் ஆர்வத்தோடு தோத்திரப் பாடல்களை வெளியில் சொல்லாத போட்டியுடன் நான்கு பேர் பாடுகிறார்கள்.

பிரேதம் தூக்கும் குடிமக்கள் பாடையைப் பந்தல் அருகே தூக்கி வந்து வைத்து, அதனுள்ளே ஆறுமுகத்தாரின் சடலத்தைக் கிடத்தி, பாடையைத் தோளின்மேல் சுமந்து மூன்று தடவைகள் சுற்றிவிட்டுப் புறப்படுகிறார்கள்.

ஓய்ந்திருந்த பெண்கள் எழுந்து நின்று சம்பிரதாய பூர்வமாக ஓலமிட்டுக் கதறுகிறார்கள்.

பொன்னன் மகன் ஓடிவந்து வேலியை வெட்டிப் பாதை பிரித்து விடுகிறன். சடலம் அந்தப் பாதைகூடாக வெளியே வருகிறது.

குடிமக்கள் இருவர் ஒரு வெள்ளைச் சேலையை விரித்து மேலாப்புப் பிடிக்கிறர்கள். செல்லம்மா கொள்ளிச் சட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு சோகமே உருவமாக அதன் கீழ்த் தலைகுனிந்து நிற்கிறள். அவளுக்குத் துணையாகச் சுடலைவரை செல்வதற்கு பெண்கள் இருவர் அவளோடு வந்து தயாராக நிற்கிறர்கள்.

ஒரு கையில் கொள்ளிக் குடமும் மறுகையில் கத்தியுமாக சவரத் தொழிலாளி சுடலைவரை போவதற்குத் தயாரா கிறன்

சலவைத் தொழிலாளர்கள் இருவர் நிலபாவாடை விரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

பறைகள் ஓங்கரித்து முழங்குகின்றன.

பிரேத ஊர்வலம் நகருகிறது.

செல்லம்மாவின் பெருமகன் குலசிங்கம் வந்து, அவளிட மிருந்து கொள்ளிச் சட்டியைத் தன்கையில் வாங்கிக் கொள்ளுகிறன்.

கூடிஇருந்த சனக் கூட்டம் பிரேதத்துக்கு முன்னே மெல்ல நடக்கிறது.

சின்னையா மது போதையின் கிறக்கத்தோடு அந்த ஊர்வலத்தின் முன்னணியில் நின்று, சந்திக்குச் சந்தி நிறுத்தி சிறப்பாகப் பறைமேளச் சமாவை நடத்த வழி நடத்திக் கொண்டு போகிறன்.

மகாலிங்கமும் அவன் தம்பி சிவலிங்கமும் கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று கொண்டிருக்கிறர்கள்.

வேலுப்பிள்ளை அவர்களைத் தொடர்ந்து தலைநிமிர்ந்து குரூரத்துடன் போய்க் கொண்டிருக்கிறர்.

விதானையார் எழுந்து வீட்டுக்குப் போவதற்குத் தயாரானர்.

அப்போது பொன்னம்பலம் ஓடிவந்து விதானையாரிடம் சொல்லுகிறன்:

"ஐயா ஒருக்கால் சுடலைவரைக்கும் வரவேணும்."

"அட தம்பி, நான் வயது போனவன்; அவ்வளவு தூரம் நடக்கேலாதெடா."

"இல்லை, ஐயா ஒருக்கால் வரத்தான் வேணும்."

அவன் வற்புறுத்துகிறன்.

"நீ என்னைத் தெண்டிக்கிறதைப் பாத்தால் ஏதோ விஷயம் இருக்கிறதுபோலெ தெரியுது. என்ன சங்கதி சொல்லு?"

"இவள் செல்லம் பெரிய பாவம் ஐயா! தனிமரமாக நிக்கிறுள். ஆறுமுகத்தாற்ரை பெருமக்களும் நிக்கினம். நீங்கள் ஒருக்கால் சுடலைக்கு வந்து அவளின்ரை அந்தத் தாலிக் கொடியை எடுத்துக் கொண்டு வந்து, அவளின்ரை கையிலெ குடுத்துவிடுங்கோ! அவள் பெரிய பாவம். இனி மேல் என்ன செய்யப் போறுளோ தெரியாது!"

"நீ சுடலையிலெ கரைச்சல் வருமெண்டு பயப்பிடுகிறுய் போலெ தெரியுது. அப்பிடி ஒண்டும் நடவாது. அந்தப் பொடியன் மகாலிங்கத்தைக் கவனிச்சன்; நல்லவன் போலெ தெரியுது. ஒரு தொந்தரவுக்கும் வரான். அப்பிடி ஆரும் வந்தால் அது நான்......"

"அவன்ரை தம்பி ஒரு மாதிரியான ஆள்"

"எண்டாலும் தமையன்ரை சொல்லை மீறி வரப் போறுனே! இதுக்குள்ளே வேறை கரைச்சலுகள் கனக்கக் கிடக்குது."

"என்ன கரைச்சல் ஐயா?"

"வேலுப்பிள்ளையும் நேற்று என்னேடை கதைச்சவன். அவன்ரை தமக்கை செத்த பிறகு சட்டப்படி அவளாலெ வரப்பட்ட காணியள் அவனுக்குத்தானே சேரவேணும்"

"அதை ஆறுமுகத்தாரிட்டை யெல்லோ கேட்டிருக்க வேணும்"

"இப்ப இவள் செல்லத்தின்ரை கலியாணமும் கசாதெழுத்து இல்லாததுதானே! அதனுலெ ஆறுமுகத்தாற்ரை தம்பியின்ரை பிள்ளையளுக்குத்தான் சோந்தை கூட"

"செல்லம்மா கடைசிவரையும் குடுக்கமாட்டாள். அவள்தானே கொள்ளி வைக்கிருள்."

"கொள்ளி வைக்கிறதினுலெ அவளுக்குத்தான் உரிமை எண்டு நாங்கள் சொல்லலாம். ஆனுல் சட்டப்படி அதை ஏற்கேலாது. செல்லத்தைக் கட்டுறதுக்கு முந்தி ஆறுமுகத்தார் வாங்கின சொத்து எதிலெயும் செல்லம் உரிமை கொண்டாட முடியாது. இது கோட்டுக்குப் போய் வழக்காடித்தான் தீர்க்கவேண்டி வரப்போகுது"

"அதைப் பிறகு பாப்பமையா! இப்ப இந்தத் தாலிக் கொடி......?"

"அதை அவள் எடுக்கலாம்"

"அதுதான் அதிலெ ஒருக்கால் வரவேணுமெண்டு கேக்கிறன்"

"சரி வாறன்ராப்பா"

விதானையார் மிடுக்கோடு எழுந்து சால்வையை உதறித் தோளின்மேல் போட்டுக் கொண்டு பொல்லை ஊன்றி, ஊன்றி நகர்ந்து கொண்டிருக்கும் ஊர்வலத்துக்குப் பின்னுல் நடந்தார்.

ஆறுமுகத்தாரின் பிரேத ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது.

● ●

அன்னம்